முதியோர் ஞாயிறு பள்ளி

கால் ஆண்டு மலர்

1975
செப்டம்பர்
அக்டோபர்
நவம்பர்

ஏ. ஜி. கைத்தொழிற்பள்ளி அச்சகம்;
தபால் பெட்டி 9,
செங்கோட்டை.

சந்தா **ரூ. 5-00**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பொருளடக்கம்

எண்	தேதி	தலைப்பு	பக்கம்
	செப்டம்பர்		
1	7	சபையின் தேவன்	1
2	14	பெந்தெகொஸ்தேநாளுக்காக ஆயத்தப்படல்	10
3	21	பரிசுத்தஆவியின் மழை ஊற்றப்படல்	18
4	28	பெந்தெகொஸ்தேயின் பின் விளைவு	27
	அக்டோபர்		
5	5	சபையில் அற்புதங்கள் நடைபெறுதல்	38
6	12	பாடுகளின் மத்தியிலும் உண்மையாயிருத்தல்	48
7	19	சபையிலுள்ள ஐக்கியம்	56
8	26	சபையில் காணப்பட்ட மாய்மாலம்	68
	நவம்பர்		
9	2	தெய்வீக விடுதலை	76
10	9	கிறிஸ்தவ நம்பிக்கை	85
11	16	கிறிஸ்தவனின் திடமான அஸ்திபாரம்	96
12	23	கிறிஸ்தவர்களின் முன்மாதிரி	105
13	30	கிறிஸ்தவ ஜீவியம்	115

"சபையின் தேவன்"

வேதபகுதி அப். 1;1-11

போதிக்கும் திட்டம்:-

பாடத்தைப் போதிக்க ஆரம்பிக்கும்முன், மாணவர்களின் சிந்தனையை தூண்டிவிடும் கேள்வியோடு வகுப்பை ஆரம்பிக்கவும். இந்த வாரப் பாடத்தின் கருத்தை முன் கூட்டியே மாணவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். சிந்தனையை அரும்பவிடும் கேள்வியை நீங்கள் எழும்பும்போது, மாணவர்கள் இவ்வாரப் பாடத்தில் அதிக கவனம் செலுத்த, படிக்க இது ஏதுவாக அமையும்.

புதிய ஏற்பாட்டின் கொள்கையை ஒப்புக்கொள்ளாத ஒருவன், கிறிஸ்தவனாக இருக்க முடியுமா? என்ற கேள்வியோடு முன்னுரை பாடத்தை ஆரம்பிக்கலாம். புதிய ஏற்பாடு எழுதப்படுவதற்கு அநேக வருடங்களுக்கு முன்னே கிறிஸ்தவ மதம் உள்ளது என ஒரு சிலர் காலத்தைக் குறிப்பிட்டு கூறலாம். வேத வசனங்கள் ஆவியின் ஏவுதலால் ஏவப்பட்டு எழுதப்பட்டதா அல்லது இல்லையா என விவாதம் எழும்பி விடாதவாறு கவனமாக ஆராய்ச்சியை தொடங்கவும்.

நாம் இந்த ஆதி சபையின் வரலாற்றினை 6மாதமாக படிக்கப் போகிறோம் என்பதையும், இயேசுவோடு தொடர்புடைய அநேகரோடு அப்போஸ்தல நடபடிகளின் ஆசிரியரான லூக்கா தொடர்பு கொண்டிருந்தான் என்பதையும் மாணவர்களுக்கு விளக்கிக் கூறப் போகிறோம். இயேசுவை கண் கூடாக கண்ட அநேகரிடமிருந்து, லூக்கா தன்னுடைய பிரபந்தத்திற்குரிய சம்பவங்களைக் கற்றுக் கொண்டான்.

வேதவிளக்கம்:-

அப். 1:1-11

பின்னணி:—

காலம் கி.பி.26

வருகிற ஆறு மாதங்கள் நாம் ஆதிசபையின் வளர்ச்சியைப் பற்றி படிக்கப் போகிறோம். ரோம அதிகாரியும், புறஜாதிய கிறிஸ்தவனுமாய் இருந்த தெயோப்பிலுவுக்கு லூக்கா எழுதின பிரபந்தமாகிய அப்போஸ்தல நடபடிகளிலிருந்து நாம் அதிசமான பாடங்களைப் படிக்கப் போகிறோம். லூக்காவை, பவுல் அப்போஸ்தலன் ''எனக்கு பிரியமான வைத்தியன்'' என எழுதுகிறான். லூக்கா தான் எழுதின பிரபந்தத்திலுள்ள அநேக காரியங்களை அவன் நேரிடையாகவே கண்டுள்ளான். (அவன் பவுலோடு இருந்து எழுதுகிறான் என்பதை கீழ்க்காணும் வசனங்கள் குறிப்பி

தங்கவசனம்:- கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? .... அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். அப். 1:11

டுகின்றன. அப்.16:10—17; 20:5—21;21:18; 27:1—28,36). பவுல் அப்போஸ்தலன் செசரியாவிலே சிறைவைக்கப்பட்ட பொழுது, லூக்காவும்பாலஸ்தீன தேசத்திற்கு உடன் சென்றிருந்தான். ஆகவே ஆதி சபைக் காரியங்களை அவன் சோதித்துப்பார்த்து எழுத அது உதவியாய் இருந்தது.

''அப்போஸ்தல நடபடிகள்'' என்ற தலைப்பு பின்னால் யாரோ ஒருவரால் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த தலைப்பு அவ்வளவு பொருத்தம் என கூறிவிட முடியாது. இயேசு செய்யவும், போதிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து உண்டு பண்ணின முதலாம் பிரபந்தம் என லூக்கா 1:1ல் வாசிக்கிறோம். விசுவாசிகள் மூலம் பரிசுத்த ஆவியானவரின் கிரியையினால் இயேசு செய்யவும், போதிக்கவும் தொடங்கின காரியங்கள் அப்போஸ்தல நடபடிகளில் வரையறுத்துக் கூறப்படுகின்றது. மேலும் மற்ற வேத புத்தகங்களுக்கு இருக்கும் முடிவுரைப் பகுதி,அப்போஸ்தல நடபடிகளில் இல்லாமல் இருப்பதால், ஆதி சபையினர் என்ன செய்தார்களோ அது தொடர்ந்து இன்னும் சபையில் நடைபெற வேண்டும் என்பது நமக்குத் தெளிவாக விளங்குகின்றது.

அப்.1:8 திறவுகோல் வசனமாக திகழ்கின்றது. பரிசுத்த ஆவியின் வல்லமையினால், கிறிஸ்துவின் சாட்சிகளாய் மாறியவர்களால் சபை ஸ்தாபிக்கப்பட்டு, பரவி விரிந்தது. பேதுருவும், பவுலும் செய்த காரியங்கள் இப்புத்தகத்தில் அதிகமாக வருணிக்கப்பட்டுள்ளது. அநேக ஆதிகிறிஸ்தவர்கள், தங்களுடைய உயிர்த்தெழுந்த, பரமேறிய, மகிமைப்பட்ட, பரிந்து பேசும் தேவனைப் பற்றி வல்லமையான சாட்சி பகர்ந்தமையால், ஆதிசபை எல்லாப் பக்கங்களிலும் பரவி, வளர்ந்தது.

1 அவரின் உயிர்த்தெழுதல் நிரூபிக்கப்பட்ட கருத்தாகும்:

அப்.1: 1-3.

(அ) தெரிந்தெடுக்கப்பட்ட சாட்சிகள்:— அப் 1:1-3.

லூக்கா எழுதின முதலாம் பிரபந்தம் லூக்கா சுவிசேஷமாகும். சோர்ந்து போன இரண்டு சீஷர்கள் எம்மாவூருக்கு போகின்றனர். போகும் வழியில் தேவன் சீஷர்களை சந்தித்து, தேவதிட்டத்தை எடுத்துக் கூறினபோது, அவர்களின் இருதயம் கொழுந்து விட்டு எரிந்தது. கிறிஸ்து (அபிஷேகம் பண்ணப்பட்டவர்) எப்படி பாடுபட வேண்டும் என்பதும், அவர் மரித்து மகிமையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் பழைய ஏற்பாடுகளில் தீர்க்கதரிசனமாக கூறப்பட்டுள்ளதை இயேசு சோர்ந்து போன சீஷர்களுக்கு விளக்கிக் காட்டினார். (லூக்.24:56,27). அதே நாளில் தானே இயேசு எருசலேமில் இருந்த தம்முடைய சீஷர்களுக்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தைப்பற்றியும், தீர்க்கதரிசன வசனங்களைப் பற்றியும், சங்கீதங்களைப் பற்றியும் விளக்கிக் கூறி, வேத வசனங்களை சரியாய் அறிந்து கொள்ளும் உள்ளுணர்வை அவர்களுக்கு அருளினார். (லூக்.24:44-49). இயேசு பரமேறப் போவதற்கு முன், 40 நாட்கள் இப்பூமியில் உலாவி, தம்முடைய சீஷர்களை சந்தித்து,வேத வசனத்தை புகட்டி வந்தார்.

இயேசு தம்முடைய 12 சீஷர்களுக்கு மாத்திரம் பிரத்தியேக கவனம் செலுத்தி, பிரத்தியேக கட்டளைகளைக் கொடுத்தார். தம்முடைய ஊழிய ஆரம்பத்தில் இப்பன்னிரு

வரைத் தம்மோடிருக்கவும், ஊழியத்திற்காக அனுப்பவும், தம்முடைய போதனைகளுக்கும் உயிர்த்தெழுதலுக்கும் சாட்சியாய் இருக்கவும் தெரிந்து கொண்டார். (மாற் 3:14; யோவான் 15:16; 20:21; அப் 1:22).

(ஆ) முதற் கண்கூடான சாட்சிகள்.—அப். 1:3.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அப்போஸ்தலர்கள் முதற் கண்கூடான சாட்சிகளாய் விளங்குகிறார்கள், அநேக தெளிவான திருஷ்டாந்தங்களினாலே தாம் உயிரோடு இருப்பதை இயேசு, தம்முடைய சீஷர்களுக்கு காண்பித்தார். (இயேசு தாம் உயிரோடு இருப்பதாக ஒன்பது, அல்லது பத்து தடவை பரமேறும் முன் மக்களுக்கு, சீஷர்களுக்கு காட்டினதாக நாம் வேத வசனத்தில் வாசிக்கிறோம். இயேசு பலதடவைகள் சீஷர்களுக்கு காட்சியளித்திருக்கலாம். இது பற்றி நமக்குத் தெரியாது.) சீஷர்களோடு இயேசு உணவருந்தினார். சீஷர்களோடு நடந்து சென்றார். சீஷர்களோடு பேசினார். தான் ஒரு ஆவியல்ல, உண்மையான சரீரம் கொண்ட மனிதன் என்பதை இயேசு சீஷர்களுக்கு நிரூபித்துக் காட்டினார். விவாதத்தினாலோ, அல்லது பகுத்தறிவினாலோ இயேசு உயிரோடிருக்கிறார் என்பதை சீஷர்கள் அறிந்து கொள்ளாமல், காணக்கூடிய உணரக் கூடிய சாட்சிகள் மூலம், தெளிவாய்க் கண்டு கொண்டனர். (1 யோ.1:1—3).

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கற்பனைத் தோற்றமோ, அல்லது கானல் நீர்க்காட்சியோ அல்ல. அவர் உயிரோடு எழுந்தது உண்மையான கருத்தாகும். சீஷர்களோடு இயேசு உயிர்த்தெழுந்த பின் ஐக்கியம் கொண்டார். சோர்வுற்றிருந்த சீஷர்களைத் தைரியப்படுத்தினார். சத்தியத்தை உலகெங்கும் பரப்பவும், உபயோகிக்கவும் சீஷர்களுக்குத் திடமான கட்டளையினையும் கொடுத்தார். (மத். 28:19)

இயேசு நாற்பது நாட்கள் இப்பூவுலகில் உலாவி பேதுருவைத் திடப்படுத்தியதால் தான், பெந்தெகொஸ்தே நாளில் அவன் திடமாய் எழுந்து நின்று, கிறிஸ்துவுக்கும் சுவிசேஷத்திற்கும் சாட்சியிட்டான். தேவனுடைய திட்டத்தையும், நோக்கத்தையும் அவருடைய இராஜ்ஜியத்தையும் சீஷர்கள் நன்றாக அறிந்திருந்தமையால், அவர்கள் அபிஷேகம் பெற்றவுடன் போதிக்கும் ஊழியத்தை ஆரம்பித்தனர். (அப். 2:12; 3:18) அப்போஸ்தல நடபடிகளில் வரும் பிரசங்கங்கள் யாவற்றிலும் பழைய ஏற்பாட்டின் வசனங்கள் நிரம்பகாணப்படுகின்றன. இயேசு சீஷர்களை ஆதியாகமத்திலிருந்து மல்கியா வரை அழைத்துச் சென்றார். பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை ஆவிக்குரிய பட்டயமாக மாற்றி, அநேக ஆவிக்குரிய வெற்றிகளை காணச் செய்து, சபையை கட்டுவித்தார்.

2. அவர் கட்டளையிட்டார்:—அப். 1:4—8.

(அ) பிதாவின் வாக்குத்தத்தம்: அப். 1:4,5

இயேசு கடைசியாக சீஷர்களை எருசலேமில் சந்தித்தார். சீஷர்கள் கலிலேயாவுக்கு போவார்கள் என்பதில் சிறிதளவேனும் சந்தேகமில்லை, எருசலேமை விட்டு சீஷர்கள் எங்கும் போகக் கூடாது என இயேசுவே கட்டளையிட்டிருந்தார். (அப். 24:49ன்படி சீஷர்கள் எருசலேமில் காத்திருக்கும்படி இயேசுவே கூறினதாக நாம் காண்கிறோம். தங்களுடைய மாமிச பெலத்தைச் சார்ந்துகொண்டு, சுவிசேஷத்தை அறிவிக்க புறப்படவேண்

டாம் என இயேசு விரும்பினர். சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளில் ஒரு கூட்டமாக எருசலேமில் காத்திருக்க வேண்டும் என இயேசு விரும்பினர். பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற சீஷர்கள் கூட்டமாக எருசலேமில் காத்திருக்க வேண்டும். (யோ.14:16, மத். 3:11)

யோவான் ஸ்நானகன் தம்முடைய ஊழிய ஆரம்பத்திலே பிதாவின் வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கூறியுள்ளான். உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக மாத்திரம் யோவான், இயேசுவைக் கண்டு கொள்ளாமல், பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கும் அபிஷேக நாதராகவும் கண்டு கொண்டபின் (யோவான் 1:29,33) இயேசு பரமேறி, அபிஷேகிக்கும் ஊழியத்தை ஆரம்பிக்கப்போகும் நேரம் நெருங்கி விட்டது. (லூக்.24:49) இயேசு இன்றும் வல்லமையாய் அபிஷேகிக்கும், அபிஷேக நாதராய் விளங்குகின்றார். இயேசு தாம் அபிஷேகம் பெற்று ஜீவித்தது போல, நாமும் அபிஷேகம் பெற வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றார்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மிக முக்கியமானதால், இயேசு தம்முடைய சீஷர்களை அபிஷேகிக்காமல் ஊழியம் செய்ய அனுமதிக்கவில்லை. ஆவியின் வாக்குத்தத்தம்தான் மற்ற எல்லா வாக்குத்தத்திற்கும் திறவுகோலாய் இருக்கின்றது. சீஷர்கள் அபிஷேகம் பெறும் வரை, இயேசுவினுடைய மற்ற கட்டளைகளை பூரணமாக கைக்கொள்ள முடியவில்லை.

(ஆ) பிதாவின் நோக்கம்:— அப்.1:6—8.

ஆவியைப் பற்றிய வாக்குத்தத்தம் சீஷர்களுக்கு, மேசியா அபிஷேகம் பண்ணப்படப் போகிற தீர்க்கதரிசனத்தை நினைவூட்டியிருக்கும்.(எசா. 11:2) ஏசாயா 11ம்அதிகாரம், ஆயிர வருட அரசாட்சியில் ஏற்படப்போகும் ஆசீர்வாதங்களை மேலும் வருணிக்கின்றது. மேசியா உலகப் பிரகாரமான ஒரு ஆட்சியை ஸ்தாபிப்பார் என நபிமார்கள் எண்ணினது போல சீஷர்களும் எண்ணியிருக்கலாம். ரோம ஆட்சியை புறம்பே தள்ளிவிட்டு, உலக முழுவதையும் ஓர் குடைக்குள் கொண்டு வருவார் என சீஷர்களும் எதிர்பார்த்தனர். ஆபிராம் மூலமாய் உலக முழுவதும் ஆசீர்வதிக்கப் படும் என்ற வாக்குத்தத்தத்தை யூத நபிமார் மறந்து போயிருக்கலாம். (ஆதி 12:3,7; 22:18; கலா. 3:8, 16). புறஜாதிய மதங்களை கிறிஸ்துவுக்காய் வெற்றி கொள்ள வேண்டும் என்ற கருத்தை சீஷர்கள் நினைக்கவேயில்லை. உலக இரட்சிப்பைப் பற்றி கவலைப்படவேயில்லை. தேவன் யூத ஜாதியின்மீது மாத்திரம் அன்பு கொண்டுள்ளார் என்ற தவறான கருத்தை பரிசுத்த ஆவியானவர் தகர்த்து, அவர் உலக மக்கள் யாவரையும் நேசிக்கிறார் என்ற கருத்தை பரிசுத்த ஆவியானவர் விளக்குவதாக அப்போஸ்தல நடபடிகளில் காண்கிறோம். (யோவான் 3:19).

தேவனுடைய இராஜ்யம் வரும் என்ற கருத்தை இயேசு ஒரு போதும் மறக்கவில்லை. தேவனுடைய இராஜ்யமும் இனிதான் ஸ்தாபிக்கப்படும். இராஜ குமாரனும் இப்பூமியில் வல்லமையோடும், மகிமையோடும் இனிதான் தோன்றுவார். (மத். 24:30) இதைக் குறித்த மற்றைய விளக்கங்களை இயேசு அப்போது கொடுக்கவில்லை. தங்களுடைய அபிலாஷைகள் நிறைவேற வேண்டும் ஆவலை விட, அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம்தான்

தேவை என்ற கருத்து, அவர் களின் மனப்பான்மையினின்று தெரிகின்றது. காலங்களையும், வேளைகளையும் பிதாவானவர் தம் ஆதீனத்தில் வைத்துள்ளார். காலங்களை, வேளைகளை அறிவது நமக்கடுத்ததல்ல. அதை குறித்து நாம் கவலைப் பட வேண்டியதும் இல்லை. நம்முடைய எதிர் காலத்தை பிதாவின் நற்கரங்களில் ஒப்புவித்து விட வேண்டும்.

தேவனுடைய அடுத்த திட்டம் என்ன என்று நாம் அறிவது அவ்வளவு நல்லதல்ல. கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப் பற்றும் அன்புக்கும், கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக. அது மாத்திரமல்ல, ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று பவுல் தெசலோனிக்கேயர் சபைக்கு கட்டளையிடுகிறான். (2தெசலோ.3:5,10). இயேசு தாம் வரும் வரை நாம் ஊழியம் செய்ய வேண்டும் என கட்டளையிடுகிறார். (லூக். 19:13).

எட்டாம் வசனத்தின்படி நாம் சுவிசேஷத்தை பிரசங்கிப்பது நமது வேலையாகும். இயேசுவைப்பின் பற்றுகிறவன், அவருக்காக சாட்சியிட வேண்டுவது அவனின் வேலையாகும். (1.கொரி.2:2) சாட்சி பகர அதிகாரம் இயேசுவினிடமிருந்து நமக்குக் கிட்டுகிறது. சாட்சியிடத் தேவையான வல்லமை பரிசுத்த ஆவியினால் கிட்டுகிறது.

உலகத்தை சுவிசேஷத்தால் நிரப்ப வேண்டும். நம்முடைய ஒரே வேலை சுவிசேஷ ஊழியமே (மத்.13:38). எருசலேம் நகர் முழுவதும் இயேசுவைப் பற்றி சாட்சியிட்ட பின்னரே மற்ற இடங்களுக்கு ஊழியம் செய்யப் போக வேண்டும் என்பது தேவ சித்தமாகும். உலகத்தின் முடிவு பரியந்தம் சாட்சியாய் இருக்க வேண்டும் என்ற கட்டளையை உடனடியாக நாம் நிறைவேற்ற வேண்டும். இது ஒரு பெரிய வேலை. ஆனால் இவ்வூழியம் செய்ய ஆவியானவரின் வல்லமை போதுமானதாய் இருக்கின்றது.

3. அவர் திரும்பி வருவார் என வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டது:-

அப்.1:9—11.

எல்லோர்கண்களும் காண இயேசு எடுத்துக் கொள்ளப்படல்:-

அப்.1:9.

இயேசு தம்முடைய கடைசி கட்டளையைக் கொடுத்த பிறகு, சீஷர்களை ஆசீர்வதிக்கும்படியாக தம்முடைய இரு கரங்களையும் மேலே தூக்கினார். (லூக்.24;50,51) இதற்குப்பிறகு சீஷர்களின் கண்களுக்கு முன்பாக இயேசு பரலோகிற்கு எடுத்துக் கொள்ளப் பட்டார். உடனடியாக ஒரு மேகம் தோன்றியது. (ஒரு மேகம் தோன்றி அவரை எடுத்துக் கொண்டது அவர் சீஷர் பார்வைக்கும் வெகு தூரம் சென்று விட்டார் என கிரேக்க ஆதாரம் கூறுகின்றது).

இந்த செக்கினா மேகம் ஆசரிப்புக் கூடாரத்திலும், சாலமோன் ஆலயத்திலும், வனாந்தரத்திலும் காணப்பட்டது. இது தேவனுடைய மகிமையினையும், பிரசன்னத்தையும் குறிப்பிடுகின்றது.(யாத்16:10 19:16; 24:15;18; 33:9;10; 40: 34-38;1இரா.8:10,11;சங்.104:3. மத்.17:5; லூக்.9;34; மாற்கு 14:62;தானி.7:13 ஐப் பார்க்கவும்). மகிமையான இந்த மேகம் அல்லது மேகங்கள் கர்த்தருடைய இரண்டாம் வருகையைக் காட்டுகின்றது என்று கூறலாம் (மத்.24: 30; 26:64; வெளி.1:7; 14:14).

கிறிஸ்துவின் பரமேறுதலை நாம் அசட்டையாக எண்ணி விடக் கூடாது. கிறிஸ்துவின் மரணத்தாலும், உயிர்த்தெழுதலாலும் நாம் பெற்றுக் கொண்ட அநேக ஆசீர்வாதங்கள், பரமேறுதலையும் சார்ந்தேயுள்ளது. பெந்தெகொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியின் மழை ஊற்றப்படும் முன், இயேசு பரமேற வேண்டியது மிக முக்கியமே! (யோ.16:7) நமக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ண இயேசு முன் செல்ல வேண்டியதாயிருக்கின்றது. (யோ.14:2) நாம் இரத்தம் சிந்துவதற்குப் பதில் இயேசு தாமே தம்முடைய சொந்த இரத்தத்தை எடுத்துக் கொண்டு பரலோக ஆலயத்திற்குள் புகுந்துவிட்டார். ஆகவே பரமேறுதல் மிகதேவையான ஒரு காரியமாகும். (எபி.9:24; 10:12) அதுமாத்திரமல்ல, இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் இருந்து கொண்டு நமக்காக பரிந்து பேச, பரமேறுதல் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். (எபி. 7:25,26;4:14—16; 8:6; 9:15;12:24;1. தீமோ.2:5) இயேசு பரமேறிப் போகாவிட்டால் அவரின் மகிமையான சரீரம் முழுமை பெற்று வ்ட முடியாது. (யோ.17:5 அப்.9:3) அவர் இருக்கிற வண்ணமாக நாம் அவரைத் தரிசிக்க பரமேறுதல் மிக முக்கியமான நிகழ்ச்சியாய் இருக்கின்றது. (1யோ.3:2) இயேசுதான் நமக்கு முன்மாதிரியாய் முதலாவது உயிர்த்தெழுந்தவர். அதுமாத்திரமல்ல, பரமேறுதல் மூலம், அவர் முதற்கனியாகவும் மாறிவிட்டார். (1 கொரி. 15:51—54 ஐப்பார்).

(ஆ) காக்கக்கூடிய அளவில் இயேசு திரும்பி வருவார்:- அப். 1:10,11.

இயேசு பரமேறிப் போவதை சீஷர்கள் கண்கூடாக கண்டு கொண்டிருக்கும்போது, அவரின் பக்கமாக இரு வெள்ளை அங்கி தரித்த மனிதர்கள் நிற்பதைக் கண்டனர். இயேசு உயிர்த்தெழுந்தபோது, அவரின் கல்லறையில் காணப்பட்ட அதே தூதர்கள் தான் இது என்கிறார்கள் ஒரு சிலர். மறுரூப மலையில் இயேசு மோசேயோடும், எலியாவோடும், தம்முடைய பாடு, மரணம், உயிர்த்தெழுதலைக் குறித்து பேசிக் கொண்டிருந்தனர் என்று நம்பப்படுகிறது. அந்த இருவர் தான் இயேசு பரமேறும்போதும் வரவேற்க வந்துள்ளனர் என ஒரு சிலர் எண்ணுகின்றனர். (லூக். 9:31)

நீங்கள் உங்கள் இறப்பைக் குறித்துக் கவலைப்படாமல், இயேசு சீக்கிரம் இப்பூமிக்கு வருவார் என்ற வாக்குத்தத்தத்தை அந்த இரண்டு தூதர்கள், அல்லது மனிதர்கள் அருளினார்கள். இந்த வாக்குத்தத்தம் எவ்வளவு குறிப்பாக கூறப்பட்டது என்பதைக் கவனிக்கவும். இயேசு சீஷர்களுடைய கண்களுக்கு முன்பாக எவ்வாறு பரமேறிப் போனாரோ, அவ்விதமாக அவர் சீக்கிரம் இப்பூமிக்கு திரும்பி வருவார் என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை. இயேசு பரமேறிப் போய் விட்டாரே என்று தொடர்ந்து வானங்களையே அண்ணாந்து பார்ப்பதைவிட, அவர் சீக்கிரம் வருவார் என்பதால், நமக்கு அருளப்பட்டுள்ள வேலையை துரிதமாக முடிக்க வேண்டும் என்று அவரின் வருகை நமக்கு ஊக்கம் அளிக்கின்றது. (மத்.24:14 ஐப்பார்) சீஷர்கள் உலகத்தின் கடைகோடி மட்டும் சாட்சியை அறிவிப்பது மாத்திரமல்ல, இவ்வுலக முடிவு மட்டும் சாட்சிகளாய் இருக்க வேண்டும் என்பது மிக முக்கியமாகும். (மத்.28:20ல் ''உலகம்'' என்ற வார்த்தையினை ''யுகம்'' அல்லது ''காலங்கள்'' என்று அர்த்தம் கொள்ளலாம்). நாம

சுற்றிப் பார்த்துக் கொண்டு சும்மா வாளாவிருப்பதற்கு இது நேரமல்ல. சீஷர்கள் தங்கள் வேலையில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்.

வாழ்க்கையோடுள்ள தொடர்பு:—

(1) இயேசு கிறிஸ்துவைப் பற்றி நாம் சாட்சியிடும்போது ஜனங்கள் அதை ஏன் ஏற்க மறுக்கிறார்கள்? கிறிஸ்துவைப் பற்றிய பல கருத்துகள் இதற்கு காரணமாய் இருக்குமா?

கிறிஸ்துவை நாம் சரியான முறையில் அறிவிக்கும்போது, ஜனங்கள் நிச்சயமாய் அவரை ஏற்றுக் கொள்வார்கள். மெதடிஸ்ட் சபையை உருவாக்கிய ஜான்வெஸ்லியை பற்றி ஒரு கதையை அடிக்கடி மக்கள் கூறுவார்கள். அதாவது ஒரு மனிதன் இங்கிலாந்து தேசத்திலிருந்து பாவம் நிறைந்த பட்டணம் என்று கூறப்படும் ஊரைக் காணச் சென்றிருந்தானும். ஆனுல் அப்பட்டணத்தில் பாவம் காணப்படுவதற்குரிய எந்த அறிகுறியையும், அம் மனிதன் காணவில்லை. பாவம் நிறைந்த இப்பட்டணம் எப்படி மாறிவிட்டது என அங்குள்ள ஒரு பட்டணவாசியைக் கேட்டானும். அதற்கு அம்மனிதன் விடுத்த பதில் இதுதான் ''எங்களிடையே ஒரு மனிதர் வந்தார், அவர் பெயர் ஜான்வெஸ்லி''. ஜான் வெஸ்லி எப்போதும் தான் எதைச் செய்தேன், எதைப் பேசினேன் என்பதை மக்களிடம் பிரசங்கித்து, மனதை குழப்பாமல், கிறிஸ்துவை முறையாய் அறிவித்தமையால், அவரின் ஊழியத்திலே மகாபெரிய அறுவடை கிட்டியது. ஒரு சிலர் கிறிஸ்துவைப் பற்றி மிகஅழகாக பேசிவிட்டு, அதற்கேற்கதாங்கள் ஜீவியம் செய்வதில்லை. இன்னும் சிலர் நல்ல கிறிஸ்தவ ஜீவியம் செய்கின்றனர். ஆனுல் இயேசுவைப்பற்றி மற்றவர்களிடம் அறிவிப்பதே கிடையாது. நாம கிறிஸ்துவைப் பற்றி தவருன கருத்துக்களை உண்டாக்கி விடாதபடி, பிரசங்கம், ஜீவியத்தில் கவனமாய் இருக்க வேண்டும். நம்முடைய நடக்கையும், வார்த்தையும் இயேசுவைப் பற்றி சாட்சியிட வேண்டும். நம்முடைய நடக்கையிலும், வார்த்தையிலும் கிறிஸ்து வெளிப்பட வேண்டும்.

(2) ஒருவன் பரலோகத்தைப் பற்றி அதிகமாக பேசி, சிந்தித்து விட்டு, இப்பூமியில் பாவமான வாழ்க்கை செய்யக் கூடுமா? எப்படி?

ஒரு வேதாகமக் கல்லூரி மாணவன் தன் பரீட்சையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்க முடியவில்லை. ஆனுல் அவன் தன்னுடைய விடைத்தாளின் அடியில் இவ்வசனத்தை எழுதி விட்டான். ''முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம்உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.'' இப்படிப்பட்ட காரியங்கள் சோம்பேறித்தனத்தைக் காட்டுகிறதே தவிர, அவனின்ஆழமான விசுவாசத்தை இது காட்டாது. தேவனைப்பற்றும் விசுவாசமும், வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும் கலந்ததுதான் திடமான கிறிஸ்தவ விசுவாசமாகும். அதோடு கூட விசுவாசத்திற்கு ஏற்ப வாழ்ந்து காட்டுவது தான் மிக முக்கியமாகும். நாம் நமக்காக எதைச் செய்ய வேண்டுமோ அவைகளைத தேவன் நமக்காக செய்து விடுவார் என்று எண்ணுவது தவருகும். நாம் செய்ய வேண்டியவைகளை நாம் தான் செய்ய வேண்டும். நாம் இப்பூமியில்செய்ய

வேண்டிய காரியங்களை நாம்ஒழுங்காக செய்ய கிறிஸ்தவ சமயம் வலியுறுத்துகின்றது. ஒழுக்கமான, கட்டுப்பாடான வாழ்வை கிறிஸ்தவ சமயம் கற்பிக்கின்றது.

(3) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து சாட்சியிடும் திடமான நிரூபணங்கள் யாவை?

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கு நாங்கள் திடமான சாட்சிகள் என சீஷர்கள் கூறுகின்றனர். இயேசு உயிர்த்தெழுந்ததற்கு நாங்கள் உயிருள்ள சாட்சிகள் என்று சீஷர்கள் கூறினபோது, அவிசுவாசிகள் அவர்களை எதிர்த்து தர்க்கிக்க முடியவில்லை. சொந்த அனுபவத்திலிருந்து கூறும் சாட்சியினை நாம் ஒருபோதும்மறுக்கமுடியாது.

ஆதிகாலத்து சீஷர்களைப் போல் இன்றைய கிறிஸ்தவ மக்கள் உளர். உயிர்த்தெழுந்த கிறிஸ்து, தன்னை எவ்வாறு பாவத்திலிருந்து விடுவித்தார் என்ற உயிருள்ள சாட்சி, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு மாருத நிரூபணமாய் உள்ளது. கிறிஸ்து ஜீவிக்கிருர் என்பதை நாம் எவ்வாறு அறிவோம்? இயேசு நம்முடைய இருதயங்களில் வாசம் பண்ணுகிருர்.

நாம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால், பாவத்திலிருந்து விடுபட முடியும் என்ற கருத்து மாருத பிரமாணம் ஆகும். இதை யாரும் மறுக்க முடியாது. இயேசு கிறிஸ்துவின் மூலமாக பாவத்திற்கு ஒரு மனிதன் பரிகாரம் காண முடியும் என்ற ஒரு கருத்தே, இயேசு உயிரோடு எழுந்தார் என்பதற்குரிய மாருத சாட்சியாக உள்ளது. இயேசு உயிரோடு எழுந்து நமக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கிருர். (எபி. 7:25) பாவத்திற்கு பரிகாரம் உள்ளமையால் தான் பல நூற்ருண்டுகளாக திருச்சபை இவ்வுலகில் நிலவி வருகின்றது. நம்முடைய சாட்சிக்கு பாவப் பரிகார சத்தியம் வல்லமை அளிக்கின்றது. நாம் அவிசுவாசிகளிடம் சாட்சியிடும் போது, பாவப் பரிகார கருத்து நம்முடைய இலக்காக இருக்க வேண்டும்.

(4) நித்திய காரியங்களை, இவ்வுலக நிகழ்ச்சி, காலநிலை குறிப்புகள் மறைத்து விடுகின்றனவே ஏன்?

இயேசு சீஷர்களோடு செலவிட ஒரு சில வருடங்களே இவ்வுலகில் அவருக்கு இருந்தது. அவர் தமக்கு இருந்த அந்த சொற்ப காலத்தில் தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்த காரியங்களையே சீஷர்களோடு பரிமாறிக் கொண்டார். நித்தியத்துக்குரிய காரியங்களைப் பற்றிப் பேசுவதில் நேரத்தைச் செலவிடுவதே உத்தமமான காரியமாகும். நம்முடைய வாழ்க்கையில் இவ்வுலகத்துக்குரிய அநேக காரியங்கள் உள. மனிதன் இவ்வுலகக் காரியங்களினின்று தன்னை முழுவதுமாய் விடுவித்துக் கொள்வது கூடாத காரியமாகும். அநேக கிறிஸ்தவர்கள் நித்தியத்துக்குரிய காரியங்களைக் குறித்து அசட்டையாய் இருக்கின்ருர்கள். கிறிஸ்தவர்கள் நித்தியத்துக்குரிய காரியங்களை சிந்திக்க வேண்டிய அளவிற்கு சிந்திப்பதில்லை. தகுதியான நித்தியத்துக்குரிய காரியங்களில் அதிக நேரத்தை நாம் செலவிடாமல், உலகக் காரியங்களிலே அதிகமான நேரத்தை செலவிடுகிருேம்.

(5) ஒரு சிலரிடத்திலே தேவனுடைய காரியங்களைக் குறித்து பேசுவது போல மற்றவர்களிடம் பேசுவது முடியாத காரியமா? ஏன்?

நாம் சந்திக்கிறதான மக்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். நெருங்கிய நண்பர்கள் அல்லது உறவினர்கள்; கூடவேலைபார்க்கும் நண்பர்கள், சொந்தக்காரர்கள், சபைநண்பர்கள், முற்றிலும் அறிமுகமாகாத வேற்றுமனிதர்கள் ஆகிய மூன்று வகுப்பார் உலகில் உளர். இந்த மூன்று வகுப்பாரில் யாரிடம் எளிதில் கிறிஸ்துவைப் பற்றி அறிவித்துவிடலாம் என வினவினால், வேற்று மனிதர்களிடம் என்ற விடையே நமக்கு கிடைக்கும். எந்த வகுப்பாரிடம் நாம் கிறிஸ்துவைப் பற்றி எளிதாக அறிவிக்க முடியாது என வினவினால் சொந்த மக்களிடம் தான் என்ற விடையே கிடைக்கும். எந்த மக்களிடம் கிறிஸ்துவைப்பற்றி அறிவிப்பதில் வெற்றிபெறலாம் என வினவினால் கூடவேலைபார்ப்பவர்களோடு என்ற விடையே நமக்கு கிடைக்கும்.

இதற்கு என்ன காரணம் என வினவினால் பலவிடைகள் நமக்குக் கிடைக்கிறது. சொந்தக்காரர்களிடம் நாம் ஏன் கிறிஸ்துவை அறிவிக்க முடியாது என்று ஆராய்ந்தால், நம்முடைய பெலவீனங்கள் அவர்களுக்குத்தெரியும். ஆகவே அவர்கள் கிறிஸ்துவை எளிதில் ஏற்கமறுப்பர். தேவனுடைய கிருபையினாலே நாம் எவ்வளவு தூரம் பெலமுடையவர்கள் என்பதை வேற்று மனிதர்கள் அறியார்.

கூடவேலை பார்ப்பவர்கள் நம்முடைய பெலத்தை நன்கு அறிவர். நம்முடைய பெலவீனங்கள் அவர்களுக்குத்தெரியாது. ஆகவே எளிதில் இயேசுவை ஏற்றுக்கொள்வர்.

மேற்கூறியவைகளை நாம் நன்ருய் ஆராயும்போது நம்முடைய சாட்சியின் வாழ்க்கையைவிட, சாட்சி கூறுதல் வலிமையுடையது அல்ல என்பது தெளிவாகிறது. மனிதன் பேசும் வார்த்தைகளுக்கு திடமான ஒழுக்கவாழ்க்கை வலிமை அளிக்கின்றது. நம்முடைய வாழ்வில் பல பெலவீனங்கள் காணப்பட்டாலும், கிறிஸ்துவைப் பற்றி அறிவிக்கும் செய்தி அதிக வலிமை பெறத்தக்கதாக, நாம் கிறிஸ்துவுக்கு ஒப்பனையான ஜீவியம் செய்யக்கடவோம்.

பெந்தெகொஸ்தே நாளுக்காக ஆயத்தப்படல்

வேத பகுதி அப்.1:12—26.

போதிக்கும் திட்டம்

புதியஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள யூதாஸ்காரியோத்தைப் பற்றி யாராவது ஒரு மாணவரை நன்ருக ஆராய்ச்சி செய்து வரும்படி கூறுங்கள். அப்பொழுது இப்பாடம் போதிக்க எளிதாய் இருக்கும்.மத். 27:3ல் யூதாஸின் ''மனம் திரும்புதலில்'' உள்ள காரியங்களை நன்ருக ஆராய்வது தான் நமது நோக்கமாகும். ''மனம் திரும்புதல்'' என்ற பதத்திற்கு மூன்று கிரேக்க பதங்கள் புதிய ஏற்பாட்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. மத். 27:3ல் மனம் திரும்புதலுக்கு உபயோகிக்கப்பட்டுள்ள பதம் மிகவும் வலிமையற்ற பதமாகும். இவ்வித மனம் திரும்புதல் நம்முடைய இரட்சிப்பிற்கு வழி கோலாது. ஆழமான பாவ உணர்வோடு கூடிய மனம்திரும்புதல் அல்ல மத். 27:3ல் கூறப்பட்டுள்ள மனம் திரும்புதல்.

வேத விளக்கம்

அப். 1:12—26

பின்னணி

காலம் கி. பி. 29

இயேசு பரமேறிய பின் சீஷர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு எருசலேம் திரும்பி, ஆலயத்தில் அனுதினமும் தரித்திருந்து, தேவனை ஸ்தோத்தரித்தார்கள் என லூக்கா எழுதுகிருன். எல்லா ஜனங்களும் அறிந்திருந்த ஒருமேல் அறை இருந்தது என்றும், சீஷர்கள் அங்கே கூடி, தேவனைத் தேடி, பிதாவின்வாக்குத்தத்தத்தைசுதந்தரிக்கத்தக்கதாக காத்திருந்தார்கள் என்றும் லூக்கா கூறுகிருன்.

இந்த மேல் அறை யோவான் மாற்குவினுடையதாய் இருந்தது என பாரம்பரியம் கூறுகிறது. (இந்த மேல் அறைக்கு போக வெளியே படிக்கட்டுகள் இருந்தன என்றும்பாரம்பரியம்கூறுகின்றது. அப். 12:12) பஸ்கா பண்டிகையை ஆசரித்த இடமும், இயேசுவைக் கைது செய்த போது சீஷர்கள் ஒளிந்திருந்த இடமும் இதுதான். ஆனால் இப்பொழுது காரியங்கள் வேறு வகையாய் இருந்தது. பயம் போய் விட்டது. நம்பிக்கையும், விசுவாசமும், சந்தோஷமும் சீஷர்களின் இருதயத்தை நிரப்பிற்று. சீஷர்கள் கதவை அடைத்துக்கொண்டு ஒளிந்திருப்பதற்குப்பதில் , கதவை திறந்துவைத்து கொண்டு ஆணும் பெண்ணுமாக பரிசுத்த ஆவியின் மழைக்காக கீழ்படியும் உள்ளத்தோடு காத்திருந்தார்கள்.

1 கீழ்ப்படிதலோடுகாத்திருத்தல்

அப். 1:12—14.

(அ) ஒருங்கிணைந்த கீழ்ப்படிதல்:- அப்.1:12, 13

பதினொரு சீஷர்களும் சந்தோஷத்தோடு திரும்பினது மாத்திர

தங்க வசனம்:-அங்கே இவர்களெல்லாரும்,....... தரித்திருந்தார்கள்.(அப் 1:1)

மல்ல, தங்களுக்கு ஒருபெரியவேலையின் உத்திரவாதம் இருக்கிறது என்ற உணர்வோடு எருசலேமுக்கு திரும்பி வந்தார்கள். எருசலேமை சீஷர்கள் அடைந்தவுடன் முதலாவது மேல் அறைக்குச் சென்றனர். கூட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்ளாமல் ஜெபிக்க தனித்துச் சென்றார்கள். சீஷர்கள் தங்களுடைய வீடுகளுக்கு கலைந்து செல்லவில்லை. இயேசுவினுடைய கண்டிப்பான கட்டளையின்படி, வாக்குத்தத்தத்தைசுதந்தரிக்கும்படியாக ஓரிடத்தில் கூடியிருந்தார்கள். சீஷர்கள் தங்களுடைய வழக்கப்படி ஆலயத்தில் காலை 9 மணிக்கும், மாலை 3 மணிக்கும் ஆராதனை செய்யப் போவர். ஆனால் இப்பொழுது அவர்கள் ஆலயத்தில் ஜெபிக்கக் கூடாமல், மேல்அறையில் தனித்து ஜெபிக்க விரும்பினார்கள்.

மேல் அறை அநேகர் அமரத்தக்கதான விசாலமான இடமாய் இருந்தது. சீஷர்கள் ஒளித்துக் கொள்வதற்காக மேல் அறையில் கூடாமல், கீழ்ப்படிதலைக் காட்டக் காத்திருந்தார்கள். அநேக ஆளத்துவம், குணாதிசயம் உடைய மக்கள் மேல் அறையில் கிறிஸ்தவ விசுவாசத்தைக் காட்டும்படி ஐக்கியத்தோடு கூடியிருந்தார்கள். இயேசுவின் நாமத்தில் அவர்கள் மேல் அறையில் கூடியிருந்தமையால், அவரை அவர்கள் அங்கே கண்டுகொண்டார்கள். (மத்.18:20)

(ஆ) ஒருங்கிணைந்த ஐக்கிய ஜெபம்' (அப்.1:14)

சிலுவைக்கு முன், சீஷர்கள் ஒருவரோடு ஒருவர் பொறாமை எண்ணம் கொண்டு பிரிந்த நிலையில் காணப்பட்டனர். (லூக். 22:24) சீஷர்கள் தேவனைத் தேடினவுடன் இப்பொழுது அவர்களுக்கிடையே ஒரு பெரிய ஐக்கியம் ஏற்பட்டது. சீஷர்கள் யாவரும் ''ஒரே மனதுடன்'' மேல் அறையில் கூடியிருந்தார்கள். (ஒரே மனதுடனும், ஒரே நோக்கத்துடனும் கூடியிருந்தார்கள் என்பது தான் கிரேக்க அர்த்தமாகும். 'ஒரே மனதுடன்' என்ற வார்த்தை அப்போஸ்தல நடபடிகளில் காணப்படும் விசேஷமான வார்த்தையாகும்.)

சீஷர்கள் யாவரும் ஜெபித்து தங்களுடைய ஐக்கியத்தின் தன்மையை, நோக்கத்தை வெளிப்படுத்தினார்கள்.

பவுல் அப்போஸ்தலனால் கூறப்பட்ட 500 பேரும் (1கொரி.15:6) மேல் அறையில் கூடியிருந்தார்கள் என ஒரு சிலர் கூறுகின்றனர். கலிலேயாவில் 500 பேர் இயேசுவை கண்டிருக்கலாம். ஆனால் அநேகர் எருசலேமுக்கு திரும்பி வந்திருக்க மாட்டார்கள் என ஒரு சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். மேல் அறையில் கூடியிருந்த மக்கள், இடைவிடாது ஜெபசிந்தையில் இருந்தார்கள் என கிரேக்க ஆதாரம் கூறுகின்றது. சீஷர்கள் தங்கள் நேரத்தை முழுவதுமாக ஜெபத்திலே செலவிட்டு, தங்களை எந்தக் காரியமும் அதைரியப் படுத்தி விடாதபடி காத்துக் கொண்டார்கள்.

அப்போஸ்தலர்களின் முன் மாதிரியான செயல், மற்றவர்களும் அவர்களோடு சேர்ந்து காத்திருக்க உதவிற்று. வாரத்தின் முதலாவது நாளில் கல்லறைக்குச் சென்றபெண்மணிகள், அப்போஸ்தலர்களின் மனைவிமார், இன்னும் பல சீஷர்கள் மேல் அறையில் கூடியிருந்தனர். (1 கொ. 9:5 ஐப்பார்). ஆவிக்குறிய காரியங்களில் பெண்களும், ஆண்களைப் போல் சம வாய்ப்பைப் பெற்று இருந்தார்கள்.

இயேசுவின் தாயாகிய மரியாளும், தன்னை ஒரு உயர்வான பெண்மணி என்று காட்டிக் கொள்ள மேல் அறையில் கூடா

மல், மற்றவர்களைப் போல தேவ சமுகத்திலே, ஆவியானவரின் மழைக்காக காத்திருந்தாள். மற்ற சீஷர்களைப் போல் தானும் அபிஷேகம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு மரியாளுக்கு இருந்தது.

யோசேப்பு, மரியாளுக்கு பிறந்த இயேசுவின் சகோதர, சகோதரிகளும் பெயர் அட்டவணையில் பிரத்தியேக இடம் பெற்றிருந்தனர். (மாற்கு 6:3) தம்முடைய சகோதர, சகோதரிகளின் வாழ்வில் இயேசு எவ்வளவு தூரம் மாறுதலைக் கொண்டு வந்து விட்டார் எனப் பாருங்கள். இயேசு இப்பூவுலகில், மாம்சத்தில் இருந்த நாட்களில் ஊழியம் செய்தபோது, அவரின் சகோதர, சகோதரிகள் அவரை நம்பவில்லை. இயேசுவுக்கு மூளைக் கோளாறு என்று கூட நம்பினார்கள். (யோ.7:5; மாற்கு3: 21 ல்"நண்பர்கள்" என்ற கிரேக்க பதம்"குடும்பத்தைக்" காட்டும்.) இயேசுவின் சகோதர, சகோதரிகள், மரியாளின் உள்ளத்தை புண்படுத்தி விடுவர் என்பதால் தான், சிலுவையில் தொங்கும் கடைசி நேரத்தில் கூட, அவளை, அவர்களிடம் ஒப்படைக்கவில்லை. ஆனால் உயிர்த்தெழுந்த இயேசு தம்மை சகோதர, சகோதரிகளுக்கு வெளிப்படுத்தி விட்டார். ஆகவே இயேசுவின் சகோதர, சகோதரிகளும், இப்பொழுது தாயாகிய மரியாளோடு தச்சனாகிய இயேசுவை ஆராதிக்க கூடாமல், தங்களுடைய இரட்சகரும், தேவனுமாகிய இயேசுவைத் தொழ மேல் அறையில் கூடியிருந்தனர்.

2 காட்டிக் கொடுத்ததின் பின் விளைவு:—

அப்.1:15-20.

(அ) சுதந்தர வீதம் இழக்கப்பட்டு போனது:— அப்.1:15-19.

மேல் அறையில் 120 பேர் தேவனைத் துதிக்கவும், ஜெபிக்கவும் மாத்திரம் கூடாமல், தேவவசனத்தை ஆராயவும் இருதயத்தைத் திருப்பினார்கள். தேவ வசனம், தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டதென்று விசுவாசித்தார்கள். மேலும் தேவ வசனம் தாவீது போன்ற மனிதத்துவைகளால் எழுதப்பட்டது என்றும் விசுவாசித்தனர்.

யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்ததும் தேவ நோக்கங்களில் ஒன்ருய் இருக்கிறது என்ற பகுதி, சீஷர்களின் கவனத்தை ஈர்த்தது. (சங். 41:9) யூதாஸின் வீழ்ச்சியைப் பற்றி பேதுரு மகிழ்ச்சி கொள்ளவில்லை. யூதாஸ் காட்டிக் கொடுப்பான் என்பது முன் குறிக்கப்பட்ட காரியம் என பேதுரு அந்தக் காரியத்தை அசட்டையாய் விட்டு விடவில்லை. இதற்கு மாருக யூதாஸின் வீழ்ச்சி தனக்கு ஒரு எச்சரிக்கையான காரியம் என்பதை உணர்ந்தான். யூதாஸ் ஒருவன் தான் இயேசுவை காட்டிக் கொடுக்கவில்லை. மற்ற அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தைப் போல யூதாசும் ஊழிய அழைப்பைப் பெற்ருன். ஆனல் அவனே பின்வாங்கி, அவன் தெரிந்து கொண்ட இடத்திற்கு போய் விட்டான். (வசனம் 25ஐப்பார்).

யூதாஸின் 30 வெள்ளிக் காசினால், இரத்த நிலம் விலைக்கு வாங்கப்பட்டது. (யூதாஸ் இரத்த நிலத்தை தன் கையினல் விலைக்கு வாங்கவில்லை, அவன் சம்பாதித்ததை ஆலயத்தில் விட்டெறிந்து போனான். 30 வெள்ளிக் காசினால் இரத்த நிலம் விலைக்கு வாங்கப் பட்டது (மத்.27:3-10) மத்.27:5ல் யூதாஸ் நான்று கொண்டு செத்தான் என பேதுரு சுட்டிக் காட்டுவதை நாம் பார்க்கிறோம், இங்கு பேதுரு

ளின் நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரிக்கவே, சீஷர்களின் கவனத்திற்கு இதைக்கொண்டு வருகிருன். அப்போஸ்தல நடபடிகளில் வயிறு வெடித்து செத்தான் என வாசிக்கிரேம். கயிறு அறுந்திருக்கலாம் என ஒரு சிலர் நினைக்கிருர்கள். 'வயிறு ஊதி' பெருத்தது என்ற மருத்துவ பதத்தை வைத்திய ஞகிய லூக்கா இங்கு உபயோகித்திருக்கலாம். யூதாஸ் நான்று கொண்டு தொங்கினபோது, வயிறு உப்பி, வெடித்து செத்திருக்கலாம் என ஆதி கிறிஸ்தவ எழுத்தாளஞன பாப்பியாஸ் அபிப்பிராயப் படுகின்ருர்.

(ஆ) யூதாஸின் அப்போஸ்தல பதவி நிரப்பப் படவேண்டும்:- அப். 1:20.

தேவ வசனம் எப்பொழுது ஆழமாய் தியானிக்கப் படுகிறதோ அப்போது அங்கு ஒரு எழுப்புதல், தேவ அசைவு காணப்படும். சத்திய வசனத்தின் சத்தியத்தை விசுவாசிகள் பின்பற்ற விரும்புகின்றனர். வேத வசனம் நிறைவேறுவதைக் காண ஆசைப்படுகின்றர்.

இப்படியாக 120 சீஷர்களும் ஜெபத்திலும், வேததியானத்திலும் தரித்திருந்தபோது, அவர்களின் கவனம் தங்களுக்கு இருந்த ஒரு வேலையின் மீது செல்ல ஆரம்பித்தது. 12 அப்போஸ்தலர்களை இயேசு நியமித்திருந்தார். இந்த 12 பேரும், வரும் நாட்களில் 12 சிம்மாசனங்களில் அமர்ந்து, இஸ்ரவேலின் 12 கோத்திரத்தை நியாயம் தீர்ப்பர் என்று இயேசு வாக்களித்துள்ளார். (மத். 19:28) தீர்க்கதரிசன நிறைவேறுதலின் படி, ஒருவன் வீழ்ந்து போனுன். தீர்க்கதரிசன வசனங்கள் முழுவதுமாய் நிறைவேறத்தக்கதாக மீதிப் பகுதியையும் சீஷர்கள் நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளார்கள். இடம் விழுந்து போன அப்போஸ்தல இடத்தில், இன்னெருவர் நிச்சயமாய் நியமிக்கப்படவேண்டும் என வேதப்பகுதிகள் வலியுருத்துகின்றன. (சங். 69:25; 109:8)

இது தேவையில்லாத காரியம் என ஒரு சில எழுத்தாளர்கள் கூறுகின்றனர். அப்போஸ்தலனைத் தெரிந்தெடுப்பதில் பேதுரு அவசரப்பட்டுவிட்டான். மத்தியாஸ் ஒரு போதும் உண்மையான அப்போஸ்தலஞய் விளங்கினதாக வேதவசனத்தில் எங்கும் அதிகமாய் கூறப்படவில்லே. பவுல் அப்போஸ்தலன் தான் உண்மையான அப்போஸ்தலன் என சிலர் வாதிடுகிருர்கள். ஜோசப் அலெக்சாண்டர் என்ற அமெரிக்க வேத வியாக்கியானி இதைக்குறித்து 100 வருடங்களுக்கு முன்பே கீழ்க்காணுமாறு பதில் கொடுத்து விட்டார் "அப்போஸ்தலனைத் தெரிந்தெடுக்க வேண்டும் என பேதுரு கூறிய போதிலும், இது அவனுடைய சொந்த தேர்வு அல்லாமல், 120 பேரின் தேர்வேயாகும். அப்போஸ்தலனே கூடியிருந்த சீஷர்கள் தெரிந்தெடுக்கவில்லே. தேவனே தெரிந்தெடுத்துள்ளார். அநேக அப்போஸ்தலர்களைக் குறித்து சரித்திரம் சான்று கூறவேயில்லே. சரித்திரம் அவர்களைக் குறித்து அமைதியாக இருக்கின்றது. பவுல் 12 அப்போஸ்தலர்களில் ஒருவன் அல்ல; அவன் புறஜாதிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட இன்னெரு அப்போஸ்தலன் ஆகும். 12 அப்போஸ்தலர்கள் விருத்தசேதனமுடைய ஜனத்திற்குரியவர்களாவர்".

III ஒரு புது அப்போஸ்தலனைத் தெரிந்தெடுத்தல்:- அப் 1:21-26.

(அ) அப்போஸ்தலனுக்குரிய தகுதிகள்:- அப் 1:21,22.

ஒரு புது அப்போஸ்தலனை நியமிக்கவேண்டும் என பேதுரு பிரயத்தனமும் தானாக செய்யவில்லை அவனுக்கு அப்படிப்பட்ட ஓர் அதிகாரம் கிடையாது என்பது நமக்கு தெளிவாக புலனாகின்றது. அப்போஸ்தலனாய் ஒருவன் இருக்க அவனுக்குரிய தகுதிகள் என்ன என்பதை மாத்திரம் பேதுரு கூறுகின்றான். யாரொருவன் இந்த தகுதிகள் உடையவனாய் இருக்கின்றானோ, அவனே அந்த பதினோரு அப்போஸ்தலரோடு சேர்ந்து, பன்னிரெண்டாக மாறலாம்.

கிறிஸ்து இப்பூமியில் ஊழியம் செய்யும்போது, பன்னிரண்டு அப்போஸ்தலர்களை புதிய அப்போஸ்தலன் அடிக்கடி சந்தித்து இருக்கவேண்டும். இயேசுவினுடைய உயிர்த்தெழுதலுக்கும், போதனைக்கும் புதிய அப்போஸ்தலன் உயிருள்ள முதற்சாட்சியாய் இருக்க வேண்டும். பெரேயாவிலிருந்து இயேசு 70 பேரை ஊழியத்திற்கு தெரிந்து கொண்டு அனுப்பினார். அவர்களில் ஒருவனாக புதிய அப்போஸ்தலன் இருக்கலாம்.(லூக்.10:1;17-20,23,24).

12 அப்போஸ்தலர்கள் என ஒரு குறிப்பிட்ட 7 குழுவாக இருந்தாலும்,(இஸ்ரவேலின் 12 கோத்திரத்தை, 12 பேர்தான் சிம்மாசனங்களில் அமர்ந்து நியாயந்தீர்க்கலாம்) பர்னபாவும், சீலாவும் அப்போஸ்தலர்கள்என அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகமே கூறுகின்றது. (அப்.13:3;14:4,14). இந்த இரண்டு பேரும் இயேசுவின் உயிர்த்தெழுதலையும், போதனையையும் கண்கூடாகக்கண்ட, கேட்ட சாட்சிகளாவர். இந்த அடிப்படையில்தான், பவுல் அப்போஸ்தலன் தான் இரண்டாம் தர, அல்லது இரண்டாம் தலைமுறை சாட்சியல்ல என்று கூறுகின்றான். இயேசுவினுடைய வாழ்க்கையைப் பற்றியும், அவரின் வசனத்தைப் பற்றியும், பன்னிரண்டு சீஷர்கள் மூலமாய் பவுல் அறியவில்லை. வேறு எந்த மனிதனிடத்தினின்றும் கற்றுக் கொள்ளவில்லை. பவுல், இயேசுவினிடமிருந்தே நேரடியாய் கற்றுக் கொண்டான். (கலா.1:16,17; 1.கொரி 15:8-11)

இன்றைக்கு இப்படிப்பட்ட முதல் தரமான சாட்சிகள் இன்று கிடையாது. ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் வேதவசனத்தையும் இயேசுவின் வெளிப்பாட்டையும் நம்முடைய இருதயத்திற்கு உண்மையானதாக மாற்ற முடியும். நம்முடைய அனுபவ சாட்சியின் மூலம் ஜீவிக்கும் கிறிஸ்துவை அறிய முடியும். இந்த வகையில் நாம் பார்க்கும்போது, அப்போஸ்தலீக ஊழியம் ஒருபோதும் நின்று போகிற ஊழியம் அல்ல என்று நமக்குத் தெரிகின்றது.

(ஆ) ஜெபத்தோடு அப்போஸ்தலனைத் தெரிந்தெடுத்தல்:— அப்.1:23-26.

தகுதியாக காணப்பீட்ட மத்தியாஸையும், யோசேப்பையு[ம்] தேவ சன்னிதானத்தில் நிறுத்தினார்கள். (ஏதாவது ஒரு வகை தேர்தல் நடந்தேயாக வேண்டும் மனிதனின் இருதயங்களையும் தன்மையினையும் தேவன் அறிவா[ர்] என்ற விசுவாசத்தோடு, அப்போஸ்தலர்கள் தேவ சமூகத்திலே ஊக்கமாக ஜெபித்தார்கள். தேவன் பேரில் விசுவாசத்தை அப்போஸ்தலர்கள் வெளிப்படுத்தினார்கள். தேவன் தாமே தகுதியானவனைத்தெரிந்தெடுக்க உதவுவார் எனவும் விசுவாசித்தார்கள் 11அப்போஸ்தலர்களிடமும் சீட்[டு] கொடுக்கப்பட்டது. (சிறிய கழிகள் அல்லது கூழாங்கற்கள் — ஆ[ம்] அல்லது இல்லை என்பதை குறிக்க உபயோகப் படுத்தி[யிருக்]கலாம்). சிறிய கற்பலகைக[ளில்] பெயர்களை எழுதி ஒரு பாத்[திரத்தில்]

லில் போட்டு. குலுக்க, ஒரு பெயர் தெரிந்தெடுக்கப்படும் என வேறு சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள். (லேவி.16:8ஐப்பார்.)

தேவனுடைய சங்கமாகிய விசுவாசிகள் முழு மனதாக தேவ சித்தத்தை ஏற்றுக் கொண்டார்கள். இந்த சம்பவத்திற்கு பிறகு வேதாகமம் 12சீஷர்களைப் பற்றி வருணிக்க ஆரம்பிக்கின்றது. (அப். 2:14;6:2)

வாழ்க்கையோடுள்ள தொடர்பு

1 கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு கீழ்ப்படிவது எப்படி ஐக்கியத்தை உருவாக்கிறது?

'தேசீய ஒற்றுமை இயக்கம்' என்ற ஒரு ஐக்கியக் குழு ஆவிக்குரிய உலகில் தோன்றியுள்ளது. இந்த இயக்கத்தைப் பற்றி விரிவாய் விளக்கம் கூற இயலாது. ஆனாலும் சுவிசேஷ நோக்கமுடைய அநேக வகுப்பார்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளார்கள் என்று மாத்திரம் கூறுவது எளிது. பொதுவான நோக்கத்தை அடைய வேண்டும் என்பதுதான் இந்த இயக்கத்தின் நோக்கமாகும். மத் 28:19ல் இயேசு ''நீங்கள் உலகமெங்கும் போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்'' என்று கூறியுள்ள கட்டளையை நிறைவேற்றுவதுதான் இந்த இயக்கங்களின் நோக்கமாகும். ஆண்டவர் கொடுத்த பெரிய கட்டளைக்கு கீழ்ப்படிவதால் தான் சுவிசேஷ நோக்கமுடைய சபைகள் ஒருங்கிணைந்து, ஐக்கியமாக உள்ளன. அடுத்ததாக ஐக்கியத்தை வெளிப்படுத்துபவை விசுவாச மிஷனரி போர்டுகளாகும். இந்த போர்டுகள் அநேக மத வகுப்பினைச் சார்ந்த மக்களிடம் பண உதவியை கோருகிறது. மக்கள்தாராளமாக இவற்றினுக்கு பண உதவி செய்கின்றனர். சீன—உள் நாட்டு மிஷன், சுவிஷேச ஐக்கிய மிஷன், அகில உலக சுவிசேஷ கூட்டம் என பல மிஷனரி போர்டுகள் இருக்கின்றன. இவைகள் ஐக்கியத்தோடு செயல்படுகின்றன. இயேசுவின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற எண்ணம், மறுபடியும் பிறந்த விசுவாசிகளிடையே ஐக்கியத்தை உருவாக்குகிறது.

(2) சபையின் ஐக்கியத்திற்கும், ஜெபத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

விசுவாசிகள் மேல் அறையில் ஜெபிப்பதற்கும், விண்ணப்பம் செய்ததற்கும் கூடியிருந்தார்கள் என்று கூறுவதற்கு முன், அவர்கள் ஐக்கியத்தோடு, ஒருமனப் பட்டவர்களாய் இருந்தார்கள் என அப். 1: 4ல் முதலாவது கூறப்பட்டுள்ளது. ஐககியமும், ஜெபமும் ஒன்றையொன்று சார்ந்துள்ளது. சுருக்கமாகக் கூறினல், சபையில் ஐக்கியம் காணப்படுமேயானால், அங்கு ஜெபமும், விண்ணப்பமும் காணப்படும். அதுபோல ஜெபம் எந்த சபையில் காணப்படுகிறதோ அங்கு நிச்சயம் ஐக்கியம் காணப்படும்.

சிலுவையின் அடிவாரத்தில் மனித சமுதாயம் யாவும் ஒரே கூட்டமாக மாற்றப் படுகிறது. தேவ பிரசன்னத்தில் நாம் இருக்கும் போது, நம்மைப் பிரிவினைகள் அகன்று ஓடிப்போய் விடுகின்றன. ஆகையால் நாம் பரிசுத்த ஆவியினால் ''ஒரே மக்களாகி'' விடுகிறோம். இப்படி நாம் ஆவியில ஒருமைப் படும்போது, அந்த ஆவியானவர் நம்மை ஜெபிக்க விண்ணப்பிக்க ஏவுகிருர். ஒரு சபையில் காணப்படும் பிரிவினைகளை அகற்றவேண்டுமானுல்,

அங்குள்ள ஜனங்கள் தங்கள் நேரங்களை அதிகமாக ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் கழிக்க வேண்டும். அப்பொழுது சபையில் ஒற்றுமை நிலவி எழுப்புதல் உண்டாகும்.

(3) ஒரு மனிதன் ஊழியமும் செய்து கொண்டு, பாவமான காரியங்களிலும் தொடர்புடையவனாய் இருக்க முடியுமா?

கிறிஸ்தவவாழ்க்கைக்கு யூதாஸ் ஒரு கருப்பு புள்ளியாய் இருக்கிறான். ஒரு மனிதன் பார்வைக்கு நல்ல ஊழியம் செய்து கொண்டு, கர்த்தர் விரும்புகிற பிரகாரம் அவன் இல்லாமலும் இருக்கலாம். ஒரு மனிதன் வெற்றிகரமான ஊழியம் செய்வதால், அவன் தேவனோடு சரியான தொடர்பு உடையவனாய் இருக்கிறான் என எண்ணுவது தவறு. தேவன் தம்முடைய வசனத்தின் மூலமாகவும்' தம்முடைய ஊழியர்கள் மூலமாயும் கிரியை செய்கிறார். வேத வசனத்தை பரிசுத்த ஆவியானவர் தம் கையில் எடுத்து ஊழியம் செய்வதால், ஊழியர்கள் பலவித மான கோணங்களில் ஊழியம் செய்கின்றனர். பிரசங்கிக்கிற மனிதன் பாவம் செய்கிறவனாயினும், வேத வசனம் மனித இருதயங்களில் கிரியை செய்வது தடை படாது. வசனம் ஜீவனுள்ளது, தானாக கிரியை செய்யும். ஒரு மனிதனுடைய ஊழியத்தினாலே அனேகர் ஆசீர்வதிக்கப் படுவதால், அவன் சரியான கிறிஸ்தவ ஜீவியம் செய்கிறான் என்று கற்பனை செய்வதிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ள வேண்டும்.

மேற்கூறியவைகளை நாம் மனதிற் கொண்டு, இதையடுத்ததில் கவனமாய் இருப்போமாக. சபையோ, ஊழியனோ, சாதாரண விசுவாசியோ ஆகிய யாவரும் பாவமில்லாத பரிசுத்தவான்கள் என ஒருபோதும் கூறி பெருமைப் பட்டுக் கொள்வது சரியில்லை. தவறிப் போகிற மனிதனை ஆண்டவர் தெரிந்து கொண்டு, அவனுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் கடமையை ஈந்துள்ளார். நாம் பாவமுடைய மக்கள் என எண்ணினாலும், ஒவ்வொருவரும் சபை ஊழியத்தில் ஈடுபட வேண்டும். நாம் நம்முடைய பெலவீன நிலைமையை தேவனிடம் அறிக்கை செய்ய வேண்டும் ''ஆண்டவரே, நான் இருக்க வேண்டிய பிரகாரம் நான் இவ்வுலகில் இருக்கவில்லை. நான் மறு உலகில் இருக்கப் போகிற பிரகாரம் நான் இவ்வுலகில் ஜீவிக்கவில்லை. ஆனாலும் நான் முன்பு பாவியாய் ஜீவித்தது போல இப்பொழுது ஜீவிக்காமல் இருப்பதற்காய் உம்மைத் துதிக்கிறேன்'' என்று கூறி ஜெபியுங்கள். நாம் நம்முடைய வாழ்வில் பல பெலவீனங்களோடு காணப் பட்டாலும், ஆண்டவர் சபையில் நமக்கு வைத்திருக்கும் ஊழியத்தை நாம் நிறைவேற்றியே ஆக வேண்டும்.

தேவன் தம்முடைய சபையை எவ்வாறு இதுநாள் வரைக்கும் (காலாகாலங்களாக) நடத்தி வந்துள்ளார்?

யூதாஸ்க்கு பதிலாக இன்னொருவரை அப்போஸ்தலர்கள் தெரிந்தெடுத்த முறைமையைக் கவனியுங்கள். அந்த தேர்தல் தேவனாலே வழி நடத்தப்பட்ட காரியமாகும். ஆகவே தேவன் எவ்வளவு அற்புதமாய் சபையை நடத்துகிறார் என பாருங்கள். இங்கு இரண்டு தத்துவங்கள் ஒரே நேரத்தில் செயல் படுவதைக் காணலாம். ஒரு மனிதனை மனித அறிவினால் தெரிந்தெடுக்கும் முறை முதல் தத்துவமாகும்.

தகுதி வாய்ந்த இருவரை, அப்போஸ்தலர்களை, தெரிந்தெடுத்தது மனித அறிவின் அடிப்படையிலாகும். ஆனால் இதோடு கூட ஆண்டவர் தாமே இருவரில் ஒருவரை தெரிந்தெடுக்கும்படியாய் அவரை அழைத்தது இரண்டாவது தத்துவமாகும். அப்போஸ்தலர்கள் ஓட்டுப் போடும்போது, தேவன் சரியான நபரைத் தெரிந்தெடுக்க பரிசுத்த ஆவியின் மூலம் அவர்களோடு பேசுவார் என விசுவாசிப்பது இரண்டாவது தத்துவமாகும்.

இப்படியாக மனித அறிவின் அடிப்படையிலும், தேவ வழி நடத்துதலிலும் சபை நடந்து வந்தது என்பதற்கு புதிய ஏற்பாட்டில் அனேக சான்றுகள் உள்ளன. புறஜாதியாரிடையே எழும்பின பிரச்சனையைக் குறித்து எருசலேமில் அப்போஸ்தலர்கள் கூடி விவாதித்தனர். விவாதம் முடிந்து, புறஜாதிய சபைகளுக்கு பின்வருமாறு செய்தியை அனுப்பினார்கள். ''எங்களுக்கும், பரிசுத்த ஆவிக்கும் நலமாய்'' தோன்றினதை நாங்கள் கூறுகிறோம் என்றார்கள். (அப்.15:28). சபையானது காலா காலங்களாக பரிசுத்த ஆவியின் ஊழியத்தினால் வழி நடத்தப் பட்டு வந்தது என நமக்கு அனேக ஆதாரங்கள் உள.

இதே தத்துவத்தில் தான் இன்றும் சபை இயங்கி வருகின்றது. யூதாசுக்குரிய இடத்தில் நியமிக்க வேண்டியவனை, அப்போஸ்தலர்கள் மனித அறிவின் படியும், தேவ வழி நடத்துதலின் படியும் தெரிந்தெடுத்தது போல, நாமும் தேவ வழிநடத்துதலுக்காக அவரை அண்டிக் கொள்கிறோம். இன்றும் சபையின் ஒவ்வொரு பகுதியும் தேவ வழிநடத்துதலால் தான் நடை பெற்று வருகின்றது. இதை மனதில் கொண்டு தான், சபை நிர்வாக கமிட்டி கூடும் போது, ''தேவனே, உமது பரிசுத்த ஆவியானவர் மூலம் எங்களை வழிநடத்தும்'' என ஜெபித்து, ஆரம்பிக்கிறோம். நாம் பல வகையான சபைப் பிரச்சனைகளை மூளை அறிவினால் சரிப்படுத்தி விடுகிறோம். நமக்கு எப்போது ஞானக் குறைவு ஏற்படுகிறதோ, அப்போது பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஞானத்தை அபிவிருத்தி செய்து, அபிஷேகிக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் வரங்களும் நமக்கு தாராளமாக, இலவசமாக உள்ளது. (1கொரி,12:8).

"பரிசுத்த ஆவியின் மழை ஊற்றப்படல்"

வேதபகுதி:- அப். 2:1-8,12-18.

போதிக்கும் திட்டம்:-

பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யும் பல விதங்களை கரும்பலகையில் எழுதவும். உங்கள் வகுப்பு மாணவர்கள் விடை கூறும்படி உற்சாகப்படுத்தவும். அவர்களுக்கு தெரிந்தவைகளை முதலாவது கூறும்படி செய்து, கரும்பலகையில் வரிசையாக எழுதவும். பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட விசுவாசியோடு அல்லது அவிசுவாசியோடு இடைபடுவார் என்ற கருத்தை விளக்கிக் கூறு. சில நேரங்களில் சபையிலும் கிரியை செய்வார் என்பதைக் கூறு. பரிசுத்த ஆவியானவர் மூலம் தேவன் மக்களோடு கிரியை செய்வார் என்ற கருத்து தெளிவாகின்றது. திரித்துவ தேவர்களில் ஒருவர் பரிசுத்த ஆவியானவர். இவர் பூமியிலுள்ள மக்களிடம் தேவனுக்காக கிரியை செய்பவராவார்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பற்றி பெந்தெகொஸ்தே வட்டாரங்களில் மக்கள் கூறும் அபிப்பிராயங்களை கரும்பலகையில் வரிசையாக எழுது. (அப். 2:4க்கு கொடுக்கப்பட்ட விளக்கத்தோடு அபிப்பிராயங்களை ஒப்பிடவும்). நாம் உபயோகிக்கிற சில நாமங்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை என்ற கருத்தை வலியுறுத்திக் கூறவும்.

பரிசுத்த ஆவியானவர் சபையில் அருளும் வரங்களைக் குறித்தும், செயல்களைக் குறித்தும் கரும்பலகையில் எழுதலாம்.

வேத விளக்கம்:-

அப். 2:1-21.

பின்னணி:-

காலம் கி.பி. 29

நியாயப் பிரமாணத்தில் குறிக்கப்பட்ட மூன்று பண்டிகைகளில் பெந்தெகொஸ்தே பண்டிகையும் முக்கியமானதொன்றாகும் (பெந்தெகொஸ்தே என்றால் ஐம்பது என்று அர்த்தமாகும்). முதற் கனிகளின் பண்டிகை பஸ்கா பண்டிகைக்கு இரண்டு நாட்கள் கழித்து வருகின்றது. அதாவது புளிப்பில்லா அப்பப் பண்டிகையின் தொடக்க நாட்களில் வரும். நல்ல அறுவடையைத் தருவேன் என தேவன் வாக்குப் பண்ணினதால், யூதர்கள் அதனிமித்தம் தேவனைத் துதிப்பார்கள். முதற் கனிகளின் பண்டிகை, இயேசு உயிர்த்தெழுதலின் முதற்கனியானதை குறிக்கும் பண்டிகையாக உள்ளது. மேலும் இயேசுவே ஆத்தும அறுவடையினை கட்டளையிடுகிறவராகவும் இருக்கின்றார்.

கோதுமை அறுவடை முடியு... நாட்களில், அதாவது மே மாத... பெந்தெகொஸ்தே பண்டிகை வரு...

தங்கவசனம்:- கடைசி நாட்களில் நான் மாம்சமா... யாவர்மேலும்........................சொப்பனங்களைக் கா...பார்கள். அப். 2:17

(வாரப்பண்டிகை எனவும் கூறப்படும். யாத். 34:22; லேவி. 23:15—22; உபா. 16:10—12). இந்த நாட்களில் மத்திய பாலஸ்தீனவில் வயல்களில் வெள்ளைத் தானியங்கள் மிகுந்து காணப்பட்டு, அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்படும். அதுபோல பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி, நம்மை வெள்ளை வயல்கள் போன்ற உலகில் போய் ஆத்தும அறுவடை செய்ய ஏவுவதை அது குறிக்கின்றது. (அப் 1:8 லூக். 24:45-49; மத். 28:18,19 யோ. 4:35). சீனய் மலையிலிருந்து பிரமாணம் கொடுக்கப்பட்ட நாள் இதுதான் என்று நினைவு கூறும் பண்டிகையாகவும் ஆசரிக்கப்பட்டது. அது மாத்திரமல்ல, பிரமாணம் தங்களுடைய வாழ்க்கையின் நடு நாயகமாய் விளங்குகிறது என்றும் கூறுவர். ஆனல் எருசலேமில் ஒருமித்து காத்திருந்த 120பேரும் இயேசுவில் ஒரு புதிய மையத்தைத் தெரிந்து கொண்டனர்.

திராட்சப் பழ அறுவடையின் முடிவு காலத்தில் கூடாரப் பண்டிகை ஆசரிக்கப்படும். 40வருடங்கள் வனந்தரத்தில் அலைந்ததையும், தேவன் அவர்களை அக்கினி ஸ்தம்பம், மேக ஸ்தம்பத்தினல் வழி நடத்தினர் என்பதைக் காட்டவும், வானத்திலிருந்து மன்னவை பொழிந்து, கன் மலையினின்று தண்ணீரை ஈந்து, கூடாரங்களில் வசித்ததை நினைவு கூறவும், இக் கூடாரப் பண்டிகையை யூதர்கள் ஆசரிப்பார்கள். பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் பரிசுத்த ஆவியானவர் நம்மை வழி நடத்தி, நம் தேவைகளைச் சந்திப்பதை அப்பண்டிகை நமக்குக் காட்டுகின்றது. அது மாத்திரமல்ல, நாம் என்றென்றும் தேவனேடு வாழும்படி, இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படப் போகிறதையும் அது காட்டுகின்றது. (1தெச.4:17).

1. பெந்தெகொஸ்தேயின் வல்லமை:-

அப்.2:1—4

(அ) வல்லமையான அடையாளங்கள்:- அப். 2;1—3

காலம் நிறைவேறின போது கிறிஸ்து இவ்வுலகில் அவதரித்தது போல, தேவதிட்டப்படி காலம் வந்த போது பெந்தெகொஸ்தே நாளில்பரிசுத்தஆவியானவர்இவ்வுலகிற்குவந்தார்.பெந்தெகொஸ்தே நாளில், பரிசுத்த ஆவியானவரின் புதுயுகம் ஆரம்பமாயிற்று. வார்த்தையளவில் சொல்லப் போனல் பரிசுத்த ஆவியானவர் தமது தலைமைஸ்தானமாகிய பரலோகினை விட்டு, பூவுலகிற்கு வந்து விட்டார். கிறிஸ்துவின் கிரியைகளை தொடர்ந்து நடப்பிக்கவும், சபையில் உறையவும், விசுவாசிகளின் இருதயத்தில் தங்கவும் தக்கதாக இப்பூவுலகிற்கு வந்து விட்டார். (1கொரி 3:6; 6:19). காத்திருக்கும் நாட்கள் போய் விட்டன. விசுவாசிகள் அதிக நாட்கள் காத்திராத அளவில் அபிஷேகம் பெறுகின்றனர். (விசுவாசிகள் தேவ சமூகத்தில் காத்திருக்க விரும்பினலும், அவர் எளிதில் அநேகரை அபிஷேகித்து விடுகிருர்).

பலத்த அடையாளங்கள் ஆவியானவரின் வருகையை முன்னறிவித்தன. முதலாவது புயல் காற்று போன்ற சப்தம் எழும்பினது. காற்று பரிசுத்த ஆவிக்கு முன்னடையாளமாய் இருக்கின்றது என பழைய ஏற்பாட்டிலும், இயேசுவின் போதனையிலும் காணப்படுகின்றது. (எசேக். 37:9; 14; யோவான் 3:8). பெந்தெகொஸ்தே ஆவியின் மழை ஊற்றப்படுகிறதையும் தேவனின் கடந்த கால பலமான கிரியைகளையும் காற்று என்கிற அடையாளம் இணைக்கின்றது. மேலும் இயேசு

வின் வல்லமையினேயும், ஞானத்தையும் குறிப்பிடுகின்றது.

அக்கினி மயமான பிளவுபட்ட நாவுகள் இரண்டாவது அடையாளமாகும். (பிளவுபட்ட நாவுகள் என்ருல் பிரிக்கப்பட்ட, விரிவாக்கப்பட்ட என்று அர்த்தமாகும். அக்கினி மயமான மேகம் போன்று உடம்பில் தோன்றி, பின்பு அது ஒரு சிறிய அக்கினி நாவுகள் போல ஒவ்வொரு தலே மேலும் வந்திறங்கியது).

நியாயப்பிரமாண காலத்திலே அக்கினி ஸ்தம்பம் தேவனுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்திற்று. (யாத். 19:18; 20:18;40:34, 38). ஆசரிப்புக் கூடாரத்தின் மேலும் ஆலயத்தின் மேலும் அக்கினி இறங்கி, அவைகள் பரிசுத்த ஸ்தலங்கள் என்பதை நமக்கு வெளிக்காட்டிற்று. அக்கினியால் பலிகள் அங்கீகரிக்கப்பட்டன. அக்கினி இறங்கிய இடம் தேவன் தங்கும் இடம் என்பதையும் வெளிப்படுத்திற்று. (தேவனுக்காக பரிசுத்தமாக்கப்பட்ட இடங்கள் —லேவி. 9:24; 2 நாளா. 7:1).

ஆகவே அக்கினி மயமான நாவுகள் மனிதர்கள் மேல் இறங்கினது என்ருல், அந்த மனிதர்கள் தேவன் தங்கும் ஆலயமாக மாறிக்கொண்டார்கள் என்பது அர்த்தமாகும்.

இந்தக் காலத்திலே மூன்றுவிதமான தேவ ஆலயங்கள் இருக்கின்றன என வேதாகமம் கூறுகின்றது.

1. விசுவாசிகளின் முழு சரீரம்— எல்லாக் காலத்திலும் உள்ள பரிசுத்தவான்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஆலயமாக மாறுகிருர்கள். ''இவர்கள் ஆவியானவர் மூலம் தேவன் தங்கும் ஆலயமாக மாறுகிருர்கள்.'' (எபேசி 2:20-22).

2. இரண்டு அல்லது மூன்று விசுவாசிகள் எங்கே கூடுகிருர்களோ, அங்கே பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வார். அதுவும் தேவனுடைய ஆலயமாகும். (1 கொரி. 3:16, மத். 18:20).

3. ஒவ்வொரு விசுவாசியின் சரீரமும், ஆவியானவர் தங்கி, தரிக்கும் ஆலயமாகும். (1 கொரி 6:19, 20).

பெந்தெகொஸ்தே நாளில் இறங்கின அக்கினி, இனி சீக்கிரம் ஆலயம் இடிபடப் போகிறது என்பதைச் சுட்டிக் காட்டினது. (கி.பி.70 ல்). இனி கைகளால் கட்டப்பட்ட ஆலயம் தேவனுக்குத் தேவையில்லே. எங்கே ஆவியினுல் நிரப்பப்பட்ட பெண்களும், ஆண்களும் கூடுகிருர்களோ, அங்கே ஆலயத்தின் யுகம் ஆரம்பம் ஆகிவிடுகிறது. எங்கே ஆவியானவர் கிரியை செய்ய அனுமதிக்கிருர்களோ, அங்கே பரிசுத்த ஆலயம் ஸ்தாபிக்கப்படுகிறது.

இந்த அடையாளங்கள் திரும்ப, திரும்ப காணப்படாது. இந்த அடையாளங்கள் புது யுகத்தின் முன்னேடிகளாக இருக்கின்றதே தவிர, ''பிதாவின்வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல்'' அல்ல, செசரியா பட்டணத்தில் உள்ள கொர்நேலியுவின் வீட்டிற்கு பேதுரு சென்று பிரசங்கித்தான். அப்பொழுது ''பரிசுத்த ஆவியானவர் நம்மேல் விழுந்தது போல, புறஜாதியாரின் மேலும் வந்திறங்கினர்'' என பேதுரு கூறினன். (அப் 11:15). ''நமக்கு அருளின வரத்தைப் போல தேவனும் புறஜாதியாருக்கு அருளினர்'' என பேதுரு கூறினன். (அப் 11:17) செசரியா பட்டணத்தில் புயல் காற்று, அக்கினி மயமான அற்புதங்கள் காணப்படாவிட்டாலும், கொர்நேலியுவின் வீட்டார், அப்போஸ்தலர்கள் பெற்ற அதே அபிஷேகத்தைப் பெற்ருர்கள்.

(ஆ) வல்லமையான ஞானஸ்நானம்:— அப். 2:4.

ஞானஸ்நானம் என்கிற பதம் இந்த வசனத்தில் உபயோகிக்கப்படவில்லேயாயினும், நீங்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெறுவீர்கள் என்ற பிதாவின் வாக்குத்தத்த ஆவியைப் பற்றி முழு விளக்கமும் கூறப்பட்டுள்ளது. ("நிரப்பப் பட்டார்கள்", "அவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் வந்தார்" என்கிற பதம் எல்லாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையே குறிக்கும்).

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டவுடன், ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள். (எதைப் பேச வேண்டுமோ; ஆவியினால் ஏவப்பட்டு திடமாக, சத்தமாக பேசும் வார்த்தைகள்).

காற்றும், அக்கினியும் அடையாளமாக கொடுக்கப் படாவிட்டாலும், பாஷைகள் என்ற அடையாளம் தொடர்ந்து காணப்பட்டது. (அப்.10:46; 19:6) அபிஷேகம் பெறுகிறார்கள் என்றவுடன் அந்நிய பாஷையில் பேசுவது முதற் அடையாளமாக எங்கும் காணப் படுகிறது. சிமியோன் என்றவன் அறிந்து, காணக்கூடிய அளவிற்கு சமாரியாவில் உள்ள விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றனர். (அப். 8:18). அப்போஸ்தல நடபடிகள் அபிஷேகம் பெறும்போது எல்லாம் அந்நிய பாஷைகள் பேசினார்கள் என கூறாவிட்டாலும், பவுல் அந்நிய பாஷைகள் பேசி, தேவனைத் ஸ்தோத்தரித்தான். (1கொரி. 14:18) புதிய ஏற்பாட்டு விசுவாசிக்குரிய அனுபவம் தான் அப்.2:4ல்கூறப் பட்டுள்ள அனுபவமாகும். மேலும் இப்பகுதி, இயேசு வல்லமையாய் அபிஷேகம் பண்ணுகிறவர் என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

2. பெந்தேகொஸ்தேயின் அதிசயம்:— அப். 2:5—13.

(அ) திடுக்கிட வைக்கும் அதிசயம்: —அப்.2:5—11.

இந்த சமயத்தில் 120பேரும் ஆலயத்தில் கூடியிருந்தார்களா அல்லது மேல் அறையில் கூடியிருந்தார்களா என்பது நமக்குத் தெரியாது. "ஆலயம்" எப்பொழுதுமே "வீடு" என குறிக்கப் படுகின்றது. ஜெபவேளையிலே அப்போஸ்தலர்கள் ஜெபிக்கப் போவார்கள் என்பதை லூக்கா 24:53; அப். 3:1 ஆகிய வசனங்களினின்று நாம் தெளிவாக அறிகின்றோம். வசனம் 15ன்படி, இவ்வேளை காலை நேரஜெபவேளையாய் இருந்தமையால், அப்போஸ்தலர்கள் ஆலயத்தில் கூடியிருந்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் எங்கெல்லாம் இருந்தார்களோ, அங்கே "அந்நிய பாஷைகளின் சத்தம்" பலமாக தொனித்தது. ஆவியானவருக்கு 120 பேரும் தங்களை முழுவதுமாய் ஒப்படைத்தபோது, சத்தம்,மேலும், மேலும் உயர ஆரம்பித்தது. துதியோடும், மகிழ்ச்சியோடும், அப்போஸ்தலர்களின் இருதயம் தேவனண்டைச் சேர்ந்ததால் துதியின் தொனி பலமாய் ஒலித்தது. இந்த சத்தத்தைக் கேட்டவர்கள் பக்தி வைராக்கியமுள்ள யூதர்கள் ஆவர். இவர்கள் பைத்தியமானவர்களோ, அறிவில்லாதவர்களோ அல்லர். இவர்கள் உடனடியாக எந்த போதகர்கள் ஆவியினாலும் ஈர்க்கப்படாத பக்தி வைராக்கியமுள்ள யூதர்கள் ஆவர்.

1.கொரி.14:22ல் பவுல் கூறும் காரியத்திற்கு இது இசைந்ததாக

உள்ளது. பெந்தெகொஸ்தே நாளின்போது காணப்பட்ட அந்நிய பாஷை அடையாளம், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களை ஈர்க்கும் தன்மையுடையதாய் காணப்பட்டது.

இந்த சத்தத்தைக் கேட்டவுடன் ஜனக்கூட்டம் ஆச்சரியமுற்றது. (திகிலடைந்தது, பரபரப்படைந்தது, குழப்பமுற்றது.) 120பேர் பேசின பாஷைகளினின்று, ஜனக்கூட்டம் தான் பேசுகிற பாஷையினை புரிந்து கொண்டது. (பாஷை பேசினவர்கள் அந்நிய மொழியினைப் பேசுவது போல் அல்லாமல், சொந்த மொழி பேசுவது போல் பேசியிருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது.)

அப்போஸ்தலர்கள் பேசுகின்ற பாஷையினைத் தொடர்ந்து கேட்ட ஜனக்கூட்டம் ஆச்சரியமும், திகிலும் அடைந்தது. எத்தனை விதமான பாஷைகளை அப்போஸ்தலர்கள் பேசுகின்றார்களே என ஜனக்கூட்டம் தங்களுக்குள் கூறிக் கொண்டது.

கூடியிருந்த ஜனக்கூட்டத்திற்கு அந்நிய பாஷைகளின் மூலம் எந்தவிதமான சுவிசேஷ செய்தியும் அறிவிக்கப்படவில்லை, ஜனக்கூட்டம் இல்லாமல் தனியாக அந்நிய பாஷையில் பேசும்போது, அப்போஸ்தலர்கள் மனிதனிடம் அல்ல, தேவனிடமே நேரிடையாகப்பேசினார்கள். (1.கொரி. 14:2 ஐப்பார்) ஆவியானவர் தந்த வரத்தின் மூலம், அப்போஸ்தலர்கள் தேவனுடைய வல்லமையான கிரியைகளைப்பற்றியும், அவரின் மகத்துவம், உன்னதம் ஆகியவைகளைப் பற்றியும் அந்நிய பாஷைகளில் பேசி மகிழ்வுற்றார்கள். அந்நிய பாஷைகளில் சுவிசேஷம் கூறும் இடத்தை, அந்நிய பாஷை எடுத்துக் கொண்டதாக வேதாகமத்தில் நமக்கு எந்தவித ஆதாரமும் கிடையாது.

(ஆ) பலவிதமான பின் நிகழ்ச்சிகள்:- அப். 2:12,13.

விசுவாசிகள் தொடர்ந்து அந்நிய பாஷையில் பேசத்தொடங்கினவுடன், பலவிதமான பின் நிகழ்ச்சிகள் ஏற்படஆரம்பித்தது. இதின் அர்த்தம் என்ன என்று அநேகர் விளங்கக் கூடாமல் திணறிக் கொண்டிருந்தார்கள். மனிதசக்திக்கு மேலான காரியம் நடைபெறுவதைக்கண்டு அனேகர் பயப்பட்டார்கள். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் பின்பற்றுகிறவர்களிடம் இப்படிப்பட்ட அடையாளங்கள் காணப்படுமாயின், தேவன் தம்முடைய குமாரனை சிலுவையில் அறைந்த மக்கள் மேல் பயங்கர நியாயத் தீர்ப்பை கொண்டு வருவார் என மக்கள் மிகவும் பயந்தார்கள்.

விசுவாசிகள் பாஷை பேசி மகிழ்வதின் அர்த்தத்தை ஒரு கூட்டம் மக்கள் அறியக்கூடாததினால் மிகவும் ஆச்சரியமுற்று, இவர்கள் மது மயக்கத்தினால் உளறுகிறார்கள் என கூறினார்கள். (புதுதிராட்சைரசம் என்கிற புதுவார்த்தை புதிதாக, சிறிய திராட்சப்பழங்களினின்று பிழியப்பட்ட இரசத்தை குறிக்கும்.) பாஷை மாத்திரம் பேசி, வியாக்கியானம் பண்ணும்போது இதேவித பின் நிகழ்ச்சி நடந்ததை பவுல் காண்கிறார். (1 கொரி. 14:22-24.)

3 பெந்தெ கொஸ்தேயின் அர்த்தம்:-
அப். 2:14-21.

(அ) தேவனின் வாக்கு தத்தம் அப் 2:14-20.

கேலி செய்யும் மக்களோடு ஜனக்கூட்டம் சேர ஆரம்பித்தது

மதுமயக்கத்திற்கு பேதுரு முதலாவது விடையிறுத்ததிலிருந்து, ஜனக்கூட்டம் விசுவாசிகளை மதுமயக்கக்காரர்கள் என எண்ணி இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

தம்முடைய அறிவினைக் கொண்டு பேதுரு ஜனக்கூட்டத்திற்கு விடையளிக்கவில்லை. மற்றுள்ள 11 அப்போஸ்தலர்களுடன் பேதுரு எழுந்து நின்றபோது, யாவும் அமைதியாயிற்று. இதற்குப்பிறகு பேதுரு ஆவியானவர் தனக்கு அருளின வார்த்தைகளை தைரியமாக பேச ஆரம்பித்தான். ('பேச ஆரம்பித்தான்' —என்றால் வார்த்தைகளைக்கூறினான் என்று அர்த்தமாகும். (வசனம் 14) 1 கொரி.14:3ல் கூறப்பட்டபடி பேதுரு தீர்க்கதரிசன வரத்தை பிரயோகப்படுத்தினான். 1கொரி, 14:24,25, அப்.2:37,40. —புத்திமதிகூறுதலும் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதியாகும்),

பற்பல பாஷைகள் மதுமயக்கத்தால் அல்ல என்று பேதுரு சுட்டிகாட்டிய பிறகு, மக்கள் கூட்டம் விடுத்த கேள்விக்கு நேர்மையான பதிலைக் கொடுத்தான். "இதின் அர்த்தம் என்ன?" யோவேலினால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல் என பேதுரு விளக்கிக்கூறினான்.

பழைய ஏற்பாட்டு காலங்களிலே, ஒரு சில மனிதர்களுக்கு அங்கேயும், இங்கேயுமாக பரிசுத்த ஆவி அருளப்பட்டது. இந்தப்பரிசுத்த ஆவி ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்ய அல்லது ஊழியத்தைச் செய்ய அருளப்பட்டது. மாம்சமானயாவர் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுவார் என்ற யோவேலின் தீர்க்கதரிசனம் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறிற்று. அந்த நாளிலே ஆண் என்றும், பெண் என்றும், வயது, ஜாதி இன்னதென்றும் பாராமல் ஊற்றப்பட்டார். (எல்லோரும் பாஷை பேசினார்கள்) இதின் மூலம் யாவரும் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள் என்ற வார்த்தை நிறைவேறிற்று. தீர்க்கதரிசனம் உரைத்தல் என்றால் தேவனுக்காக பேசுதல் அல்லது தேவனுடைய வாயாய் இருத்தல் என்று பழைய ஏற்பாட்டுக் காலங்களில் நம்பப்பட்டது. யாத். 7:1,2,யும், யாத். 4:15 ஐயும் ஒப்பிட்டு 'தீர்க்கதரிசனம்' என்ற வார்த்தைக்கு அர்த்தம் புரிந்துகொள்க.

தரிசனங்களையும், சொப்பனங்களையும் காண்பார்கள் என யோவேல் தீர்க்கதரிசனத்தில் காணப்படுகின்றது. (இவ்வார்த்தைகள் வேதத்தில் அடிக்கடி அர்த்தம் மாறாமல் வருகின்றது.) கடைசி கால அடையாளங்களைப் பற்றியும் யோவேல் தீர்க்கதரிசனம் கூறுகின்றது. பெந்தெகொஸ்தே ஆவியின் மழை கால முடிவு வரை ஊற்றப்படும் என்ற கருத்தை பரிசுத்த ஆவியானவர் வலியுறுத்த விரும்புகின்றார்.

(ஆ) தேவனின் நோக்கம்:-
அப். 2:21.

அப். 1;8ல் இயேசு எந்த நோக்கத்தை வெளிப்படுத்தினாரோ, அதே நோக்கம் அப். 2:21லும் வருகின்றது. சாட்சியிட அபிஷேகம் நமக்கு வல்லமை அருளுகின்றது. தேவ நாமத்தை அழைத்தல் என்பது கடைசி கால சம்பவங்களோடு சம்பந்தப்படுத்திக் கூறப்படாமல், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தோடு சம்பந்தப்படுத்திக் கூறப்படுகின்றது. (கடைசி கால நியாயத்தீர்ப்புக்கள் மனந்திரும்புதல் அருளாது, வெளி 9:21;16:9 ஐப்பார்.)

வாழ்க்கையோடுள்ள தொடர்பு:-

1 அபிஷேகம் பெற அறிவு தேவையா?

அந்நிய பாஷை பேசுகிற யாவரும் கலிலேயர்கள் அல்லவா? அப்படியானால் இதில் ஏதோ முக்கியத்துவம் இருக்கிறது என ஜனக்கூட்டம் எண்ணிற்று. கலிலேயர்களை, யூதேயாவிலுள்ள மக்கள் தாழ்வாக எண்ணினார்கள். (கீழ் ஜாதி போல). கலிலேயாவில் புறஜாதிய விக்கிரகப்பழக்கம் அதிகமாக காணப்பட்டதால், எருசலேமிலுள்ள யூதர்கள் அவர்களை தாழ்வானவர்களாய் எண்ணினார்கள். இதில் விநோதம் என்னவென்றால், சபைக்கு தேற்றரவாளனாய் இருக்கும். பரிசுத்த ஆவியானவர் இப்படிப்பட்ட, கேலி செய்யும் நிலையில் இருந்த மக்களைத்தான் முதன் முதலில் அபிஷேகித்தார். கலிலேயர்கள்தான் பரிசுத்த ஆவியைப் பெற்ற முதல் மக்கள் ஆவர்.

இருதய தாகம்தான், தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்குரிய வழியாகும். தாகமுள்ளவனாய் ஒருவன் இருந்தால் தேவ ஆசீர்வாதத்தை அவன் நிச்சயம் பெறுவான். சபையில் சமத்துவத்தை உருவாக்குகிறவராக பரிசுத்த ஆவியானவர் உள்ளார். பரிசுத்த ஆவியானவரின் கடுமையான ஊழியத்தால் தாழ்வானவர் உயர்த்தப்பட்டு, பெருமையானவர்கள் தாழ்த்தப்படுகிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தினால், அறிவினனும், கல்லாதவனும், சபையில் மிக முக்கியமான பங்கை நிறைவேற்றலாம்.

2 அபிஷேகம் பெறுவதற்கு அந்நிய பாஷை அடையாளமா? ஏன்? அல்லது அடையாளம் இல்லை ஏன்?

இப்பாடத்திலே இந்தக் கருத்தை நாம் எளிதாக விளக்கக்கூடாத அளவிற்கு பெரிய பாடமாக உள்ளது. வகுப்பினர் இதே போன்று பல கேள்விகளை எழுப்பலாம். நாம் இந்தக் கேள்விக்குரிய விடையை சுருக்கமாக ஆராயலாம்.

இதில் ஒரு முக்கியமான கருத்தை தென்னிந்திய தேவசங்கம் பின்பற்றுகிறது. அபிஷேகம் பெற்ற யாவரும் அந்நியபாஷைகள் பேசினார் என்று புதியஏற்பாட்டில் அநேக இடங்களில் வருகின்றது (அப்.2:4;8:17,18:10:44—46;19:6). (சமாரியர்கள், சீமோன் காணக்கூடியதும், கேட்கக்கூடியதுமான அளவில் அபிஷேகம் பெற்றார்கள். சமாரியர்கள் பேசின அந்நிய பாஷையினை சீமோன் கேட்டிருக்கக்கூடும்.) ஆகவே ஒருவன் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்றானானான் என்றால், அவன் அந்நிய பாஷை பேசுவான் என்பது தெளிவாகின்றது.

பெந்தெகொஸ்தே நாளில் அபிஷேகம் பெற்றவர்களை எப்படி யூதஜனம் கேலி செய்ததோ, அதுபோல் இன்றும் அபிஷேகம் பெறுகிறவர்களை, அபிஷேகம் பெறாதவர்கள் கேலி செய்கிறார்கள். ஆவியினால் நிறைந்து, அந்நிய பாஷை பேசுவது, மனித சக்திக்கு மேற்பட்ட காரியம் என ஒருசிலர் எண்

ணுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு அபிஷேகம் பெற்று அந்நிய பாஷை பேசுவது, மதுமயக்கத்தினால் அல்லது உளறுவதினால் என எண்ணுகிறார்கள்.

(3) வாலிபர்கள் தரிசனங்களையும் முதியோர் சொப்பனங்களையும் காண்பார்கள் என்பதின் அர்த்தம் என்ன?

தரிசனம் சொப்பனம் என்ற பதங்கள் அதிக வித்தியாசமில்லாத பதங்களாக வேதப்புத்தகத்தில் உபயோகிக்கப் பட்டுள்ளது. தன்னுடைய நாட்களில், யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதாக பேதுரு நினைத்தான். நம்முடைய நாட்களில் அது நிறைவேறுகிற தீர்க்கதரிசனம் என நாம் நினைக்கிறோம். யோவேலின் தீர்க்கதரிசனம் இரண்டு காலங்களில் நிறை வேறவேண்டும் என தேவன் திட்டமிட்டுள்ளாரா? என்ற கேள்வி கேட்கப்படவேண்டியதொன்றாகும். அப்படியானால் இந்நாட்களில் தரிசனம், சொப்பனம் என்ற பதங்களின் அர்த்தம் என்ன?

விசுவாசிகளை தேவன் தம்முடைய அனாதி திட்டத்தின்படி அபிஷேகிக்கிறார். சபையைத் தேவன் வழி நடத்துகிறார் என சபை உணரும் போது சொப்பனம், தரிசனம் மூலம் தேவன் கிரியை செய்வார் என்பதையும் உணரும்.

மனித அறிவுக்கு எட்டாத தேவனை ஒருவன் உண்மையாய் விசுவாசித்தால், அப்போஸ்தல நடபடிகள் 2ம் அதிகாரத்தில் நடந்தேறிய அபிஷேக சம்பவம் இன்றும் நடைபெறும் என்று விசுவாசிக்கத் தவறமாட்டான் அதுபோல தேவன் தரிசனத்தின் மூலமும், சொப்பனத்தின் மூலமும், பேசுவார் என்பதையும் விசுவாசிக்கத் தவற மாட்டான். அவனுக்கு இதில் எவ்வித விசுவாசக் கோளாறும் ஏற்பட சந்தர்ப்பம் இல்லை.

பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெறும்முன், ஒருவனுக்கு சிறந்த இலட்சிய நோக்குகள் எற்பட வாய்ப்பு இல்லை. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அநேகரை பெரிய விசுவாச வீரர்களாய் மாற்றியுள்ளது.

(4) தேவ நாமத்தைத் தொழுகிற யாவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்பது உண்மைதானா? விவரி: —

சுவிஷேத்தின் முழுமையினை (முழுக்கருத்தை) அப்.2:21 சுருக்கமாக விவரிக்கின்றது. தேவனுடைய பற்பல விதமான குணாதிசயங்களை ஒருவன்வரிசையாக எழுதி வந்தால், அவருடைய குணாதிசயத்தில் ஒன்று எல்லாவற்றையும் விட தலை சிறந்ததாய் காணப்படும். இதுவே தேவனை மனிதனின்று பிரிக்கும் குணாதிசயமாகும். அந்தக் குணாதிசயம் தான் தேவனின் அன்பு அல்லது இரக்கம் ஆகும். தேவனுடைய இரக்கங்களுக்கு எல்லையில்லை. எல்லோரும் இரட்சிக்கப்படக்கூடும். உலகத்தில் ஜீவிக்கும் எந்த மனிதனும், எப்பேர்பட்ட பாவியாய்

ஜீவியத்தாலும், அவன் உண்மையாய் மனம் திரும்பி தேவனைத் தொழுது கொண்டால் அவனும் இரட்சிக்கப்படலாம்.

(5) ஒரு சபையில் ஆவியானவர் வல்லமையாய் கிரியை செய்ய, அச் சபையில் ஐக்கியம் காணப்படவேண்டும் என்று கூறப்படுவதின் காரணம் என்ன?

இக் கேள்விக்கு விடையை எளிதில் கூறிவிட முடியாது. பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் கிரியை செய்ய வேண்டுமானால், சபையில் ஐக்கியம் தேவை என நிச்சயமாக கூறி விடலாம். தம்முடைய விசுவாசிகள் ஐக்கியமாய் இருக்க வேண்டும் என இயேசு ஜெபித்தது ஒரு தற்செயலான செயல் அல்ல.(யோ.17:11).ஐக்கியத்தின் முழு நோக்கத்தை நாம் அப்போஸ்தல நடபடிகள் முதல் அதிகாரத்திலும், இரண்டாம் அதிகாரத்திலும் நாம் காணலாம். சீஷர்கள் ஒருமனப்பட்டு கூடியிருந்த போது பரிசுத்த ஆவியானவர் இவ்வுலகிற்கு வந்தார்.

இது நமக்கு ஒரு பாடமாகயிருக்க அருளப்பட்டிருக்கலாம், விசுவாசிகளின் மத்தியிலும், சபையின் மத்தியிலும் ஒரு மனமும், ஐக்கியமும் காணப்பட்டால் தான் பரிசுத்தஆவியானவர் விசுவாசிகளின் மத்தியிலும், சபையின் நடுவிலும் ஊழியம் செய்வார் எனக் கூறி இக்கருத்தை முடிக்கலாம். சுருக்கமாக கூறப்போனால், ''விசுவாசிகள் ஒருங்கிணைந்த கூட்டத்தை காண்பி. அங்கு பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் கிரியை செய்வதை நான் காட்டுவேன்'' என நாம் யாரிடமும் தைரியமாகக் கூறலாம்.

பெந்தெகொஸ்தேயின் பின் விளைவு

வேதபகுதி: அப்.2:32—47

போதிக்கும் திட்டம்

பழைய ஏற்பாட்டை இயேசுவைச் சுற்றிலும் இருந்த அப்போஸ்தலர்கள் எவ்விதம் அறிந்து வைத்திருந்தார்கள் என்ற கேள்வியோடு வகுப்பை ஆரம்பிக்கவும். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் யாவரும் பழைய ஏற்பாட்டினை நன்கு அறிந்து வைத்திருந்தனர் என்பதற்கு ஆதாரமாக உள்ள பகுதிகளை மாணவர்களுக்கு சுட்டிக்காட்டவும். மத்தேயு தம் சுவிசேஷத்தில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் எல்லாம் கிறிஸ்துவால் நிறைவேற்றப்பட்டது என்பதை சுட்டிக்காட்டுவதை விளக்கிக்கூறவும். (பேதுருவின் பிரசங்கமும், ஸ்தேவான் மரிக்கும் முன் பண்ணின பிரசங்கமும், புதிய ஏற்பாட்டில் நல்லதொரு உதாரணம் எனக் கூறவும்.) பேதுருவின் பிரசங்கத்தைக் காட்டிலும் ஸ்தேவானின் கடைசிப் பிரசங்கம் நல்லதொரு எடுத்துக்காட்டாகும். இரண்டும் உதாரணங்களாக பயன்படுத்தப்படலாம்.

தாவீதின் சங்கீதங்களை பேதுரு நன்கு அறிந்திருந்தான் என்பது அவனின் பிரசங்கம் சுட்டிக்காட்டுகிறது. அப்போஸ்தல நடபடிகளின் 7 ஆம் அதிகாரத்தில் ஸ்தேவானின் பிரசங்கம் உள்ளது. அவன் பழைய ஏற்பாட்டில் உள்ள இஸ்ரவேலரின் சரித்திரத்தை சுருக்கமாகக்கூறுவதைக் காணலாம். தங்களுடைய செய்திகளுக்கு பழைய ஏற்பாட்டினை உபயோகப்படுத்தி, கிறிஸ்துவை வெளிப்படுத்த வாஞ்சித்தனர்.

வேத விளக்கம்

அப்.2:22-47

பின்னணி:- காலம் கி.பி. 29

ஆவியானவர் அருளிய செய்தியை பேதுரு பிரசங்கித்ததையும், அதினால் ஏற்பட்ட பின்நிகழ்ச்சிகளையும் தொடர்ச்சியாக இவ்வார

தங்கவசனம்:- அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும்,..............................தரித்திருந்தார்கள்.
அப்போஸ்தலர் 2:42.

பாடத்தில் படிக்கப்போகிறோம். 120 பேர் அந்நிய பாஷையில் பேசி, தேவனை ஸ்தோத்தரித்ததைக் கண்ட ஜனங்கள் மிகவும் ஆச்சரியமுற்றார்கள். பேதுரு ஜனக்கூட்டத்தின் நடுவில் தைரியமாய் எழுந்து நின்று, இயேசுவை மகிமைப்படுத்தும் செய்தியையும், பாவத்தை கடிந்துரைத்து, விசுவாசத்தோடு மனம் திரும்ப அழைத்ததையும் கண்ட ஜனம் மிகவும் ஆச்சரியமுற்றிருக்கக் கூடும். இதே காரியத்தை பேதுரு ஒரு சில நாட்களுக்கு முன் செய்திருக்க முடியாது. ஆனால் இப்பொழுது ஆவியானவர் தந்தருளின வரத்தின் படி தைரியமாக பேதுரு பிரசங்கித்தான். இதினால் இயேசு உயர்த்தப்பட்டது மாத்திரமல்ல, விசுவாசிகள் கூட்டம் ஒருங்கிணைந்த, தனித்த சபை என்ற எண்ணத்தையும் மக்களிடையே உருவாக்கிற்று. இப்படியாக பெந்தேகொஸ்தே நாள் சபையின் உண்மையான பிறப்பு நாளாய் மாறிற்று. மேலும் சபையின் தலைவராகிய கிறிஸ்துவோடு, சபை உயிருள்ள அங்கமாக சேர்க்கப்பட்டது. (பரமேறிய பின் இயேசு சபைக்குத் தலையானார் என்று எபே. 1:20-22ல் வாசிக்கலாம்.)

1. பெந்தெகோஸ்தே
அப். 2:22-36.

(அ) இயேசுவுக்குரிய ஓர் நற்சாட்சி:- அப்.2:22-24.

யோவேலின் தீர்க்கதரிசனத்தினால் ஆவியின் வரங்கள் பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறிற்று என்பதை பேதுரு விளக்கிய பிற்பாடு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அருளியது யார் என்பதையும் ஜனக்கூட்டத்திற்கு சுட்டிக்காட்ட விரும்பினான். நீங்கள் வெறுத்து, சிலுவையில் அறைந்த நசரேயனாகிய இயேசுவை, தேவன் பலத்த அடையாளங்களினால் தமது குமாரன் என வெளிக்காட்டினார் என்பதை பேதுரு சுட்டிக்காட்டினான். கிறிஸ்துவின் அற்புதக் கிரியைகளை விளக்கும் மூன்று பதங்கள் உள. அதிசயம் (வல்லமையை, தேவனின் பலமான கிரியையின் வல்லமை) அற்புதங்கள்; அடையாளங்கள் என்ற மூன்று கிரியைகளினால் தேவன் தம்முடைய குமாரனை இவ்வுலகிற்கு வெளிப்படுத்தி, யார் அவரை புறம்பே தள்ளுகிறார்களோ, அவர்கள் அக்கினிக் கடலில் தள்ளப்படுவர் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார். இயேசு சிலுவையில் அறையப்படுதல் ஏதோ ஒரு தற்செயலான செயல் அல்ல என்ப

தையும், அவர் பாடுபட
வேண்டும் என்பதை தேவன்
முன்னறிந்து, நியமித்த காரி
யம் என்பதையும் விளக்கும்
முயற்சியில் பேதுரு ஈடுபட்
டான். (ஏசா 53 அதி. இன்
னும் பல தீர்க்கதரிசன பகு
திகளிலும் காண்கிறோம்.)
லூக். 24:26,46; 2தீமோ. 1:
9; வெளி. 13:8 லும் காண்கி
றோம்). இந்த வார்த்தை
களைக் கேட்டு கொண்டி
ருந்த ஜனம் தங்களுடைய
பாவத்தை உணராமல்
இல்லை. இயேசுவை சிலுவை
யில் அறைய ஒப்புக்
கொடுத்த ஒரு சிலர் அக்கூட்
டத்தில் இல்லாமல் இல்லை.
(தேவனற்ற ரோமர்களின்
கையில் ஒப்புக் கொடுத்த
னர்.) வேறு சிலர் வேத வச
னத்தை சரியாய் அறிந்து
கொள்ளாததினால்
இயேசுவை ஒப்புக் கொடுத்
தனர்.

கிறிஸ்துவின் தன்மை
யினையும், குணாதிசயத்தை
யும் விளக்கும்படியாக
தேவன், அவரை மூன்றாம்
நாள் மரித்தோரிலிருந்து
உயிரோடு எழுப்பினார்.
பாவத்தின் சம்பளம் மரணம்.
(ரோமர் 6.23) இயேசு தம்
மில் தாமே பாவமில்லாதவ
ராயிருந்தும், நம்முடைய
பாவமே அவரை மரணத்துக்
குள்ளாக்கிற்று. (2கொரி. 5:
21) இயேசுவை விழுங்க மர
ணத்திற்கு அதிகாரமில்லை.
விசுவாசிக்கிறவர்கள் மர
ணத்தின் வேதனையை
அடைந்துவிடக்கூடாதபடி,
தேவன், இயேசுவின் மூலம்
மரணவேதனையை அழித்து
விட்டார். வேதனையானது
உயிர்த்தெழுதலைப் பிறப்பிக்
கும்படி, இயேசு மரணமா
னார். இயேசு உயிரோடு
எழுந்ததினால், மரணமும்
நம்மை ஜெயிக்க முடியாது.
இயேசுவின் உயிர்த்தெழு
தல் நமக்கு ஒரு உத்தரவா
தத்தை அருளுகின்றது.
(ரோமர் 6:23; யோ. 11:25,
26; 14:19; 1கொரிந்தியர்
15:20-22).

(ஆ) வேத வசனங்களுக்
கோர் நற்சாட்சி
அப். 2:25-31.

பரிசுத்தாவியானவர் இப்
பொழுது ஜனக்கூட்டத்தின்
கவனத்தை சங். 16:8-11
வரையுள்ள வசனத்திற்கு
திருப்புகின்றார். இந்தவசனங்
கள் தாவீதிற்கு பொருந்
தாது. எல்லா நேரங்களி
லும் தாவீது, தேவனை முன்
னறிந்து, கண்டு கொண்டி
ருக்கவில்லை. இயேசு இப்பூ
வுலகில் ஜீவித்து, ஊழியம்
செய்து கொண்டிருந்த
போது, அவர் தேவனோடு
தொடர்ந்து ஐக்கியம்
கொண்டிருந்ததை இந்தப்
பகுதி காட்டுகிறது. சொல்
லிலும், செயலிலும், இயேசு
ஒருவரே மாறாதவராயிருந்
தார். தாவீதை விட அல்லது

வேறு எந்த மனிதனையும் விட, இயேசுவின் இன்பமும், சந்தோஷமும் மிகுந்து இவ்வுலகில் காணப்பட்டது.

தேவன் என் ஆத்துமாவை பாதாளத்தில் விடார் என்ற பகுதி, முற்றிலும் தாவீதிற்கு பொருந்தாது. தாவீது பரிசுத்தமான தேவன் அல்ல. (தேவனைப் பிரியப்படுத்தி, தன்னை அர்ப்பணித்தவன் அல்ல; பரிசுத்தம் என்ற சாதாரண வார்த்தையை அது குறிக்காது) வாழ்க்கையின் வழியினை தாவீது அறிந்தவன் அல்ல. (உயிர்த்தெழுதலின் வாழ்க்கையினை) மேலும் தாவீதின் உடம்பு அழிவைக் கண்டது. தாவீதின் கல்றை இன்னும் எருசலேமில் இருப்பது இதற்கு ஒரு நல்ல சாட்சியாகும். இப்படியாக சங்கீதம் 16, தாவீதைக் குறிக்குமானால், அது நிறைவேறிய ஒன்று அல்ல.

தாவீது தீர்க்கத்தரிசியாய் இருந்து, இயேசுவின் ஆவியினால் பேசினது உண்மை. இயேசு உயிரோடு எழுந்தது வேத வசனத்திற்கோர் நல்ல சாட்சியாகும். இயேசு உயிரோடு எழுந்ததினால், அவரே கிறிஸ்து என்பதையும், (மேசியா, அபிஷேகம் பண்ணப்பட்டவர், தேவனின் தீர்க்கதரிசி, ஆசாரியன், இராஜா,) ஒரு நாளில் தாவீதின் சிங்காசனத்தில் அமருவார் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. (ஏசா 9:7; லூக்.1:32)

(இ)கிறிஸ்துவின் உன்னத நிலைக்கு இது ஓர் நல்ல சாட்சி அப்.2:32—36

தான் பரத்திற்குப் போய் (பிதாவிடம் போய்) சீஷர்களைத் தேற்றும் தேற்றரவாளனை (உதவியாளனை) அனுப்புவேன் என்ற வாக்குத்தத்தம் சீஷர்களுக்கு கொடுக்கப் பட்டிருந்தது. (யோ. 14:16;26:15,26;16:7; அப். 1:4) பரிசுத்த ஆவியானவர் இப்பூமியில் ஊற்றப் பட்டதினால், இயேசு உயிரோடு எழுந்து, பரமேறி பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்பதை நமக்கு நிரூபித்துக் காட்டுகிறது. பெந்தெகொஸ்தே சம்பவம், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு மாத்திரமல்ல, அவரின் உன்னத நிலைக்கு சாட்சியிடும் சம்பவமாக சீஷர்களின் வாழ்வில் நடந்தேறியது.

இது ஒரு முக்கிய சம்பவமாகும். உயிர்த்தெழுதலுக்கு சீஷர்கள் சாட்சியாய் இருப்பதின் மூலம்தான் பரிசினைப் பெறும் பாக்கியம் கிட்டும். இதே போல வருங்கால சந்ததியாரும் பிதாவின் வாக்குத்தத்தத்தை சுதந்தரித்து, இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்ற கரு

னுக்கு கண் கூடான சாட்சி களாக விளங்க வேண்டும்.

இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார் என்ற கருத்துக்கு தாவீது ஏற்கனவே சாட்சி பகர்ந்து விட்டான். (சங். 110:1;மத். 22:24) தாவீது மரணத்தி லிருந்து உயிர்த்தெழவும் இல்லை; அல்லது பரமேறிப் போகவும் இல்லை. தன்னு டைய தேவனே இதைச் செய்துள்ளார் என தாவீது சாட்சியிடுகிறான்.

பேதுருவின் பிரசங்கத் தின் உச்ச நிலையை வச னம் 36ல் காணலாம். இயே சுவை மனிதர்கள் சிலுவை யில் அறைந்தாலும், அது எந்த விதத்திலும் தேவனைக் கட்டுப்படுத்தவில்லை. இயே சுவைத் தேவனாக, தெய்வீக கிறிஸ்து வெளிப்படுத்தும் காரியங்களாக சிலுவை நிகழ்ச்சிகளைத்தேவன்மாற்றி தம் திட்டத்துக்குள் வைத்தி ருந்தார். (பிலிப். 2:8-11)

2 பாவிகள் மனம் திரும்பி னார்கள்:- அப். 2:37-41.

(அ) பாவத்தைப் பற்றிய உணர்வு:- அப். 2:37.

பேதுருவின் மூலமாக கொடுக்கப்பட்ட தீர்க்கதரி சன வசனங்கள் பின் விளைவை ஏற்படுத்த ஆரம் பித்தது. (1கொரி. 14:24,25). ஆவியானவர் சத்தியத்தை தம் கையில் எடுத்து, இருத யத்தினையும், மனதினையும் ஊடுருவி, பாவ உணர்வை உண்டாக்கி, தேவையினை உணரச் செய்தார். ஆவியா னவர் தம் கிரியையினைச் செய்து. மக்களின் இருத யங்களை நொறுங்கச் செய் தார். (யோவான் 16:8,9)

(ஆ)அறிவுரை:-அப்23:28-41

"நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என ஜனக் கூட்டம் கேள்வி எழுப் பிற்று. அதற்கு மறுமொழி யாக, பேதுரு ஆவியானவர் ஏவினபடி, இரண்டு கட் டளைகளையும், ஒரு வாக்குத் தத்தத்தையும் மக்களுக்கு கூறினான்.

ஜனங்கள் முதலாவது மனம் திரும்ப வேண்டும். (தங்களுடைய மனது, அபிப்பிராயங்களை மாற்ற வேண்டும்.) அவிசுவாசத் தினின்றும்,சந்தேகத்தினின் றும், கேலிசெய்வதினின்றும் ஜனக்கூட்டம் மாறி, விசுவா சத்தோடு தேவனை நோக்கிப் பார்த்து, கிறிஸ்துவால் அரு ளப்படுகிற பாவமன்னிப்பை சுதந்தரிக்க வேண்டும். (எபேசி.2:8,9)

மத் 28:19ல் இயேசு கட்ட ளையிட்டபடி, மனம் திரும்பி னவர்கள்,மூழ்கி இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். நீங்கள் பாவத்திலிருந்து விடுபடும்

வழி அவரால் உண்டாக்கப் பட்டதால், அவரின் (இயேசுவின்) நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டும். (தண்ணீர் அல்ல; கிறிஸ்துவின் கிரியைகளே மனிதனை சுயாதீனமாக்கும். இதற்கு அடையாளமாக, சாட்சியாக ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்).

இப்படிச் செய்தால்பரிசுத்த ஆவியின் வரம் பெறுவீர்கள் என்ற வாக்குத்தத்தமும் அருளப்பட்டது. மோசேயும், தேவ தாசர்களும் இதையே காண, பெற வாஞ்சித்தார்கள். (எண். 11:29) யோவேல் தீர்க்கதரிசனம் உரைத்தான். யோவான்ஸ்நானகன் இதை உறுதிப் படுத்திக்கூறினன். இயேசு அதை மறு உறுதிப் படுத்திக் கூறினர். பரிசுத்த ஆவியின் வரம் 120பேருக்கு மாத்திரமல்ல, கேட்கின்ற யூதமக்களுக்குமாத்திரமல்ல, அவர்களின் தலைமுறைக்கும் அவர்களின்நண்பர்களுக்கும் தூரதேசத்தில் உள்ள இனத்தாருக்கும், புறஜாதிய விசுவாசிகளுக்கும், தேவன் வரவழைக்கும் மக்களுக்கும் உரியது என்ற கருத்தை பேதுரு விளக்கி கூறினன். இரட்சிப்பு என்ற அழைப்பு இருக்கும்வரை, பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் இருக்கும்.

மாறுபாடுள்ள சந்ததியிலிருந்து பிரிந்து ஜீவிக்க வேண்டும் என்றும் பேதுரு தொடர்ந்து அறிவுரை கூறினன். (கிறிஸ்துவின் பேரிலுள்ள விசுவாசத்தாலும் மனம்திரும்புதலாலும் இரட்சிக்கப்படுதல்). பேதுருவின் பிரசங்கத்திற்கு 3000பேர் செவிசாய்த்து, பெத்சாயிதா குளத்தில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றனர்.

3 சபை ஸ்திரப்படல்:-
அப். 2:42-47

(அ) அப்போஸ்தலர்களால் சபை ஸ்திரப்படல்:-
அப். 2:42,43.

இயேசு தம்முடைய சீஷர்களை பிரசங்கிக்க மாத்திரமல்ல, போதிக்கவும் அனுப்பினர். (சீஷர்களை உருவாக்கு; மாணவர்களை அல்லது படிப்பவர்களை உருவாக்கு என்றார். மத்.28:19) ஆவியினுல் அபிஷேகம் பெற்றுள்ள இந்த புது விசுவாசிகள், ஆவியின் வாழ்க்கைக்குள் பிரவேசித்து அவரே இவர்களின் போதகராகவும், வழிகாட்டியாகவும்மாறிவிடும் தன்மையை எய்தினர். (யோ. 16:13) வேத வசனத்தை தாங்களாகவே வாசிக்கவும், ஜெபிக்கவும் புது விசுவாசிகள் பழகிக் கொண்டனர் என நாம் அர்த்தம் கொண்டுவிடக்கூடாது. ஆவியினுல்

அபிஷேகம் பெற்ற ஆசிரியர்களுக்கு கீழாக இருந்து படிக்கும் நிலையை எய்தினார் என்று அர்த்தமாகும். தங்களுடைய ஆசிரியர்களோடு இருந்த ஐக்கியமும், தொடர்பும் கொண்டனர். தேவனால் அருளப்பட்ட ஐக்கியமாகிய திருவிருந்தில் ஆசிரியரும், மாணவரும் ஒருங்கே ஐக்கியம் கொண்டனர். ஜெபத்திலும் ஒருமனப்பட்டு தரித்திருந்தார்கள் (1யோ.1:3,7). (ஆராதனையில் ஐக்கியம்)

இதைக்கண்ட யாவரும் பயந்து, நடுங்கினார்கள். அப்போஸ்தலர்கள் மூலம் நடைபெற்ற பெரிய அற்புதங்களைக் கண்டு ஜனங்கள் ஆச்சரியமும், பயமும் அடைந்திருக்கக் கூடும். அற்புதங்கள் வேதவசனத்தை உறுதிப்படுத்தி, சபையை ஸ்திரப்படுத்தினது மாத்திரமல்ல, வேதவசனத் தியானமும், ஜெபமும் மிக முக்கியம். (மாற்கு 16:20 ஐப்பார்.)

(அ) ஒருவர் பேரில் ஒருவர் கரிசனையாய் இருந்ததின் மூலம் சபை ஸ்திரப்படல்:- அப். 2:44-47.

ஆவிக்குள்ளாக வாழ்க்கை தொடர ஆரம்பித்தபோது, ஆவியின் கனிகள் அன்பும் விளைய ஆரம்பித்தது. வேதவசனத்தை நன்கு கற்றுக் கொள்வதற்காக தூரதேசத்திலிருந்து வந்த மக்கள் யாவரும் எருசலேமில் தங்கி, தரித்தார்கள். செய்தியை நன்கு அறிந்த மக்களின் மூலம் தூர தேச மக்களின் வாஞ்சை நிறைவேற ஆரம்பித்தது. இதில் சமத்துவ கோட்பாடோ அல்லது கட்டுப்பாடோ நிலவவில்லை. (அப்.5:4ஐப்பார்). மக்கள் ஒருவரோடு ஒருவர் ஐக்கியம் கொண்டு, சந்தோஷமும், ஒருமனமும் அடைந்தனர். கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் சபையில் சேர்த்து வந்தார்.

வாழ்க்கையோடுள்ள தொடர்பு:—

(1) பாவிகளின் பாவத்தைக் குறித்த விஷயத்தில், நாம் எவ்வளவு தூரம் நேர்மையுடையவர்களாய் இருக்க வேண்டும்?

இக் கேள்வி ஒரு பெரிய பிரச்சனையை உருவாக்குகின்றது. பாவத்தோடு ஜீவிக்கும் பாவிகளை நாம் கண்டனம் செய்ய நமக்கு என்ன அதிகாரம் உள்ளது? பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் நிறைந்து பேதுரு பிரசங்கம் பண்ணினான் என்ற முக்கிய கருத்தை நாம் நினைவிற் கொள்வது நல்லது. பேதுருவுக்கு இருந்த சூழ்நிலை நமக்கு ஏற்படும் போது, நாம் என்ன செய்யலாம் என்ற பிரச்சனை நம்

வாழ்வில் அனேக நேரங்களில் ஏற்படலாம். இப்படிப்பட்ட சமயங்களில் கடுமையான பிரசங்கங்கள் அல்லது சாட்சிகள் மக்களின் இருதயத்தை தொடக்கூடும். வேறு சில நேரங்களில் அன்பான பிரசங்கங்கள் மக்களின் இருதயத்தைத் தொடக்கூடும்.

ஆவியானவர் கூறுகிறபடி கூறினால் பயன் விளையும். பேதுரு ஜனக்கூட்டத்திடையே கூறியவற்றில் ஒரு பகுதியைத்தான் நாம் அப். 2:40ல் காண்கிறோம். கேட்கிற ஜனங்களின் மேல் கரிசனைகொண்டு அன்பாய் வேறு பல காரியங்களையும் சொல்லியிருக்கக் கூடும். ஜனங்கள் மத்தியில் தான் முரடன் என்பதைக் காண்பிக்கவில்லையென்பதை அவனுடைய முக பாவமும், செய்கையும் வெளிப்படுத்தியிருக்கும். பாவிகளிடத்தில், அவர்களின் பாவத்தைச் சுட்டிக்காட்டும்போது அன்போடும், பரிவோடும் இடைபடவேண்டும். எல்லாவற்றையும்விட எவ்வித ஆவியோடு நாம் மக்களிடையே இடைபடுகிறோம் என்பதுதான் மிக முக்கியமானது. சில நேரங்களில் நாம் பேசும் வார்த்தையை விட, செய்கைகளும், மனப்பான்மையும் மக்களிடையே அதிகமாகப் பேசும்.

(2) மனிதர்களின் காரியங்களை தேவன் கட்டுப்படுத்துகிறார் என்பதை அற்புதங்கள் எவ்வாறு மனிதனைப் புரிய வைக்கின்றது?

பெந்தெகொஸ்தே அபிஷேகத்தைத்தொடர்ந்து அடையாளங்களும், அற்புதங்களும் நடந்தன. இவைகள் உண்மையாகவே ஜனக்கூட்டத்தை தேவனிடம் ஈர்த்தனவா? இன்றைய நாட்களிலும் அற்புதங்கள் மனிதனைத் தேவனிடம் கொண்டு வருகின்றனவா? இதற்குரிய விடைகள் கொஞ்சம் கடினமாகத்தான் இருக்கும். தேவன் ஒருவர் உலகத்தில் உள்ளார் என்ற கருத்தை புதிய ஏற்பாட்டு காலத்தில் உள்ள மக்கள் விசுவாசித்தார்கள். தாங்கள் காண்கின்ற அல்லது பார்க்கிற அற்புத, அடையாளங்கள் தேவனிடமிருந்து பிறக்கின்றனவா என்பதைப் பற்றி ஐயம் கொண்டிருந்தனர். தேவன் இவ்வித அற்புத அடையாளங்களைச் செய்கிறார் என்றகருத்தைப் பேதுருவின் பிரசங்கம் கேட்ட மக்கள் உணர்ந்திருந்தனர். அற்புதங்கள் இவ்விதமாய்த்தான் நடைபெறுகின்றது என்று யூதமக்களால் கூற முடியாத காரணத்தால், தேவன் தான் மக்களின் காரியங்களைக் கட்டுப்

படுத்துகிறார் என்பதைக் கண்டு கொண்டார்கள்.

இன்றைக்கு பேதுரு ஊழியம் செய்வாரானால், தேவன் ஒருவர் உண்டு; அவர் அற்புதமாய் கிரியை செய்கிறாரா? என சவால் விடும் மக்கள் இருக்கிறார்கள். மனித சக்திக்கு மேற்பட்டு உள்ள காரியங்களை இல்லையென நிரூபிக்கும்படி, எல்லாவற்றையும் இயற்கை முறையில் மக்கள் விளக்க முற்படுகின்றனர். இன்றைக்கு தேவன் அற்புத, அடையாளங்களைச் செய்யும் போது, அவர் இருக்கிறார் என்பதை மக்கள் தெரிந்து கொண்டுதான் ஆகவேண்டியுள்ளது. வசனம் பிரசங்கிக்கப்பட்டு, அதோடு கூட அற்புத, அடையாளங்கள் நடக்கும் போது, நாஸ்திக இருதயம் கூட தேவன் இருக்கிறார் என்பதைக் கண்டு கொள்கின்றது. ஆழமான பாவத்தில் ஜீவிக்கின்ற மனிதனையும், பரிசுத்த ஆவியானவர் ஆழமாய் தொடும்போது, அவனுக்கு பாவ உணர்வு உண்டாகும். பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக் குறித்து உணர்த்தும் போது, மனிதனின் அறிவும், பகுத்தறிவும் அங்கு செயலற்றுப் போய் விடுகின்றது. தேவன் கிரியை செய்யும்போது, மக்கள் அவரைக் கட்டாயமாய் கண்டு கொண்டு தான் ஆக வேண்டும் என்ற கருத்து நமக்கு ஆறுதலை அளிக்கின்றது

ஆதிசபை ஒருமித்து வாழ்ந்தது போல, நாமும் இந்நாட்களில் அவ்விதம் வாழ வேண்டுமா?

அப். 2:44,45ல் கூறப்பட்ட பிரகாரம், நாம் ஒருமித்து வாழ்க்கை நடத்த வேண்டும் என்று சொல்லி காலா காலங்களில் கூட்டங்கள் எழும்புகின்றன. வசனத்தில் கூறப்பட்ட காரியம் நமக்கு சட்டமாக உள்ளது என எண்ணினால், நாம் வேத வசனத்தை தவறாக வியாக்கியானிக்கிறோம் என்று அர்த்தமாகும். அப். 2:44, 45ல் கூறப்பட்ட வாழ்க்கை ஒரு பிரத்தியேகமான காலத்திற்கு அருளப்பட்ட வாழ்க்கை என்பதை மறந்து போகக் கூடாது. ஆதி சபை எவைகளை கடைப்பிடித்ததோ, அவைகளை கிறிஸ்தவனும் கடைப்பிடிக்க வேண்டும். அதுதான் சரியென கூறும்போது ஒரு பெரிய பிரச்சனை உருவாகின்றது. ஆதி சபையின் பின்னுட்களில் கூட, விசுவாசிகள் யாவரும் எல்லாவற்றையும் ஒருமித்து அனுபவித்ததாக நமக்கு புதிய ஏற்பாட்டிலே சான்று கிடையாது.

சக விசுவாசிகளின் உலகப் பிரகாரமான தேவையைக் குறித்து விசுவாசிகள் கரிசனையாய் இருந்தார்கள் என புதிய ஏற்பாட்டு பிந்திய சரித்திரம் கூறுகின்றது. பவுல் ஒரு சபையிலிருந்து இன்னொரு சபைக்குப் போகும்போது, எருசலேமிலுள்ள விசுவாசிகளின் ஆகாரக் குறைச்சலைநீக்கும்படி பணம் திரட்டினுன் என வாசிக்கின்றோம். சூழ்நிலையின் நிமித்தம் ஆதி சபை அவ்விதம் செய்தது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. இதே போன்ற சூழ்நிலை இன்றையநாட்களில் எழுமானுல், பெந்தெகொஸ்தே நிகழ்ச்சிக்குப்பின் ஏற்பட்ட ஒருமித்து வாழும் கொள்கை,இப்போது பொருந்தாது என்பதை கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.

(4) சபைக்குள் ஐக்கியம் இருந்ததால்தான், ஆதிசபை சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க முடிந்ததா?

இழந்து போன மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க சபை ஒற்றுமை எவ்வளவு தூரம் உதவி செய்யும்? சபையில் இரண்டு விதமான ஒற்றுமைகள் உண்டு. 'ஆம்' என்பதிலும், 'இல்லை' என்பதிலும ஒற்றுமை ஏற்படும். எதை மறுதலித்து, ஒதுக்கி விட்டார்களோ, அவைகளைச் சாராமல், எவைகளை விசுவாசித்தார்களோ, அதையே ஆதிசபையினர் சார்ந்திருந்ததால், அவர்களுக்குள் ஒற்றுமை, ஐக்கியம் காணப்பட்டது. சுவிசேஷம் ஏற்கப்பட வேண்டிய, அறிவிக்கப்பட வேண்டிய கருத்து என ஆதி சபையினர் விசுவாசித்தார்கள். நிரூபிக்கப்பட்ட ஆணித்தரமான கருத்துக்களையே சபை சார்ந்திருக்கும்போது, ஐக்கியம்உண்டாகும்வெறுத்தொதுக்கப் பட்ட கருத்துக்கள் முக்கியமானவை என்றுலும், நிரூபிக்கப்பட்ட கருத்துகளுக்கு அது இணையாக மாருது. பேதுருவின் செய்தி முழுவதும் விசுவாசக் கருத்துக்கள் நிறைந்தனவே ஒழிய, அவிசுவாசக் கருத்துக்கள் காணப்பட வில்லை. இப்படிப்பட்ட பிரசங்கமே ஜனங்களை அதிகமாக ஈர்க்கக்கூடும்.

அநேக சபை வகுப்பார்கள் விசுவாசக் கருத்தினில் இணைந்து செயல்படாமல், எதிர்மறையான கருத்திலே ஒன்றிணைந்துசெயல்படுகின்றனர். அப்போஸ்தலர்களின் தெளிவான உபதேசத்திலே ஆதி சபை தொடர்ந்து நிலைத்திருந்தது என அப். 2: 42ல் காண்கிறோம். இயேசுவைப் பற்றி கூறப்பட்டக் கருத்தில் ஆதி விசுவாசிகள் தங்களை முழுவதுமாய் அர்ப்பணித்திருந்தனர். இப்படிப்

பட்ட விசுவாசத்தில் ஆதி சபை தன்னை முழுவதுமாய் இணைந்திருந்ததால் தான், அது அளவில்லா வளர்ச்சி, விரிந்தது என்று நாம் காண்கிறோம். அது தான் வழியும் ஆகும். விசுவாசிகள் சுவிசேஷ சத்தியத்தில் எவ்வளவு தூரம் இணைந்திருக்கிறார்களோ, அவ்வளவு தூரம் சபையின் எண்ணிக்கையும் கூடும்.

(5) ஒருவன் கிறிஸ்தவனாய் இருப்பதினால் அற்புதமாய் எவ்வாறு ஒன்றுபடுவான்?

ஆதி சபை விசுவாசிகளுக்கு எல்லா ஜனங்களின் கண்களிலும் தயவு கிடைத்தாலும், அது தொடர்ந்து நடந்தேறவில்லை. பின் வாங்கிப்போன சுவிசேஷ சபையார் தான் கிறிஸ்தவனுக்கு பெரிய இடறல் கல்லாய் இருக்கின்றார்கள். வெற்றியுள்ள ஜீவியம் செய்பவனை பின் வாங்கிப்போன கிறிஸ்தவன் காணும்போது மிகவும் வெறுக்கின்றான். ஏனென்றால் பின்வாங்கினவனுடைய இருதயம், மனச்சாட்சி குத்துவதால், கிறிஸ்தவனை அவன் முழுவதும் வெறுக்கின்றான். பாவத்தைச் செய்யாமல் ஒரு கிறிஸ்தவன் ஜீவிக்கும்போது, அதுபின்வாங்கின கிறிஸ்தவனின் இருதயத்தை குத்துகிறது. பவுலின் வாழ்க்கை இக்கருத்துக்கு நல்ல உதாரணம் ஆகும். (கலா. 4:8-20 ஐப்பார்)

சபையில் அற்புதங்கள் நடைபெறுதல்

வேத பகுதி: அப். 3:1-16

போதிக்கும் திட்டம்:-

உதவியற்ற சூழ்நிலையில் இருந்த மக்களுக்கு இயேசுவாகிய தேவனுவது அல்லது அப்போஸ்தலர்களாவது இதுவரை உதவி செய்துள்ளார்களா? என்ற ஆராய்ச்சிக் கேள்வியோடு இப்பாடத்தை ஆரம்பிப்பது நலமாயிருக்கும். உங்கள் வகுப்பிலுள்ள மாணவர்கள் வேத வசனத்தை நன்ருக படித்திருப்பார்களேயாளுல் அநேக உதாரணங்களைக் கூறக்கூடும். உங்கள் வகுப்பினரால் உதாரணங்களைக் கொடுக்க முடியாவிட்டால், மாற்கு 10ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பர்திமேயுவின் கதையினையும், யோவான் 8ம் அதிகாரத்தில் விபசாரத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணின் சம்பவத்தையும், யோவான் 9ம் அதிகாரத்தில் குருடனுய் பிறந்தவனின் சம்பவத்தையும். லூக்கா 8ம் அதிகாரத்தில் பிசாசு பிடித்த மனிதனின் நிகழ்ச்சியையும், அலங்கார வாசலண்டை வைக்கப்பட்டிருந்த மனிதனையும் உதாரணங்களாக கூறி இப்பாடத்தினை விளக்கலாம். சரீர, ஆவிக்குரிய தேவைகளைக் குறித்து இயேசுவும் அப்போஸ்தலர்களும் மிகவும் கவலைப்பட்டனர் என்பதைக் கூற மறந்துவிட வேண்டாம். எவ்வளவு பெரிய தேவையாயினும், அத்தேவை இயேசுவால் சந்திக்கப்பட்டதை நினைவு படுத்தவும்.

தேவன் மனித வாழ்க்கையில் ஈடுபடுவதால், அவனின் இருதயத்தில் ஏற்படும் மாறுதல்களை, மேற்கூறிய உதாரணங்களைக் கொண்டு, வகுப்பில் முடிவில் போதிக்கலாம். தேவனின் வல்லமையினுல் வியாதியஸ்தனின் தேவை சந்திக்கப்பட்டவுடன், அவன் மிகவும் மகிழ்ச்சியுறுகிருன் என்றக் கருத்தை வலியுருத்த மறந்து போக வேண்டாம்.

வேத விளக்கம்

அப்.3:1-26

பின்னணி:- காலம் கி.பி.29

வல்லமையான அதிசயங்களும், அற்புதங்களும், தேவ வசனத்தையும், அவரின் வாக்குத்தத்தங்களையும் உறுதிப்படுத்திற்று என்பதை போன வார பாடத்தில் படித்தோம். ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களில் நடந்த அநேக அற்புதங்களின் செய்தி நமக்கு கிடைக்கப்பெறவில்லை. அப்போஸ்தலர் நடபடிகள் 3ம் அதிகாரத்தில் மாத்திரம், ஒரே ஒரு அற்புதம் விளக்கமாய் விவரிக்கப்படுவதை நாம் காணலாம்.

இந்த சம்பவத்தை லூக்கா எழுதி, விளக்க ஆவியானவர் இரு பெருங்காரணங்களை வைத்திருக்கிருர். இது ஒரு செயற்கரிய அற்புதமாகும். ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களில் சித்திரவ

தங்க வசனம்:- வெள்ளியும் பொன்னும் ... நீ எழுந்து நட. அப்போஸ்தலர் 3:6

தைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றன. இதனால் விசுவாசிகள் எங்கும் சிதறி, இயேசுவைப் பற்றி சாட்சியிட்டனர். அப்போஸ்தலர்களைக் குறித்து ஒரு பிரத்தியேக விளக்கம் கொடுக்கப்படவில்லை. அப்போஸ்தலர்கள் தேவனின் பிரதிநிதிகளாக இருந்து, அவரின் கிரியைகளை உடன் வேலையாட்கள் என்ற உத்தரவாதத்தின் நிமித்தம் செய்து வந்தார்கள். (1 கொரி.3:7-9). தேவனின் வல்லமை விளங்கும். ஆவியின் கால்வாய்களாக அப்போஸ்தலர்கள் விளங்கினார்கள். அப்போஸ்தலர்கள் தாமாக எவ்வித வல்லமையினையும் உடையவர்களாக இருக்கவில்லை. எல்லோருடைய கவனமும் இயேசுவினிடமே ஈர்க்கப்பட்டது.

1. பெரிய தேவை

அப்.3:1-3.

(அ) நெடு நாள் தேவை. அப் 3:1.2

பெந்தெகொஸ்தே நாளிலே அபிஷேகம் பெற்ற விசுவாசிகள், ஒருங்காக தேவ ஆலயத்திலும் வீடுகளிலும்கூடி, தேவனை ஆராதித்தார்கள். தேவனோடும், விசுவாசிகளோடும் ஐக்கியம் கொள்ளுவதை சந்தோஷமாக எண்ணினார்கள். பகலில் 3 மணிக்கு வழக்கம்போல் பேதுருவும், யோவானும் ஜெபிக்க, தேவனைத் தேட தேவாலயத்திற்குச் சென்றார்கள். (யாத். 29:41 சங். 141:2ன் படி மாலைப் பலியிடும் நேரத்திற்குப்பின்.)

40 வயது பிராயமுள்ள மனிதன், பிறவியிலிருந்தே சப்பாணியாய் இருந்தான். அதே நேரத்தில் இவனை அலங்கார வாசலின் டையில் பிச்சையெடுக்க ஒருசிலர் கொண்டு வருவார்கள் (அப்.4:22). (பெண்களின் பிரகாரத்திற்கும், இஸ்ரவேலரின் பிரகாரத்திற்கும் இடைப்பட்ட கிழக்கு வாசலாய் இருக்கலாம். கொரிந்தியரின் வெண்கலத்தால் அக்கதவு பொதியப்பட்டிருந்ததால் சூரிய வெளிச்சத்தில் பிரகாசமாய் காணப்பட்டிருக்கக்கூடும். அலங்கார வாசல் 70' உயரமும், 60' அகலமுமாய் இருந்தது. அக்கதவைத் திறக்க அல்லது மூட 20 மனிதர்கள் தேவைப்பட்டது). இந்த சப்பாணிக்கு அலங்கார வாசல் மிகவும் உதவி செய்தது. அதாவது சப்பாணி பிச்சை எடுக்க அது உதவிற்று. தேவனின் வீட்டிற்குள் பிரவேசிக்கும் மக்கள் அடையும் சந்தோஷம், துதியின் மகிமை ஆகியவற்றினைப் பற்றி சப்பாணிக்கு அணுவளவேனும் தெரியாது. (சங்.100:4).

கிறிஸ்து இல்லாமல் அல்லது கிறிஸ்துவுக்கு வெளியே ஜீவிக்கும் முழு உலகத்திற்கு இம்மனிதன் அடையாளமானவனாய் இருக்கிறான். முழு மனித சமுதாயமும் சப்பாணியாய் உள்ளது. ஒவ்வொருவனிடத்திலும் பலவீனமும், எல்லைக்கோடும் காணப்படுகின்றது. நாம் மேன்மையினை சுதந்தரிக்காதபடி, பாவிகளாய் இருக்கின்றோம். (ரோமர். 3:23). பொருளாதார நிலையிலும், விஞ்ஞானத்திலும் உலகம் முன்னேறி விட்டாலும், அது ஆவிக்குறிய ரீதியிலும், ஒழுக்க ரீதியிலும் பின் தங்கியே காணப்படுகின்றது. உலகம் தனக்கு தேடுகிறதான சந்தோஷம், சமாதானம், பாதுகாப்பு அதற்கு கிட்டுவதில்லை. உலகம் இன்னும் தேவ ஆசீர்வாதத்திற்குள் பிரவேசிக்க முடியாதபடி அது சப்பாணியாகவே உள்ளது. உண்மையான சந்தோஷத்தையும் நுகர முடியவில்லை. உலகமானது தேவனுடைய வீட்டை விட்டு வெளியே தங்கிக் கொண்டு, மனிதனின் உதவியை நாடிக் கொண்டு இருக்குமானால் அது தொடர்ந்து

சப்பாணியாகவே இருக்கும். மனிதன் ஒருநாளிலே விடை தருவான் என உலகம் எதிர்பார்க்கின்றது. ஆனால் அது தொடர்ந்து ஏமாந்தே போகின்றது.

(ஆ) உதவிக்காக ஓலமிடுதல்.- அப்போஸ்தலர் 3:3,

பேதுருவும், யோவானும் ஆலயத்திற்குள் செல்லுவதைக் கண்ட சப்பாணி, பிச்சைக்காக ஓலமிடுகிறான். சப்பாணிக்கு சில்லறை நாணயங்கள் கிட்டினால், அது அவனுடைய பரிதாபமான நிலைக்கு உதவியாய் இருக்கும். தொடர்ந்து அவன் சப்பாணியாய் ஜீவிக்கவும் உதவும், தனக்கு சில்லறை கிடைத்தால் போதும் என்ற எண்ணமே அவனிடம் மிகுந்து காணப்பட்டது.

ஒரு மனிதன் தன்னைப் பற்றி அறிந்திருப்பதைவிட, அவனுக்கு ஆழமான தேவையொன்று இருக்கக் கூடும். தனக்கு ஒரு ஆழமான தேவை ஒன்று உள்ளது என்று கூட அவன் கூற மறுக்கலாம். சமுதாயத்தினை சீரமைக்க வேண்டும் என்ற கருத்துதான் முதன்மையானது என அநேகர் கூறி, மக்களின் வயிற்றுப் பிரச்சனையை மாத்திரம் தீர்க்க முயல்வது, மிகவும் தவறாகும். அரசாங்கமும் இதே தவறினைத்தான் செய்கின்றது. ''சமாதானம், சமாதானம்'', என்று கூறியும் இருதயத்தில் சமாதானம் இல்லாமல் எரேமியாவின் நாட்களில் ஜீவித்தது போல, இன்றும் ஜீவிக்கிறார்கள். (எரேமி. 8:11). புண்ணுக்கு மருந்திட சமுதாயம் நினைக்கின்றது. ஆனால் கட்டியின் வேர் பகுதி உள்ளேயே மறைந்திருந்து, வேறு புண்ணை உண்டாக்கும் என்றக் கருத்தினை மறந்து விடுகின்றனர். கிறிஸ்தவர்கள் மக்களுடைய வெளித் தேவையினை புறக்கணித்து விடவும் கூடாது. அதே சமயம் உலக மக்களுக்கு, அதை விட மேலான தேவையொன்றும் இருக்கின்றது என்பதையும் மறந்து விடக் கூடாது. உலகப் பிரச்சனையை நீக்க கிறிஸ்துவின் முழு சுவிசேஷம் தேவைப்படுகின்றது. வெற்றியை அடையவும் கிறிஸ்துவின் அபிஷேகம் தேவைப்படுகின்றது.

2 பெரிய அற்புதம் :- அப்போஸ்தலர் 3:4-10.

(அ) எதிர் பார்ப்பு தூண்டப்பட்டல்:- அப்போஸ்தலர் 3:4,5.

பிச்சையிடுதலை நியாயப்பிரமாணம் ஊக்குவிக்கின்றது (உபா. 14:28,29; 15:7,11;26: 12,13). ஆனால் நியாயப்பிரமாணம் அல்ல, சப்பாணியின் தேவையே பேதுருவையும், யோவானையும் நிறுத்தி, அவனை நோக்கிப் பார்க்க வைத்தது.

இயேசுவின் மறுரூப அழகினைக் கண்ட பேதுரு, மலையின் மேலேயே தங்கி, கூடாரமடிக்க விரும்பினான். மனிதத்தேவை என்கிற பள்ளத்தாக்கின் ஊடேயும், இயேசுவின் அழகினைக் காணலாம் என்பதை பின்புதான் பேதுரு கற்றுக் கொண்டான். (மத்தேயு 17:4; 15-18). மலையின் அனுபவமும் அதிசயமானது மாத்திரமல்ல, முக்கியமானதும் கூட. மேல் அறையில் கூடி பெற்ற பெந்தெகொஸ்தே அனுபவமும் மலையின் அனுபவம் தான். (உன்னதமான அனுபவம் தான்.) ஆனால் பெந்தெகொஸ்தேயின் அனுபவம் நாலு சுவர்களுக்குள் அடைந்து கிடக்க வேண்டும் என இயேசு விரும்பவேயில்லை. பெந்தெகொஸ்தேயின் வல்லமை தேவையுள்ள இடத்தில் வெளிப்பட வேண்டும் என தேவன் விரும்புகிறார். எங்கே சப்பாணிகள் உள்ளார்களோ அங்கே அபிஷேகத்தின் வல்லமை வெளிப்பட வேண்டும். நாம் போகும் வழியில் யாரைச்சந்திக்க

தேவன் அனுமதிக்கிருரோ (பேதுருவும், யோவானும் சந்தித்தது போல) அவர்களின் தேவையைக் குறித்து கவனமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

மனிதன் தன்னுடைய இயலாமையினைக்குறித்தும், வியாதியின் அறிகுறிகளைக்குறித்தும், பணத்தேவையினைக்குறித்தும் அக்கரையுள்ளவனுய் இருக்கிருன். இதை மனதில் கொண்டே, சப்பாணியைப்பார்த்து, ''என்னைநோக்கிப்பார்'' என்று பேதுரு கூறினுன். தன்மேலே கவனம் வைக்காமல் இயேசுவின் மேலே சப்பாணி கவனம் வைக்கவேண்டும் என பேதுருவும், யோவானும் வாஞ்சித்தார்கள். தேவனிடமிருந்து ஏதாவது ஒரு ஆசீர்வாதத்தைப் பெறும் முன், அவனின் எதிர்பார்த்தலை அதிகப்படுத்த வேண்டும் என பேதுருவும், யோவானும் எண்ணினார்கள்.

பேதுருவும், யோவானும் சப்பாணியின் கால்களை எடுத்துப்பார்த்த போது, அவனுக்குள் இருந்த விசுவாசத்தைக் கண்டனர் என ஒரு சிலர் கருதுகிறார்கள். ஆனல் இக்கருத்தினை வேதாகமம் வலியுறுத்திக் கூற வில்லை. சப்பாணி தனக்கு சுகம் கிடைக்கும் எனஎதிர்பார்க்கவில்லை, அவனுக்கு ஒரு சில சில்லரைக் காசுகளே தேவைப்பட்டது ஆனல் இதுவே சப்பாணியின் இருதயத்தை திறக்கவும் உதவிற்று.

(ஆ) முழு ஆரோக்கியம் அடைதல்: அப். 3:6-10.

பேதுருதான் இங்கும் பேசும் தலைவனுய் இருந்து, சப்பாணியின் தவறுதலான எதிர்பார்ப்பை கண்டிக்கிருன். தங்களிடம் பொன்னே, வெள்ளியோ கிடையாது என்றும், அதைவிடமேலான ஒன்றை தாங்கள் கொடுக்க வந்திருக்கிறோம் என்றும் கூறினர்கள். இதற்கு அப்புறம், பேதுரு திடமான விசுவாசத்தோடு கூட, கர்த்தராகியஇயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்று சப்பாணியை நோக்கிக்கூறினுன். (இயேசுவின் அதிகாரத்தில்) பேதுரு தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை உபயோகித்துக்கூற வில்லை. இதற்குமாருக இயேசுவின் அதிகாரமுள்ள நாமத்திலேஎழுந்து நட எனக்கூறினுன். ஒவ்வொரு விசுவாசிக்கும் உரிய மேலான சிலாக்கியத்தில் இதுவும் ஒன்ருகும். (மாற்கு .16:18; யோவான் 16:22-24).

சப்பாணியின் கரத்தை பேதுரு பலமாக பற்றி, அவனைத்தூக்கிவிட்டான். விசுவாசம் என்பது மனேநிலையில் உள்ள தத்துவம் மாத்திரம் அல்ல என்பதை வேதத்தில் கண்கூடாகக் காண்கிருேம். விசுவாசத்தை நினைப்பது மாத்திரமல்ல, கிரியையிலும் காட்ட வேண்டும். விசுவாசத்தில் கிரியையும், கீழ்ப்படிதலும் காணப்படவேண்டும். நன்மையைச்செய்ய நாடுவது மாத்திரமல்ல, தூரத்திலிருந்து ஜெபிப்பது மாத்திரமல்ல, கிரியையிலே கிறிஸ்தவ விசுவாசத்தை நாம் காட்ட வேண்டும். ஆவியானவரின் வல்லமையினுலே நாம் தேவையைச் சந்திக்கவேண்டும்.

பேதுரு யாரையும் தனது வலது கரத்தினல் இப்படி தூக்கி நிறுத்தினது கிடையாது. பேதுரு சந்தை வெளியில் போகும்போது, அவனின் நிழல் பட்டு அநேகர் சொஸ்தமாயினர். அதாவது ஜனங்கள் தம்முடைய விசுவாசத்தின் மூலம் சுகம் பெற்றனர், (அப். 5:15) பேதுரு ஆவியானவரால் வழி நடத்தப்பட்டான், ஆவியானவர் அவனின் மூலம் அற்புதமான வழிகளில் கிரியை செய்தார்.

அப்பொழுது சப்பாணியின் வலக் கரத்தை பேதுரு பிடித்தானே, அப்பொழுதே தெய்வீக வல்லமையும், சுகமும், சப்பாணியின் கால்களுக்குள்ளும், கரடுகளுக்குள்ளும் பாய்ந்து சென்றது. சப்பாணி மெதுவாக நடக்கப் பழகவில்லை. சப்பாணி உடனடியாக குதித்தெழும்பி ஆலயத்திற்குள் சென்று, தேவனை துதிக்கவும், ஆடவும், பாடவும் செய்தான். சப்பாணி இப்போது தேவனின் வீட்டிற்கு புறம்பேயுள்ள பிச்சைக்காரன் அல்ல. இயேசுவினிடமிருந்து வந்த ஒரு தொடுதல் சப்பாணியின் உடலிலும், ஆத்துமாவிலும் மறுபிறப்பைக் கொண்டு வந்து விட்டது. தான் அனுபவித்த வல்லமை தேவனின் வல்லமை என்பதை சப்பாணி அறிவான். தான் முதலாவது தேவனுடைய ஆலயத்திற்குள்ளே சென்று அவரை துதிக்க வேண்டும் என எண்ணினன்.

சப்பாணி இவ்வாறு துள்ளிக் குதித்துக் கொண்டு, அல்லேலூயா என ஆரவாரமிடுவதை ஆலயத்திற்கு வந்த மக்கள் கேட்டனார், கண்டனர். தாவீது உடன் படிக்கைப்பெட்டியின் முன் நடனம் ஆடினன் என்பதை யூதர்கள் கேள்விப்பட்டிருந்தனர். ஆனால் அது கடந்த கால சரித்திரம் ஆகும். (2சாமு. 6:14). இந்த மனிதன் இப்படி ஆடுகிருனே என ஒரு சிலர் தங்கள் புருவத்தை நெறித்துப் பார்த்திருப்பர். இவ்வளவு நாட்களாய் சப்பாணியாய் இருந்து, பிச்சை கேட்டவன் அல்லவா இவன் என மக்கள் கூறி ஆச்சரியமுற்றிருக்கக்கூடும்.

(3) ஒருபெரிய சாட்சி

அப்.3:11-26

(அ) சுகம் கொடுத்தவரின் நாமம் உயர்த்தப்பட்டது:-

அப்.3:11-16

பழைய சப்பாணி குதித்து, சத்தமிட்டுக் கொண்டு, பேதுருவையும், யோவானையும் பின்பற்றிச் செல்வதை ஜனக்கூட்டம் கண்டு ஆச்சரியப்பட்டது. பேதுருவும், யோவானும் சப்பாணியை தூக்கிச் செல்லவில்லை. தன்னோடுகூட யோவானையும் பேதுருவையும் சப்பாணி அழைத்துக்கொண்டு சென்ருன். நடந்தது இன்னதென்று ஜனக்கூட்டம் கண்டவுடன், கூட்டம் அதிகரிக்க ஆரம்பித்தது. எல்லாத் திசைகளினின்றும் ஜனங்கள் சப்பாணியைக் காண வந்தார்கள். (சாலமோனின் மண்டபத்திலே சப்பாணியும், பேதுருவும், யோவானும் இருந்தார்கள். ஆலயப் பிரகாரத்தின் கிழக்குப் பகுதியில் இது இருந்தது. வெள்ளைப்பளிங்குக் கற்களால் ஆன 50அடி உயரமுள்ள தூண்களால் (இரு வரிசை) ஆக்கப்பட்ட இடமாகும். மேற்கூரை கேதுரு மரங்களால் ஆனவையாகும். இது சாலமோனின் ஆலயத்தின் மீந்த பகுதி எனபாரம்பரியம் கூறுகின்றது.

பேதுரு தன்னுடைய புகழை நிலைநாட்ட இது ஒரு நல்ல சந்தர்ப்பம் ஆகும். தான் கிறிஸ்துவின் ஸ்தானிகன் அல்லது தேவமனுஷன்என பேதுரு கூற நினைத்தால், எளிதாக கூறியிருக்கலாம். இதுதான் நல்ல தருணம் ஆகும். ஆனல் அவன் மனிதனுக்குஎவ்வித உயர்வும் கொடுக்காது மக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்புகிருன். எங்களுடைய வல்லமையினலே அல்லது பரிசுத்தத்தினலே இம்மனிதன் சுகமாகவில்லை. (தெய்வீக தன்மையினலே,) யெகோவாவாகிய தேவன் தம்முடைய குமாரனகிய இயேசுவின் மூலம் இதைச் செய்தார் என பேதுரு சாட்சியிட்டான்.

இந்த இயேசுதான் யேகோவாவின் ஊழியன் என தீர்க்கதரிசனமாய் முன் மொழியப்பட்டவர்

ஆகும். அவர் நமக்காக பாடுபட்டு தேவனின் மீட்பை நிறைவேற்றினார் எனவும் பேதுரு கூறினான். (ஏசா. 42:1;52:13;53:11;61:1) இயேசுதான் வாழ்க்கையின் இராஜாவாகும். (ஆதிகாரணர், ஸ்தாபகர்,). இந்த இயேசுவைத்தான் நீங்கள் மறுத்து, கொலை செய்தீர்கள் என்று பேதுரு கூறினான். இயேசுவை நீதிமான் என்று பிலாத்து கண்டு, விடுதலை செய்ய மனதாயிருந்தும், யூதஜனம் இயேசுவை பரிசுத்தமான தேவன் என்று கண்டு கொள்ளவில்லை. இயேசுவுக்கு பதிலாக பரபாஸ் கொலைகாரனை விடுதலை செய்யும் என யூதஜனம் கேட்டுக்கொண்டது.

இந்த இயேசுவைத் தேவன் மரணத்தினின்று உயிரோடு எழுப்பினார். அப்போஸ்தலர்கள் அவரைக் குறித்தும், அவரின் உயிர்த்தெழுதலைக் குறித்தும் சாட்சியிட்டனர். நீங்கள் கண்கூடாய் கண்ட அற்புதசுகம் இயேசுவின் நாமத்தில்தான் உண்டானது என அப்போஸ்தலர்கள் கூறினார்கள். இயேசுவின் நாமத்தில் உள்ள சிறிய விசுவாசம் தான் சப்பாணியைக் குணப்படுத்தியது என்று பேதுரு கூறினான். விசுவாசத்திற்கு காரணகர்த்தா இயேசு என்றும், அவரே தான் சுகமளிப்பவர் என்றும் பேதுரு கூறினான்.

ஆ) மனம்திரும்ப அழைப்பு விடுதல்:- அப். 3:17-26.

இயேசுவை நீங்கள்தான் கொலை செய்தீர்கள் என கேட்கின்ற ஜனத்தின் மீது பழியைப் போட்டாலும் இதன் மூலம் பேதுரு, யூதஜனங்களை கலகமூட்ட விரும்பவில்லை. ஏனென்றால் பேதுருவே ஒரு யூதனாய் இருக்கின்றான். யூதஜனங்களை தன்னுடைய சொந்த சகோதரர்கள் என அழைக்கின்றான். மேலும் அவர்கள் அறியாமையினால் செய்தார்கள் என்பதையும் பேதுரு அங்கு கூறத்தயங்கவில்லை. ஆளுகின்ற மக்கள் மீதும் எந்த விதமான பிரத்தியேக குற்றச்சாட்டினையும் கூறவில்லை. இதற்குமாறாக பழையதீர்க்கதரிசிகளின் கூற்றினை விளக்கமாக எடுத்துக்கூற முற்படுகின்றான். பேதுரு ஒரு புதிய மதத்தைப் பற்றி பிரசங்கிக்கவில்லை. தீர்க்கதரிசிகள் இயேசுவைச் சுட்டிக்காட்டி, அவரின் பாடுகளை தீர்க்கதரிசனமாக முன்மொழிந்துள்ளனர். யூதர்கள் இயேசுவை புறம்பே தள்ளின காரியத்தின் மூலம் தேவன் தம்முடைய வசனத்தை நிறைவேற்றிக் கொண்டார்.

தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி இயேசு புறக்கணிக்கப்பட்டாலும், யூதஜனங்கள் இப்பழியினின்று நீங்கி ஜீவிக்க முடியாது. யூதஜனம் மனம் திரும்ப வேண்டும். (தங்களுடைய மனதை தங்களுடைய அடிப்படை அபிப்பிராயங்களை மாற்றித் தான் ஆகவேண்டும்). யூதஜனம் பயப்பட வேண்டிய தேவையில்லை. மனம்திரும்புதல் என்றால், அவர்கள் பாவத்தினின்றுவிடுபடுவர்என்று அர்த்தமாகும். அவர்களின் எல்லா அக்கிரமும், பாவமும் நீங்கிப்போம். யூதஜனம் இதுவரை பாவம் செய்யாத மக்கள் போல் தேவசந்நிதானத்திலே நிற்பர்.

தேவ சமுகத்திலே அவர்கள் நிற்கும்போது எழுப்புதல்கள் உண்டாகும். பெந்தெகொஸ்தேயின் நாள் கடந்து போய் விட்டாலும், அபிஷேகம் பெறும் வாய்ப்பு இன்றும் உள்ளது. பெந்தெகொஸ்தேயின் அனுபவத்தை திரும்பவும் பெறலாம். (இயேசு இவ்வுலகிற்கு திரும்புமுன் யூதஜனம் மனம் திரும்பினால் எழுப்புதல்என்ற காலம் வரும் என கிரேக்க ஆதாரம் கூறுகின்றது. (கிரேக்க வசனம் 20).

மீட்பின் கிரியை முற்றுப் பெறும் வரை இயேசு பரலோகில் இருந்து தான் ஆகவேண்டும். (இயேசு யூதரின் மேசியாவாக குறிக்கப்பட்டுள்ளார்). மோசே வாக்குப் பண்ணின தீர்க்கதரிசி இயேசுவாகும். (உபா. 18;14-19; மாற்கு 9:7; எபி.3:1—6)

இயேசுவினுடைய முதலாம் வருகையைக் குறித்து மோசே, சாமுவேல் போன்ற தீர்க்கதரிசிகள் ஏற்கனவே தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார்கள். ஆபிரகாம் மூலமாக முழுஉலகமும் ஆசீர்வதிக்கப் படும் என்ற வாக்குத்தத்தம், இப்பொழுது ஆபிரகாமின் வித்துவால் உண்மையாக்கப்பட்டுள்ளது. (கிறிஸ்துவால். —கலா. 3:14,16,22) இந்த ஆசீர்வாதத்தை பேதுருவின் பிரசங்கம் கேட்ட மக்கள் முதன்முதலாக பெறும் சிலாக்கியத்தை அடைந்தனர்.

வாழ்க்கையோடுள்ள தொடர்பு:-

(1) ஜனங்களோடும், அவர்களின் தேவைகளோடும், நாம் போராடும் போதும் புதிய அல்லது புத்திக் கூர்மையுள்ள முறைகளை உபயோகிப்பது தவருகுமா?

மக்களின் தேவையை சந்திப்பதில் மனிதமுறைகள் பயன்படாது என்ற பாடத்தை அப்போஸ்தலர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம். சீஷர்கள் மக்களின் தேவையை உணர்ந்து சூழ்நிலைக்கு ஏற்ப முறைகளைக் கையாண்டார்கள் என்று காண்கிறோம். சப்பாணிக்கு, அவனின் வியாதியைக் கொண்டு. பேதுரு இயேசுவை அறிமுகப் படுத்தினன். (வியாதியை ஒரு கருவியாக உபயோகப் படுத்தினன்) சப்பாணி பிச்சை பிச்சை கேட்டவுடன், பணம் என்கிற கருத்தினைக் கொண்டே பேசினன். இந்தக்கருத்திலிருந்து தொடங்கி பேதுரு சப்பாணியின் உண்மையான தேவைக்கு பரிகாரம் கூறினன். மனிதனின் தேவையினை இயேசுவின் வல்லமையால் சந்தித்தான்.

நாம் ஜனங்களோடு இடைபடும் போது சரியான இடத்தில் ஆரம்பிக்க வேண்டியது மிக முக்கியமாகும். அப்போஸ்தலர் 8ம்அதிகாரத்தில் சுவிசேஷகனாகிய பிலிப்பு கந்தாகே மந்திரியோடு இடைபடும் விதம் நமக்கு அடுத்த நல்லதொரு உதாரணம்ஆகும். கந்தாகே மந்திரி ஏசாயாவின்53ம் அதிகாரத்தைவாசிப்பதைபிலிப்பு கவனித்தான். அந்த ஏசாயா 53ம் அதிகாரத்தை வைத்தே பிலிப்பு, கந்தாகே மந்திரிக்கு இயேசுவைப் பற்றி பிரசங்கித்தான். நீர் வாசிப்பது உமக்கு விளங்குகிறதா? என்றக் கேள்வியின் மூலம் பிலிப்பு காந்தாகே மந்திரியின் ஆர்வத்தை வளர்த்து விட்டான்.

மக்களின் தேவையை நாம் எவ்விதம் சந்திப்பது என்பதை மேற்கூறிய இரண்டு சம்பவத்தினின்றும் நாம் கற்றுக் கொள்கிறோம். (1)சூழ்நிலையை நன்கு ஆராயவும் (2) ஒரு பொதுவான கருத்திலிருந்து தொடங்க வேண்டும். (3) அடுத்து நமது முக்கிய கருத்தாகிய இயேசுவை பிரசங்கிக்க முற்பட வேண்டும். மக்களின் தேவையினை சந்திக்க அறிவின் முறைகள் தேவை

யில்லை. (விநோத முறைகள்)

(2) இயேசு என்கிற நாமத்தில் உள்ள வல்லமை என்ன?

“இயேசுவின் நாமத்தில்” எழுந்து நட என பேதுரு சப்பாணியை நோக்கிக்கூறினான். நாம் இன்று எண்ணுவதைவிட எபிரேய கருத்து இன்னும் ஆழமாகச் சொல்லுகின்றது. எபிரேயனைப் பொறுத்தமட்டில் “பெயர்” என்பது (நாமம்) ஆழமான கருத்தினை உடையது என எண்ணுவான். ஒருவனின் குணநிசியத்தினைக் கொண்டே எபிரேயர்கள் பெயர் சூட்டுவார்கள். பேதுரு 'இயேசு' என்ற நாமத்தை மாந்திரீக வார்த்தை போல் உபயோகப்படுத்தி கூறவில்லை என்பதை மனதிற் கொள்க. இயேசு நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் என பேதுரு நினைத்துக் கூறினான். 'இயேசு' என்றால் பிதா தம்முடைய எல்லா வல்லமையினையும் அவரிடம் ஈந்துள்ளார் என பேதுரு அர்த்தம் கொண்டான்.

பெயரை நாம் ஆள் கண்டுபிடிக்க உபயோகிப்பதால், இந்தப் பகுதியை நாம் தவறாக வியாக்கியானித்து விடுவோம். ஒரு மனிதனின் தொழில், அல்லது அவனுடைய நிலைமையை, அவனின் பெயர் குறிக்க வேண்டும் என சில நாட்டு பண்டுகளில் காணப்படுகின்றது. பெயரைக் கொண்டு அவனின் நிலைமையை உணர நாம் அநேக நேரங்களில் தவறி விடுகிறோம். இயேசுவின் நாமத்தில் ஒரு காரியம நடக்கிறது என்றால் அவரின் பெயரிலே வல்லமை, அதிகாரம் உண்டு என்பதை உணர்ந்து கொள்ள வெண்டும்.

(3) என்னிடம் “பொன்னும் இல்லை வெள்ளியும் இல்லை” என பேதுரு கூறுவதிலிருந்து நமக்கு என்ன விளங்குகின்றது?

பேதுருவும், யோவானும் பைசா கூட இல்லாமல் இருந்தார்கள். ஏனென்றால் நாங்கள் எளிமையாகவே ஜீவிப்போம் என அவர்கள் பிரமாணம் செய்திருந்தார்கள் என ஒரு சிலர் கூறுவர். இந்த சமயத்தில் பேதுருவினிடமும், யோவானிடமும் பைசா காசு கூட இல்லை. ஆகையால் சீஷர்கள் எப்பொழுதும் எளிமையாகவே இருந்தார்கள் என அர்த்தமா? ஆதி சபை கிறிஸ்தவர்கள் பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் பின்தங்கிய நிலைமையில் இருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. சுவிசேஷத்தினால் நீ உலக ஆசீர்வாதத்தையும் பெறுவாய் என்று பிரசங்கிக்கும் கருத்திற்குமேற்கூறிய சம்பவம் இசைந்து வருவதில்லை.

பேதுருவும், யோவானும் காசு இல்லாமல் இருந்தது போலஆதிசபை கிறிஸ்தவர் கள் இருந்தார்கள் என்பது உண்மை தான்.

அநேக நூற்றுண்டுகளாய் கிறிஸ்தவர்கள் வறுமையில் வாடும் நிலையில் தான் இருந்து வந்திருக்கிறூர்கள் என்பது உண்மைதான். தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்கும் பொருட்டு, இவ்வுலக அஸ்தியை விட்டவன் தான் கருத்தாய் தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிக்க முடியும். இவ்வுலகம் கொடுப்பதைவிட (அஸ்தியை விட) பேதுருவும், யோவானும் கிறிஸ்துவின் ஆஸ்தியை உடையவர்களாய் இருந்தார்கள். ஆத்துமாவிலும், சரீரத்திலும் கிறிஸ்து என்ன கிரியைகளை நிறைவேற்றுகிறூரோ "அதுவே சுவிசேஷத்திஞல் வரும் உண்மையான ஆசீர்வாதம் ஆகும். இதுவே கிறிஸ்தவனுக்குரிய உண்மைச் சொத்தாகும். உலகம் விரும்புவதும் இதுதான்.

(4) சப்பாணியை பேதுரு வலது கரத்திஞல் தூக்கி விட்டான் என்பதில் ஏதாவது முக்கியத்துவம் உள்ளதா?

இரண்டு கருத்துக்களை நாம் மனதில் கொள்ள வேண்டும். விசுவாசத்தில் உள்ள பல கருத்துக்களில் (ஒன்று கிரியை செய்தல்) கிரியை இல்லாத விசுவாசம் உண்மையான விசுவாசம் அல்ல. இந்த அற்புதம் நடைபெற சப்பாணிக்கு விசுவாசம் தேவையானது மாத்திரம் அல்ல; பேதுரு விசுவாசத்தை கிரியையில் காட்டவும் செய்ய வேண்டும். பேதுருவின் விசுவாசம் ஆழமான சூழ்நிலையில் வேர் கொண்டுள்ளது என்பதை சப்பாணியும் சுற்றியிருந்தவர்களும் கண்டார்கள். இது நமக்கு ஒரு நல்ல பாடமாகும். நாம் ஆழமாய் விசுவாசித்தால் தேவன் ஏதோ ஒரு பெரிய அற்புதத்தை நிகழ்த்துவார் என எதிர்பாக்கிறேம். அது மாத்திரமல்ல, நாம் எதற்காக ஜெபிக்கிறேமோ அதை தேவன் செய்து தான் தீர வேண்டும் என்றும் வாஞ்சிக்கிறேம். அற்புதம் நிகழ வேண்டுமானல் நாம் கிரியை செய்ய வேண்டும்.

சப்பாணியை உற்சாகப்படுத்தும்படி பேதுரு ஒருகாரியத்தைச் செய்தான்என்ற முக்கியமான கருத்தை நாம் உன்னிப்பாய் கவனிக்க வேண்டும். கிரியையிஞல் விசுவாசத்தைக் கொண்டு பேதுரு சப்பாணியின் தேவையைச் சந்தித்தான். ஊழியம் செய்கிறவனுடைய விசுவாசம் மற்றவர்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணும்.

(5) அறியாமையிஞல் நீங்கள் செய்தீர்கள் என்று பேதுரு கூறுவதிலிருந்து நாம் என்ன பாடத்தைக் கற்றுக் கொள்ள முடியும்

இயேசுவைக் கைது செய்து விசாரித்த பின்பு யூதர்கள் அவரை சிலுவையில் அறைந்து கொன்றது எல்லாம் வேண்டும் என்றே செய்தார்கள் என நினைக்கிறேம்; (அறிந்தே செய்

தர்கள் என்று நாம் எண்ணக் கூடும்) பாவத்தின் வல்லமையினை பேதுரு நன்கு அறிந்திருந்தமையால் கருத்தினை ஆராய்ந்து, பிரசங்கித்தான். ஜனங்கள் பாவத்தில் ஜீவிப்பதால் ஆவிக்குரிய அறியாமை ஏற்படுகின்றது என்பதை பேதுரு கண்டு கொண்டான். பாவம் மனிதனுடைய மனதை குருடாக்கிப் போடுகின்றது. ஜனங்கள் பாவிகளாய் இருந்தமையால்தான், பேதுருவின் பிரசங்கம் கேட்டமக்கள் அறியாமை என்ற இருளில் மூழ்கியிருந்தனர். நீங்கள் அறியாமையினால் பாவம் செய்தீர்கள் என்று யூதமக்களிடம் பேதுரு கூறினவுடன் அவர்களின் ஆர்வம் அதிகமாயிற்று. நாமும் இதுபோல் மக்களின் ஆர்வதைப் பெருக்கி சுவிசேஷத்தினை அறிவிக்க வேண்டும்.

"பாடுகளின் மத்தியிலும் உண்மையாயிருத்தல்"

வேதபகுதி: அப்.4:5—20

போதிக்கும் திட்டம்:-

ஞாயிறுபள்ளி போதனையிலே மிக கருகலான பகுதி ஆரம்பபகுதியும், முடிவுப்பகுதியும் ஆகும். மாணவர்கள் நாம் போதிக்கும் பகுதியிலே மிக ஆர்வமுடையவர்களாய் இருக்கத்தக்கதாக பாடத்தினை கவர்ச்சிகரமாக போதிப்பது நலம். இதற்காகவே மாணவர்களும் நாம் போதிக்கும் பாடத்தில் பங்கு கொள்ள வைப்பது நலம்.

சுவிசேஷம் உண்மையானது என நாம் ஏன் கருதுகிறோம் என வகுப்பினரை வினவவும். அனேக பதில்கள் வரும். அவைகளை புரிந்து, சமயோசிதமாய் ஆராயும் திறன் ஆசிரியருக்கு தேவை. மனிதனுடைய அனுபவத்தை நாம் ஒருபோதும் விவாதித்து, மறுக்க முடியாது என்ற கருத்தை வலியுறுத்திக் காட்டவும். சப்பாணியை குணப்படுத்தியபோது அப்போஸ்தலர்கள் தங்கள் அனுபவ சாட்சியைக் கூறினர். ஒருவராலும் அதை மறுக்க முடியவில்லை.

வேதவிளக்கம்:-

அப்.4:1-22.

பின்னணி:—

காலம் கி. பி. 29.

இயேசு இப்பூவுலகில் ஊழியம் செய்து கொண்டிருந்தபோது, பரிசேயர்கள்தான் அவரின் பெரிய விரோதிகளாய் திகழ்ந்தனர். ஆலயத்தில் இருந்த லேவாதேவிக்காரர்களை இயேசு விரட்டியடித்தார். (மாற்கு11:15-18). இந்த சம்பவத்தினால் எருசலேமின் ஆசாரியர்களாய் இருந்த சதுசேயரின் வல்லமை, அமைப்பு, லாபம் ஆகியவற்றினுக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது. சதுசேயர்கள் சாதாரணமாக உயிர்த்தெழுதலையும், தூதர்களையும், ஆவிகளையும் நம்பமாட்டார்கள். (யோவான் 11:47; 12:9-11; அப்.23:8). இயேசு, லாசருவை உயிரோடு எழுப்பினவுடன், சதுசேயர்களின் நம்பிக்கையில் இடிவிழுந்து விட்டது. அவர்களின் மாய்மாலம் வெளிப்பட்டுவிட்டது.

அலங்கார வாசலண்டை சப்பாணி குணமானவுடன், ஜனங்கள் அந்த அதிசயத்தைக் காண குழுமிவிட்டனர். இதினால் ஆலய ஒழுங்கு சட்டத்திற்கு பங்கம் விளையாமல் இருக்கத்தக்கதான நடவடிக்கைகளில் சதுசேயரும், பரிசேயரும் இறங்கினர். முதலாவது இவர்கள் பின்னணியில் நின்று காரியத்தை கவனித்தனர். இயேசுவை கைவிட்டு விட்டு சீஷர்கள் ஓடினதையும், இப்போது பேதுரு தைரியமாக நின்று பிரசங்கிப்பதையும் ஆலயத்திலவர்கள் அறிந்திருந்தமையால் உடனடியாக செயலில் ஈடுபடவில்லை. (மத். 26:56). யூதர்கள்

தங்கவசனம்:- என்னிமித்தம்… …பாக்கியவான்களாயிருப்பீர்கள். மத்தேயு 5:11

இயேசுவை மறுலித்த காரியத்தையும், அவரைக்கொலை செய்த காரியத்தையும் கூறி, அவர்களை கண்டனம் செய்தான். இது அவர்களை அதிர்ச்சியுற செய்தது.

1 அபிஷேகம் பண்ணப்பட்ட சாட்சி:-

அப் 4:1-12.

(அ) வல்லமையான ஊழியம்:-

அப். 4:1-4.

சப்பாணி மாலை மூன்று மணிக்கு சுகமானான். பேதுருவும் யோவானும் தங்களைச் சூழ்ந்து கொண்ட மக்களுக்கு இயேசுவின் நற்செய்தியை மாலை வரை (அதாவது 3மணி நேரம்) பிரசங்கித்தனர். பரிசேயர்களும், சதுசேயர்களும், மாலையில் பேதுருவையும் யோவானையும் சந்தித்தனர். (பிரதான ஆசாரியனுக்கு அடுத்த பதவியிலிருந்த தலைவன் பேதுருவை பிரசங்கத்தின் இடையில் இடைமறித்தான். லேவியர்களின் போர் சேவகர்களின் தலைவன் இவனுக்கும் இயேசுவின் சரீரத்தை சீஷர்கள் களவாடி விட்டனர் எனக்கூறகைக் கூலி கொடுத்தக் கூட்டத்தில் இவனும் ஒருவன். (மத் 28:12,13).

இயேசுவின் சிலுவை மரணத்தோடு, அவரின் போதகமும் மறைந்துவிடும் என சதுசேயர் எண்ணினர். அவர்கள் விசுவாசித்த போதகத்திற்கு மாறுக இயேசுவின் போதகம் இருந்தது இஸ்ரவேலின் மதத்தலைவர்கள் பொருளாதார நோக்குடைய வாழ்வினையே நடத்தி வந்தார்கள். இவர்கள் மோசேயின் பிரமாணங்களை ஏற்றுக் கொண்டனர். இப்பூவுலகில் ஆரோக்கியமாயும், பணத்துடனும், சந்தோஷத்துடனும் வசிக்க மோசேயின் பிரமாணம் உதவுகிறது என நம்பினர். நரகத்தையும், நியாயத்தீர்ப்பினையும், இனிவரும் வாழ்வினையும் விசுவாசிக்கவில்லை. இயேசுவின் உயிர்த்தெழுதலோடு அவரின் போதகமும் உயிர் பெறுகிறதைக் கண்டு, ஆச்சரியமுற்று, வேதனையடைந்தனர் என்பதில் வியப்பில்லை.

பேதுருவும், யோவானும் கைது செய்யப்பட்டபோது ஆச்சரியமுற்றதாகக் காணப்பட வில்லை. சித்திரவதைகளை மேற்கொள்ளத் தக்கதாக, இயேசு அவர்களை பக்குவப்படுத்தி விட்டார் என்பது உண்மையெனத் தெரிகிறது. (மத்.5:10,11 லூக். 6:22, 23, 26; இதோடு 2திமோ 3:12ஐ ஒப்பிடுக) சதுசேயர்கள் தங்கள் எண்ணம் நிறைவேறத் தக்கதாக பேதுருவையும், யோவானையும் சிறைப் படுத்தினர். ஆனால் அவர்களின் நோக்கம் ஈடேறவில்லை. சப்பாணி சுகமாகிய 3 மணி நேரத்திற்குள் பெந்தெகொஸ்தே தீ யூதர்களுக்குள் பரவி5000 பேரைபற்றிக் கொண்டது. (பெண்கள், குழந்தைகள் உள்பட) பரிசுத்தஆவியின் வல்லமையால் எல்லோரும் ஜீவனுள்ள, பெலனுள்ள இயேசுவோடு ஐக்கியம் கொண்டனர். (கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு ஐக்கியம் கொண்டனர். (எபேசி. 2:8).

(ஆ) திமிரான கேள்வி:-

அப். 45:7.

அன்னா, காய்பா தலைமை வகிக்கும் சனகரிம் சங்கத்திற்கு முன்பாக சீஷர்கள் இருவரும் கொண்டுவரப்பட்டார்கள் (சனகரிம்= உயர்ந்த ஆலோசனை மன்றம், செனட், யூதமதத்தின் சுப்ரீம் கோர்ட் அதுதான்; அன்னா= பிரதான ஆசாரியன் கி.பி. 6-15; இப்போதும் அதே பெயரும் வல்லமையும் இருக்கின்றது: காய்பா=பிரதான ஆசாரியன். கி.பி. 18-36; அன்னாவின்

மருமகன்; உண்மையான பிரதான ஆசாரியன்). யோவானும், அலெக்சாந்தர் என்ற ஆசாரியனும், ஆலய வருமான அதிகாரிகளாய் திகழ்ந்தார்கள்.

படிப்பிலும், மத விஷயங்களிலும், அரசாங்க விஷயங்களிலும், வேதத்தை வியாக்கியானிப்பதிலும் தாங்கள் சிறந்தவர்கள் என சனகரீம் சங்கத்தினர் எண்ணினார்கள். தங்கள் மத்தியில் அப்போஸ்தலர்களை நிறுத்தி வைத்தனர். அவ்வாறு நிறுத்தி வைத்து விட்டு, கல்வியறிவில்லாத தாழ்குல மக்களாக அவர்களை எண்ணி நோக்கினார்கள். பேதுருவும், யோவானும் (சப்பாணியும்கூட) கைது செய்யப்பட்டுள்ளதால், அவர்களை விசாரிப்பது அவர்களின் கடமையாகும். தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்ற மனப்பான்மையினை வெளிப்படுத்தும் கேள்வியோடு விசாரணையைத் தொடங்கினர். அதிசயத்தினையும் அப்போஸ்தலர்களையும் சிறுமைப்படுத்தத்தக்கதாக, "எந்த அதிகாரத்தினால் இதைச் செய்கிறீர்கள் என சனகரீம் அங்கத்தினர் வினவினார்கள்.

(இ) ஆவியினால் ஏவப்பட்டு, கூறப்பட்ட விடை:-அப். 4:8-12

பதில் ஏற்கனவே, பேதுரு தயாரித்து வைத்துக் கொள்ளவில்லை. அவர்கள் நியாயாசனத்துக்கு முன்பாக கொண்டு வரப்படும்போது, நீங்கள் விடையைதயார் செய்து வரவேண்டாம் என இயேசு ஏற்கனவே தடை செய்து விட்டார். (மத். 10:17,19 20). பெந்தெகொஸ்தே நாளிலே, ஆவியானவர் அருளிய செய்தியை தைரியமாய் எழுந்து நின்று பேதுரு பிரசங்கித்தான் (அப்.2;14) இதிலிருந்து நல்ல தொருபாடத்தைப் பேதுரு கற்றுக் கொண்டான். இயேசுவை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்த சனகரீம் சங்கத்திற்கு முன் பேதுரு நிற்கிறான். மறுபடியும் பேதுரு தன் இருதயத்தை நன்றாக திறந்து, ஆவியானவரின் புதிதான நிரப்புதலைப்பெற்று, அவர் அருளப்போகும் செய்திக்காக காத்திருந்தான். சனகரீம் சங்கம் எழுப்பின கேள்விக்கு பேதுரு, தன்னுடைய பதிலைக் கூறாமல், தேவனுடைய பதிலைக் கூறினான்.

பேதுரு தன்னைப் பாதுகாக்க எந்த முயற்சியும் செய்யாமல், அவர்களின் கேள்விக்கு இயேசுவே சரியான பதிலென்றும், உலகம் முழுவதிற்கும் அவர் போதுமானவர் என்றும் கூறினான்.

இயேசுவின் நாமத்தினாலே மனிதன் சுகமாக்கப்படுகிறான். (ஆத்துமாவினாலும், சரீரத்திலும் இயேசுவின் நாமத்தினால் இரட்சிக்கப்படுகிறான் என கிரேக்கபதம் கூறுகின்றது. சப்பாணியை எந்த வல்லமை சுகமாக்கிற்றோ, அதே வல்லமைதான் இயேசுவையும் உயிரோடு எழுப்பிற்று.

மதத்தலைவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தபோது வேதவசனத்தை நிறைவேற்றினார்கள். (சங்.118:22). இவர்கள் தான் இயேசுவை வேண்டாம் என்று தள்ளின கட்டடக்காரர்கள். ஆனால், தேவன் வேண்டாம் என்று தள்ளின கல்லே மூலைக்கு தலைக்கல்லாககினார்.

இயேசுவின் மரணத்தாலும் உயிர்த்தெழுதலாலும், இவ்வுலகிற்கு இரட்சிப்பு உண்டாகும் என்பது தேவ நினைவேறுதல் ... அவர் மூலமாகவே உலகம் இரட்சிக்கப்படும். இது ஒரு திட்டமான அறைகூவல். தேவனிடத்தில் போக இயேசுவின் நாமம் தவிர வேறு ஒரு நாமம் இல்லை.

...10,20). தேவனிடம் செல்ல ... ஒரு ரஸ்தாவோ, வேறு ஒரு ...வோ (இயேசு அல்லா ... இல்லை.

...தரப்பமடைந்த தலைவர்.

...

அப்போஸ்தலர் 4:13-8.

(அ) ஆச்சரியமடைந்த விரோ...தன் அப். 4:13.

பேதுருவினுடைய யோவானுடைய தைரியத்தைக் கண்ட சன...ம் சங்கம் மிகவும் ஆச்சரிய முற்...து (பேச்சில், நம்பிக்கையில் காணப்பட்ட தைரியத்தைக்கண்டு)

பேதுருவும், யோவானும், தெளிவாகவும், திடமான நோக்கத்துடனும், வல்லமையுடனும் பேசினர். அந்த நாட்களில் உள்ள பேச்சாளர்களைப் போல, பெரிய ...களை உபயோகித்துப் பேசவில்லை. சாதாரண மக்கள் பேசும் மொழியிலேதான் பேசினர்கள். ...சேயர்கள், சதுசேயர்களைப் பொறுத்தமட்டில், பேதுருவும், யோவானும், கல்லாத மக்களாக எண்ணப்பட்டவர்கள். (படிப்பறிவில்லாதவர்கள், எந்த ரபிமாரிடமும் கற்றுக் கொள்ளவில்லை. சாதாரண ஜூதமக்கள், வேதபாரகர்களிடமோ, ரபிமார்களிடமோ வசனத்தைக்கற்றுக் கொள்ளவில்லை). இந்த இருவரும் இயேசுவோடிருந்த சீஷர்கள் என்பதை சனகரீம் சங்கம் அறிந்து கொண்டது. எப்படியாவது இயேசுவை பேச்சிலே குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என அநேக மதத்தலைவர்கள் சதித்திட்டம் செய்திருந்ததை இப்போது நினைவு கூர்ந்து பார்த்திருப்பர் (மத்.22:15,23). இயேசுவில் எந்த வல்லமையும், ஞானமும் காணப்பட்டதோ, அதே வல்லமை இந்த இரு சீஷர்களிடமும் காணப்பட்டது.

(ஆ) தர்க்கம் பண்ணக் கூடாத சாட்சிகள்:- அப். 4:14-16.

பேதுருவோடும், யோவானோடும், அவர்களின் விசுவாசத்தைக் குறித்து, தர்க்கிக்க வேதபுண்டிதர்களும், வேதபாரகர்களும் ஆசாரியர்களும், அரசியல் வாதிகளும் முயன்றிருக்கக் கூடும். ஆனால் அங்கே தர்க்கித்து, வாதாட ஒன்றும் இல்லை. எல்லோரும் அறிந்த அற்புதத்தை அவர்களால் மறுக்கக் கூடாமல் போயிற்று. (மறைக்கக்கூடாமல்) சீஷர்களோடு கூட, சப்பாணியும் சுகமாக்கப்பட்ட நிலையில் கூடவே இருந்தான். சீஷர்களுக்கும் இந்த ஆளுகை செய்பவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். என்ன செய்வது என்று தெரியாமல் மதத்தலைவர்கள் முழிக்க ஆரம்பித்தனர். பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து, திடமான விசுவாசத்தோடு பேதுருவும், யோவானும் நின்றார்கள்.

(இ) அநீதியான பயமுறுத்துதல்:- அப்போஸ்தலர் 4:17,18;

சனகரீம் சங்கம் தன்னுடைய உத்தரவாதத்தை வெளிப்படுத்தக் கூடாதபோது, பயமுறுத்துதலைத் தொடங்கி விட்டது. அப்போஸ்தலர்களை தண்டிக்க சனகரீம் சங்கத்திற்கு எந்த ஆதாரமும் இல்லை. சுவிசேஷம் எப்படியாவது தடைப்பட வேண்டும் என சனகரீம் சங்கம் விரும்பியது. ஆகவே சீஷர்களை தாழ்மைப்படுத்த, சிறுமைப்படுத்த சங்கம் விரும்பியது. இயேசுவோடிருந்த இந்த சீஷர்களுக்கு என்ன நேரிட்டது என்பது சங்கத்திற்கு தெரியாது.

3 தீர்மானம் உடைய சீஷர்கள்:—

அப்போஸ்தலர் 4:19-22

(அ) தாழ்மையான சாட்சிகள்:- அப்போஸ்தலர் 4:19-20.

இயேசுவின் நாமத்தில் பேசக் கூடாது, போதிக்கக் கூடாது என சனகரீம் சங்கம் சீஷர்களைப் பயமுறுத்தி அனுப்பியது. ஆனால் இந்த பயமுறுத்தலைக் கண்டு சீஷர்கள் பயந்து விடவில்லை. இதற்கு மாறாக சனகரீம் சங்கத்தின் மேல் ஓர் உத்தரவாதத்தை பயமில்லாமல் சுமத்தினார்கள். தேவனுக்கு செவி கொடுப்பது நல்லதா? அல்லது சனகரீம் சங்கத்திற்கு செவி கொடுப்பது நல்லதா? என்ற கேள்வியை சீஷர்கள் எழுப்பினார்கள்.

எங்கும் போய், சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, போதிக்க வேண்டும் என்ற தெய்வீகக் கட்டளையை சீஷர்கள் பெற்றார்கள். (மத்.28:19). தங்களுக்கு வசதியானபதிலை சனகரீம் சங்கம் கூறி விட முடியாது. தேவசித்தம் என்கிற கருத்து இங்கு கருத்தில் கொள்ள வேண்டிய தொன்றாகும்.

சீஷர்கள் தாங்கள் என்ன பேசுகிறோம் என்பதை அறியார்கள். சீஷர்கள் பொய்யாக சாட்சியைக் கூற வில்லை. (1. யோ. 1:1,3). எரேமியா கூறினது போல, தேவ வசனம் தங்களுக்குள் பற்றி யெரிகிறது என்று உணர்ந்தனர். (எரேமியா 20:9). தேவன் பேசுவதை ஆமோஸ் கண்டது போல, இவர்களும் கண்டார்கள். தேவனுக்காகப் பேசுவதை தவிர வேறு ஒன்றையும் அவர்களால் செய்யக் கூட வில்லை. (ஆமோஸ் 3:8ல் 'தீர்க்க தரிசனம்' என்றால் 'தேவனுக்காய் பேசுதல்' என்று பொருள் படும்).

சத்தியத்தை சீஷர்களால் அறிவிக்காமல் இருக்க முடியவில்லை.

(ஆ) பெரிய வெற்றி:-
அப்: 21,22.

பேதுருவின், யோவானின் தைரியத்தைக் கண்ட சனகரீம்சங்கம், ஒன்றும் செய்யக் கூடாமல், அவர்களை விடுதலை செய்து விட்டது. தொடர்ந்து அவர்களைப் பயமுறுத்த சனகரீம் சங்கம் முற்படவில்லை. ஜனங்கள் என்ன செய்வார்களோ என்று பயந்ததினால் சீஷர்களை சங்கம் ஒன்றும் செய்யவில்லை. அதிசயத்தைத் தேவன் செய்ததினால் ஒவ்வொருவரும் தேவனைத் துதித்தார்கள். இதை சனகரீம் சங்கம் காணத்தான் செய்தது. ஆனால் அப்போஸ்தலர்களுக்கு தீங்கிழைப்பது இது சரியான நேரம் என்றும் கண்டு கொண்டார்கள். (இவர்கள் சரியான அரசியல் வாதிகள் ஆகையால் தீங்கிழைக்க உடனே முற்படவில்லை. சுகமாக்கின தேவனுக்கு விரோதமாக செய்ய சங்கம் ஏதாவது முற்பட்டால், ஜனங்கள் கலகம் செய்ய ஆரம்பிப்பார்கள். கடைசியில் சீஷர்கள் தாராளமாய் சுவிசேஷத்தை அறிவிக்க அதுவே வாய்ப்பாக மாறி விடும் என்று சங்கம் எண்ணியது.

அப்போஸ்தலர்கள் சனகரிப் சங்கத்தினை புன் முழு சந்தோஷத்தோடும், பரிசுத்த ஆவியின் நிறைவோடும் நின்றிருந்தனர். சங்கம் அவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்த காரியம் சிரிப்புக்குரியதாய் நமக்குத் தோன்றுகிறது.

வாழ்க்கையோடுள்ள தொடர்பு:-

1 கிறிஸ்தவ மதத்திற்கு, பெரிய மதத்தலைவர்கள் கூட விரோதிகளாய் மாறி விடுவார்களா?

சில நேரங்களில் இப்படி நடக்கத்தான் செய்கின்றது. இதற்குரிய காரணங்களை நாம் ஆராய்வோம். நாமும் இப்படிப் பட்ட குற்றத்தைச் செய்யாத படிக்கு எச்சரிக்கையோடு இருப்போம். இருக்கிறதான மதச் சடங்காச்சாரங்களிலேமதத் தலைவர்கள் ஊறிப் போய் இருப்பதால், அதிலே ஏதாவது மாற்றம் ஏற்படும் போது எதிர்க்கத்தான் செய்வார்கள். சில தேவகளைச் சந்திக்க சுவிசேஷ கிறிஸ்தவர்கள் ஒரு சில சங்கங்களை உருவாக்கி உள்ளனர். தேவை பூர்த்தியாகியும், அந்த சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வரும். எருசலேமிலுள்ள மதத் தலைவர்களும் பழைய சடங்காச்சாரங்களையே கடை பிடிக்க எண்ணினர்.

புதிய திட்டங்கள் எழும் போது மதத் தலைவர்கள் தான் தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. இந்தத் தீர்மானங்கள் சரியான கருத்துக்கள் கிடைக்காமலே எடுக்கப்படலாம். ஆகையால் தவறான தீர்மானம் நிறைவேற்றப்படும். அப்போது தலைவர்கள் தங்கள் கருத்து தவறு என்பதைக் கண்டவுடன் அதை ஒத்துக்கொள்ளாமல், பெருமையினால் தவறினையே சரியென வாதிட முயல்வர். இயேசுவுக்கு விரோதமான செயல்களைச் செய்ய எருசலேம் மதத் தலைவர்கள் தீர்மானித்து விட்டனர். தீமைக்கேதுவான வழியிலே போக அவர்களின் பெருமை வழி கோலிற்று.

ஒரு சில சமயங்களில் நான் பெரியவன் என்ற கருத்து மக்களை கேட்டிற்குள்ளாக்குகிறது. இந்த எண்ணம் தவறான தீர்மானங்களை எடுக்க வழி கோலுகிறது. காரியங்களை இருக்கிற வண்ணமாக காண தலைவர்களுக்கு நேரமிருக்காது. ஆகையினால் எடுக்கும் தீர்மானம் அதிக நன்மைகளை விளைவிக்காது.

(2) நாம் படிப்பில்லாத மக்களாய் இருப்பதால், தேவ வல்லமை அதிகமாய்வெளிப் படுமா?

இந்தக் கேள்வி தவருக நமக்கு எடுத்துரைக்கப் படுகின்றது. இதற்கு நாம் ஆம் என்றும் இல்லையென்றும் கூறலாம். ஆவியினுல் நிரப்பப்பட்ட, கற்ற மனிதனே, தேவனுக்கு வல்லமையான சாட்சியாக விளங்க முடியும். பேதுருவும், யோவானும் கல்லாதவர்களாய் இருந்தமையால் தான் நல்ல சாட்சிகளாய் விளங்கினர் என ஒரு சாரார் கூறுவர். ஆனுல் அதே சமயம் பவுலின் சாட்சியினையும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பவுல் தன்னுடைய நாட்களின் சிறந்த கல்விமானுய் விளங்கினுன். ஆதிசபையிலே, தேவன் பவுலைப் போல் யாரையும் உபயோகப் படுத்தவில்லையென்பது நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

மனிதர்களின் இருதயத்தில் ஊழியம் செய்ய உதவியாளராய் இருப்பவர் பரிசுத்த ஆவியானவர் என்பதை நினைவிற்கொள்ள பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யும் வாய்க்கால்களாய் நாம் விளங்குகின்ருேம். மின்சார பல்பினை எரியவைப்பது, அதனுள் பாய்கின்ற மின்சாரமே. இந்த மின்சாரம் பாய உதவியாய் இருக்கும் வயர்கள் அதற்கு வாய்க்கால்களாக விளங்குகின்றது. இது போல நாமும் பரிசுத்த ஆவியின் வல்லமை வெளிப்படும் வாய்க்கால்களாக இருக்கின்ருேம். பரிசுத்த ஆவியானவரே ஊழியம் செய்கிருர். நாம் வாய்க்கால்கள். பெரிய படிப்பு இந்த வேலையைச் செய்யாது. முட்டாளும் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாது. படித்து, பரிசுத்த ஆவியினுல் நிரம்பி இருப்பதே சரியான கூட்டுக்கலவையாகும். (ஊழியம் செய்ய)

(3) நன்மை செய்யும் போது நாம் பாடுபட்டால், அதை எவ்விதத்தில் சந்திக்க வேண்டும்?

தாங்கள் செய்த காரியத்திற்காக பேதுருவும், யோவானும் பரிசீலிக்கப்பட்டு, பயமுறுத்தப்பட்டார்கள். சப்பாணி சுகமானது தான் இதற்குக் காரணமாகும். தேவனுடைய ஆசீர்வாதம் வெளிப்படக் கூடிய அளவில் பேதுருவும், யோவானும் இருந்தமையால் அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். துரதிர்ஷ்டவசமாக, இதே காரியம் இவ்வுலகில் நடக்கின்றது. கிறிஸ்தவர்கள், தாங்கள் செய்கின்ற நன்மைக்காக கேலி செய்யப்படுகிருர்கள். (இயேசுவும், சீஷர்களும் தவருக எண்ணப்பட்டு, தேவனற்ற மக்களால் கேலி செய்யப்பட்டனர்) கிறிஸ்தவ மதத்தின் பேரில் அநேக

தவறுகள் சமுதாயத்தில் நுழைந்து விடுகின்றது என்பது உண்மை. ஆனால் அதே சமயம் கிறிஸ்தவர்களால் செய்யப்படும் நன்மைகள் தவறாக எண்ணப்பட்டு, (அகில உலகிலும்) கண்டனம் செய்யப்படுகின்றது.

ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய சொந்தக்காரர்களிடம் சாட்சியிடுகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். அவனுடைய சொந்தஜனம், அவனுடைய தகுதியை அறிந்துள்ளதால், சுவிசேஷத்தை ஏளனம் செய்கின்றது. ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம், இரட்சிக்கப்படாத சொந்தக்காரன் ஒருவன் கிறிஸ்தவன் வீட்டிற்கு வருகிறான் என வைத்துக் கொள்ளுவோம். ஆலயத்துக்கு போகும் நேரம் வந்தவுடன், கிறிஸ்தவன், இரட்சிக்கப்படாதவனை தனியாக வீட்டில் விட்டுச் செல்ல வேண்டியிருக்கிறது. 'தங்களை விட்டு, கோயிலுக்குப் போவதைப் பார்' என்று கிறிஸ்வன் அல்லாதவன், கிறிஸ்தவனை நோக்கி குறை கூறுவான்.

சபையிலுள்ள ஐக்கியம்

வேத பகுதி: அப். 4:23-37

போதிக்கும் திட்டம்

தேவையுள்ள கிறிஸ்தவர்களுக்கு பணத்தையோ, பொருளையோ உங்கள் மாணவர்கள் கொடுத்திருந்தால், அதை ஒரு சில நிமிடம் நினைத்துப் பார்க்கக் கூறி, பாடத்தை ஆரம்பிக்கலாம். கிறிஸ்தவர்களுக்கு கொடுத்த காரியங்களை வரிசைக் கிரமமாக கரும்பலகையில் எழுதவும். இப்படி வரிசைக்கிரமமாக நினைவு கூர்ந்து எழுதுவது ஒரு சில நேரங்களில் எளிதான காரியமாக தோன்றுது. சங்கத்திற்கு பண உதவிகள் செய்திருந்தால், அது மக்களின் தேவையைச் சந்திக்க அல்லாமல் மத பிரச்சாரத்திற்கே செலவிடப்பட்டிருக்கும் என்பதை நினைவுறுத்தவும். ஆதி சபையிலே விசுவாசிகள் எவ்வாறு தங்களுடைய உடமைகளை பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள் என்பதைக் குறிப்பிடுக.

ஆதி சபை செய்ததுபோல இன்றுள்ள சபைகள் ஏன் செய்வதில்லை என உங்கள் வகுப்பினரை வினவவும் கிறிஸ்தவர்கள் தங்களுடைய உத்தரவாதத்தை மாநில ஆட்சியாளர்களிடம் இன்றுவிட்டு விட்டனர்.

வேத விளக்கம்:-

அப். 4:23-37.

பின்னணி:-

காலம்:- கி.பி.29.

சனகரீம் சங்கத்திற்கு முன்கைதிகளாக, விசாரணை செய்யப்படுவதற்கு பேதுருவும், யோவானும் நிறுத்தப்பட்டதையும், அவர்கள தைரியத்தோடும், சுயாதீனத்தோடும், நம்பிக்கையோடும் இருந்ததையும் பற்றி படித்தோம். இப்படிப்பட்ட தைரியம் வர நாலு காரணங்கள் இருந்தது.

(1) இயேசுவோடு இருந்த காரணத்தால்

(2) பரிசுத்த ஆவியில் புதிய அபிஷேகத்தைப் பெற்றிருந்ததால்

(3) சப்பாணி இரட்சிக்கப்பட்டு, சுகமடைந்து பக்கத்தில் நின்றமையால்.

(4) சகவிசுவாசிகள் விசு

தங்க வசனம்:- விசுவாசிகளாகிய ....சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. அப். 4:32

...வாசத்தோடு ஜெபித்து நின்றமையால் தைரியமாக சனகரீம் சங்கத்திற்கு முன் அப்போஸ்தலர்கள் நின்றார்கள்.

நன்மையைச் செய்ததினாலும், இயேசுதான் இரட்சகர் எனக் கூறினதினாலும் சீஷர்கள் கைது செய்யப்பட்டு, சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டு அவமானப்படுவது இது தான் கடைசி முறையாக இருக்காது. எதிர்ப்பு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, விசுவாசிகள் ஒருங்கிணைந்து வேலை செய்தனர். ஒன்றாக ஜெபித்தனர். ஒருவருக்கொருவர் உதவி செய்தனர். இப்படிப்பட்ட அன்பிற்காகத் தான் இயேசு அன்று ஜெபிததார். (யோ. 13:34,35) இந்த அன்பின் ஐக்கியம் வல்லமையான சாட்சி கூறவும், ஆதி சபை வளரவும் உதவிற்று. தேவனுடைய வசனத்திற்கு விரோதமாக பிரிவினைகளையும், எதிர்ப்புகளையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து பவுல் கண்டனம் செய்கிறான். (ரோமர். 16:17)

1 சபையின் ஜெபம்.-
அப் .4:23-31.

(அ) ஒருங்கிணைந்த ஜெபம் அப்.4:23,24.

தங்களுடைய நலனுக்காக கூடியிருக்கும் கூட்டத்திற்கு, பேதுருவும், யோவானும் விடுதலையானவுடன் சென்றனர். (சககிறிஸ்தவர்களின்கூட்டம்; தோழர்கள்) ஜனகரீம் சங்கத்தின் பயமுறுத்தலை பேதுருவும், யோவானும் அக்கூட்டத்தில் கூறினார்கள். பயமுறுத்தல் விசுவாசிகளை ஒன்றும் செய்துவிடவில்லை. அக்கூட்டத்தில் எந்த விதமான முறுமுறுப்போ, குறை கூறுதலோ காணப்படவில்லை. இதற்கு மாறாக விசுவாசிகள் யாவரும் ஒருமனப்பட்டு தேவனைத்தேடலாயினர். (ஒருமனம், ஒரே நோக்கம், ஒரே மனது, ஒரே இதயம்—எல்லோரும் ஒரேசமயத்தில் ஜெபம் பண்ணினர்). தேவனே சர்வாதிகார அதிகாரி எனக் கூறி அவரைத் துதித்தனர். எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவன் என்றும் கூறினார்கள். தேவனுடைய உன்னதமான, வல்லமையான தரிசனத்தை விசுவாசிகள் கண்டபோது, சனகரீம் சங்கத்தின் பயமுறுத்துதல் அவர்களுக்கு ஒன்றும் பெரியதாய் தோன்றவில்லை.

(ஆ) தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பிடித்துக் கொண்டு நிற்றல்:- அப். 4:25-30.

சங். 2:3க்கூறி, தேவனுக்கு தம்முடைய வசனத்தை விசுவாசிகள் நினைவுபடுத்தினர். இந்த சங்கீதத்தை தங்களுக்கு ஆதா

ரமாக எடுத்துக் கொண்டு, தங்களுக்கு நேரிடுகிற சம்பவங்கள் ஒன்றும் விநோதம் இல்லையென கண்டு கொண்டார்கள். இது ஒரு தற்காலிக விரோதம் என விசுவாசிகள் கருதவில்லை. அல்லது சதுசேயர்கள் மாத்திரம் இதை எதிர்க்கிறார்கள் என்றும் நினைக்கவில்லை. கிறிஸ்துவுக்கும், அவருடைய இராஜ்யத்திற்கும் இது தொடர்ந்த பகை என்றும் நினைவு கூர்ந்தனர். இந்த எதிர்ப்பு ஏற்கனவே ஏரோதுவினாலும், பிலாத்துவினாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த எதிர்ப்பு மனப்பான்மை புறஜாதிகளிடமும், விசுவாசிக்காத இஸ்ரவேலர்களிடமும் காணப்படும்.

புறஜாதியார் பழக்கப்படாத குதிரையைப்போல மூர்க்ககுணம் கொண்டு, தேவனுக்கும், அவர் அபிஷேகம் பண்ணின குமாரனுக்கும் விரோதமாக சதி ஆலோசனை செய்ய முற்படுவதை சங்கீதத்தினின்று காண்கின்றனர். தேவன் தம்முடைய பிள்ளைகள் மூலமாக கிரியை செய்ய விரும்பும்போது, அவிசுவாசிகள் தீ போல் எழுந்து, சதி செய்ய ஆரம்பிப்பர். இதை எப்போதும் எதிர்பார்த்தே விசுவாசி உலகில் இருக்க வேண்டும். ஆனால் அவிசுவாசிகள் செய்கிற திட்டங்கள் எல்லாம் முடிவில் வெற்றி சிறக்காது போகும் என்பதை நினைவிற்கொள்க. தேவன் இன்றும் சர்வ ஆளுகை செய்கிறார். அவரே முடிவில் எல்லாவற்றையும் வெற்றி கொள்ளுவார்.

எதிரிகள் கோபம் கொண்டு, விசுவாசிகளுக்கு விரோதமாக ஈடுபடும் செயல்களைக்கூட, தேவன் தம்முடைய நன்மையான திட்டமாக மாற்றி விடுவார். யூதர்கள் கோபமும், பிலாத்துவின் பலவீனமும், ரோம போர்ச்சேவகர்கள் அறைந்த ஆணியும், இஸ்ரவேலின் கேலிப் பேச்சும், இயேசுவை ஒன்றும் செய்துவிட முடியவில்லை. இதற்கு மாறாக, அவர் இவ்வுலகில் அதிக அன்பு கொள்ளவே உதவிற்று. இயேசு தாம் எவ்வளவு தூரம் பாடுபட்டாலும், அவர் தேவனுடைய குமாரனாகவே காட்சியளித்தார். (தேவனுடைய சித்தம் செய்யும் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியனாக, தேவனுடைய மீட்பை நிறைவேற்றும் ஊழியனாக காட்சியளித்தார்). (ஏசாயா 52:13; 53:11). இயேசுவின் விரோதிகள் செய்த காரியம் எல்லாம் தேவனுடைய ஆலோசனையையே நிறைவேற்றிற்று. இந்த ஆலோசனை உலகம் தோன்று முன்பாகவே தீர்மானிக்கப்பட்டதொன்றாகு

இயேசு மரித்து, உயிரோடு எழும்பி, நம் மீட்பை நிறைவேற்றுவார், என்று முன்னமே கூறப்பட்டுள்ளது. (வெளி. 13:8)

சனகரீம் சங்கம் பயமுறுத்தின போதும், தங்களுடைய தேவையை தேவன் சந்திக்க வேண்டும் என்று, உறுதியாக தேவ வசனத்தை விசுவாசிகள் பற்றிக் கொண்டு ஜெபித்தனர். தங்களுடைய விரோதிகளின் மேல் நியாயத் தீர்ப்பு வரவேண்டுமென்றோ அல்லது தங்களைப்பாதுகாக்கவேண்டும் என்றோ விசுவாசிகள் ஜெபிக்கவில்லை. விசுவாசிகள் தேவனுடைய ஊழியக்காரர்கள். (அடிமைகள்) இவர்களின் ஒரேவேலை தேவனுடைய சித்தம் செய்வதே கல்வாரியின் அன்பு அதிகமாய் தங்களுடைய இருதயத்தில் ஊற்றப்படவும், இன்னும் தைரியமாய் வேத வசனத்தைப்பிரசங்கிக்கவும் கிருபையருள வேண்டும் என விசுவாசிகள் ஜெபித்தனர். (இயேசுவைப் பற்றிய வசனத்தை). தேவனுடைய பரிசுத்த ஊழியக்காரனாகிய இயேசுவின் நாமத்தில், அநேகர் தெய்வீகம் பெறவும், அற்புதமும், அடையாளங்களும் நடைபெறவேண்டும் என்றும் விசுவாசிகள் ஜெபித்தார்கள். எந்த காரணத்திற்காக சிறைப்பட்டார்களோ, அதே காரணத்தை வல்லமையாய்ச் செய்ய கிருபையருள பிரார்த்தித்தனர்.

இப்படி ஜெபிப்பதினால் விசுவாசிகள் முட்டாள்கள் என எண்ணிவிட வேண்டாம். தங்களுடைய சொந்த பெலத்தில் நிற்க முடியாது என்பதையும், தேவவசனத்தைப் பேச, தேவனே சுயாதீனம் அருளவேண்டும் என்றும் அறிக்கையிட்டனர். கல்வாரி சிலுவை நிகழ்ச்சிக்கு முன் பேதுருவும், மற்றசீஷர்களும் சுய நம்பிக்கையில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். அந்த எண்ணம் எல்லாம் இப்போது பறந்தோடிப் போய் விட்டது. (மத். 26:33-35). தேவனுடைய அபிஷேகம் பெற்று, தைரியத்துடனும் வல்லமையுடனும் பேச, அவரையேச் சார்ந்துள்ளோம் என்றும் அறிக்கையிட்டனர்.

(இ) புது நிரப்புதல்:-
அப். 4:31.

விசுவாசிகள் ஜெபித்து முடிவதிற்குள் காரியங்கள் நடந்தேறின. விசுவாசிகள் கூடியிருந்த இடம் அசைய ஆரம்பித்தது. (பூமியதிர்ச்சி போல்) பெந்தெகொஸ்தே நாளிலே விசுவாசிகள் அபிஷேகம் பெற்றிருந்தாலும் கூட, இப்பொழுது புதுத் தேவையைச் சந்திக்கத்தக்கதாக

புது ஆவியின் அபிஷேகத்தை மறுபடியும் பெற்றனர். தேவனுக்காய் ஊழியம் செய்ய இந்த புது அபிஷேகம் உதவி செய்தது. தேவ வசனத்தை ஆவியானவர் அருளும் சுதந்தரத்தோடும் பேசத்தக்கதாய் புது அபிஷேகம் வழிகோலிற்று.

(2) சபையின் ஐக்கியம்:
அப். 4:32,33.

(அ) ஐக்கியத்திலே ஒன்றிணைக்கப்பட்டனர்: அப். 4:32

தைரியத்தை அருளினது மாத்திரமல்ல, சபைக்குள்ளே ஐக்கியத்தையும், உறவையும், பரிசுத்த ஆவியானவர் உண்டாக்கினார். (ஐக்கியம் என்ற பதம் புதிய ஏற்பாட்டில் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்தலையும், கூட்டு அமைப்பினையும் குறிக்கும். தேவனுக்குள்ளே அவர்கள் உடன் வேலையாட்களாய் ஜீவித்தார்கள்).

சாட்சியில் மாத்திரமல்ல ஆதி விசுவாசிகளின் இருதய, ஆத்தும பிணைப்பு; அவர்கள் அன்றாட வாழ்க்கை ரீதியிலும் தங்கள் பிழைப்பை வெளிப்படுத்தினார்கள். சபை வளர, வளர, எருசலேமில் கூட்டம் அதிகரித்தது. ஆகவே அநேக விசுவாசிகளிடம் பொருளாதாரக் குறைச்சல் காணப்பட்டது. ஆனாலும் விசுவாசிகள் ஒன்றாகவே ஜீவித்தார்கள். போதனையைக் கேட்பதற்காகவும், வசனத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காகவும், ஐக்கியத்தின் சந்தோஷத்தை அனுபவிப்பதற்காகவும், ஆதி விசுவாசிகள் ஒரே இடத்தில் ஜீவித்தார்கள், சொத்துள்ள விசுவாசிகள் "இது என் சொத்து" எனக் கூறி தனக்கு மாத்திரம் வைத்துக் கொள்ளாமல் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தமையால் ஒரு விசுவாசியாவது பட்டினி கிடக்கவில்லை. எல்லாவற்றையும் ஆதி விசுவாசிகள் ஒன்றாய் வைத்து அனுபவித்தார்கள். (கிறிஸ்தவ உபசரிக்கும் தன்மையிலை எல்லாவற்றையும் ஒன்றாய் வைத்து அனுபவித்தார்கள்.

விசுவாசிகளின் தேவையைச் சந்திக்கத்தக்கதாக, ஆதி விசுவாசிகள் சமத்துவக் கொள்கையினைப் (கம்யூனிச) பின்பற்றினர் என்றும், அது தோல்வியெனக் கண்டவுடன் விட்டு விட்டனர் என்றும் ஒரு சில ஆசிரியர்கள் கூறுகிறார்கள். கிரேக்க ஆதாரத்தின் படி பார்க்கும் போது, ஆதி விசுவாசிகள் எந்தச் சமத்துவக் கொள்கையினையும் பின்பற்றினர் என்று கூற முடியாது. பெந்தெகொஸ்தே

...ளுக்குப் பின், கிறிஸ்த...கள் அதன் பின் ஆவியி...ல் நிரப்பப்பட்டவர்க...ம், தங்களுக்குள்ள...வற்றையும் தேவையுள்ள...வர்களுக்கு அருளி, சந்...தோஷமாய் ஜீவித்தார்கள். ...து ஒரு தற்காலிகமான ...லும் அல்ல. கிறிஸ்தவர் ...ஒருவரோடு ஒருவர் ...த்து கொண்டார்கள் ...ன்பதையும், ஒருவருக்...கொருவர் உதவி புரிந்துக் ...கொண்டார்கள் என்பதை ...புதிய ஏற்பாட்டு புத்த...ம் முழுவதும் காண்...கிறோம். தேவையுள்ளவர்க...ளுக்கு கொடுக்கத்தக்கதாக ...காணிக்கை சேகரித்தனர் ...என்று வாசிக்கிறோம்.

...ஆ) சாட்சி கூறுவதில் ...க்கியம் கொண்டனர்:

அப். 4:33

...விசுவாசிகளிடையே ஐக்...கியமும், அன்பும் ஒருங்கி...ணைந்து காணப்பட்டமை ...யால், தேவனின் கிருபையை ...யும் வல்லமையும் சபையில் ...நிறைந்து காணப்பட ஆரம்...பித்தது. மிகுந்த வல்லமை...யோடு கூட, அப்போஸ்த...லர்கள் இயேசுவின் உயிர்த்...தெழுதலைக் குறித்து சாட்சி ...கூறினர். அதே சமயம் ...டைய பெரிய ...பை, விசுவாசிகள் எல்... மேலும் தொடர்ந்து ... செய்ய ஆரம்பித்...

விசுவாசிகள் யாவரும் ஒரே மனதுடனும், ஒரே அன்புடனும், ஒரே நோக்கத்துடனும், பிரதிஷ்டையோடும், ஒரே எண்ணத்துடனும் ஊழியம் செய்தனர் என்று அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் கூறுவதில் ஓர் நோக்கம் இருக்கின்றது. சபை முன்னேற மேற் கூறியவைகள் தேவையே தவிர, வேறு ஒன்றும் தேவையில்லை. வெளிப்பிறகாரமான சடங்காச்சாரத்தால் ஐக்கியம் சபையில் வந்துவிடாது. உடையிலும், ஆராதனையும், வேறுபல கிரியைகளிலும் ஐக்கியம் கண்டுவிட ஒருசிலர் கனவு காண்கிறார்கள். இப்படிப்பட்ட ஐக்கியம் புறஜாதிய மதங்களில் கூட காணப்படுகின்றது. இப்படிப்பட்ட புற ஒற்றுமை, சபையின் ஐக்கியத்திற்கு வழி கோலாது.

ஒழுங்கான சட்டதிட்டம் வகுப்பதின் மூலம், அல்லது பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதின் மூலம், அல்லது பிஷப்பிற்கோ, போப்பின் அதிகாரத்திற்கோ கீழ்ப்படிவதின் மூலம் சபையில் ஐக்கியம் ஏற்படும் என ஒருசிலர் எண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட ஒற்றுமை மேற்போக்கான ஐக்கியத்தையே உருவாக்கும். திருச்சபைகளின் ஒன்றிணைப்பு இயக்கமும்கூட புற

ஐக்கியத்தினையே உருவாக்குகின்றது.

வேதாகமம் கூறுகின்றதான ஐக்கியம் வரவேண்டுமாயின், கிறிஸ்துவை நம்மிடம் வெளிப்படுத்தத்தக்கதாக பரிசுத்த ஆவியானவரை அனுமதித்து, இயேசுவுக்கு கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடுத்தால் உண்மை ஐக்கியம் ஏற்படும். திரித்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவர் நம்மை இயேசுவிடம் நெருங்கி வைக்கும்போது, இயேசு நம்மிடையே ஒற்றுமையை தோற்றுவிப்பார், அதிகமாக தேவனை விரும்புகிறேன் என்றால், அதிகமாக தேவனுடைய பிள்ளைகளை விரும்புகிறேன் என்று அர்த்தமாகும். (1.யோ. 4:7-21ஐப் பார்) மனிதன் உருவாக்கியுள்ள சபைப் பிரிவினைகளையும், முறைகளையும், பரிசுத்த ஆவியானவர் வெள்ளமாய், பாய்ந்து, மாற்றி, ஒற்றுமையைத் தோற்றுவித்து, எழுப்புதலை உருவாக்குகின்றார்.

(3) சபையின் தாராள தன்மை: (மனப்பான்மை):- அப். 4:34-37.

(அ) அபரிமிதமான தாராள மனப்பான்மை:- அப். 4:34,35.

சபையின் ஐக்கியத்தைப் பற்றி அப்போஸ்தலர் புத்தகம் நமக்கு விளக்கிய பின், ஒருவராவது பொருளாதார நிலைமையில் குறைவுபட்டு காணப்படவில்லை என்றக்கருத்தை நமக்கு வலியுறுத்திக் காட்டுகிறது. வீடுகளையும், நிலங்களையும் வைத்திருந்த விசுவாசிகள் யாவற்றையும் விற்று, அப்போஸ்தலர்களின் பாதத்தில் வைத்தார்கள். (எல்லோருடைய சொத்துக்களும் விற்கப்பட்டதாகவோ, அல்லது எல்லோரும் ஒரே நேரத்தில் சொத்தினை விற்றதாகவோ கிரேக்க மொழிபெயர்ப்பு கூறவில்லை. காலாகாலங்களில் ஒருவருக்குப்பின் ஒருவராக சொத்தினை விற்றிருக்கலாம் தேவை எழும்போது.) இந்த தொகையினை அப்போஸ்தலர்கள் விநியோகம் செய்திருக்கலாம்.) இந்த தொகையிலிருந்து தான் விதவைகளும் பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த உதவித் தொகைகளை பரிபூரணமாக்கத்தக்கதாக பவுல் பின்னாட்களில் சபையில் காணிக்கை சேர்த்து எருசலேமுக்கு கொண்டு வந்தான். (ரோம. 15:26; 1.கொரி. 16:1-4)

சகவிசுவாசிகளின் தேவையைக் குறித்து ஆதி சபை மிகவும் கவனம் செலுத்தியது என்று நாம் வேதபுத்தகத்தினின்று காண்கிறோம். தங்களுக்குள்ள யாவும் தே...

னிடமிருந்தே வந்துள்ளது என்று ஆதிசபை விசுவாசிகள் எண்ணினார்கள். சொத்துக்கள், பொருட்கள் வியாபாரம் ஆகியவை தங்களுடைய பெயரிலே இருந்தாலும்கூட அவைகள் உண்மையாகவே தேவனுடையவை என்று ஆதி விசுவாசிகள் கருதினார்கள். தாங்கள் தேவனால் நியமிக்கப்பட்ட கண் காணிகள். அவர் தங்களுக்கு அருளியுள்ள சொத்தினை அவர் விரும்புகிற பிறகாரம், அவர் சித்தத்தின் பிறகாரம் செலவழிக்க வேண்டும் என்று ஆதிசபை விசுவாசிகள் எண்ணினர்.

சபைதான் கிறிஸ்துவின் சரீரம் என்பதையும், அவர் முழு சபைக்காக மரித்தார் என்பதையும் ஆதி விசுவாசிகள் உணர்ந்திருந்தனர். மேலும் சகவிசுவாசிகளின் காரியத்தில் கரிசனையாய் இருக்கவேண்டும் என்றும் உணர்ந்திருந்தனர். இப்படியாக ஆதி சபை விசுவாசிகள் "விசுவாசத்தில் உள்ள யாவருக்கும் நன்மை செய்தனர்." (கலா. 6:10) ஏழைகளை பராமரிப்பதும், தேவையுள்ளவர்களுக்கு உதவுவதும் தான் மூப்பர்களின் வேலையென சபை சரித்திரமே நமக்கு சான்று பகருகின்றது.

(ஆ) அழகிய உதாரணம்:- அப். 4:36,37.

கிறிஸ்தவர்களின் உதாரத்துவக் குணத்தைக் காட்டும்படியாக, வேதாகமம் யோசேப்பு என்ற விசுவாசியைக் குறித்து கூறும் கருத்தினை ஆராய்வோம். "யோசே" இந்தப் பெயர், நல்லதொரு பெயராகும். சாதாரணமாக இப்பெயர் வழக்கத்தில் இருந்த ஒன்றாகும். ஆகவே அப்போஸ்தலர்கள் அவனுக்கு பர்னபா என பெயரிட்டனர். (நெபுவாவின் குமாரன்; பர்னபா என்றால் தீர்க்கதரிசனத்தின் மகன் அல்லது அறிவுரை கூறும் மகன் என்றும் பொருள்படும். இது அரமேய அர்த்தம்). 'ஆறுதலின் மகன்' என்று கிரேக்க மொழி அர்த்தம் கொடுக்கின்றது. ஆறுதல்படுத்தும் தன்மை தீர்க்கதரிசன வரத்தின் ஒரு பகுதியாகும். சித்தத்தைச் செய்ய ஊக்கம் கொடுத்தல். (1கொரி. 14:3)

'யோசே' என்ற சகோதரனுக்கு, பர்னபா என்ற பெயரினை அப்போஸ்தலர்கள் எப்பொழுது கொடுத்தார்கள் என்பது நமக்குத் தெரியாது. பர்னபா என்றால் 'ஆறுதலின் மகன்' என்று பொருள்படும் ஆகையால், பொருளாதார குறைச்சல் காலத்தில் அப்போஸ்தலர்

கள் பெயரிட்டு இருக்க வேண்டும் என ஒரு சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். பர்னபா ஏற்கனவே பெயர் போன விசுவாசிஎன வேதாகமத்திலிருந்து நமக்குத் தெரிகின்றது. அப்போஸ்தலர்கள் அவனை நன்கு அறிவார்கள் என்பதும் தெளிவாக நமக்குப் புலனாகின்றது. மேலும் அவன் அப்போஸ்தலன் என அழைக்கப்படுவதால், (அப். 14:14) மத்தியா அப்போஸ்தலன் ஆக என்னென்ன காரியங்களைச் செய்தானோ, அவைகளை பர்னபாவும் செய்திருக்க வேண்டும். (என்னென்ன தகுதிகளை உடையவனாய் இருந்தானோ) (அப். 1:21,22,26) இயேசு இப்பூவுலகில் ஊழியம் செய்யும் போது, பர்னபாவும் இயேசுவின் சீடனாய் இருந்திருக்க வேண்டும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை கண்டிருக்க வேண்டும். பெந்தெகொஸ்தே நாளில், மேல அறையில் கூடி ஜெபித்து, அபிஷேகம் பெற்ற 120 பேரில் இவனும் ஒருவனாய் இருந்திருக்க வேண்டும். பெந்தெகொஸ்தே நாளுக்கு பின்பாக, பர்னபா தீர்க்கதரிசன வரத்தின்படி, ஆறுதல் வசனங்களைக் கூறி வந்தமையால், அப்போஸ்தலர்கள் அவனுக்கு பர்னபா என பெயரிட்டிருக்கலாம்.

சீப்புரு தீவில் பர்னபா பிறந்தவன். (சின்ன ஆசியாவிலிருந்து 44 மைல்கள் தள்ளியுள்ள ஒரு சிறிய தீவு. துத்தநாக உலோகத்திற்கு பெயர் போன இடம் அது வாகும்). சீப்புரு தீவிலே பர்னபாவிற்கு நிரம்ப சொத்து இருந்தது. அவன் அதை விற்று,சபைக்கே கொடுத்து விட்டான்.

தேவன் பர்னபாவை உபயோகிக்கப்போவதால்இங்கு அவனைப் பற்றிய கருத்து வலியுறுத்திக் கூறப்படுகிறது. மேலும் தாம் விரும்புகிற ஒருவனை அவர் எவ்விதமாய் உபயோகிக்கிறார் என்பதை நாம் கற்றுக் கொள்ளும்படியாகவும், இங்கு அவன் பெயர் முக்கியமாக கூறப்பட்டிருக்கலாம். ஆவியின் வரத்தினாலே பர்னபாவுக்கு ஒரு ஊழியம் இருந்தாலும், அவன் அதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை, மக்களிடம் மிகுந்த அன்புடையவனாய், அவர்களுடைய எல்லாத் தேவைக்காகவும் பாடுபட்டான்.

வாழ்க்கையோடுள்ள தொடர்பு

(1) தாங்கள் பிரச்சனையில் இருக்கும் போது. கிறிஸ்தவர்கள் மற்றவர்களின் உதவிய ஐக்கியத்தை, நாடுவதில் எனை பிரயோஜனம் இருக்கனறது?

1யோவான் 1:7ன்படி ஒளியில் நடக்கிற விசுவாசிகள் ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டிருப்பது ஆச்சரியப்படக்கூடிய காரியமல்ல. சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பேதுருவும், யோவானும் என்னக் காரியத்தைச் செய்தார்களோ, அதே காரியத்தை விசுவாசிகள் யாவரும் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப் படுகிறார்கள். சக விசுவாசிகளோடு ஒரு மனிதன் எந்த அளவுக்கு ஆழ்த ஐக்கியம் கொள்ளுகிறானோ, அந்த அளவுக்கு அவன் கிறிஸ்துவினிடம் தன்னை அர்ப்பணித்துள்ளான் என்று நமக்குத் தெரியும் துன்பம் வரும் போது கிறிஸ்தவர்கள் அவிசுவாசிகளின் உதவியை நாடுவது தவறாகும். துன்பம் வரும் போது கிறிஸ்தவர்கள், சகவிசுவாசிகளிடம் ஆதரவுக்காகச் சென்றால், அவர்கள் சிறந்த தேவ ஆலோசனையைத் தருவர். பிரச்சனைக்காக இருவரும் ஜெபிப்பர். ஐக்கியத்தின் மூலம் தேவ வல்லமை வெளிப்படும். பிரச்சனைக்கு தீர்வு ஏற்படும்.

மனிதன் ஒவ்வொருவரோடும் இசைந்து ஜீவிக்கத்தக்கதாகவே தேவன் சிருஷ்டித்துள்ளார். தேவனுடைய இராஜ்யத்தையும், தேவனுடைய குமாரனையும் நேசிக்கிற மக்களோடு கிறிஸ்தவன் தொடர்பு கொள்ள வேண்டும். தான் தேவனுடைய வீட்டிற்கு போவது என்றால், மிகவும் மன மகிழ்ச்சியடைகிறேன் என தாவீது கூறுகிறான். (சங். 122:1).ஏனென்றால் அங்கே தேவ மனிதர்களின் ஐக்கியம்கிட்டுகிறது. சகோதரர்கள் ஒருமித்து ஜீவிக்கின்றனர் என்பதற்கு பேதுருவும் யோவானும் நல்ல உதாரணங்களாய் இருக்கின்றனர். கஷ்டமான சூழ்நிலைகளில் நாம் பரிசுத்தவான்களின் உதவியை நாட வேண்டும்.

(2) தங்களுக்கு நேர்ந்தவைகளை பேதுருவும், யோவானும் யூத ஜனங்களுக்கு எடுத்துரைத்ததிலிருந்து, நாம் எதாவது பாடம் படிக்கமுடியுமா?.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் மற்ற மனிதர்கள் செய்வதையே, பேதுருவும் யோவானும் செய்தனர் என்று ஒருவர் உடனடியாக கூறிவிடலாம். பேதுருவும், யோவானும் கொடுத்த அறிக்கை விசுவாசிகளை கலக்கியிருக்கக்கூடும். இனி பெரிய சித்திரவதைகள் தங்களுக்கு வருமேயென எண்ணி, விசுவாசிகள் பயந்திருக்கக்கூடும், எது எப்படியாயினும், விசுவாசிகள் ஜெபிக்க ஆரம்பிதார்கள்.

பேதுருவும், யோவானும் செய்ததில் இரண்டு காரியங்கள் உள. "நீதிமானின் ஊக்கமான வேண்டுதல் பிணியாளியை இரட்சிக்கும் என வேதம் கூறுகின்றது. (யாக்.5:16). தொடர்ந்த ஜெபம் மாத்திரம் போதாது. நன்றாக சூழ்நிலைகளை உணர்ந்து, தேவைக்குத்தக்கதாக ஜெபித்தலே நன்மையை பயக்கும். ஜெபம் பயன் பெறத்தக்கதாக மற்றவர்களுக்கும் காரியம் அறிவிக்கப்பட்டது. மற்றவர்களுக்கு நடந்த சம்பவத்தைக் கூறினால் அவர்களும் தங்களுக்காக உறுதியாய் ஜெபிப்பார்கள் என்று எண்ணியே, பேதுருவும், யோவானும் காரிங்களை சகவிசுவாசிகளிடம் கூறினர். மற்றவர்கள் ஊக்கமாக ஜெபிக்கத்தக்கதாக, நாம் கருத்துக்களை கூற வேண்டும். அதுமாத்திரமல்ல, சூழ்நிலையை உணர்ந்து ஜெபிக்க நாம் உதவ வேண்டும்.

இரண்டாவதாக, விசுவாசிகள் காரியத்தை நன்றாக அறியும் போது, அவர்களிடையே ஐக்கியம் ஏற்படும். தெளிவுள்ள சபையே நல்ல சபையாகும். நடக்கிற காரியங்களை விசுவாசிகள் அறியும் போது, கிறிஸ்தவ சங்கங்களில் ஒற்றுமை ஏற்படும். தெளிவுள்ள சபையே பலமுள்ள சபையாக இருக்கும். பேதுருவும், யோவானும் இதற்கு நல்ல முன்மாதிரிகளாய் இருக்கின்றனர். மதத்தலைவர்கள் கருத்துக்களை மறைக்காமல், வெளிப்படுத்துவதே சபைக்கு நல்லது.

(3) நம்முடைய பிரச்சனைகளைத் தேவன் அறிவாரா? அப்படி அறிந்தால், நாம் ஜெபிக்கும் போது, அவரிடம் நம் பிரச்சனைகளை ஏன் கூறவேண்டும்?

மேல் அதிகாரிகளின் பயமுறுத்தலினின்று எங்களைக் காத்துக் கொள்ளும், தாங்கிக் கொள்ளும் என விசுவாசிகள் ஜெபிப்பதை அப். 4:29ல் காண்கிறோம். இந்த பயமுறுத்தல்களை தேவன் அறிவாரா? பிறகு ஏன் ஆண்டவரே இந்த பயமுறுத்தல்களை கவனித்துக்கொள்ளும் என விசுவாசிகள் ஜெபிக்கின்றனர்?

இந்த பகுதிக்கு இசைந்தான பகுதிகள் அநேகம் வேதத்தில் வருகின்றன. ஏசாயாவின் காலத்தில் நடந்த சம்பவம் இதற்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டாகும். கி.மு. 700 ல் அசீரியர்கள், எருசலேமை முற்றுகையிட்டனர். யூதாவில் எசேக்கியா ராஜாவாக இருக்கிறான். தங்களுக்கு அடிபணிய வேண்டும் என்று அசீரியர்கள், ஒரு பயமுறு

தல் கடிதத்தை எசேக்கியாவுக்கு அனுப்பினார்கள். அந்தக் கடிதத்தில், தாங்கள் எப்படி மற்ற பட்டணங்களை முறியடித்தோம் என்றும், எசேக்கியாவின் தெய்வம் எப்படி தங்களின் கரத்தினின்று விடுவிக்கும் என்றும், சவால்விட்டு எழுதியிருந்தனர். 2இரா. 19:14-ன்படி எசேக்கியாராஜா தேவனுடைய ஆலயத்திற்குப் போய், அங்கே இந்த பயமுறுத்தல் கடிதத்தை தேவசமுகத்தில் விரித்து வைத்து ஜெபித்தான். அசீரியர்கள் அவனிடம் கூறியதை தேவனிடம் கூறினான். ஏதோ தேவனுக்கு தெரியாத காரியம் என்பதைப்போல், அவரிடம் கூறினான்.

இந்தக் கருத்தை நாம் எளிதில் விளக்கிவிட முடியாது. நாம் தேவனிடம் பிரச்சனைகளைப் பற்றி கூறும்போது, நமக்கு வந்துள்ள பிரச்சனையின் பல காரியங்களையும் அலசிப் பார்த்துவிடுகிறோம். நம்முடைய நிலையை நாம் கணித்து, அந்த நிலைக்கு தேவன் வைத்திருக்கும் பரிகாரத்தைத் தேட வாஞ்சிக்கிறோம். இப்படி காரியங்கள் ஏன் நிகழ வேண்டும் என்பதற்கு பதில் உடனடியாக கொடுக்க முடியாது ஆனால் ஊக்கமான ஜெபம், நாம் தேடும் விடையைத் தரும் என்பதில் சந்தேகம் இல்லை. தேவனுக்கு நம்முடைய பிரச்சனைகளைப் பற்றி தெரிந்திருந்தாலும், நாம் தொடர்ந்து அவரிடம் நம்முடைய பிரச்சனைகளைக் கூறுவோம்.

(4) உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் சாட்சியிட்டதினால், அவர்களிடம் காணப்பட்ட வல்லமை என்ன?

வல்லமை என்பதற்குரிய கிரேக்க பதம் "டுனமிஸ்". (Dunamis) என்பதாகும். காரியங்களைச் செய்துமுடிக்கும் வல்லமை இந்த வார்த்தையினின்றுதான் "டைனமைட்" என்ற வார்த்தைவந்தது.(Dynamite) இது ஒரு வெடிபொருள். வல்லமைஎன்பதற்கு "Exousia" என்ற கிரேக்கபதமும் உண்டு. ஒரு காரியத்தைச்செய்ய அதிகாரம் இருக்கிறதுஎன்று அர்த்தமாகும். அதிகாரத்திற்கு 'Exousia" என்றும், வல்லமைக்கு Dunamis என்றும் "Never" மொழி பெயர்ப்பு கூறுகின்றது. மத்.16:19ல் காண்கிறபடி. சபைக்கு தேவன் அப்போஸ்தலர்கள் மூலம்அதிகாரம்கொடுத்துள்ளார். இப்படியாக தேவன், கிறிஸ்துவின் மூலம்சபைக்கு அதிகாரத்தையும், வல்லமையினையும் அருளுகின்றார்.

சபையில் காணப்பட்ட மாய்மாலம்

வேத பகுதி. அப். 5:1-16.

போதிக்கும் திட்டம்

என்னென்ன பாவங்கள் பயங்கரமானவை என உங்கள் வகுப்பினர் நினைக்கிறார்கள் எனகேட்டு, அதை கரும்பலகையில் வரிசையாக எழுதவும். கரும்பலகையில் ''பயங்கரமான பாவங்கள்'', ''சிறிய பாவங்கள்'' என இரு தலைப்புகளை எழுதிக் கொள்ளவும். ஒவ்வொரு பாவமாக மாணவர்கள் கூறும்போது, கூறுகின்ற பாவத்தை எந்தத் தலைப்பிற்கு கீழே எழுத வேண்டும் என அவர்களையே கேட்டு விட்டால் விவாதம் எழாது.

ஒருசில பாவங்களைத் தேவன் கொடிய பாவங்கள் என்றும், மற்றவைகளை சிறிய பாவங்கள் என்றும் கருதுகிறாரா என உங்கள் வகுப்பினரை வினவவும். கொலைபாவம் தான் கொடிய பாவம் என ஒருசிலர் கூறக்கூடும். ஏனென்றால், கொலைக்குத்தான் தேவன் அதிக தண்டனையை அளித்துள்ளார். விபச்சாரத்திற்கும், (லேவி.20:10), பில்லி சூன்யத்திற்கும் யாத்.22:18); கீழ்ப்படியாமைக்கும் (உபா.21:18—21). தேவன் கொடிய தண்டனை விதித்துள்ளார் என்பதை மாணவர்களுக்கு நினைவுறுத்துக.

பரிசுத்த ஆவிக்கு விரோதமாகச் செய்யும் பாவத்தினையே தேவன் மன்னிக்கமாட்டார் என்ற கருத்தை மாணவர்களுக்கு வலியுருத்திக்காட்டுக. இந்தக் கருத்து அனனியா' சப்பீராள் கதையை அறிமுகப் படுத்த உதவும்.

ஆதிசபையில் கூட மாய்மாலம் நுழைந்து விட்டது என்றால் நமக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆதிசபை தான் முன்மாதிரியான சபை என எண்ணியிருக்கக்கூடும். உண்மை அதுதான். அதுபெந்தெகொஸ்தே நாளிலே பிறந்தது. அப்போஸ்தலர்களால் போதிக்கப் பட்டது. அதிலே ஆவிக்குரிய, பொருளாதார ஐக்கியம் காணப் பட்டது. அப்போஸ்தலர்களிலே அடையாளங்களும், அற்புதங்களும் செய்யப் பட்டது. ஆலயத்திலே கூட்டம் கூடி தேவனை ஆராதித்தது மாத்திரமல்ல; அங்கங்கே கூட்டமாய்க் கூடி தேவனை ஆராதித்து வந்தனர். இரட்சிக்கப் பட்டவர்களை தேவன் அனுதினமும் சபையிலே சேர்த்து வந்தார்.

வேத விளக்கம்

அப். 1:5-16

பின்னணி:- காலம் கி.பி.29

ஆதிசபையிலே காணப்பட்ட சிறந்ததொரு குணதிசயம் அன்பாகும். இந்த அன்பின் நிமித்தம் சகோதர, சகோதரர்கள், தேவையுள்ளவர்களுக்கு தங்கள் பொருட்

தங்கவசனம்:- வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை அறியப்படாத இரகசியமுமில்லை. லூக். 12:2

பணம் மூலமாகவும் உதவி காலா காலங்களில் விசுவா தங்கள் சொத்தினை விற்று றவர்களுக்கும் கொடுக்கத்தக் க, அப்போஸ்தலர்களின் த்தில் கொண்டு வந்து வைத் . தாழ்மைக்கும் ,தாராளதன் க்கும், அன்புக்கும் உதாரண பர்னபாவை போன வாரப் டத்தில் படித்தோம். சகோதர ன்பின் நிமித்தம் விசுவாசிகள் கள் பொருட்களையும், உடை மைகளையும் விற்றனர் என படித் தா. அப்போஸ்தலர்களினால் னபா அதிகமாக மெச்சிக் கொள்ளப் பட்டான். இது மற்ற விசுவாசிகளுக்கும் நல்லதொரு உதாரணமாக அமைந்து விட்டது.

...ய்மாலம் சபையில் ...ழுதல்:...அப் 5:1,2.

(அ) சொத்து விற்கப் பட்டது:—
அப். 5:1

சுத்த மனசாட்சியோடும், சந் தோஷத்தோடும், சுயநலமற்ற தாராள தன்மையோடும் பர்னபா தன் சொத்துக்களை விற்று, அப் போஸ்தலர்களின் பாதத்தில் வைத்தான் என்று படித்தோம். இவ்வாரப் பாடத்தில் இதற்கு மாறாக உள்ள ஒரு சம்பவத்தை நாம படிக்கப் போகிறோம். பர்னபா, மெச்சிக் கொள்ளப் பட் டதைக் கண்ட சீஷர்களில், அன னியாவும் (தேவன் கிருபை யுள்ளவராய் இருக்கிறார்), அவனு டைய மனைவியாகிய சப்பீராளும் (அழகுள்ளவள்) உண்டு. மற்றவர் களை விட இவர்கள் மெதுவாகவே தங்களுடைய சொத்துக்களை விற்க முன் வந்தனர். மற்றவர்கள் சொத்துக்களை விற்பதால், தாங் களும் விற்று, பர்னபா அடைந்த தான பெருமைகளை அடைய முயற்சித்தனர். மற்றவர்களின் நிலனைக் குறித்த உண்மையான அன்போ, கரிசனையோ இந்த இரு பேரிடமும் கிடையாது. தேவன் தங்களுக்கு அருளியுள்ளதான சொத்துக்களுக்கு, தாங்கள் கண் காணிகளாய் இருக்கிறோம் என்ற உணர்வும் அவர்களுக்கு இல்லை. அனனியாவும், அவன் மனைவியும் சுயநலமுடைய மக்களாவர். ஆகவே புகழப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கோடு சொத்தை விற்றனர்.

(ஆ) இரகசியமான ஒப்பந்தம்:—
அப்.5:2.

தாங்கள் விற்றதான சொத்தின் முழுக்கிரயத்தையும், அப்போஸ் தலர்களின் பாதத்தில் வைக்க மனமில்லாமல், சொத்தின் ஒரு பகுதியை தங்களுக்கு வைத்துக் கொள்ளுவோம் என கணவனும், மனைவியும் இரகசியமாக ஒப்பந் தம் செய்து கொண்டனர். (தங் களுக்கென்று வஞ்சித்து எடுத்துக் கொண்டனர் என்றால், களவாடி னார்கள் என்று அர்த்தமாகும்.) (தீத்து.2:10) ஆகானுடைய திருட்டை வருணிக்கும் கிரேக்க பதமே இங்கும் பயன்படுத்தப் பட்டுள்ளது. (யோசுவா 7:1). தாங்கள் விற்றதான சொத் தின் முழுப் பகுதியை யும் கொண்டு வந்து கொடுப்பது போல், கணவனும், மனைவியும், அப்போஸ்தலர்களின் பாதத்தில் கொண்டு போய் வைத்தார்கள்.

சுயம் எப்பொழுதுமே வாழ்வின் நடு நாயகனாக விளங்கப் பார்க் கும். நமமுடைய சிந்தனையிலே ஏதாவது சுயமாவது, பேராசையா வது காணப்படுமானால், சாத்தான் அதனையே கருவியாக எடுத்து உப யோகிப்பான், சாத்தான் யாரை விழுங்கலாமோ என்று "கெர்ச்சிக் கிற சிங்கம் போல்" சுற்றித் திரிகி றான், (1 பேதுரு 5:8). தேவன் தங்களுடைய தேவையைச் சந்திப் பார் என்ற விசுவாசம் இல்லாமல்,

அனனியாவும், சப்பீராளும் காரியத்தில் ஈடுபட்டனர். இது உண்மையிலே அவிசுவாசம் ஆகும். சாத்தான் இந்த அவிசுவாசத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டான். இப்படியாக அந்த இரு விசுவாசிகளும், தங்களுக்கு நேரிடக்கூடாத அழிவின் வழியைத் தெரிந்தெடுத்தனர்.

2. மாய்மாலம் உடையவர்களாய் ஜீவித்தல்.

அப். 5:3,4.

(அ) ஏமாற்று வித்து கண்டு பிடிக்கப்பட்டது:- அப்.5:3

அனனியா, அப்போஸ்தலர்களின் பாதத்தில் பணத்தை வைத்துவிட்டு, பாராட்டுதலைப் பெறும்படி தலை கவிழ்ந்து நின்றான். எந்த விரோதி சனகரீம் சங்கத்தில் நிற்கும் போது, பேதுருவை எதிர்த்தானோ, அதே விரோதி, இப்போது சபைக்குள்ளே வந்து பேதுருவை எதிர்த்தான். எந்த பரிசுத்த ஆவியானவர் பேதுருவுக்கு, சனகரீம் சங்கத்தின் முன் பேச வார்த்தைகளை கொடுத்தாரோ, அதே பரிசுத்த ஆவியானவர், சபைக்குள் நடைபெறும் காரியத்தையும் பேதுருவுக்கு வெளிப்படுத்திவிட்டார்.

பகுத்தறிவின் வரம், பேதுருவுக்கு உதவி செய்தது என்று ஒரு சிலர் கூறுகிறார்கள். (அப்.8:20-23; 16:16-18) கண்டுபிடிக்க அருளப்பட்டது. அனனியாவின் குறிப்பிட்ட பாவத்தை பரிசுத்த ஆவியானவர் பேதுருவுக்கு வெளிப்படுத்தி விட்டார். இந்த வரம் ''அறிவை உணர்த்தும் வசனம்'' என்ற பகுதியில் சேரும். (1கொரி. 12:8)

சாத்தான்தான் ஏமாற்றுவதற்கு ஏவின ஆள் என்று பேதுரு கண்டு கொண்டான். (யோவான் 8:44 ஐப்பார்) அனனியா சாத்தானுக்கு இரையாகிப் போனவன் அறிவில்லாத ஆளாக மாறிவிட்டான். (அனனியா இந்தப் பொய்யைச் சொல்லாமல் இருந்திருக்கலாம்.) அனனியா தன்னுடைய சுயநலத்தினாலும், பேராசையினாலும், சாத்தானின் அறிவுரைகளை ஏற்று, தன்னுடைய இருதயத்தை அவன் ஆட்கொள்ள அனுமதித்து விட்டான்.

சாத்தான் தான் பழைய பொய்யன் என்பது மாத்திரமல்ல, அவன் பழைய மாய்மாலக்காரனும் இருக்கிறான். (''மாய்மாலக்காரன்'' என்றால் ''நடிப்பவன்'' என்றே பழங்காலத்தில் அர்த்தம் கொள்ளப்பட்டது. இப்பொழுதுள்ள அர்த்தம், அப்போது கொடுக்கப்படவில்லை. ஒருமனிதன் தான் அப்படியில்லாதிருந்தும், இருப்பதைப் போல் நடிப்பதால் அவனுக்குமாய்மாலக்காரன்என்று பெயர் கொடுக்கப்பட்டது). ஏவாளிடம், சாத்தான் அழகான, ஞானமுள்ள சர்ப்பமாக வந்தான். நம்மிடம் ஒளியின் தூதனைப் போல் வருகிறான். (2கொரி.11:14) அனனியா, பிசாசின் போதனையைக் கேட்டமையால், பிசாசினை தனக்கு பிதாவாக்கிக் கொண்டு, அவனின் குணாதிசயத்தையே வெளிப்படுத்துகிறான். அனனியா ஏமாற்றுக்காரனாய் மாறி, பரிசுத்த ஆவியினிடம் பொய் சொல்லி விட்டான்.

(ஆ) திருட்டு கண்டனம் செய்யப்பட்டது:- அப்.5:4.

உன்னுடைய பாவம் மன்னிக்கப்படக்கூடியது அல்ல என்றும், நீயே விரும்பி இந்தப் பாவத்தைச் செய்தாய் என்றும் பேதுரு, அனனியாவைப் பார்த்துக் கூறினான். அனனியா தன்னுடைய தவறை எந்த நேரத்திலும் நிறுத்தியிருக்க

ளம். அவன் தன்னுடைய சொத்தை விற்க வேண்டியது இல்லை. (அங்கே கம்யூனிச கொள்கை பின்பற்றப் படவில்லை). அனனியா சொத்தை விற்ற பிறகும், அவன் முழுமையினையும் கொடுக்க வேண்டும் என்ற கட்டளையும் கிடையாது. அனனியா தன் இருதயம் கூறியபடி, தனக்கு நேர்மையாய் தோன்றினதை தாராளமாக செய்திருக்கலாம். அனனியா தெரியாமல் தவறு செய்து விடவில்லை. தான் சாத்தானை எதிர்த்து போராடியிருக்க வேண்டும் என்பதும் அனனியாவுக்குத் தெரியும். (யாக். 4:7) ஆனாலோ, அனனியா தன் திட்டத்தை மனதில் சிந்தித்து செயலாற்றினான். அனனியா செய்த தவறு, தெரியாமல் செய்த தவறு அல்ல. அது ஒரு தற்செயல் நிகழ்ச்சியும் அல்ல. எந்தப் பாவமும் அறியாமையினால் செய்யப்படவில்லை. அது ஒரு முழுப் பொய் பொய்யிலே மோசமான பொய், அனனியா கூறிய பொய்யாகும். கிறிஸ்தவனைப் போல் காரியங்களைச் செய்யும்படி ஏவப்பட்ட, பொற்று வேலையாகும்.

மற்றப் பொய்களைப் போல, இது மனிதர்களுக்கு முன்பாக மாத்திரம் கூறப்படாமல், தேவனுக்கு முன்பாகவும் கூறப்பட்ட பொய்யாகும். (பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பொய் கூறுவது என்றால், அது தேவனுக்கு விரோதமாய் கூறப்பட்ட பொய் என்றுதான் அர்த்தமாகும். திரித்துவ தேவர்களிலே, பரிசுத்த ஆவியானவரும், பரிசுத்த தெய்வமாகும்). இப்படிப்பட்ட பொய்களைச் சந்திப்பதில் இயேசுவுக்கும் பொறுமை கிடையாது. மார்த்தாள், மகதலேனா மரியாள், பேதுரு, தாமஸ் ஆகியவர்களின் பலவீனத்தைக் குறித்து, இயேசு பொறுமையாய் இருந்தார். பொய்யிலே ஜீவித்து, தங்களுடைய முன் மாதிரியின் மூலம் மனிதர்களை வழிவிலகப் பண்ணுகிற அநேகரின் பேரில் இயேசு பொறுமையுள்ளவராய் காணப்படவில்லை. இப்படிப்பட்டவர்களின் மேல் தேவன் கொடிய ஆக்கினைத் தீர்ப்பை கொண்டு வந்துள்ளார். (மத்.23:13—15;27:28,33).

மாய்மாலத்தினால் தண்டனை பெறல்:— அப்.5:5-11.

(அ) அனனியா தண்டிக்கப்படுதல்:- அப்.5:5,6.

நன்மைசெய்ய அறிந்திருந்தும், நன்மை செய்யாதிருப்பவன் தண்டிக்கப்படுவான். (யாக். 4:17; லூக்.12:47). பேதுரு பின்னாட்களில் எழுதினது போல, ''நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குகிறது.'' (1பேதுரு 4:17). தான் எவ்வளவு தூரம் போக முடியும் என அனனியா, ஒரு சோதனை ஓட்டத்தை மேற்கொண்டான். அனனியா, இந்தத்தவறு செய்யும் போதே தடுக்கப்படாவிட்டால், அவன் அடுத்த தடவை இன்னும் பெரிய பாவத்தைச் செய்வான்.

மாய்மாலத்தை ஒருபோதும் சபையில் அனுமதிக்கமாட்டார் என்ற கருத்தை, சபையின் தொடக்கத்திலே தேவன் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். சுயநலமிக்க எண்ணங்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தை நமக்கு கொண்டு வராது. நமக்கு கிடைக்கவேண்டிய வெகுமதியை பாவம் களவாடி, நியாயத்தீர்ப்பை நம்மேல் கொண்டு வரும். அனனியாவின் மேல் நியாயத்தீர்ப்பு வந்தது போல, நமக்கும் சடிதியில் வராமல் இருந்தாலும், கடைசி நாளிலே, வந்துதான் தீரும்.

அனனியா உண்மையான கிறிஸ்தவன் அல்ல என ஒருசிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால்

விசுவாசி போல நடத்தப்பட்டான் பிசாசினுக்கு இடம் கொடுத்துவிட்டான். அனனியாவின்மரணத்தை கேள்விப்பட்டவுடன் ஜனங்கள் மிகவும் பயந்தனர். ஆதிசபையின் மூப்பர்களும், அவனுக்கு வந்த நியாயத்தீர்ப்பு சரியென கூறுகின்றனர். ஸ்தேவானுக்கு துக்கம் கொண்டாடினதுபோல, அனனியாவுக்கு யாரும் துக்கம் கொண்டாடவில்லை. (அப்.8:2) ஒருவரும் அவனுடைய சவஅடக்கஆராதனையில் கலந்து கொள்ளவில்லை. அனனியா பரலோகத்திற்குஅல்லதுநரகிற்கு போனான் என வேதத்தில் கூறப்படவில்லை. ஆனால் அவனுடைய இருதயத்தை சாத்தான் நிரப்பினான் என்பதால், நரகத்திற்குத் தான் போயிருக்க வேண்டும். அவனுடைய இருதயத்திலே பரிசுத்த ஆவிக்கோ, அல்லது கிறிஸ்துவுக்கோ இடமில்லை. திராட்சக் கொடியில் இணைக்கப்படாத, கிளையாய் அனனியா இருந்தமையால், வெட்டியெடுக்கப்பட்டு வெளியே எறியப் பட்டான். (யோ.15:2,6).

(ஆ) சப்பீராள் தண்டிக்கப் பட்டாள்; அப்.5:7—11.

சப்பீராள் அப்போஸ்தலர்களின் முன்னிலையில் வந்த போது கணவன் அடைந்த மதிப்பை தானும் பெறுவோம் என எண்ணினாள். சப்பீராள் தன் பாவத்தை அறிக்கையிடத்தக்கதாக, ஒரு கேள்வியை பேதுரு கேட்டான். ஆனால் அவளோ, தீவினையை சுதந்தரிக்க ஆயத்தமாயிருக்கிறாள் என்பதை அவளுடைய பதிலே நமக்கு காட்டுகிறது. தங்களுடைய பாவத்தை, தங்களுடைய நற்கிரியை மேற்கொண்டு விடும் என சப்பீராள் நினைத்தாள். இது ஒரு கை கூடுகிற காரியமல்ல, பாவிகளின் நடவடிக்கை அப்பட்டமாக வெளியே தெரியும் என்பது தான் உண்மையாகும்: இயேசுவின் இரத்தம் என் பாவத்தைக் கழுவும் என விசுவாசித்து, ஏற்று, பாவத்தை அறிக்கையிட்டால், மனம் திரும்புதல் ஏற்படும். ஒரே ஒரு வார்த்தை சொல்வதின் மூலம் சப்பீராள் தன்னை மரணத்திலிருந்து காத்திருக்க முடியும். சப்பீராள் உண்மையினை ஏற்கனவே கணவனோடு பகிர்ந்திருப்பாளேயானால், அவனையும் காப்பாற்றியிருக்கக் கூடும்.

சப்பீராளும் மரணத்தைச் சந்தித்தாள். ஆகவே சபையிலும், கேட்ட மக்கள் யாவர் மேலும் பயம் வந்தமர்ந்தது.

சபையின் முன்னேற்றம்:-

அப்.5:12—16.

இந்த பரிசுத்தமான பயம், மிகவும் ஆரோக்கியமான ஒன்றாகும். இதினால் சபை வளர வசதியாய் இருந்தது. இது அற்புதங்களை தடை செய்யவில்லை. பாவத்தினாலும், அவிசுவாசத்தினாலும், நாசரேத்தூரிலே, இயேசுவே அநேக அற்புதங்களைச்செய்யமுடியவில்லை என வேதத்தில் வாசிக்கிறோம். (மாற்கு6:5,6), ஆனால் இங்கே அநேக அற்புதங்களும், அடையாளங்களும் நிகழ்த்தப்பட்டன என வாசிக்கிறோம்.

சாலமோன் மண்டபத்திலே, சபையார் யாவரும் ஒரே மனதுடன் கூடி, தேவனை, ஆராதித்தனர். முன்ஒரு தடவை நடந்ததைக் கண்டு, அவிசுவாசிகளான யூதர்கள், இந்த ஆராதனையை தடை செய்ய முற்படவில்லை (அப்.3:11) சபையிலே சேரவேண்டும் என்பதற்காக யாரும் சபையில் சேர்ந்துவிடவில்லை. இந்தக் காரியத்தினால் விசுவாசிகள் இன்னும் அதிகமாய் ஒருவரோடு ஒருவர் பிணைக்கப்பட்டனர்.

சடிதியில் நியாயத்தீர்ப்புவந்தமையால், விசுவாசிகள் மத்தியில் தேவன் இருக்கிறார் என்பதை ஜனங்கள் உணர்ந்து, அவருடைய நாமத்தை உயர்த்தினார்கள். அநேகர் தங்களுடைய தேவைகளை உணர்ந்து, தேவனிடம் இன்னும் அதிகமாய் நெருங்கிச் சேர்ந்தார்கள். இதன் மூலமாக இரட்சிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கையும், சுகம் அடைகிறவர்களின் எண்ணிக்கையும், அதிகமாயிற்று.

வாழ்க்கையோடுள்ள தொடர்பு:-

(1) சொத்தாக வைத்திருப்பதை விட, பணமாக வைத்திருந்தால், கிறிஸ்தவனுக்கு அதன் மூலம் ஆபத்து வந்து சேருமா?

அனனியாவும், சப்பீராளும் சொத்தை விற்று, பணமாக தங்கள் கைகளில் வைத்திருந்தபோது, பிரச்சனை ஏற்பட ஆரம்பித்தது. அனனியாவும், சப்பீராளும், தங்கள் சொத்தினை அப்போஸ்தலர்களின் பாதத்தில் அப்படியே வைத்திருந்தால், பிரச்சனையே ஏற்பட்டிருக்காது.

பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேராய் இருக்கின்றது என வேதாகமம்கூறுகின்றது. (1தீமோ. 6:10). சொத்துக்குப் பதிலாக பணத்தைக் கொடுப்போமே என்ற சோதனை வரக்கூடும். சொத்தினை விட, பணமே அநேகருக்குத் தீமையை விளைவித்துள்ளது. மற்ற சொத்துக்களை எளிதாக மறைத்து விட முடியாது. பணத்தை எளிதாக மறைத்து வைத்து விடலாம். இதனால்தான் பாவம் நம்மிலே ஆரம்பிக்கின்றது.

சொத்தை விற்று பணத்தை அப்போஸ்தலர்களிடம் கொடுத்ததை விட, சொத்தினையே அனனியாவும், சப்பீராளும் கொடுத்திருப்பார்களேயானால் மிகவும் நலமாயிருக்கும். பணம்தான் அனனியாவின் பாவத்திற்கு ஆதி காரணமாய் இருந்ததே தவிர, சொத்து அல்ல என்று ஏடுகள் நமக்குகூறுகின்றது. மாய்மால பாவத்திற்கு சாத்தான், பண ஆசையை ஓர் வேராக எடுத்துக் கொண்டான்.

(2) மரணத்தின் மேலும், ஜீவனின் மேலும் பேதுருவுக்கு வல்லமை உண்டா? இந்நாட்களில் நமக்கும் அப்படிப்பட்ட வல்லமை உண்டா?

சப்பீராளோடு பேதுரு இடைபட்ட விதம், ஆச்சரியமூட்டக் கூடியதாகவும் பயமூட்டக் கூடியதாகவும் உள்ளது. ''பரலோகராஜ்ஜியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருகிறேன் பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலேநீகட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும்'' என பேதுருவிடம், இயேசு கூறினதாக மத். 16:19ல் வாசிக்கிறோம். இதுதான், பேதுருவுக்கு தேவன் அருளிய விசேஷித்தவல்லமை என வியாக்கியானப்படுத்தி விடுவது எளிது. (அதாவது மரணத்தின் மேலும், ஜீவன் மேலும் தேவன் அதிகாரம் கொடுத்தார்). ரோமன் கத்தோலிக்க சபை நம்பி வரும் போதகம்இதுதான். ஆனால்பேதுரு இந்த வல்லமையை பரிசுத்த ஆவியினால் பெற்றுக் கொள்ளுவான் என்று கூறும்போது. இந்தக் கருத்துக்கு வலிமையில்லாமல் போகிறது. ஜீவனை எடுக்க பேதுருவுக்கு அதிகாரம் இருந்தமையால், சப்பீராளை நோக்கி''நீ சாவாய்''என்று கூறியவுடன் செத்தாள். என அநேகர் விளக்கம் கூறுகின்றனர்.

பேதுரு தீர்க்கதரிசனவரத்தினால் அல்லது ஞானத்தின் வரத்தினால் இப்படி சாபத்தைக் கூறினான்

என்று வேறு சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். (இந்த இரு வரமும் ஆவியானவரின் வரமாகும்). இந்த இரண்டு வரமும் கர்த்தர் செய்யப் போகிறதை வெளிப்படுத்தும். இந்த ஆதாரத்தின்படி பார்த்தால், பேதுருவுக்கு மரணத்தின் மேலும், ஜீவனின் மேலும் எந்த அதிகாரமும் இல்லையென்று தெரிகிறது. சப்பீராளின் மரணத்திற்கு தேவன்தான் காரணமாகும். தேவன் தாம் செய்யப்போகிறதை பேதுருவுக்கு வெளிப்படுத்தினார். பேதுரு அந்த செய்தியை சப்பீராளுக்கு எடுத்துக் கூறினான். அவ்வளவுதான். தேவன் என்ன செய்யப் போகிறார் என்ற தீர்க்கதரிசன வரமே, பேதுரு பெற்ற திறவுகோல் ஆகும்.

(3) பொய்யனாய் மாறுவதற்கு ஒருவன் எவ்வளவு தூரம் பொய் சொல்ல வேண்டும்?

நீ மனிதரிடத்தில் பொய் சொல்லவில்லை. தேவனிடமே பொய் சொன்னாய் என பேதுரு, அனனியாவிடம் கூறக் காரணம் என்ன? மனிதனிடமும், தேவனிடமும் அனனியா பொய் சொல்லவில்லையா? பேதுரு இங்கே பொய்யினையோ, பொய் கூறப்பட்ட சூழ்நிலையினையோ குறிப்பிடவில்லை. பேதுரு பொய்யைவிட ஆழமான கருத்தைக்கூற முற்படுகிறான். பொய் என்று பேதுருகூறியதின் உண்மை அர்த்தம் இதுதான். பொய் சொல்லுகிறான் என்றால், பாவம் செய்கிறான் என்று அர்த்தமாகும். நீ மனிதனிடம் அல்ல, தேவனிடமேபொய் சொன்னாய் என்று பேதுரு கூறும் போது, அவன் பொய் என்ற பாவத்தை தேவனுக்கு விரோதமாய் செய்து விட்டான் என்று கூறவே அவன் முற்படுகிறான். பாவத்தின் தன்மையை பேதுரு உணர்ந்திருந்தான் என்று நாம் இந்தப் பகுதியிலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். செய்கிற பாவமெல்லாம் தேவனுக்கு விரோதமாகவே செய்யப்படுகிறவைகள் என்றே வேதம் கூறுகின்றது. அப்படியானால் பொய் சொல்லுகிறான் என்றால், அது தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்கிறான் என்றே நமக்குத் தெரிகின்றது. ஒரு பொய் மனிதனைப் பொய்யனாக மாற்றுகின்றது. ஒரு பாவம்தான் மனிதனை பாவியாக மாற்றுகின்றது.

செய்யப்படுகின்ற எந்தப் பாவமும், தேவனுக்கு விரோதமானவை என புதிய ஏற்பாட்டிலும், பழைய ஏற்பாட்டிலும் நாம் காண்கிறோம். இதை யோபு நன்கு அறிந்திருந்தான் என்று காண்கிறோம். தன்னுடைய பிள்ளைகள் தேவனுக்குவிரோதமாக ஏதாவது பாவம் செய்திருப்பார்கள் என்று கருதி, யோபு ஒவ்வொரு நாள் காலையிலும் எழுந்து பாவ நிவாரண பலி செலுத்துவான் என யோபு 1:5ல் காண்கிறோம்.

உரியாவைக் கொன்று, பத்சேபாளோடு, தாவீது விபச்சார பாவம் பண்ணின போது, தன்னுடைய பாவத்தை உணர்ந்து அறிக்கையிடும் பொருட்டாக சங்கீதம் 51ஐ எழுதி

றான். சங்கீதம் 51 மனம்திரும்புதலின் சங்கீதமாகும். தாவீது, விபச்சார பாவம் செய்தான். தாவீது தானே உரியாவைக் கொல்லாவிட்டாலும், கொலை பாவத்திற்கு உடந்தையாய் இருந்தான். ஆகவே கொலைகார எண்ணமுடைய இருதயம் அவனுக்கு இருந்தது. "உமக்கு விரோதமாக பாவம் செய்தேன்" என மனம்திரும்புதலின் ஜெபத்தில், தாவீது கூறுகின்றான். (சங்.51:4). செய்கின்ற எல்லாப் பாவமும், தேவனுக்கு விரோதமாய் செய்கிற பாவம் என்பதை தாவீது அறிவான்.

(4) பாவத்தைக் குறித்து வேதாகமம் கூறும் கருத்து என்ன?

துரதிர்ஷ்டவசமாக அனேகர் பாவம் என்கிற வார்த்தையை பல வழிகளில் உபயோகிக்கின்றனர். தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுவதற்கே பாவம் தான் காரணமாய் இருக்கின்றது. தேவனுடைய பிரமாணத்தை மீறுவதே பாவமாகும். இதுதான் வேதம், பாவத்தைக் குறித்து கொடுக்கும் கருத்தாகும். ஜனங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்கினையும், பாவத்தால் மனுக்குலம் அடையும் பாடுகளையும் வேதாகமம் கூறத்தவறவில்லை.

பாவம் என்ற பதத்தை இரு வழிகளில் இன்று மக்கள் உபயோகிக்கின்றனர். மக்களுக்குத் தீங்கிழைப்பதைப் பாவம் என்று கூறுகின்றனர். "சமுதாயத்திற்கு விரோதமாக செய்யப்பட்ட பாவம்" என்று சூழ்நிலையை வைத்து கூறிவிடுகின்றனர். தேவனுடைய பிரமாணத்தை மீறுவது தான் பாவம் என்று கூறுவதை ஒரு சிலர் மறுக்கின்றனர். பாவம் என்கிற பதத்தை உபயோகிக்கிறதற்கு பதில் தோல்விகள் அல்லது தவறுகள் என்று கூறிவிடுகின்றனர்.

மேற்கூறிய இரண்டு கருத்தும், வேதாகமம் பாவத்தைக் குறித்து கூறும் கருத்தை மறுத்து விடுகின்றன. பாவம் எப்படிப்பட்டதாயினும், அனனியா, சப்பீராள் செய்தது பாவமே. பாவத்திற்கு நாம் எந்த பெயர் இட்டுக் கொண்டாலும் சரி, அது நிச்சயமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும். இரட்சிக்கப்படாத மனிதன் தன்னுடைய சுய பெருமையினால் பாவம் என்பது தேவனுக்கு விரோதமாய் செய்யப்படும் கொடுமை எனக் கூறினால் நம்பமாட்டான். நான் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்து விட்டேன் என மனிதன் கூறினால், அந்த அறிக்

கை அவனுக்கு நன்மையினை கொண்டு வரும். தேவனுடைய பிரமாணத்தை மீறுவது தான் பாவம் என தேவ வசனம் திட்டவட்டமாய்க் கூறுகிறது. பாவம் செய்கிறவன், நித்திய தண்டனையாகிய, பிரிந்து ஜீவிக்கும் கொடுமையை அனுபவிப்பான். (தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு ஜீவிக்கும் கொடுமையை அனுபவிப்பான்).

பாடம் 9 | 2-11-75

தெய்வீக விடுதலை

வேத பகுதி: அப் 5:17-32

போதிக்கும் திட்டம்

தூதர்கள் எவ்வகைகளிலெல்லாம் மனிதர்களுக்கு ஊழியம் செய்துள்ளனர் என்பதை உங்கள் வகுப்பினரிடம் கேட்டு, கரும்பலகையில் வரிசையாக எழுதவும். சம்பவங்களைக் கூறுமாறு வகுப்பினரை ஏவவும். மாணவர்கள் தங்களால் இயன்றவரை உதாரணங்கள் கொடுத்து முடிந்த பிறகு, நீங்களும் அதோடு கூட ஒரு சில உதாரணங்களைக் கூறலாம். நாம் படிக்கப்போகிற சம்பவத்தினை மாணவர்கள் கூறிவிட்டால், அதை கடைசி உதாரணமாக உபயோகப்படுத்தவும்.

வேதவிளக்கம்

அப். 5:17-42.

பின்னணி:-

காலம் கி பி. 30.

பரிசுத்தமான சூழ்நிலை, அனனியாவின் மேலும், சப்பீராளின் மேலும் கொடிய நியாயத்தீர்ப்பை கொண்டு வந்ததை போன வாரப் பாடத்தில் படித்தோம். உண்மையினை அறியவும், தேவவல்லமையினைப்பெறவும் தாகமாயிருந்த மக்கள், இச்சம்பவத்தைக்கேள்விப்பட்டு, திரள், திரளாக அப்போஸ்தலர்களோடு சேர்ந்து கொண்டார்கள். எந்த பரிசுத்த ஆவியானவர் பொய்யான மொழிக்கு ஒரு முடிவு கொண்டு வந்தாரோ, அதே பரிசுத்த ஆவியானவர் பிசாசுகளினால் மனிதனுக்கு ஏற்பட்டுள்ள வியாதிகளை நீக்கி, அற்புதம் செய்தார். பேதுருவின் நிழல்பட்டு அநேகர் கூட சுகமாகி, விடுதலை அடைந்தார்கள்.

யூத அதிகாரிகள், அனனியா, சப்பீராளின் மரணத்தைப் பற்றி கேள்விப்பட்டார்களோ, இல்லையோ நமக்குத்தெரியாது. அப்படி அறிந்திருந்தாலும் கூட, இதைக் குறித்து மதத்தலைவர்கள் ஒருபோதும் கவலைப்பட்டதில்லை.

தங்க வசனம்:- மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது. அப். 5:29

ஆனால் சுவிசேஷம் தீபோல் பரவி வருவதைக்கண்டவுடன். அதை அணைக்க முடிவு செய்தனர், முதல் தடவை அப்போஸ்தலர்களை சனகரீம் சங்கம் பயமுறுத்தி அனுப்பிவிட்டது. ஆகவே இனி அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை பிரசங்கிக்க மாட்டார்கள்என நினைத்தார்கள். சனகரீம் சங்கத்தின் பயமுறுத்தலைப்பற்றி அப்போஸ்தலர்கள் சிறிதளவேனும் கவலைப்படாமல், தைரியமாக வசனத்தை பேச ஆவியின் பெலன் வேண்டும் என சபையாராகஜெபித்ததைப்பார்த்தோம். இந்த ஜெபத்திற்கு விடையளிக்கும் வகையில், தேவன், விசுவாசிகள் கூடியிருந்த இடத்தை அசைத்து, புதிதாய் ஆவியை மறுபடியும் பொழிந்து, அநேக அற்புதங்களைச் செய்தார். சுயமுயற்சியில் எதுவும் நடைபெறவில்லை. ஆவியானவர் கிரியை செய்ய, அப்போஸ்தலர்களும் ஆவியானவரோடு சேர்ந்து கிரியை செய்தனர்.

1. அப்போஸ்தலர்களுக்த வைக்கப்பட்ட சோதனை:-

அப்போஸ்தலர்:- 5:17-28

(அ). கொலைகாரர்களைப்போல கைதாக்கப்படல்:- அப், 5:17,18

இயேசுவைக்குறித்து நீங்கள் ஒன்றும் பறைசாற்றக்கூடாது எனக்கூறியும், சீஷர்கள் தொடர்ந்து சுவிசேஷம் அறிவித்து வந்தமையால், பிரதான ஆசாரியனின் பெருமைக்கும், சதுசேயரின் பெருமைக்கும் பங்கம் விளைத்தது. சபையின் தீரச்செயல்களைக்கண்டு பொறாமை கொண்டனர். சபையினுடைய வல்லமையும், ஈர்ப்புசக்தியும், தங்களுடைய அலுவலுக்கு வேட்டு வைத்துவிடும்என மதத்தலைவர்கள் எண்ணினார்கள், ஆகையினாலே மதத்தலைவர்கள் பொறாமையினால் நிறைந்து, சீஷர்களை எதிர்க்கத் துணிந்தனர். (தங்களுடைய இராஜரீக வல்லமையினைக்காக்க தீபோல் கொதித்து எழும்பினர்) தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை காட்டத்தக்கதாக, மதத்தலைவர்கள் 12பேரையும் கைது செய்து, எல்லோர் முன்னிலையில் சிறைச்சாலைக்கு வழிநடத்திச் சென்றனர். யூதஜனங்கள் விசுவாசிகளைக்கனப்படுத்துவதைக் கூட பொறுத்துக் கொண்டனர். ஆனால் சுவிசேஷம் பரவிச்செல்வதை யூதமதத்தலைவர்கள் விரும்பவில்லை.

அப்போஸ்தலர்களை சிறுமைப் படுத்தி, கேவலப் படுத்தவேண்டும் என்று யூதமதத் தலைவர்கள் எண்ணினார்கள். இயேசுவை ஒரு கொலைகாரனாக எண்ணி, சிறுமைப் படுத்திய போது, அவர்கள் இயேசுவின் விஷயத்தில் தவறிப் போய் விட்டோம் (புகழை இழந்து விட்டனர்)என்பதை உணர்ந்து பார்க்க வில்லை. 12 அப்போஸ்தலர்களை சிறையிடுவதின் மூலம் சுவிசேஷம் பரவாதபடி தடுத்து விடலாம் என யூத மதத் தலைவர்கள் எண்ணியது எவ்வளவு மதியீனம் எனப் பாருங்கள்.

(ஆ) தூதனால் விடுவிக்கப் படல்:- அப். 5:19—24.

அப்போஸ்தலர்களை ஜெயிலிலிருந்து விடுவிக்கும்படியாக தேவன் தூதனை அனுப்ப, அவன் போய் அவர்களை விடுதலை செய்தான். அப்போஸ்தலர்களை கைது செய்த சதுசேயர் கூட்டம் தூதர்களை நம்புவதில்லை. மதத் தலைவர்கள் இவ்வளவு கோடூரமாக தண்டித்தாலும், தேவன் தங்களோடு கூட இருக்கிறார் என்பதை அப்போஸ்தலர்கள் இச் சம்பவம்மூலம் உறுதிப் படுத்திக் கொண்டார்கள். அப்போஸ்தலர்களை விடுவிப்பது மாத்திரமல்ல தேவனின் நோக்

கம்! எந்த அவமானம் அப்போஸ்தலர்கள் மேல் வரவேண்டும் என நினைத்தார்களோ, அதே அவமானத்தை சதுசேயர் அடைய வேண்டும் என தேவன் நினைத்தார். 12பேர் சிறை பிடிக்கப்பட்டு போன பிறகு, இப்போது 12 பேரும் அடுத்த நாள் காலையில் ஆலயத்தில் நிற்கிறார்கள். இது தேவனுடைய வல்லமையினை ஜனங்கள் அறிய உதவிற்று.

இந்த புது விதமான சித்திரவதை, சுவிசேஷத்தின் அறிவிப்புக்கு எந்த விதமான பாதகத்தையும் உருவாக்காது என்று சீஷர்கள் கண்டு கொள்ள வேண்டும் என தேவன் எண்ணினார். சித்திரவதைக்காரர்கள் எவ்வளவு தூரம் சித்திரவதை செய்தாலும், அதனிமித்தம் சுவிசேஷ அறிவிப்பு நிற்கக் கூடாது என்றும் தேவன் விரும்புகிறார். ''இவ்வுலக ஜீவியத்திற்குரிய ஜீவனுள்ள வசனத்தை'' அப்போஸ்தலர்கள் அறைகூவித்தான் ஆகவேண்டும். சுவிசேஷம் என்றாலே ஜீவன் அல்லது வாழ்க்கை என்று பொருள்படும். ஜீவிக்கிற தேவனைச் சார்ந்தே சுவிசேஷம் உள்ளது. நம்முடைய வாழ்வின் ஜீவன் இயேசுவே. (யோ. 11:25; 14:6; கொலோ.3:4). அவருடைய வார்த்தைகளுக்கு ஜீவன் உண்டு. (யோ 6:63). அவருடைய நித்திய ஜீவன் நமக்குள் இருக்கின்றது. (யோ.6:51, 54; 5:26). இப்படியாக கிறிஸ்தவ வழி கொடுப்பதற்கு பிரமாணமோ அல்லது கூட்டம் கூட இராஜரீக காரியமோ அல்லது ஆராய தத்துவமோ, அல்லது சேருவதற்கு சங்கமோ அல்ல. ஆவியானவரின் வல்லமையினாலும், இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தாலும் வாழ்கின்ற ஜீவியமே கிறிஸ்தவ ஜீவியம் ஆகும். இயேசுவுக்காக ஜீவிக்கவும், இயேசுவே நித்திய ஜீவனை அருளுகிறவர் என போதிக்கவுமே அப்போஸ்தலர்கள் விடுதலையாக்கப்பட்டார்கள்.

அதிகாலையிலே ஆலயத்தின் கதவுகள் திறக்கப்பட்டன. தூதனின் கட்டளையை நிறைவேற்றத் தக்கதாக ஆலய வாசலில் அப்போஸ்தலர்கள் நின்றார்கள். அவரோடு கேட்கிற யாவருக்கும் சுவிசேஷத்தைப் போதித்தனர். கைது செய்யப்பட்ட பின்னர், அப்போஸ்தலர்கள் சரீரப் பிரகாரமாய் பலவீனமாய் இருந்தாலும், தேவன் ''போங்கள்'' என கட்டளையிட்டுள்ளதால், ஆலயத்திற்கு சென்றனர். முடிவு என்னவாயினும், தேவனுடைய மனிதர்கள், தேவனுடைய சித்தம் செய்ய ஆயத்தமாயிருந்தார்கள்.

அப்போஸ்தலர்களை தலையெடுக்க விடாதபடி ஒடுக்கிப் போடத் தக்கதாக, ஆசாரியர்களும், சதுசேயர்களும் சனகரீம் சங்கத்தை கூட்டினர். ஜெபவேளையாகிய காலை 9மணிக்கு, ஜெபம் பண்ண அநேக ஜனங்கள் ஆலயத்திற்கு முன் குழுமி விட்டனர். போர்ச் சேவகர்கள், சிறைக்கைதிகளை கொண்டு வந்தவுடன் விசாரணையைத் துவங்கவேண்டும் என பிரதான ஆசாரியனும், சனகரீம் சங்க மெம்பர்களும் (70பேர்கள்) எண்ணினார்கள். ஆனால் செய்தி இவ்விதமாய் சனகரீம் சங்கத்திற்கு வந்தது. சிறைச்சாலைக் கதவுகள் நன்றாக அடைக்கப்பட்டுள்ளது. சிறைக்கைதிகள் ஒருவர் கூட உள்ளே இல்லை. சிறைக் காவலர்களும் அறியாத வண்ணம் அவர்கள் போய்விட்டதால்சிறைக் கூடம் வெறுமையாய் உள்ளது.

இந்தச் செய்தி ஆலய மகத்தலைவர்களின் மூளையை அதிர்ச்சியுறச் செய்தது. (இந்தக்காரியம் எப்படி நடக்கக் கூடும். அதுமாத்திரமல்ல, இப்படி தொடர்ந்து அதிசயம் நடந்தால், அது என்ன

வாய்முடியும் என்று தெரியாமல் விழிக்க ஆரம்பித்தனர்.) இப்படியாக தங்களுடைய திட்டங்கள் அதிசயமாய் மாற்றப்பட்டதால், தங்களையே மதியீனர் என சனகரீம் சங்கத்தினர் எண்ணினர்.

(இ) அப்போஸ்தலர்கள்மறுபடியும் கைது செய்யப்பட்டனர். அப். 5:25-28

அப்போஸ்தலர்கள் ஆலயத்திலே நின்று போதகம் பண்ணிக் கொண்டிருப்பதாக யாரோ ஒருவர் சனகரீம் சங்கத்திற்கு செய்தி கொண்டு வந்தனர். பொருமையினாலும், வெறுப்பினாலும் குருடாக்கப்பட்ட மனதையுடைய ஆலயப் போர்ச்சேவகர்களின் தலைவன், ஆலயத்திற்கு போய் மறுபடியும் அப்போஸ்தலர்களை கைதுசெய்தான். முந்திய தடவை அப்போஸ்தலர்களை கைது செய்யும போதும் போர்ச்சேவகர்கள் முரட்டுத்தனமாய் நடந்து கொண்டார்கள். ஆனால் இந்தத்தடவை எந்த விதமுரட்டுக் குணத்தையும் வெளிப்படுத்தாது சாந்தமாய் கைதுசெய்தனர். சுவிசேஷத்தை கேட்க வேண்டுமென ஜனக்கூட்டம் ஆவலாய் இருக்கும்போது, அப்போஸ்தலர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என அக்கூட்டம் அறிந்தால், தங்களை கல்லெறிந்திடுவர் என்பது ஆலய போர்ச்சேவகர்களுக்கும் தெரியும்.

அப்போஸ்தலர்கள் ஒருவார்த்தையும் கூருது; பிரதான ஆசாரியனின் மாளிகையை நோக்கி வெற்றி நடை போட்டனர். மனிதன் அளிக்கும் விடுதலையை அப்போஸ்தலர்கள் விரும்பவில்லை. தேவன் என்ன செய்வார் என்பதை அப்போஸ்தலர்கள் நன்கு அறிந்தமையால் போர்ச்சேவகர்களின் கரங்களில் தங்களை ஒப்புவித்தே அமைதியாய்ச்சென்றனர்.

அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்தமையால், தேவனின் விரோதிகளைப் பற்றி சிறிதளவேனும் பயப்படவில்லை.

அப்போஸ்தலர்கள் சனகரீம் சங்கத்திற்கு முன் கொண்டு வரப்பட்ட பின்பு, "இந்த நாமத்தில்" நாங்கள் போதிக்கக் கூடாது என கட்டளையிட்டோம் அல்லவா என கேள்வி கேட்டான். (இயேசுவின் நாமத்தில் பிரசங்கிக்கக் கூடாது என்று கூறவில்லை. இயேசு என்ற பெயரே அவர்களுக்கு தாழ்வான பெயராய் தோன்றிற்று) சுவிசேஷம் உருவாக்கி வந்த எழுப்புதலை அவர்கள் அறியாமல் இல்லை. சீஷர்கள் இயேசுவின் போதகத்தை எருசலேம் முழுவதும் பரப்பினார்கள். "இந்த மனிதனுடைய" இரத்தப்பழியை எங்கள் மேல் சுமத்துகிறீர்களே என்றும் பரிசுத்த ஆசாரியன் கூறினன்.

பிரதான ஆசாரியனின் பயத்திற்கிடம் இல்லாமல் இல்லை. அப்போஸ்தலர்களுக்குள்ளே எந்த பிரிவினை மனப்பான்மையும் கிடையாது. "அவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று கூறின மக்கள் கூட, கல்வாரியில் மரித்த இயேசுவின் மூலம் பாவ மன்னிப்பு அடையலாம் என பிரசங்கித்து வந்தனர். சுவிசேஷம் என்றாலே நற்செய்தி என்றுதான் பொருளாகும். (மத்.27:25; அப்.3:13-19). அவர்களின் மேல் இயேசு இன்னும் அன்பு கூறுகிருர். மன்னிக்கவும் ஆயத்தமாய் உள்ளார். (லூக் 23:34.)

இரட்சிக்கப்படாத தன்னுடைய யூத சகோதரர்கள் இரட்சிக்கப்படும்படியாக, தான் நரகம் போகவும் தயாராய் இருக்கிறேன் என பவுல் கூறுகிருர். (ரோமர் 9:3). இயேசுவின் மேல் கொள்ளும் விசு

வாசமே யூதர்களை இரட்சிக்கும் என்பதை பவுல் அறிவான். இயேசுவை, யூதர்கள் வேண்டாம் என்று தள்ளியும், பவுல் அவர்களை நேசித்தான்.

2. அப்போஸ்தலர்களின் சாட்சி - அப்.5:29-32.

அ) இயேசுவுக்காக நின்ற ஓர் சாட்சி:- அப் 5:29-31

சனகரீம் சங்கத்தின் கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படியவில்லையென ஆசாரியன் கூறினான். அப்பொழுது பன்னிருவருக்குப் பதிலாக, பேதுரு, தாங்கள் தேவனுக்கு கீழ்ப்படிவோமே தவிர மனிதனுக்கு கீழ்ப்படிய மாட்டோம் என்றான். தேவனுக்கு கீழ்ப்படிவதுதான் தகுதியான காரியம் ஆகும். ஏனென்றால் தங்கள் மேல் ஓர் தெய்வீக கட்டளை சுமத்தப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டினர். கிறிஸ்துவானவரேநேரடியாய் கட்டளை கொடுத்து அனுப்பியுள்ளார் என்று அப்போஸ்தலர்கள் கூறினார்கள். (மனிதனுக்கு செவி கொடுப்பதைக் காட்டிலும், தேவனுக்கு செவி கொடுப்பதே நலம் என அப்போஸ்தலர்கள் எண்ணினார்கள்).

தங்கள் மேல் குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்று கண்டும், இயேசுவின் இரத்தத்திற்கு பழிக்குப் பழிவாங்க நினைத்தனர். சனகரீம் சங்கம் இயேசுவைக் கொலை செய்து மரத்தில் தொங்கவைத்தாலும், தேவன் அவரை மூன்றும் நாளில் உயிரோடு எழுப்பினார் என திடமாக சாட்சி பகர்ந்தார்கள். (மரம் என்றும், ஒதுக்கப்பட்ட சிலுவையென்றும் கிரேக்க பதம் கூறுகின்றது). பழிக்குப் பழி வாங்க தேடாமல், பிதாக்களின் தேவன் (ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு) சிலுவையின் அவமானத்தை நீக்கி, இயேசுவை தமது வலது கரத்தினால் உயர்த்தி, அவரையே இரட்சிப்பின் தலைவராக்கினார் என்று பிரசங்கம் பண்ண ஆரம்பித்தார்கள். இயேசுவின் மூலமாக தேவன் மனம் திரும்புதலையும், (மனதிலும், இருதயத்திலும் உள்ள மனப்பான்மைகள் மாறி, புது ஜீவியத்தைத் தொடங்குதல்) பாவ மன்னிப்பையும் அருளுகிறார் என கூறினார்கள். (முழுமன்னிப்பும், அவர்களின் பழி முற்றிலும் துடைக்கப்படும்). உங்களுக்கு நியாயத்தீர்ப்பு உண்டு என்று விரலை நீட்டி சனகரீம் சங்கத்தை பழிகூறாமல், கிருபையின் கரத்தை சமஸ்த இஸ்ரவேலருக்கும் அருளினார்கள்,

(ஆ) இரு சாட்சிகள்:- அப்.5:32

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும். அவர் அருளுகின்ற மனம் திரும்புதல், இரட்சிப்பு ஆகியவற்றினுக்கும் தாங்கள் சாட்சிகளாய் இருப்பதினால், அமைதியாய் இருக்க முடியாது என பேதுரு கூறினான். (1.யோ.1:1-4; அப்4:20ஐப்பார்). இவர்கள் பரிசுத்த ஆவியினால் தாங்கப்பட்டது மாத்திரமல்ல, அவரால் வழிநடத்தப்படவும் செய்தார்கள். அவர்கள் தனியாய் நிற்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு பெரியசாட்சியாய் பின் நின்றார்.

தேவனுக்கு கீழ்ப்படியத்தக்கதாகத்தான் பரிசுத்த ஆவி அருளப்பட்டது, (யோ.6:28,29). இப்படியாக பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகள்யாவர் மேலும் பொழிந்தருளப்பட்டிருந்தால், அவர்களைக் கொன்றாலும் கூட, இயேசுவின் உயிர்த்தெழுதலைப்பற்றி சாட்சி கூறாமல் இருக்க மாட்டார்கள். எல்லா விசுவாசிகள் மூலம் பரிசுத்த ஆவியானவர் சாட்சியிடும் படலத்தைத் தொடருவார்.

ஒவ்வொரு விசுவாசியின் இருதயத்திலும் பரிசுத்த ஆவியானவர் இயேசுவை வெளிப்படுத்தினார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை தரிசித்த மற்ற அப்போஸ்தலர்கள் போல், கிறிஸ்துவை தரிசிக்காதவர்களுக்கு, இயேசுவின் தரிசனத்தைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் தேற்றி வருகிறார். (யோ. 15:26; 20:29; ரோ.8;11, 14-17; கலா.4:6,7) நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவுடன், இயேசு, வேதாகமம் கூறுகிற பிரகாரம், பிதாவின் வலதுபாரிசத்தில் இருக்கிறார் என்றும், அவரைத் தேவன் மகிமை படுத்தினார் என்றும் நம்புகிறோம். (யோ.16:7) 14.15).

3. அப்போஸ்தலர்களின் வெற்றி:-

அப்போஸ்தலர். 5:33-42

(அ) மரணத்திலிருந்து விடுதலை:- அப் 5:33-40.

பாவமன்னிப்பு தங்களுக்கு தேவை என சனகரீம் சங்கம் எண்ணவில்லை. அப்போஸ்தலர்கள் கொடுத்த விடை அவர்களின் இருதயத்தைப் பிளந்தது. (இருதயம் பிளவுண்டது என கிரேக்க பதம் கூறுகின்றது). தங்கள் இருதயத்தில் சனகரீம் சங்கத்தார் மிகவும் குத்துண்டதால், அப்போஸ்தலர்களை கொலை செய்ய எண்ணினார்கள். (அதிகார பூர்வமாக நடவடிக்கைகளைமேற்கொண்டனர் என கிரேக்க ஆதாரம் கூறவில்லை). ஆனால் சனகரீம் சங்கத்தாரின் யோசனையைத் தேவன், பெயர் பெற்ற பரிசேயன் மூலம் தடுத்து ஆட்கொண்டார்.

விசுவாசிகளுக்கு நன்மைசெய்வதற்காக மாத்திரம் கமாலியேல் பரிந்து பேசவில்லை. கமாலியேல் மிகவும் ஞானமுள்ளவர். அப்போஸ்தலர்கள் மரிப்பது தேவையில்லை என கமாலியேல் எண்ணினான். இப்படிப்பட்ட அநேக கூட்டங்கள் சீக்கிரமாய் மறைந்து போயிற்று என கமாலியேல் கூறினான். தெயுதாஸ் (சாதாரணமாக வழங்கப்பட்ட பெயர்) என்பவன் ஒரு இயக்கத்தை தோற்றுவித்தான். ஆனால் அவனே கொலை செய்யப்பட்டான். அவனின் இயக்கம் அவனோடு சமாதியாயிற்று. யூத சரித்திர ஆசிரியனான ஜோசிபஸ் யூதாஸ் என்பவனின் இயக்கத்தைப்பற்றி எழுதியுள்ளார். இது கி.பி.6ம் நூற்றாண்டில் தலையெடுத்தது. ஆனால் யூதாசும் கொலை செய்யப்பட்டான். அதிகார பூர்வமாக எந்த நடவடிக்கைகளையும் எடுக்க கமாலியேலின் அறிவுரைவழிகோலவில்லை. அப்போஸ்தலர்களை அனுப்பிவிட கமாலியேல் எண்ணினான். தேவனிடத்திலிருந்து அப்போஸ்தலர்கள் போதிக்கின்ற சுவிசேஷம் வராவிட்டால், அது சீக்கிரமாய் ஒழிந்துபோம் என்று கமாலியேல் கூறினான். நீங்கள் தேவனோடு போர் செய்கிறவர்களாய் காணப்படாதிருங்கள் என்றும் அறிவுரை கூறினான். (இந்த சம்பவம் நடைபெற கமாலியேல் விரும்பவில்லை.)

இப்படியாக கூறப்பட்டவுடன், அப்போஸ்தலர்களை விடுதலை செய்ய சனகரீம் சங்கம் ஒத்துக்கொண்டது. ஆனாலும்தங்கள் வஞ்சகத்தைத் தீர்த்துக் கொள்ளும்படியாக அப்போஸ்தலர்களை வாரினால் அடித்தார்கள். (சாட்டையின் நுனிகளில் எலும்புத்துண்டு அல்லதுஇரும்புத்துண்டுகள் இருக்கும். அதை வைத்து அப்போஸ்தலர்களின் மேல் அடிக்கும்போது அவர்களின் மேல்தோல் பிரிந்து வந்திருக்கும். ஏறக்குறைய 39 அடிகள் அடித்திருப்பார்கள். (உபா.25: 1-3 ன் படி 39 அடிகள்). இனி நீங்கள் இயேசுவைப் பற்றி பிரசங்கிக்கக் கூடாது என்று வலியுறுத்திக் கூறி விடுதலை செய்து

விட்டனர். இயேசுவை பிரசங்கிக்கக்கூடாது என்று கூறும் கருத்தில் சனகரீம் எந்த மாறுதலேயும் உண்டாக்கிக்கொள்ளவில்லே.

(ஆ) சந்தோஷமும், வெற்றியும் அப். 5:41,42.

என் நாமத்தினால் நீங்கள் பாடுபட்டால், ஆசீர்வாதம் அடைவீர்கள் என்று இயேசு கூறிய கருத்தை அப்போஸ்தலர்கள் இப்போது நினைவு கூர்ந்து அதற்காக சந்தோஷமாய் தேவனைத் துதித்தார்கள். அவர்கள் உடம்பு எல்லாம் இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தாலும், இயேசுவுக்காக பாடுபடுகிறோம் என்ற நினைவு, அவர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கிற்று. (மத்.5;10-12). எந்த காரியத்தை அவமானம் என எண்ணி சனகரீம் சங்கம் தங்கள் மேல் சுமத்த விரும்பியதோ, அதே காரியத்தை அப்போஸ்தலர்கள் மகிமையாக எண்ணினார்கள். இதைப் பற்றி அப்போஸ்தலர்கள் சிறிதேனும் கவலைப்படவில்லை. எங்கெல்லாம் வாசல் திறந்து கிடந்ததோ, அங்கெல்லாம் அப்போஸ்தலர்கள் சந்தோஷமாய் இயேசுவைப்பற்றிபிரசங்கித்து வந்தார்கள். வீடாயினும் ஆலயமாயினும், எந்த இடமாயினும், பிரசங்கிப்பதை அப்போஸ்தலர்கள் விட்டுவிடவில்லை.

வாழ்க்கையோடுள்ள தொடர்பு

(1) இயேசுவின் இரத்தத்தை தங்களுக்கு விரோதமாக அப்போஸ்தலர்கள் உபயோகிக்கிறார்கள் என யூத மதத்தலைவர்கள் ஏன் நம்பினார்கள்?

இயேசுவினுடைய விசாரணையும் சிலுவையில் அறையப்பட்டசம்பவமும், வழக்கத்திற்கு மாறாகவே செய்யப்பட்டது. தங்களுடைய மதக்காரியங்களை தாங்களே தீர்வு செய்து முடித்துக் கொள்ள வேண்டும் என ரோம அதிகாரிகள் கூறிவிட்டார்கள். இயேசு கிறிஸ்து ரோம பிரஜை கிடையாது. ஆகவே ரோமபிரஜைக்குரிய சிலாக்கியங்களை அவர்பெறமுடியாது. இயேசு தாம் விசாரிக்கப்படும்போது, முறையாய் வாதிடவில்லை. இதுவே அவரிடம் காணப்பட்ட குறையாகும். ரோம கவர்னராய் இருந்த பிலாத்துவே இயேசுவைக்கொலை செய்ய ஒப்புக் கொடுத்ததால், தங்களுக்கு எந்தக் கேடும் ரோம அரசாங்கத்தினின்று வராது என நம்பினார்கள். ஆனால் இப்பொழுது, அப்போஸ்தலர்கள் "இயேசுவின் இரத்தப்பலியை" தங்கள்மேல் போட்டவுடன், மிகவும் பயந்து போனார்கள்.

இரண்டு கருத்துக்களை நாம் நினைவிற்கொள்ளவேண்டும். ஆதி விசுவாசிகள் கிறிஸ்துவைப்பற்றியும், அவரின் ஊழியத்தைப்பற்றியும் அதிகமாக அறிந்துகொள்ளவில்லை. சுவிசேஷத்தின் சத்தியத்தை ஒவ்வொரு நாளாக அல்லது படிப்படியாகத்தான் விசுவாசிகள் கற்றுக்கொண்டார்கள். விசுவாசிகள் பாதியாய் கூறுகிறகாரியத்தை சனகரீம் சங்கம் தவறாய் புரிந்து கொண்டது. விசுவாசிகளுக்கே இன்னும் முழுமையாய் சத்தியம் புலப்படவில்லை. அவர்களுக்கே இதை இன்னும் தெளிவாய் விளக்கிக் கூறமுடியவில்லை. இரண்டவதாக குற்றம் உள்ள மனசாட்சியினால், யூத மதத்தலைவர்கள் அதிகமாய் வாதிக்கப்பட்டவர்கள். எதிர்ப்புகள் வந்துதான்தீரும் என இயேசு முன்னமே கூறியுள்ளார். (மத். 18:7) ஆனல், இடறல் யார்மூலம் வருகிறதோ அவர்களுக்கு ஐயோ! என்றும் இயேசு கூறியுள்ளார்.

குற்றமுள்ள மக்கள் எப்படி நடந்து கொள்வார்களோ, அதே போல யூதமதத்தலைவர்களும் நடந்துகொண்டார்கள். உண்மையான காரியத்தை மறைக்கும்படி

யாக, யூதமதத்தலைவர்கள் தற் காப்பும்செய்து கொண்டனர். இப் படிப்பட்ட குணதிசயத்தை நாம் இன்னும் காணலாம். இன்னொரு காரியத்தைக்கூறி, தாங்கள்செய்த தவறை அனேகர் மறைக்க முயல் வர். இப்படிப்பட்ட மனப்பான்மை யினை, சுவிசேஷம் அறிவிக்கும் நண்பர்கள் அடிக்கடி சந்திக்க லாம்.

(2) இயேசுவின் மாணத்திற்கு யூதர்கள்தான் உண்மையான உத்தரவாதிகளா? காரணமா?

ஆம், என்றும் இல்லை யென் றும் இக்கேள்விக்கு பதில் சொல் லலாம். யூதர்கள் தான் இயேசு வின் மரணத்திற்கு காரணம் என ஆதி விசுவாசிகள் கூறும்போது அவர்கள் இவ்விஷயத்தில் தவறி விடுகின்றனர். இஸ்ரவேல் தேசம்தான் இயேசுவின் மர ணத்திற்கு காரணம் என ஆதி விசுவாசிகள் கூறவில்லையென் பதைக் கவனிக்க. அப்படி சொல் லியிருந்தால், அப்போஸ்தலர் களும் யூதர்கள் ஆகையால், அவர்களும் இயேசுவின் மரணத் திற்கு காரணம் என்று பொருள் வந்துவிடும்.

இயேசுவின் மரணத்திற்காக யூத மதத்தலைவர்கள் புரட்சி செய்தது உண்மை. யூதர்களின் பாவம் மாத்திரம் அல்ல, உலக மாந்தரின் பாவம்தான் இயேசு வின மரணத்திற்கு வழி கோலிற்று. இயேசு பாவ நிவா ரண பலியாக்கப்பட வேண்டு மானல், அவர் மரித்துத் தான் ஆக வேண்டும் (லூக் 9:22;17:25 தேவனுடைய மீட்பின் திட்டத் திலே, இயேசுவின் மரணமும் ஒரு பகுதியாகும். (வெளி. 13:8) இப்போது இருக்கிறதான யூதர் கள் (உலகம் எங்கும்) தான் இயேசுவின் மரணத்திற்குகாரண கர்த்தாக்கள் என நினைத்துவிட வேண்டும். இப்படி கூறுவோமா னால், அது நம்முடைய அறி யாமையினையும், அநீதியையுமே வெளிக்காட்டும்.

(3) அப்.5:42ன்படி போதிப்பதற் கும், பிரசங்கிப்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஆதிசபையினர் வேதத்தை எவ் வாறு வியாக்கியானம் பண்ணி னார்களோ அப்படி, அதை வியாக் கியானிக்காமல் நம்முடைய பண் பாட்டின்படி வியாக்கியானித்து விடுகிறோம். ''பிரசங்கித்தல்'' என்றபதம் வந்தவுடன், இன்றைய சபைகளில் நடைபெறும் பிரசங்கம் ஞாபகத்திற்கு வந்துவிடுகின்றது. பிரசங்கித்தல் என்றபதத்திற்கு புதிய ஏற்பாட்டின் அர்த்தம்வேறு. நாம் இன்று சபைகளில் கொள் ளும் அர்த்தம் வேறு.

''பிரசங்கித்தல்'' என்ற வார்த் தைக்கு 3 கிரேக்கபதம் உள்ளது. முதல்அர்த்தம் - அறிவித்தல். (அப் 10:42) இரண்டாவது சுவிசே ஷத்தைப்பரப்புதல்; (அப்.5:42). மூன்ருவது அர்த்தம் சாதாரண மாய் பேசுதல் அல்லது சொல்லு தல். (அப்.16:6) ஒரு குறிப்பிட்ட முறையோடு கற்பித்தலுக்கு (சுவி சேஷத்தை) போதித்தல் என்று பெயர். எப்படி, ஏன், என்று அர்த்த பூர்வமாய் கற்றுக்கொடுத் தலுக்கு போதித்தல் என்று பெயர். ஒவ்வொரு சிருஷ்டிக்கும் சுவிசே ஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும் என்பதுதான் இயேசுவின் கட்டளை இக்கட்டளையை பிரசங்கித்தலும், போதித்தலும் நிறைவேற்று கின்றது.

இரதத்தில் போகும் போது பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான். (அப்.8). பிரசங்க பீடத்திலிருந்து பேசுவது போல், பிலிப்பு பிரசங் கித்திருக்க மாட்டான். சம்பாஷனை

முறையில், பிலிப்பு, எத்தியோப் பியமந்திரிக்கு இயேசுவைப் பற்றி பிரசங்கித்திருப்பான். இந்த முறையில் பார்க்கும்போது, நாம் யாவரும் பிரசங்கிமார்களே. இயேசுவை பிரசங்கித்தல் அல்லது சுவிசேஷத்தைக்கூறுதல் என்ருல், அவரின் உரிமைகளை (இயேசுவின்) பறைசாற்றுகிறேம் என்று அர்த்தமாகும். சுவிசேஷத்தை சம்பந்தப்படுத்திக் கூறுதல் அல்லது கிறிஸ்துவை அறிவித்தல் அல்லது சுவிசேஷத்தை பரப்புதல் என்ருல், வசனத்தைப்பிரசங்கிக் கிறேம் என்று அர்த்தமாகும். இதைச்செய்யவே நாம் யாவரும் கிறிஸ்துவால் அழைக்கப் படுகிறேம். இந்த முறைமையின் படி பார்க்கும் போது நாம் யாவரும் பிரசங்கிமார்கள் தான். (4) இந்நாட்களில் புதிதாய் தோன்றுகின்ற மத இயக்கங் களுக்கு கமாலியேலின் போதனை இசைந்து வருமா? (அப்.5:38,39)

வேதத்தில் இரட்சிக்கப்படாத மனிதன் கூறும் கருத்து யாவும் பொய்தான் என எண்ணுவது தவருகும். நாம் கமாலியேலின் கூற்றினை ஆராயும்போது, அங்கே உண்மையும், பிழையும் இருப்பதைக்காணலாம். கிறிஸ் தவர்கள் செய்யும் காரியங்கள் தேவனிடமிருந்து பிறந்து இருக்கு மானல், அதை ஒருவரும் தடை செய்ய முடியாது என கமாலியேல் கூறியது உண்மைதான். சபையின் சரித்திரத்தைப் பார்க்கும்போது, சபையின் விரோதிகள், சபையை எக்காரணத்தினுலும்தடை செய்ய முடியவில்லை என்பது உண்மை தான். மனிதன் எக்காரியத்தைச் செய்தாலும், தேவனிடம் இருந்து பிறந்த காரியம் தொடர்ந்து வெற்றி சிறக்கும்.

தேவனிடமிருந்து பிறந்த காரியமும் தோல்வி அடையும் எனக்கூறுவது சரியா?, ஆம் என்றே கூறத்தோன்றுகிறது. கமாலியேலின் ஆலோசனை சரி தான். அவன் கூறிய கருத்தில் ஒரு முக்கியமான பிழை உள்ளது. தேவனிடமிருந்து பிறந்த காரியமும் தோல்வியடையலாம் என்பது உண்மைதான். தேவனி டமிருந்து பிறக்காத காரியங்களும் கூட ஒரு சில காலத்திற்கு நிலைத்து நிற்கும். கிறிஸ்தவ மதம் தோன்றும் முன், புறஜாதிய மதங்கள் அநேக வருடங்கள் நிலைத்து நின்றன. அநேக நூற்றுண்டு களுக்கு முன்பே இருந்த புற ஜாதிய மதங்களில்கூடபலதவருன கருத்துகள் நிலைத்தே நிற்கின்றன. கிறிஸ்தவமதத்தைப் பற்றி அநேகர் கொண்டிருக்கின்ற கருத்தும் தேவனிடமிருந்து பிறந்த வையல்ல. "என் வசனத்தில் நீ நிலைத்திருந்தால், நீ என்னு டைய சீஷனய் இருப்பாய்; சத்தி யத்தை அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என இயேசு கூறியுள்ளார்". (யோவான் 8:31, 32).

கிறிஸ்தவ நம்பிக்கை

வேதபகுதி:- 1பேதுரு 1:3-13

போதிக்கும் திட்டம்

ரோம அரசாங்கத்தின் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த யூத மக்களுக்கு, பேதுரு தன் முதலாம் நிருபத்தை எழுதுகிறான். (யூத கிறிஸ்தவ மக்களுக்கு). உயிர்த்தெழுதலைக் குறித்து பேதுரு முதலாம் நிருபத்தில் வலியுறுத்திக் கூறுகிறான். இதோடு கூட வேறுபல கருத்துக்களையும் எழுதுகின்றான். நாம் சரியாக வியாக்கியானிப் போமானால் பேதுரு இந்நிருபத்தை பாபிலோனியாவிலிருந்து எழுதுகிறான் என்றே கருத்தில் கொள்ள வேண்டும். (1பேதுரு 5:13) மொசபத்தோமியாவிலுள்ள ஐபிராத்து நதிக் கரையில் பாபிலோனியா உள்ளது.

"தேவனுடைய முன் தீர்மானத்தின்படி, முன்னறிவின்படி, அவருக்குள் தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு" என பேதுரு நிருபத்தின் துவக்கத்தில் எழுதுகிறான். யூத கிறிஸ்தவர்கள், தேவனால் முன் தெரிந்து கொள்ளப் பட்ட மக்கள் ஆவர். கீழ்ப்படிதலின் மூலம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று, பரிசுத்தமாக்கப் பட்டீர்களே என முன்னுரையாக பேதுரு கூறுகின்றான். கிருபையும், சமாதானமும் உங்களை ஆளக்கடவது என ஆசீர்வதிக்கிறான். இதற்குப் பிறகு பேதுரு அநேககருத்துக்களை விளக்க முற்படுகிறான். அந்தக் கருத்துக்கள் யாவும் வேத சாஸ்திரக் கருத்துக்கள் அல்லது சரித்திர பூர்வமான கருத்துக்களாய் இருக்கின்றன. இந்தக் கருத்துக்கள் யாவும், பேதுருவின் நடுநாயகக் கருத்தாகிய இயேசுவின் உயிர்த்தெழுதல், நம்முடைய உயிர்த்தெழுதல் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடையதாய் காணப் படுகின்றது.

வேத விளக்கம்

1 பேதுரு 1:1—21.

பின்னணி:—காலம் கி.பி.63.

இயேசுவின் உயிர்த்தெழுதல், நம்முடைய

தங்கவசனம்:- நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ....உண்டாவதாக. 1பேதுரு 1:3

உயிர்த்தெழுதலுக்கு ஆணி வேராய் அமைந்திருக்கின்றது என பேதுரு பிரசங்கிப்பதாக அப்போஸ்தல நடபடிகளில் படித்தோம். இதைத்தான் பேதுருவின் முதலாம் நிருபமும் வலியுறுத்திக் காட்டுகின்றது. பேதுரு தொடர்ந்து பிரசங்கித்த சுவிசேஷத்தை அறியும் பொருட்டாகத்தான், நாம் இப்போது பேதுருவின் முதலாம் நிருபத்தை படிக்கப் போகிறோம். இதில் 4 பாடங்கள் உள. இயேசுவின் உயிர்த்தெழுதல்தான், கிறிஸ்தவன் பெறக்கூடிய சிலாக்கியங்களுக்கு திறவுகோல் என இவ்வாரப்பாடத்தில் படிக்கப் போகிறோம். இயேசுவின் உயிர்த்தெழுதல்தான் கிறிஸ்தவனுக்கு இம்மையில் வல்லமையினையும் மறுமையில் நம்பிக்கையினையும் தருகின்றது.

பேதுரு தன்னுடைய நிருபம் எழுதப்பட்ட காலத்தைக் குறிப்பிடவில்லை. ரோமாபுரியில் பெரிய தீ விபத்தொன்று கி.பி.63,64ல் ஏற்பட்டது. இக்காலத்தில் தான் முதலாம் நிருபம் எழுதப்பட்டிருக்க வேண்டும். (இந்த தீ விபத்துதான், நீரோ இராயன், கிறிஸ்தவர்களை சித்திரவதைப்படுத்த காரணமாய், சந்தர்ப்பமாய் மாறிற்று.) இந்த நிருபம் சின்ன ஆசியாவின் வடக்குப் பகுதியில் ஜீவித்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டதொன்றாகும்.

1 பேது. 5:13ன் படி பேதுரு இந்நிருபத்தை பாபிலோனிலிருந்து எழுதியிருக்கக் கூடும். அநேகர் இந்தப் பெயரை ரோமாபுரிக்கு கொடுக்கப்பட்ட பட்டப் பெயர் எனக்கூறுகின்றனர். இந்த நிருபம் ரோமசித்திரவதைகள் துவங்குமுன் எழுதப்பட்டதால், அதற்கு (ரோமிற்கு) பட்டப் பெயர் கொடுக்க வேண்டியதில்லையென அபிப்பிராயப்படுகின்றனர். மாற்குவின் பெயரும், சில்வானின் (சீலா) பெயரும் கூறப்பட்டிருப்பதால் இது ரோமையே குறிக்கும் என்கிறார்கள். பவுல் முதல்தடவை ரோமிலிருந்து விடுதலையாக்கப்பட்டான். ஆகவே பவுலோ அல்லது சீலாவோ இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தில் ரோமில் இருந்தனர் என்று கூறமுடியாது. இரண்டாவது தடவை பவுல் கைதான போது, மாற்குவை இங்கே கூட்டிவா என தீமோத்தேயுவுக்கு அவன் கட்டளையிட்டிருக்கலாம். (2தீமோ. 4:11) ஆகவே மாற்கு ரோமில், அந்தநேரத்தில் இல்லையென்பது தெரிகிறது. பேதுரு தன் ஊழியத்தை "விருத்தசேதனம் செய்த" யூத மக்களிடையேநிறைவேற்றினான்.

பாலஸ்தீனாவுக்கு அடுத்ததாக, அன்று யூத மக்கள் நிறைந்திருந்த பட்டணம் பாபிலோன் ஆகும். இவைகளை கருத்தில் கொண்டு, இந்நிருபம் எழுதும்போது, பேதுரு பாபிலோனில் இருந்தான் என்று அபிப்பிராயப்படலாம். ரோமாபுரி, ஒரு கிறிஸ்தவ நகராய் இருந்தது எனக்கூறி, அதைப் பெருமைப்படுத்தவே, பேதுரு, ரோம் நகரில் இருந்தான் என்ற பாரம்பரியம் உலாவுகின்றது.

1 ஜீவனுள்ள நம்பிக்கை:— 1பேதுரு 1:1-5

(அ) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் அஸ்திபாரமிடப்பட்டது: 1பேதுரு 1:1-3

அழைக்கப்பட்ட "பரதேசிகளுக்கு" என பேதுரு தன் நிருபத்தை எழுத ஆரம்பிக்கும்போது கூறுகிறான். (தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகள்; தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்தவர்கள் இவ்வுலகம் தங்களுக்குரியது அல்ல என்று கூறும்போது பரதேசிகளாய் எண்ணப்படுகிறார்கள்.) அவர்கள் சிதறியிருக்கிறார்கள். (பாலஸ்தீனாவுக்கு வெளியே வசித்ததால், சிதறியிருக்கும் யூதர்கள் என்றே கூறுவர்.) பேதுருவின் இந்த நிருபம் புறஜாதிய கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது போல தோன்றினாலும், அது உண்மையில் யூத கிறிஸ்தவர்களுக்கென்றே எழுதப்பட்ட நிருபமாகும். "தேவனுடைய முன் தீர்மானத்தின்படி தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள்" என்ற பதத்திற்கு அநேக விளக்கங்கள் கூறப்படுகின்றன. யூத கிறிஸ்தவர்கள் புறம்பாக்கப்பட்டவர்களாயும், சிதறிய மக்களாயும் இருந்தாலும் கூட, இன்னும் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள்தான் என்ற கருத்தை பேதுரு இங்கு வலியுறுத்த முற்படுகிறான். பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதலின் மூலம் இதைத் தெரிந்து கொள்ளலாம் என பேதுரு கூறுகிறான். இயேசு கிறிஸ்து தம்முடைய தாழ்மையின் மூலம், இரத்தம் சிந்தி, இந்த சிலாக்கியத்தை நமக்கு அருளியுள்ளார். பரிசுத்தமாக்கப்பட, இயேசுவின் இரத்தமே வழியாக உள்ளது. (இயேசுவின் இரத்தம் தொடர்ந்து நம்மை கழுவுகின்றது. இயேசுவின் இரத்தத்தால் புதிய ஆசீர்வாதமும், புதிய உடன்படிக்கையும் உருவாகியுள்ளது). (எபி. 12:24).

(ஆ) முழு சுதந்தரம் வாக்களிக்கப்படுகிறது:- 1பேதுரு 1:4,5

இயேசுவின் உயிர்த்தெழுதல், நம்முடைய உயிர்த்தெழுதலுக்கு நம்பிக்கையூட்டு

வது மாத்திரமல்ல, வருங் காலத்திற்குரிய நிச்சயத்தை யும் அளிக்கின்றது. ''சுதந் திரம்'' என்ற பதம். பழைய ஏற்பாட்டிலே தேவனின் இரு வாக்குத்தத்தங்களைக் குறிக்கும் பதமாக உள்ளது. கானானை நீங்கள் சுதந்திர வீதப்பங்காக எடுத்துக் கொள்ளலாம் என இஸ்ர வேல் மக்களிடம் தேவன் கூறினார். (உபா. 15:4; 9: 10) இந்த சுதந்திரப் பங்கு உலகப்பிரகாரமான பொரு ளாகும். அழியக் கூடியது. கானானியர்களின் பாவத்தி னால் அந்த தேசம் தீட்டுப் பட்டிருந்தது. (லேவி. 18:27, 28) ஆபிரகாம் பரலோக கானானாகிய எருசலேமைப் பற்றிய தரிசனத்தைப் பெற் றிருந்ததால்தான், இப்பூவு லக கானானில் வசிக்க மகிழ்ச்சி கொண்டான். (எபி. 11:13-16)

சுதந்தரம் என்ற கருத் திலே இன்னொரு பகுதியும் உள்ளது. அதாவது தேவனே அவர்களின் சுதந் தரமாயும், உடைமையாயும், பரிசாகவும் மாறி விடுகிறார். (சங். 16:5; 73:25; 119:57; புலம்பல் 3:24; ஆகி. 15:1)

புதியஏற்பாட்டிலும் 'சுதந் திரம்' என்றபதத்திற்கு இரு வித கருத்துக்கள் உள. ஆயிரவருட அரசாட்சியும், புதிய வானமும், புதிய பூமி யும், புதிய எருசலேமும் வரப் போகின்றது. ஆனாலும் நம் முடைய நம்பிக்கை கிறிஸ்து வைச் சார்ந்துள்ளது. தேவ னுடைய உன்னத அழைப் பின் பரிசை அவரிடம் பெற் றுக் கொள்ளுகிறோம். (மேலாக அழைப்பு) (பிலி. 3: 14) இயேசுதான் நம்முடைய நம்பிக்கையாயும், நம்முடைய உடைமையாயும், நம்முடைய சுதந்தரமாயும், நம்முடைய பரிசாகவும் இருக்கின்றார். அவர் இவ்வுலகிற்கு திரும்ப வரும்போது, அவருடைய மகிமையினையும், சிங்காச னத்தையும் சுதந்தரிக்கத் தக்கதாக நாம் அவரைப் போல் மாறுவோம்.

நம்முடைய சுதந்திரம் ஏற்கனவே தயாராக்கப் பட்டு. பரலோகில் ஆயத்த மாய் உள்ளது என கிரேக் கச் சொல் கூறுகின்றது. எந்தக் காரியமும் இதை கொடுக்கவோ, மறைக் கவோ, குறைக்கவோ முடி யாது. (மத். 6:19-21 ஐப் பார். கொலோ. 2:3;3:1-4, 24). இது ஒருவகை இரட் சிப்பாகும். (வருங்கால விடு தலை; பிலி. 3:20,21; 1யோ. 3:2 இது கடைசி காலத் தில் ஆயத்தமாய் உள்ளது. இயேசுவைத் தேவன் இப் பூவுலகிற்கு மறுபடியும் அனுப்பும்போது, அப். 3: 19,20).

விசுவாசத்தின் வல்லமையினால் நம்மைத் தேவன் இப்பூவுலகில் காத்து வருகிறார். நம்முடைய பெரிய இரட்சிப்பை நாம் இழந்து விடுவோமானால், நம்முடைய நபிக்கையும், நம்மை விட்டு வழுவிப்போம். (எபி. 2:1,3). தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். நாம் நம்முடைய விசுவாசத்தை காத்து, அவர் பேரில் நம்பிக்கையாய் இருப்பதே, நாம் இப்போது செய்ய வேண்டிய காரியமாகும். (1பேதுரு. 4:19).

2 சோதிக்கப்பட்ட விசுவாசம்—**நம்பிக்கை:-** 1பேதுரு 1:6-12.

(அ) சோதனை வருவது நல்லது:- 1பேதுரு 1:6,7.

நம்முடைய நம்பிக்கையே நம்மை சந்தோஷப்படுத்த போதுமானதாய் இருக்கின்றது. (சந்தோஷத்தினால் சத்தமிடலாம்). நமக்கு சோதனைகளும் பாடுகளும் வந்தாலும் கூட, நாம் சந்தோஷமாகவே இருக்கிறோம். (துன்பம், துக்கம், வியாகுலம் வந்தாலும்)

நமக்கு இருக்கிற பாடுகள் ஒரு சில காலத்திற்கு மட்டும் தான் என எண்ணும்போது அதுவே நமக்கு சந்தோஷத்தைக் கொண்டு வருகின்றது. (கொஞ்ச காலத்திற்கு நமக்கு இந்தப் பாடுகள் உண்டு. 2கொரி. 4:17). நாம் இவ்வுலகில் பாடுபட வேண்டிய அவசியமும் இருக்கின்றது. நம்முடைய பாடுகள் தேவனுடைய திட்டத்திலே, ஒரு நோக்கத்தை உடையதாய் இருக்கின்றது. நாம் பாடுபடுவதின் மூலம் சுவிசேஷம் பரவுகின்றது. தேவனுடைய இராஜ்யம் விரிவடைகின்றது. நம்முடைய பாடுகள், நம்முடைய விசுவாசத்தை அக்கினியில் இட்டு, தீமையானவைகளையெல்லாம் விலக்கி விடுகின்றது. அழிந்து போகும் பொன் அக்கினியினால் சோதிக்கப்படுகின்றது. நம்முடைய விசுவாசம் தங்கத்தைவிட மேலானது, இயேசு இப்பூவுலகிற்கு இரண்டாம் தடவை வரும்போது, நமக்கு கனமும் மகிமையும் உண்டாகும் ஆதலால், நம் விசுவாசம் சோதிக்கப்படுவது நல்லதே.

(ஆ) இப்போதுள்ள சந்தோஷம்:- 1பேதுரு 1:8-12.

நம்முடைய நம்பிக்கையை அனுபவிக்க, இயேசு வரும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. நாம் இப்பொழுது தொடர்ந்து விசுவாசிப் போமானால், இயேசுவைக் காண முடியாவிட்டாலும், அவருடைய அன்பி

லும், ஐக்கியத்திலும் பிரவேசிக்கக் கூடும். நாம் தொடர்ந்து விசுவாசிக்கும்போது, நம்முடைய சந்தோஷம் மிகுந்து, களிப்படையலாம். மனித வார்த்தைகளினால் விசுவாசிக்கக் கூடாத சந்தோஷத்தை நாம் அடைவோம். (1யோவா. 2:9,10).

நம்முடைய ஆத்தும இரட்சிப்பிற்காக காத்திருக்க வேண்டியதில்லை; ஆகையால் நாம் களிகூரக் கடவோம். (நம்முடைய உள்ளான மனிதனின் இரட்சிப்பும் கூட) நம்முடைய விசுவாசத்திற்கு அச்சாரமாக, நாம் இப்பொழுதே இரட்சிப்பை சுதந்தரித்துக் கொள்ளுகிறோம். இப்பொழுதே நாம் பாவத்திலிருந்து விடுபட முடியும். கிறிஸ்துவில் புது சிருஷ்டியாகி, (2கொரி. 5:17) நம்முடைய உள்ளான மனுஷனில் அனுதினமும் புத்தொளி பெற முடியும். (2கொரி. 4:16).

இந்த விதமான இரட்சிப்பின் வெளிப்பாட்டிற்காக ஏனோக்கு, ஆபிரகாம் போன்ற தீர்க்கதரிசிகள் காத்திருந்தார்கள். காலம் நிறைவேறின போது, அது நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் உள்ளே இருந்த கிறிஸ்துவின் ஆவி இந்தச் செய்தியையும், ஆவலையும், அவர்களுக்குக் கொடுத்தது. இதே பரிசுத்த ஆவியானவர் தான் பேதுரு பேச வார்த்தைகளை அருளினார். மற்ற அப்போஸ்தலர்களும் பேசவழி வகுத்தார். இந்த நற்செய்தியை கேட்க தீர்க்கதரிசிகளும், தூதர்களும் ஆவலாயிருந்தார்கள்.

ஆகவே பழைய, புதிய ஏற்பாட்டு பக்தர்களின் நம்பிக்கை ஒன்றாகவே உள்ளது. தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் ஆகியவர்களின் செய்தியிலே அடிப்படை ஒற்றுமை காணப்படுகிறதைக் காணலாம். மேலும் இரு பேரின் நம்பிக்கையும் ஒன்றாக இருப்பதையும் காணலாம். (பழைய-புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள்.)

3 சவால் விடும் விசுவாசம் நம்பிக்கை

1பேதுரு 1:13-21

(அ) கிரியை செய்ய அழைக்கப்படுதல்:- 1பேதுரு 1:13.

கிறிஸ்தவ நம்பிக்கையைப் பற்றியும், கிறிஸ்துவுக்குள் நமக்கு இருக்கும் சுதந்திரத்தைப் பற்றியும் வேதாகமம் நமக்கு தெளிவாக கூறுகின்றது. நம்முடைய ஆர்வத்தை திருப்திபடுத்துவதற்காக தேவன் எதிர்காலத்தைப்பற்றி நமக்கு வெளிப்படுத்தாமல், நாம் அவருக்காக இவ்வுலகில்

...க்கவே அதை வெளிப் ...த்தியுள்ளார். நம்மை கல் ...ளாக மாற்ற பரிசுத்த ...வியானவர் நமக்குப் போதி ...பால், அன்றாட கிறிஸ்தவ ...யத்திற்குரிய அடிப் ...டையை அறிந்துகொள் ...வே, அவர் போதிக்கின் ...

...நம்முடைய நம்பிக்கைக் ...தக்கதாக, நம்முடைய ...னதை நன்கு பக்குவப் ...டுத்த வேண்டும். (கிரியைக் ...கமனதை ஆயத்தப்படுத் ...தல்; தீவிரமாக சிந்தித்து ...சயல்படல்) நாம் சாந்த ...மனமுள்ளவர்களாய் ...க்கவேண்டும். (குழப்பங் ...ளிலிருந்து விடுபட்ட ...னதை உடையவர்களாயி ...க்கவேண்டும்.) கிறிஸ்து ...மூலம் நமக்கு வருகின்ற ...பையின் மேல், நம்மு ...டைய நம்பிக்கையை வைக்க ...வண்டும். (சுயத்தினால் நம் ...டைய கிரியைகள் வெளி ...மல், அவருடைய கிரு ...பினால் நாம் கிரியை ...பகிறோம்.)

...) பரிசுத்தத்திற்காக அழைக்கப்படுதல்:- 1பேதுரு 1:14-21

...நாம் தேவனுக்காக ஜீவிக்க ...ண்டுமானால், இருவிதக் ...ரியங்களில் கவனமாய் ...க்க வேண்டும். ஒன்று ...ப்படிதல். (நாம் தேவனு ...டைய கிருபையைப் பற்றி அறியாதபோது இச்சைக ளுக்கு அடிமைப்பட்டுக்கிடந் தோம். இப்போது அவைகள் நம்மை ஆள ஒட்டாது காத் துக்கொள்ள வேண்டும்.) இரண்டாவது பரிசுத்தம். (தேவன் பரிசுத்தமாய்இருப் பதால் நம்மையும் பரிசுத்த மாக்க பிரதிஷ்டை செய்தல் அவருடைய சித்தத் திற்கு நம்மை அர்ப்பணித்து விட வேண்டும்; நம்முடைய பேச்சுகளும் அவர் வசனத் தின் தரத்திற்குத் தக்கதாய் இருக்க வேண்டும்).

நம்மை கீழ்ப்படிதலுக்கும், பரிசுத்தத்திற்கும் அழைக் கிற தேவன், பட்சபாத முள்ள நியாயாதிபதி அல்ல, நம்முடைய மோசமான ஜீவி யத்தினால் நாம் மீட்கப்படா மல், விலையேறப் பெற்ற கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டோம். ஆகவே நாம் பயத்தோடும் நடுக்கத் தோடும் அவரை சேவிக்க வேண்டும். நாம் அவருக்காக மாத்திரம் இவ்வுலகில் ஜீவிக் கும்போது, அவரை நாம் கனப்படுத்தும் மக்களாக மாறுகின்றோம்,

நம்முடைய முற்பிதாக்களி டமிருந்து பழைய பாவமான வாழ்க்கையை சுதந்தரித்துக் கொண்டோம். யூதனும், புற ஜாதியனும், இவ்விஷயத்தில் ஒன்றாகவே இருக்கிறார் கள். பெருமையான சபைப் பாரம்பரியத்தை பின்பற்று

கிற மக்களும், இக்குணாதிசியத்தையே வெளிப்படுத்துகிறார்கள். நமக்குப்பதிலாக, இயேசு மாசற்ற பரிசுத்தமான, தேவனின் பலியாடாக மாறியுள்ளார். அவர் தம்மையே பரிசுத்தமான பலியாக தேவனிடம் ஒப்புவித்து உள்ளார். நாம் அவர் மூலமாக தேவனை விசுவாசிக்கவும், தேவனோடு தனிப்பட்ட விசுவாசம், நம்பிக்கை கொள்ளத் தக்கதாகவும் இயேசுவை, தேவன் உயிரோடு எழுப்பி, பரலோகில் கனத்தை அருளியுள்ளார். வேறு வார்த்தையால் சொல்லப் போனால், நாம் வேறு யாருடையவிசுவாசத்திலும், அனுபவத்திலும் சார்ந்து ஜீவிக்க முடியாது. நம்முடைய ஜீவனுள்ள நம்பிக்கையைப் பொறுத்த மட்டில், நமக்கு விசுவாசமும், அவரின்பேரில் தத்தம் செய்யப்பட்ட வாழ்க்கையும் தேவையாய் உள்ளது.

வாழ்க்கையோடுள்ள தொடர்பு

(1) ஆவியானவர் நம்மை எப்படி பரிசுத்தமாக்குகிறார்?

உண்மையான கருத்துக்களை நாம் கூறுகின்றோம் (சில நேரங்களில்) ஆனால் நாம் அதை விவரித்துக் கூறமுடியாமல் இருப்பதால் அவை அர்த்தமற்றதாகி விடுகின்றன. நாம் பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப் படுகிறோம் என்று கூறுவது இதற்கு ஓர் சிறந்த உதாரணம் ஆகும். தான் எதை நினைக்கிறான் என்பதை பேதுருவால் விளக்கிக் கூறமுடியவில்லை. மேலும் நிருபத்தை வாசிக்கின்ற மக்களுக்கும் ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன என்பது அவர்களுக்குத்தெரியுமாதலால், அவர்களுக்கு விளக்கி, பேதுரு எழுத வேண்டிய அவசியமும் கிடையாது. பேதுரு என்னதான் கூறுகிறான் என்பதை வேதத்திலுள்ள மற்றவசனத்தின் மூலம் அறிய முற்படுவோம்.

மற்ற வேதபகுதிகளை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது பரிசுத்தமாக்கப்படுதல் என்ற பாடத்தில் இரு வித கருத்துக்கள் இருப்பதாக தெரியவருகின்றது. முதலாவதாக, பாவமான காரியங்களை பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தி, அவர் நம்மை அதினின்று பரிசுத்தமாக்குகிறார் என்று காண்கிறோம். (உலகத்தினின்று நம்மை பிரித்தெடுத்து விடுகிறார்). (யோ. 16:13). நாம் ஆவியின்படி நடப்போமானால் மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டோம் என பவுல் கலா.5:16ல் கூறுகிறார். நாம் பாவத்திலிருந்து

வெளியே வழிநடத்தப்பட்டு, ...வியனவரால் நீதிமான் ...ஆக்கப்படுகிறேம்.

இரண்டாவதாக தேவன் ...மை வல்லமை படுத்தி, ...தின் மூலம் பரிசுத்தமாக் ...கிறார். ஆவியினால் பிறந்த ...னிதன், பாவத்தினைச் செய்யாமல் இருக்க பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கி ...ர். பரிசுத்தமாக்கப்பட்ட ...வியத்தின் மூலமே ஆவி ...ன் கனிகள் வெளிப்படு ...கின்றன. (கலா 5:22,23). ...க்கத்தைசட்ட பூர்வமாய் ...டை பிடிக்க உதவுவது ...கிறிஸ்தவமதம் என்ற எண் ...ணத்தை மக்கள் மனதிலி ...ந்து அகற்றிவிட வேண் ...டு. பாவ பிரச்சனையை ...பொருத்தமட்டில் பரிசுத்த ஆவியானவர் தன்னைப் பரி ...சுத்தமாக்க ஒப்புவித்து விடு ...வதுதான் கிறிஸ்தவன் ...குத்துள்ள வழி முறை ...யாகும்.

...எப்படிப்பட்ட விசுவா ...இரட்சிப்பைக் கொண்டு ...ம்?

இவ்விஷயத்தை ஆராயும் ...பாது, விசுவாசததிற்கு ...நவித அர்த்தங்களை நாம் ...கொடுக்கலாம். விசுவாசம் ...ன்பது நம்பிக்கைகளின் ...ட்டு, அல்லத பிரமாணங் ...களின் கூட்டு எனக்கூற ...லாம். விசுவாசம் என்பது பிரமாணங்களின் மேல் வைக்கும் நம்பிக்கை என்றும் கூறலாம். 1பேதுரு1:5ல் இரண்டாவது அர்த்தத்தையே பேதுருவலியுறுத்திக் கூறுகிறான்.

பெந்தெகொஸ்தே வட்டாரத்தில் விசுவாசம் என்று கூறும்போது, அது இரண்டாவது அர்த்தத்தையே குறிக்கும். இப்படி ஒரு கேள்வி எழும்புகிறது:- கிறிஸ்துவின் மேல் ஒருவன் விசுவாசமுடையவனாய் இருந்தும், இரட்சிக்கப்படாமல் இருப்பானா? இக்கேள்விக்கு விடையளிக்க வேண்டுமானால், முதலாவது நாம், விசுவாசத்தின் பல நிலைகளைப்பற்றி படிக்க வேண்டும்.

நம்புதல் என்கிற காரியத்தோடு விசுவாசத்தை இணைத்துக் கூறிவிடுகிறோம். இப்படி நாம் இணைத்துப் பேசும்போது, விசுவாசத்தில் உள்ள இரட்சிப்புக்கு ஏதுவான காரியங்கள் மறைந்து போய்விடுகின்றன. "பிசாசுகளும் விசுவாசித்து கீழ்ப்படிகின்றன" என யாக்.2:19ல் காண்கிறோம். ஒரு கடவுள் உண்டு என்று பிசாசு விசுவாசிக்கிறது. ஆனால் இதுஇரட்சிப்புக்கு போதுமான விசுவாசம் கிடையாது. இரட்சிப்புக்கு வழி நடத்துகிற விசுவாசத்தில், நம்பிக்கை, கீழ்ப்படிதல்,

தத்தம் செய்தல் ஆகியவை அடங்கியிருக்க வேண்டும்.

பேதுரு கூறுகிற விசுவாசம் மூளை அறிவோடு மாத்திரம் நின்றுவிடாமல், அது இன்னும் ஆழமான அர்த்தம் உடையதாய் இருக்கின்றது. இருதயத்தை தேவனிடம் அர்ப்பணிக்கும் காரியமும் இதில் அடங்கியுள்ளது. ஒரு குறிப்பிட்ட பிரமாணத்தில் முதலில் விசுவாசம் வைத்து, பிறகு கிறிஸ்துவின் அறிவில் சார்ந்தால், அவன் இரட்சிக்கப்படக்கூடும்.

(3) தேவன் பட்சபாதமற்றவரென்றும், அவர் ஒவ்வொருவருடைய கிரியைக்கும் தக்கதாக நியாயம் தீர்ப்பார் என்பதும் உண்மைதாமா?

ஆமாம் என்று எளிதாக கூறிவிட்டால், உங்கள் வகுப்பினர் அதற்கு எதிர்ப்புக்கள் தெரிவிக்கக் கூடும். இந்தக் கருத்தை விளக்க, இப்படியொரு கேள்வி உங்கள் வகுப்பினரிடம் கேட்கவும் "கம்யூனிஸ்ட் சீனாவிலா அல்லது அமெரிக்காவிலா உங்கள் குழந்தை பிறக்க வேண்டும் என நீங்கள் வாஞ்சிக்கிறீர்கள்?" சமத்துவ அடக்கு முறை உள்ள தேசத்தில் தன் குழந்தை வளர்ந்து பெரியவனாகுவதைவிட, சுதந்திரமுள்ள நாட்டில் பிறந்து, வளர எந்தப் பெற்றோரும் வாஞ்சிப்பர். ஆகவே சுயாதீனமுள்ள தேசத்தில் நாம் தேவனைத்தேட அதிக வாய்ப்புக்கள் கிட்டும்.

ஆகையினால் இக்கருத்தை மனதில் கொண்டு, தேவன் பட்சபாதமுள்ளவர் என கணக்கிட்டு விடலாமா? ஒவ்வொருவரும், அவரவர் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயம் தீர்க்கப்படுவர் என பேதுரு கூறுவதில் ஒரு முக்கியக் கருத்துண்டு. இயேசுவைப்பற்றி கேள்விப்படாத ஒரு மனிதனுக்கு, நம்பிக்கை இருக்கிறது எனக் கூறுவதற்கு வேதாகமத்தில் ஆதாரம் இல்லை. ஆண்டவர் தாம் எதைச்செய்தாலும் நீதியாகவே செய்வார். தவறு செய்வதற்கு தேவன் ஞானமற்றவர் அல்ல. அதிக கொடூரமானவரும் அல்ல. அன்பும், பட்சமும் உடையவர்.

(4) பாடுகள் எப்படி ஆசீர்வாதமாக மாறமுடியும்?

பாடுகள் ஆசிர்வாதத்தைக் கொண்டு வரும் என்பது உண்மைதான். ஆனால் எல்லாப்பாடுகளும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் என்று கூறி விட முடியாது. தானாக வந்த பாடுகளா அல்லது, தானே வருவித்துக் கொண்ட பாடுகளா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். சாதாரணமாக பாடுகள்

ஆசீர்வாதமாக மாறும். பாடு களை நாம் ஆசீர்வாதமாக மாற்றிக் கொள்ள வேண் டும்.

தன்னுடைய சரீரத்திலே இருந்த முள்ளுக்காக, பவுல் மூன்று தடவை ஜெபித்தான். (2கொரி. 12:7,8). இந்த முள் என்பது எதைக் குறிக்கும் என்று தெரியவில்லை. ஆனால் பவுல் இதை எவ்விதம் மேற் கொண்டான் என்பது மாத் திரம் நமக்குத்தெரியும். இதிலி ருந்து இரண்டு காரியங்களை பவுல் கற்றுக் கொண்டான். (1) அளவுக்கு மிஞ்சி அதிக மாக உயர்த்த மாட்டான். (2) தேவனின் கிருபையை அறிய ஓர் சந்தர்ப்பம் கிட்டி யது.

சாத்தானும், பாவமும் செய்ததீவினையால், கிறிஸ்த வர்கள் பாடுகளுக்குள்ளாகி ருர்கள். இப்படியிருக்க வேண்டும், நிகழ வேண்டும் என தேவன் விரும்பவில்லை. பாவமற்ற, கஷ்டமற்ற உல கினை உருவாக்கவே தேவன் வாஞ்சித்தார். ஆனால் தேவன் பாடுகளின் மூலம் தம் பிள்ளைகளை ஆவிக்குரிய வழிகளில் வளர்க்க முயற் சிக்கிருர். பாடுகளின் மூலம் நாம் கிறிஸ்துவில் பலப்படு வோம். பாடுகள் ஆசீர்வாத மாக மாறும் என்று எண்ணி கிறிஸ்தவன் சந்தோஷப்பட வாய்ப்பு இருக்கிறது.

———

கிறிஸ்தவனின் திடமான அஸ்திபாரம்

வேதபகுதி:- 1பேதுரு 1: 22-28

போதிக்கும்திட்டம்

புதிய ஏற்பாட்டிலிருந்து கீழ்க் காணும் ஐந்து பகுதிகளை, உங் கள் வகுப்பிலுள்ள 5மாணவர்கள் எழுந்து வாசிப்பதின் மூலம், இவ் வார பாடத்தை அறிமுகப்படுத்த லாம். யோவான்1:1; ரோமர்.9:6; 10:17; 2கொரி4:2, எபி11:3. இவைகளையெல்லாம் வாசித்து முடிந்த பிற்பாடு, வசனம் என்ப தற்கு என்ன அர்த்தம் எழுத்தா ளர்கள் கொண்டுள்ளர்கள் என் பதை விளக்க முற்படுக.

வசனம் அல்லது வார்த்தை என்பதற்கு பல அர்த்தங்கள் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட் டுள்ளது. வசனம் என்பது இரண்டு கிரேக்க ஆதாரச் சொல் லினின்று எழுந்தவையாகும் ''ரீமா'' (Rhema) என்ருல் சொல்லுதல்; பேச்சு, காரியம், பொருள் என்று பல அர்த்தங்கள் உள. ''லோகாஸ்'' என்ருல் வார்த்தை அல்லது வசனம், பேச்சு, பொருள், காரணம் என்று பல அர்த்தங்கள் உள. (Logos) கிறிஸ்து தான் வசனம் என்று கூறும் இடத்தில் ''லோகோஸ்'' என்ற பதம்உபயோகிக்கப் பட்டுள் ளது. (யோ.1:1)

வேத விளக்கம்

1பேதுரு 1:22-2:8;2பேது.1:15-21

பின்னணி:-

காலம் கி.பி. 63. (முதல் பேதுரு) கி.பி. 66-67 (இரண்டாம்பேதுரு) தீர்க்கதரிசன வசனத்தின் நிறை வேறுதலை, பேதுரு பிரசங்கிக்கும் போது, கூறினுன் என்று அப் போஸ்தல நடபடிகளில் காண்கி ரோம். பேதுருவின் தன் நிருபத்தி லும் இதையே வலியுறுத்திக் கூறு கிருன். தான் பிரசங்கிக்கிறதான சுவிசேஷம், தேவனுடைய வசனம் என்று ஆதாரப்பூர்வமாகக் கூறு கிருன்.

சுவிசேஷத்தையும், கிறிஸ்தவ விசுவாசத்தையும், நாம் ஆணித் தரமாகநம்பலாம் என, இவ்வாரப் பாடத்தின் இறுதிப்பகுதியில் காண்கிரோம். இவ்வாரப் பாடத் தின்இறுதிப் பகுதி 2ம் பேதுருவி லிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது நிருபம் பொது வாக கிறிஸ்தவர்களுக்கென எழு தப்பட்டுள்ளது. பேதுருவின் மர ணத்திற்கு முன்பாக, கி. பி. 66, அல்லது 67ல், இரண்டாம் நிருபம் எழுதப்பட்டிருக்க வேண்டும். (ரோமிலிருந்து இரண்டாம்நிருபம் எழுதப்பட்டது என கூறுகிருர்கள்

தங்கவசனம்:- அந்தப்படியே; இதோ,........வேதத்திலே சொல்லியிருக்கிறது. 1.பேதுரு 2:6

...தற்கு எந்த விதமான ஆதார ...ம் கிடையாது.)

(...) நம்மோடு தங்கும் வார்த்தை அல்லது வசனம் ...பேதுரு 1:22—25.

(அ) வசனத்தின் சத்தியம் அன்பி...ல் காட்டப்பட்டுள்ளது:- ...பேதுரு 1:22

மனிதனுடைய வெறுமையான பாரம்பரியங்களினின்று, இயேசு...வின் இரத்தத்தால் மீட்கப்பட்டோம் என போனவாரப் பாடத்...தில் படித்தோம். கீழ்ப்படிதலுக்...கும், பரிசுத்தத்திற்கும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம். சத்தி...யத்திற்கு கீழ்ப்படிந்த பிறகு, நாம் நம்முடைய ஆத்துமாவை, சகோதர சகோதரிகளுக்கு ஆசீர்...வாதம் தருவிக்கும் வாய்க்கால்க...ளாக விளங்க வேண்டும். பரிசுத்...தத்தை வசனம் பிறப்பிக்காவிட்...டால், அது தன் வேலையை செய்து முடித்து விட்டது என்று கூற முடியாது. வசனமானது அன்...பினையும் பிறப்பிக்க வேண்டும். (யோவான் 13:35; ரோமர் 12:9, ...13:8-10; கலா.5:13,14;எபேசி ...1,2)

இந்த அன்பு நம்முடைய ஒத்து...ழைப்பு இல்லாமல் மற்றவர்களி...டம் பாய்ந்து செல்லாது. ஆகவே நாம் ஒருவருக்கொருவர் உயர்ந்த ...சுத்த, சுயநலமில்லாத கல்...லாரி அன்பினால் தொடர்ந்து ...ணக்கப்பட வேண்டும் என வே...தகமம் கூறுகின்றது. (ஆர்வத்...தோடு, தொடர்ந்து நம் சகோத...ரர்கள் மேல் அன்பு கூற வேண்...டும். சூழ்நிலையானது நம் அன்...பை அதைரியப்படுத்தி குறைத்து ...விடாதபடி நாம் விழிப்பாயிருக்க வேண்டும். (ரோமர்.5:8) ...நம்முடைய அன்பை, அன்பின் ...கிரியைகளினாலும், சாந்தகுணத்தி...னாலும் வெளிப்படுத்த வேண்டும். ...கொரி.13; யோவான்3:16-18.)

இப்படிப்பட்ட அன்புதான், நாம் விசுவாசமுடையவர்களாய், கீழ்ப்படிதல் உடையவர்களாய், பரிசுத்தமுள்ளவர்களாய், தேவ பயமுள்ளமுள்ளவர்களாய், வசனத்தைக் கனப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம் என்பதற்கு அர்த்தத்தையும், கனத்தையும் கொடுக்கிறது. (1யோ.2:10,11; 4:20, 21) இந்த அன்பானது ஆவியானவராலும், அவரின் வசனத்தாலும் ஏவப்பட்டதாய்இருக்க வேண்டும்,கர்த்தருடைய வசனமே சத்தியமாகும். இந்த சத்தியம் தான் பரிசுத்த ஆவியின் கருவியாக உள்ளது. இந்த கருவியின் மூலமாகத் தான், (வசனம்) கர்த்தர் நம்மிடம் காண விரும்புகிற பரிசுத்தத்தையும், அன்பையும், பரிசுத்த ஆவியானவர் நம்மில் உருவாக்குகிறார்.

(ஆ) ஜீவனுள்ளதும்- நிலையானதும் (நித்தியமானது):- 1பேதுரு 1:23-25.

தேவன் நித்தியமானவர். அது போல மறுபடியும் பிறக்கும் ஜீவியமும் நித்தியமானது. சகோதரர்களை நேசிக்கும் மனப்பான்மை புது ஜீவியத்தின் ஓர் முக்கியப் பகுதியாகும். நாம் அழிவுள்ள வித்தினால் அல்ல; என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம். வசனம் ஜீவனுள்ளது. ஆகையால், அது நித்தியத்திற்கும் நிலைத்து நிற்கிறது.

இந்தக் கருத்தை வலியுறுத்தத் தக்கதாக பேதுரு. ஏசாயா 40:6-8 வரையுள்ள வசனத்தை நமக்கு சுட்டிக் காட்டுகிறான். மனிதன் சொல்லும், செய்யும் காரியங்கள் எல்லாம், காலையில் பூத்து மாலையில் அறுப்புண்டு போகிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது. கர்த்தருடைய வசனம் என்றும் நிலைத்து

நிற்கிறது. ஆனாலோ, மனிதனின் மகிமையும், ஞானமும், அழகும் சீக்கிரம் மறைந்து போய் விடுகின்றது. மனிதனுடைய அறிவிப்புகளையும், வாக்குத்தத்தங்களையும், விளக்கங்களையும் சிறிது ஆராய்ந்து பாருங்கள். அவைகள் யாவும் தற்காலிகமானவை. விஞ்ஞானத்தின் கொள்கைகளை நோக்கிப் பாருங்கள். அவைகள் எல்லாம் குறுகிய கால அளவையுடையவை. விஞ்ஞானக் கருத்துக்கள் நமக்கு எவ்வளவு தான் நன்மை செய்தாலும், மனித வாழ்வை புத்துயிர் பெறச் செய்ய அவைகளால் இயலாது. மாறாத, நித்தியமான தேவனுடைய வசனமே நமக்குத் தேவை. காலங்கள் மாறலாம்; ஆனால் வசனம் ஒரு போதும் மாறாது. தேவனை வெளிப்படுத்த, ஜீவியத்தை மாற்ற, தேவனின் ஊழியம் செய்ய, பரிசுத்த ஆவியானவர், இன்னும் வசனத்தையே உபயோகித்து வருகிறார்.

2 திடமான அஸ்திபாரம்:—
1பேதுரு 2:1-8

(அ) வளர்ச்சிக்கு:-1பேதுரு 2:1-3

ஆவிக்குரிய வளர்ச்சிக்கு வசனமும் ஒரு ஏதுகரமாக, காரணியாக விளங்குகின்றது. நாம் ஆவிக்குரிய ரீதியில் வளர வேண்டுமானால், நமக்கு களங்கமில்லாத ஞானப்பால் தேவை. (சுத்தமான, கலப்படமற்ற ஞானப்பால்; மனதையும் ஆவியையும் போஷிக்கும் பால் தேவை)

வசனம் நமக்குள் வளர்ச்சியை கொண்டு வருமுன், நமக்குள் இருக்கும் துன்புறுத்தும் தன்மையினையும், தந்திரத் தன்மையினையும், மாய்மாலத்தன்மையினையும், பொறாமையினையும், மற்றவர்களைக் குறித்து தீதாய் பேசும் தன்மையினையும், புறம்பே சுதலையும் புறம்பே தள்ளி விட வேண்டும். மேற் கூறிய காரியங்களை நாம் களைந்து போடும்போது தான், ஆவிக்குரிய உணவாகிய வசனம் என்கிற பால் நம்முடைய ஆளத்துவத்தையும், ஆத்துமாவையும், ஆவியையும், மனதையும் பரிசுத்தப்படுத்தும். அப்பொழுது தான் வாழ்க்கையில் பிரச்சனை ஏற்படும்போது, வசனம் நம்மைத் தாங்கும். மேலும் பரிசுத்த ஆவியானவர் வசனத்தை கருவியாக உபயோகித்து, நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார். (யோவான் 16:13)

ஒரு புது அடிமைத்தனத்திற்குள்ளோ, அல்லது சட்டவரப்பிற்குள்ளோ நம்மை அடிமைப்படுத்தி விட வேண்டும் என வேதாகமம் கூறவில்லை. தேவன் கிருபை பொருந்தியவராய் இருக்கின்றார். (நல்லவர், சாந்தமானவர், பட்சம் உடையவர், நம்மை கஷ்டப் படுத்துகிறவர் அல்ல.) நீங்கள் என்னை ருசி பாருங்கள் என தேவன் கூறுகிறார். நீங்கள் இலவசமாக வந்து பருகுங்கள் எனக் கூறுகிறார். (சங். 34:8; யோ. 7:37)

(ஆ) ஆராதனைக்குரியது -1பேதுரு 2:4,5

நாம் தேவ வசனத்திற்கு செவி கொடுத்து, கிறிஸ்துவினிடம் வரும்போது, தேவவசனம் உண்மை என்பதை கண்டு கொள்ளுகிறோம். ஜீவனுள்ள கல்லாகிய இயேசுவை, மனிதர்கள் அற்பமாக எண்ணி புறம்பே தள்ளி விட்டார்கள். ஆனால் அந்தக் கல் தேவனால் விலை மதிக்க முடியாத கல்லாகவும் தெரிந்தெடுக்கப்பட்ட கல்லாகவும் மாறிற்று. (தேவனால் இயேசு கனப்படுத்தப்பட்டார்). நாமும் மறுபடியும் பிறந்த விசுவாசிகளாய் கிறிஸ்துவோடு பிரிக்க முடியாத ஐக்கியம் கொள்ளும்போது, நாமும் ஜீவனுள்ள கற்களாய் மாறிவிடுகின்றோம். இந்த கற்கள் ஒன்றாய் வைத்து கட்டப்பட்டு, (இசை

வாய்) ஆவிக்குரிய ஆலயமாக மாறிவிடுகின்றது. இந்த ஆலயம் தேவனை ஆராதிப்பதற்கும், ஆவியானவர் தங்குவதற்கும் ஏற்ற இடமாக மாறிவிடுகின்றது. (எபே. 2:22). நாமும் பரிசுத்த ஆசாரியர்களாய் மாறி, தேவனுடைய பலிபீடத்திலே, துதியின், விசுவாசத்தின், அர்ப்பணம் செய்வதின் பலிகளை யிடுகிறோம். (ரோமர்.12:1; பிலிப்.2:17; எபேசி.5:1,2).

(இ) முடிவில் கனத்தைக் கொடுக்கும்:- 1பேதுரு.2:6-8.

நாம் இதுவரை ஆராய்ந்து வருவது தேவவசனம்தான் என்பதைச் சுட்டிக் காட்டத்தக்கதாக, பேதுரு, ஏசாயா.28:16லுள்ள வசனத்தை மேற்கோளாக காட்டுகிறன். சீயோனிலேஒருகல்லைவைக்கிறேன; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பட்டதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும். இந்த மூலைக்கல் ஓர் ஆளாகும். அவரைத்தான் நாம் தொடர்ந்து விசுவாசிக்க வேண்டும். அப்படி நாம் செய்தோமானல், வெட்கப்படமாட்டோம். (நாம் ஓடிப்போகமாட்டோம் என எபிரேய அர்த்தம் கூறுகின்றது)

ஆகவே ஒரு விசுவாசிக்கு, இயேசு விலையேறப் பெற்றவராய் இருக்கிார். அவரின் கனத்தை நாமும் பெறுகிறோம். (வெட்கப்பட்டு போகாமல்). ஆனல் விசுவாசிக்காத மக்கள் விரும்பினலும், விரும்பாவிட்டாலும் சரி, இயேசு கனப்படுத்தப்பட்டு, கட்டிடத்தில் மூலைக்கல்லாய் இருப்பது கண்டுதான் ஆக வேண்டும். இப்படிப்பட்ட மக்களுக்கு தேவன் இடறல் கல்லாயும், எதிர்க்கும் கன்மலையாயும் இருப்பார். அதாவது அவிசுவாசியானவன் ஒரிடத்திற்கு வரும்போது, வசனமாகிய கல்லின் மேல் இடறிவிழுவான். (இயேசுவைப்பற்றிய வசனத்தின் மேல்). இப்படிப்பட்டவன் தொடர்ந்து விசுவாசியாமல் இருந்தால், அவர்கள் நித்திய ஆக்கினையை அடைவர். அவர்கள் இயேசுவிடம் திரும்பி, பாவத்தை அறிக்கையிடுவதுதான், இவர்களுக்குரிய ஒரே வழியாகும். அப்பொழுது வசனம் அவர்களுடைய பாதைக்கு தீபமாகமாறி, அவர்களும் கிறிஸ்துவின் கனத்தையும், மகிமையும் சுதந்தரிப்பார்.

(3) ஆவியினல் ஏவப்பட்டு எழுதப்பட்ட வேதவசனங்கள்:-

2பேதுரு 1:15-21.

(அ) புதிய தலைமுறைக்காக எழுதப்பட்டது:- 2பேதுரு.1:15.

பெந்தெகொஸ்தே அனுபவத்திற்கு பின்பாக உடனடியாக எந்த சுவிசேஷங்களும் , நிருபங்களும் எழுதப்படவில்லை. அப்போஸ்தலர்கள் போதிப்பதிலும், சாட்சியிடுவதிலும், சபையை எழுப்புதலிலும் வழி நடத்தி, சபையை பெருக்கி வந்தனர். சபையானது பல இடங்களிலும் பரவிச்சென்றதால், சத்தியத்தை பல சபைகளிலும் அறிவிக்கத்தக்கதாக எழுதப்பட்ட நிருபங்கள் தேவையாயிற்று. தன்னுடைய மறைவுக்கு பின், எழுதப்பட்ட நிருபங்கள் மிகமுக்கியமாக தேவை என பேதுருவும் உணர்ந்தான். ஆகவே கருத்துக்கள் நினைவில் அழியாமல் இருக்க, பாடுபட வேண்டும் என பேதுரு நினைத்தான். (எந்தக்காலத்திலும்; தேவை எழும்போது எல்லாம்). மாற்கு எழுதின சுவிசேஷத்தை அவன் பாதுகாத்து, அது எங்கும் வாசிக்கப்படத் தக்கதான முயற்சிகளை பேதுரு செய்வான் என்று இதிலிருந்து தெரிகின்றது. (மாற்கு எழுதின சுவிசேஷம் பேதுருவின் பிரசங்கத்தையே

அடிப்படையாக கொண்டுள்ளது என பாரம்பரியம் கூறுகின்றது. ஆனால் இது அப்போஸ்தல நடபடிகளில் காணப்படும் பேதுருவின் பிரசங்கத்திற்கு இசைந்து வராது.

(ஆ) உண்மையான கருத்தே தவிர, கற்பனையாய் எழுந்தவை அல்ல:- 2பேதுரு1:16.

தான் பிரசங்கித்தது உண்மையான சுவிசேஷ கருத்தே அல்லாமல், அது கற்பனையினின்று எழுந்த ஒன்று அல்ல என பேதுரு தொடர்ந்து கூற முற்படுகின்றார். அனேகர் இன்று வேதாகமத்தை புராண புத்தக வகையிலும், கதைப்புத்தக வரிசையிலும் வைக்க முயல்கிறார்கள். ஆனால் வேதாகம புத்தகம், அனேக பரிசுத்த நூல்களைப்போல, அல்லாமல், நிலைத்து நிற்கிற, பரிசுத்த நூலாய் உள்ளது. (அந்நிய மதங்களின் வேதபுத்தகங்களைப்போல அல்ல). அநேக வேத நூல்களில் பலவகையான தவறுகள் காணப்படுகின்றன. அவைகள் தந்திரமாக எழுதப்பட்ட கருத்துக்களை உடையதாய் இருக்கின்றது. (தந்திரமாக கண்டு பிடிக்கப்பட்ட; தவறாக வழி நடத்தத்தக்கதாய் உள்ள கருத்துக்கள் மிக உள்ளன). அந்த நூல்கள் எல்லாம் புராணக்கதைகளே தவிர. வேறு ஒன்றும் இல்லை. (கதைகள், மாயக்கதைகள்; புராணங்கள் என கிரேக்க மொழி கூறுகின்றது).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையினையும், அவரின் வல்லமையினையும் வேதாகமம் விளம்புகின்றது. ஆனால் இந்தக் கருத்துக்கள் மற்ற வேதங்களில் கூறப்பட்டது போன்ற கதை அல்ல. வேதாகமத்தின் எந்தப் பகுதியும் கதை அல்ல. ''மரங்களிலும், களிமண் பலகைகளிலும், சிலைகள் வடிவிலும், சுவர்களிலும், வேத வசனங்கள்'' (பத்தாயிரம்) எழுதப்பட்டுள்ளதை புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள். அக்கால கல்லறைகளிலும், பிரமிடுகளிலும் வசனங்கள் எழுதியிருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டு உலகிற்கு அறிவித்துள்ளனர். இந்த கண்டு பிடிப்புகள், வேதாகமத்தின் சரித்திரங்களையும், புவியியல் வருணனைகளையும், சூழ்நிலைகளையும், உண்மையென உறுதியிட்டுக் காட்டுகின்றன.

எந்த பரிசுத்த ஆவியானவர் வசனத்தை எழுத ஏவினாரோ, அதே ஆவியானவர், பேதுரு பிரசங்கித்த இயேசுவின் இரண்டாம் வருகையினையும் நமக்கு உண்மையென நிரூபித்துக் காட்டுகிறார். (வருகிறார் என்பதற்கு ''பாரைஸ்ஸியா'' என்ற கிரேக்கபதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. இதின் அர்த்தம் ''வந்துவிட்டார்'' என்பதாகும். பழங்காலத்தில் இதை ராஜரீக பவனிக்கு. பிரயாணத்திற்கு உபயோகப்படுத்துவர். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்க இப்பதம் 17 தடவைகள், புதிய ஏற்பாட்டில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. வரப்போகிற மனிதனின் பிரயாணத்திற்கு இப்பதம் ஒரே ஒருதடவை உபயோகிக்கப்பட்டுள்ளது. அந்திகிறிஸ்துவின் வருகையை குறிக்க ஒரே தடவை இப்பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது, இது முதல் வருகையினைத்தான் குறிக்கும் என அநேகர் கூறுகிறார்கள். ஆனால் 2 பேதுரு 3:4 ஐப்பார்க்கும் போது, இது இரண்டாம் வருகையைத்தான் குறிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

(இ) கண்கூடாகக் கண்ட சாட்சிகளின் கருத்துக்கள்:- 2 பேதுரு 1:10-18.

இயேசுவின் இராஜரீக தன்மைக்கு பேதுரு ஒரு நற்சாட்சியாய் இருந்தமையால், கிறிஸ்துவின் வல்லமை ஒரு கதையல்ல என்பதை அவன் அறிவான். பேதுரு மறுரூப மலையிலே இயேசுவின் மகிமையை கண்கூடாகக் கண்டவன். அதையே இங்கு அவன் குறிப்பிடுகிறான். (மாற்கு 9:2-8).

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை பொய் போதகர்கள் மறுத்தே வருகிறார்கள். இயேசுவின் இரண்டாம் வருகையிலுள்ள மகிமையும், வல்லமையும் அநேகருக்கு விநோதமாயும், நம்பக்கூடாத சம்பவமாயும் தோன்றுகின்றது. இயேசுவின் இரண்டாம் வருகையின் சம்பவங்களை பேதுரு கற்பனை பண்ணி எழுத வேண்டிய தேவையில்லை. இரண்டாம் வருகையின் சம்பவத்தின் முன்னோடி நிகழ்ச்சியை, அவனே கண்கூடாய்கண்டுள்ளான்.

புதிய ஏற்பாடு, கண்கூடாகக் கண்டு எழுதியவர்களின் புத்தகமாகும் என்ற கருத்தை ஒரு சிலர் மறுக்கிறார்கள். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில்தான் புதிய ஏற்பாடு எழுதப்பட்டது என ஒரு சில பழைய எழுத்தாளர்கள் கூற முற்பட்டனர். ஒழுங்காக வேதத்தைக்கற்றுள்ள ஞானிகள், புதிய ஏற்பாடு, முதலாம் நூற்றாண்டிலே மலர்ந்து விட்டது என்றக்கருத்தை ஒத்துக் கொள்ளுகின்றனர். இதோடுகூட, யோவான் எழுதினசுவிசேஷத்தின் ஒரு பகுதி எகிப்தில் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. இதுதான் கடைசியாக எழுதப்பட்ட சுவிசேஷமாகும். கி.பி.125ல் அதிலிருந்து பல பிரதிகள் எடுக்கப்பட்டு பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டது. இதிலிருந்தது சுவிசேஷங்கள். ஏற்கனவே பல பிரதிகள் எடுக்கப்பட்டு, பல இடங்களிலும் பரவி வந்தது என்று நமக்குத் தெரிகிறது.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் எதையும் கற்பனை செய்து எழுதவில்லை. அற்புதங்கள் புதிதாய் கண்டுபிடிக்கப்பட்டு, எழுதப்பட்டவையல்ல. வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள சத்தியம் உண்மை தான் என்று கூறுகின்ற அநேகர் ஜீவிக்கும் காலத்திலேயே, இது பல பிரதிகள் எடுக்கப்பட்டு, அநேகர் வாசிக்கும் படி அனுப்பப்பட்டுள்ளது. கண்கூடாய் கண்டவர்கள் அநேகர் இப்பிரதிகளையும் கண்டு, உண்மையென சாட்சியிட்டுள்ளனர். (1.கொரி.15:6) கிறிஸ்துவின் தெய்வீக மகிமை உண்மைதான் என்பதை, பேதுரு, பரலோகினின்று பிறந்த செய்தியின் மூலம் கண்டு கொண்டான். அநேகர் கிறிஸ்துவின் வல்லமையினையும் அவரின் உயிர்த்தெழுதலையும் கண்கூடாய் கண்டுள்ளனர்.

(ஈ) நம்பத்தகுந்த வசனம்:- 2 பேதுரு 1:19-21.

எழுதப்பட்ட வசனம் பேதுருவைப் பொறுத்தமட்டில், மிக நிச்சயமானதொன்றாகும். (தெளிவான, நிச்சயமுடைய வசனம்) நாமும் வசனத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இந்த இருண்ட, குழப்பமான உலகிற்கு, தேவ வசனம் ஒளியைப் போல் உள்ளது. வசனம் நம்மை கிறிஸ்துவிடம் வழி நடத்துகிறது. நம்மை இருளினின்று விடுவித்து, கிறிஸ்துவின் பரலோக ஒளிக்குள் வழி நடத்துகிறது. கிறிஸ்துவே நம் இருதயங்களில் நீதி சூரியனாய் ஒளி விடுகின்றார். தேவ வசன சத்தியங்கள் நமக்கு அளிக்கும் உத்

தரவாதங்களில் இது பெரியது. கிறிஸ்து நம்முடைய இருதயத்திற்குள் வந்தவுடன், அவருடைய ஒளியுள்ள பிரசன்னத்தில், சந்தேகமும், அறியாமையும் பறந்தோடிப்போய் விடுகின்றது. வேதாகமம் நமக்கு ஒரு புதிய புத்தகமாக மாறிவிடுகின்றது.

மேலும் வேதாகமத்தில் நமக்கு இன்னொரு நிச்சயமும் காட்டுகிறது. எந்த தீர்க்கதரிசனமும், மனிதனிடமிருந்து எழுந்தவையல்ல. (முழு வேதாகமம்) அதாவது முழு வேதாகமும், ஒரு தனி மனிதனின் வியாக்கியானத்திலிருந்து எழுந்தவையல்ல. வேதாகமத்தை எழுதிய தீர்க்கதரிசிகளும், எழுத்தாளர்களும் தாங்கள் எதை எழுத வேண்டும், சொல்ல வேண்டும், என மூளை அறிவினால் சிந்திக்கவில்லை).

பழைய ஏற்பாட்டிலும், இந்நாளிலும் சரி, தீர்க்கதரிசனம் (அதாவது வசனம்) எந்த ஒரு மனிதனுடைய சுயசித்தத்தினாலும் பிறக்கவில்லை. பரிசுத்த ஆவியானவரால், பரிசுத்த மனிதர்கள் ஏவப்பட்டு, எழுதினார்கள். பரிசுத்த ஆவியானவர், பரிசுத்தமான மனிதர்களை தயார் செய்து, போதித்து, வழிநடத்தி, தேவன் எவ்வகையில் எழுத விரும்புகிறாரோ, அவ்விதமாய் எழுத, அவர்களுக்கு வார்த்தையருளினார். இப்படியாக பரிசுத்த ஆவியானவர், மனிதனுடைய எண்ணங்கள், விளக்கங்கள், தேவ வசனத்தில் புகுந்து விடாதபடி காத்துக் கொள்வர். நம்முடைய திடமான அஸ்திபாரத்திற்காக தேவனைத் துதிப்போம்.

வாழ்க்கையோடுள்ள தொடர்பு

(1) தேவனுடைய வசனம் என 1பேதுரு1:23லும், கர்த்தருடைய வசனம் என 1பேதுரு1:25லும் பேதுரு கூறும்போது, அவன் எந்த சிந்தனை ஓட்டத்தில் எழுதியிருக்கக்கூடும்?

பேதுரு நிருபம் எழுதும்போது, புதிய ஏற்பாடு முழுவதும் எழுதப்பட்டாயிற்று எனக் கூறுவது உண்மையாகாது. தேவ வசனம் எழுதப்பட்ட வார்த்தை என நோக்கத்தோன்றும். எழுதப்பட்டவைகளையும், பேசினவைகளையும், ஆதிசபையிலிருந்த மக்கள். தேவ வசனமாகவேகருதினர். தேவன்கிறிஸ்துவின் மூலமாக, இவ்வுலகத்தை தம்மோடுஒப்புரவாக்கினார் என்று நாம் அறிவிக்கிறோம். அவர்தான் (இயேசு) தேவனுடையவார்த்தையாக உள்ளார். இயேசுவே வார்த்தையாகவும், தேவனின் வெளிப்பாடாகவும் இருக்கின்றார்.

பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும், முதுமைப் பருவத்தை எட்டி நிற்கும்போது, சுவிசேஷம் தடைபடாது, எங்கும் அறிவிக்கப்பட வேண்டுமெனகவலைப் பட்டார்கள். ஜனங்களுக்கு நிருபம் எழுதும்போது எல்லாம், நிருபத்தின் கருப்பொருளாக சுவிசேஷத்தை எழுதி அனுப்பினர்; இந்த நிருபங்களும், சுவிசேஷங்களும் ஆவியானவரின் வழிநடத்துதலாலும், ஏவுதலாலும்எழுதப்பட்டு பலருக்கு அனுப்பப்பட்டன.

இயேசுதேவனுடையசத்தியமாய் (வார்த்தையாய்) இருக்கிறார் என கூறியறிவிக்கப்பட்டவுடன், பரிசுத்த ஆவியின் கிரியையினால், அநேகர் தங்கள் இருதயத்தில் இயேசுவை ஏற்றுக் கொண்டனர். ஆனால் அப்போஸ்தலர்கள் மரித்த பின்பு, ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட நிருபங்களையும், சுவிசேஷங்களையும், இயேசுவைப் பற்றி அறிவிக்கும் காரணியாக

பரிசுத்த ஆவியானவர் உபயோகித்துக் கொண்டார். இந்நாட்களிலும் பரிசுத்த ஆவியானவர் இவ்விதமாகவே கிரியை செய்து வருகிறார். ஆவியினால் ஏவப்பட்டு, எழுதப்பட்ட வசனத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவர், மனிதனுடைய இருதயத்திலே பேசுகிறார்

(2) "விழுவதற்கேதுவான கன்மலை" என 1 பேதுரு 2:8லும், "தந்திரமான கட்டுக் கதைகள்" என 2 பேதுரு 1:16லும், கூறப்பட்டிருப்பதற்கு, ஏதாவது சம்பந்தம் உண்டா?

ஆம். விழுவதற்கேதுவான கல்லாக கிறிஸ்துவை ஒருவன் நினைத்தால், தேவ வசனம் முழுவதையும், அவன் ஏற்றுக் கொள்ள கடினமாய் இருக்கும். புதிய ஏற்பாட்டை அவன் வாசித்து, கிறிஸ்துவானவரை இடறல் கல்லாக அவன் எண்ணினால், அவன் என்ன செய்வான்? வேதாகமத்தின் உண்மைத் தன்மையைக் குறித்து சந்தேகப்படுவான். இதை மனதில் வைத்து, கிறிஸ்துவின் வாழ்க்கை, தந்திரமாக எழுதப் பட்ட கட்டுக்கதை என நினைப்பான்.

இயேசுவைப் பற்றி, அப்போஸ்தலர்கள் கூறியுள்ள கருத்துக்கள் யாவற்றையும், அலசி ஆராய்ந்து பார்ப்பது நலம். இயேசு உயிர்த்தெழுந்து, பரமேறியவுடன், நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி பலர், பல கருத்துக்களை வெளியிட ஆரம்பித்தனர். (மத். 28:11—15ஐ ஒப்பிட்டுப் பார்.) இயேசு புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் முறையைக் கண்டு, அநேக, புதிய போதகங்கள், இன்று வெளிவந்துள்ளன.

யார் இயேசுவை தங்களுடைய "மூலைக் கல்லாக" ஏற்றுக் கொள்கிறார்களோ, அவர்கள், தங்களுடைய பாவத்திற்குரிய பரிகாரத்தைக்கண்டுகொள்கின்றனர். கிறிஸ்தவ மதம், தந்திரமான கட்டுக் கதையில் எழுந்தவையென எவன் கூறுகிறானோ, அவனுக்கு அவர் (இயேசு) இடறல் கல்லாய் இருக்கிறார். தேவ வசனத்திற்கு இப்படிப் பட்ட ஜனம் கீழ்ப்படியாததினால், இடறி விழுகிறார்கள்.

(3) "பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கின்ற விளக்கைப் போல் இருக்கின்றது", என்று கூறுவதின் அர்த்தம் என்ன?

தேவனுடைய வசனத்தை நாம் சரியாக உபயோகிக்க வேண்டுமானால், நாம் மனதில் கொள்ள வேண்டிய முக்கிய கருத்தை (2பேதுரு 1:19) தெளிவாக நமக்கு எடுத்துரைக்கின்றது. பல வருடங்களுக்கு முன் ஒரு இளம் கிறிஸ்தவன். நாஸ்திகன் ஒருவனைச் சந்தித்தான். இளைஞன் தான் எவ்வாறு கிறிஸ்துவுக்கு விரோதமாய் இருந்தான் என்றும் இப்போது எப்படி இரட்சிக்கப் பட்டுள்ளான், என்றும் தன் சாட்சியை நாஸ்தீக ஆசிரியனோடு பகிர்ந்து கொண்டான். பையன் சாட்சி சொல்லி முடியும்வரை, நாஸ்தீக ஆசிரியன் காத்திருந்துவிட்டு "இது அருமையாக இருக்கின்றது" என்றான். இந்த அனுபவத்தை நான் பெற என்ன செய்ய வேண்டும்." என ஆசிரியர். கிறிஸ்தவனிடம் கேட்டான். "நீங்கள் கிறிஸ்துவின் பேரில் விசுவாசம் வைக்கவேண்டும்" என கிறிஸ்தவன் விடை பகர்ந்தான். "எனக்கு கிறிஸ்துவிலே விசுவாசம்கிடையாது. நான்என்ன செய்யவேண்டும்?" என மாணவனை நோக்கிக்கேட்டார். "விசுவாசம் இல்லாத" ஒருவனை இளை

ளுன் இதுவரை சந்திக்காததினுல், ஆசிரியன் கேட்டகேள்விக்கு என்ன விடைகொடுப்பது என மாணவனுக்குத்தெரியவில்லை.

இரண்டு காரியங்களைக் கூறியிருக்கலாம். முதலாவதாக, ''நான் உங்களுக்காக ஜெபிப்பேன்''எனமாணவன் கூறியிருக்கலாம். மற்றவர்களை சுவிசேஷத்தினுல் சந்திக்க ஜெபம் ஓர் வல்லமையான ஆயுதம் ஆகும். ''நீங்கள் வேதாகமத்தை குறிப்பாக யோவான் சுவிசேஷத்தை வாசியுங்கள்'' என கூறியிருக்கலாம். விசுவாசிக்கத்தக்கதாக எழுதப்பட்ட புஸ்தகம் யோவான் சுவிசேஷம் ஆகும். (யோவான்20:31ஐப்பார்).

மனிதனுடைய இருளடைந்த இருதயத்தில், தேவ வசனம் ஒளியைப்போல்பிரகாசித்து அவனுக்கு கிறிஸ்து தேவைஎன்பதைஉணர்த்தும். வேதாகமத்தை வாசிப்பதின் மூலம் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். பொழுது விடிந்தது, விடிவெள்ளி இருதயத்தில் உதித்து, இருளுள்ள இருதயத்தினை பிரகாசமாக்கும்.

(4) ''சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து'' என 1 பேதுரு 1:22ல் பேதுரு கூறியிருப்பதின் அர்த்தம் என்ன? சத்தியத்திற்கு நாம்எப்படி கீழ்ப்படிவோம்?

வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் உள்ள பண்பாடுகளைப்பற்றி சிந்திக்காமல், இந்நாட்களின் பண்பாட்டிற்கு ஏற்ப, வசனங்களை வியாக்கியானித்து விடுகிறோம். விஞ்ஞான யுகத்தில், சத்தியத்திற்கு நாம் கொடுக்கும் விளக்கம், வேதாகமசத்தியத்திற்கு இசைந்து போகவில்லை. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையிலும், ஊழியத்திலும் உள்ள ''சத்தியத்தை'' பேதுரு எழுதுகிருனே தவிர, கருத்துக்களை அவன் நமக்கு வரைந்து கொடுக்கவில்லை. ''சத்தியத்திற்கு கீழ்ப்படிதல்''என்பதற்கு பேதுரு ஆழமான அர்த்தத்தை நமக்கு கற்பிக்க விரும்புகிருன். அவன் நினைக்கிற கருத்து, இந்நாட்களுக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கும்.

''நானே சத்தியம்'' (யோவான் 14:6) என இயேசு கூறும் போது, நாம் இன்று அவ்வார்த்தையினை புரிந்து உபயோகிப்பது போல, அவர் உபயோகித்து கூறவில்லை. இயேசு தாம் கூறும்போது இரு கருத்துக்களை மனதில் வைத்துக் கூறுகிருர். முதலாவதாக, சத்தியத்திற்கு தானே அஸ்திபாரமென கூறுகிருர். எல்லா சத்தியமும் இயேசுவினிடமிருந்தே பிறக்கின்றன. இரண்டாவதாக, தேவனைப் பற்றிய சத்தியத்தைநமக்குவெளிப்படுத்துகிருர். கர்த்தரைப் பற்றிய சத்தியம் இதுதான். அதாவது தமக்கு கீழ்ப்படிகிற மக்களை அவர் இரட்சிக்கிருர் என்பதுதான் சத்தியமாகும்.

தேவனைப்பற்றிய சத்தியத்திற்கு பாவிகள் செவிசாய்க்கும்போது, அவர் பரிசுத்தமாக்கப்படுவதை பேதுரு காண்கிருன் தேவனைப் பற்றிய சத்தியத்தை உலகம் முழுவதும் அறிவிப்பதே சபையின் வேலையாகும். சத்தியம்தான் நற்செய்தியாகும், பாவமுள்ள மனிதர்களை. தேவன் தம் குமாரன் மூலம் மீட்கிருர் என்பதுதான், நற்செய்தியாகு!.

"கிறிஸ்தவர்களின் முன்மாதிரி"

வேதபகுதி:-1பேதுரு 2:9-23.

போதிக்கும் திட்டம்

"அந்தகாரத்தினின்று நம்மை ஆச்சரியமான ஒளிக்கு" வரவழைத்தார் (1பேதுரு2:9) என்ற பகுதியை முன்னுரையாக உங்கள் வகுப்பினரிடம் கூறினால், அவர்கள் ஆர்வத்தோடு இவ்வாரப்பாடத்தை படிக்கக் கூடும். இந்தப் பகுதி அவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கக்கூடும். நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் முன்பாக, "அந்தகாரம்" என்றால் என்னவென்று நினைக்கிறீர்கள் என உங்கள் மாணவர்களை வினவவும். மாணவர்கள் கூறும் கருத்துக்ககளை வரிசையாக கரும்பலகையில் எழுதவும். பாவ உணர்வு என்றும், அறியாமை என்றும், ஆர்வம் என்றும், பயத்தின் உணர்ச்சி என்றும், புறம்பாக்கப்பட்ட நிலையின் உணர்ச்சி என்றும், நம்பிக்கையின்மையென்றும், பல கருத்துக்கள் சொல்லப்படலாம். இந்த அந்தகாரத்தைப்பற்றி உள்ள கருத்துக்கள் பலவாறு உள்ளன.

இந்தக்கருத்தை ஆராய்ந்த பிறகு, ஒளியின் கருத்தை ஆராயப்போவோம். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒளி என்றால் எதைக்குறிக்கிறது என மாணாக்கர்களை வினவவும். ஒளியைக்குறித்து சரியாய் விளக்கிக்கூற முடியாதபடி வகுப்பினர் திணரலாம். சந்தோஷமும், சமாதானமும் நம்மிடை உலவ வேண்டும் என்பது தான் முக்கியமான நோக்கங்களாகும். கிறிஸ்து நமக்காக எதைச்செய்துள்ளாரோ. அதைத்தான், நம்முடைய இரட்சிப்பின் அனுபவம் சார்ந்துள்ளன எனக் கூறவும். "இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன்; என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் என்றார்". (யோவான் 8:12) எல்லாக் காரியங்களிலும் இயேசுவே முன்மாதிரியாய் உள்ளார்.

தங்கவசனம்:- உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்............மகிமையைக் கொடுத்தார். 1பேதுரு 2:21

வேத விளக்கம்:-

2பேதுரு 2:9-25

பின்னணி

காலம் கி.பி. 63.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் உடன் சகோதரனுடன் உண்மையான, ஆழமான, நித்திய அன்பை உடையவர்களாய் இருக்கவேண்டும் என பேதுரு கவலைப் படுகிருர். நாம் யார் என்றும், நம்முடைய சிலாக்கியங்கள் என்னவென்றும், பவுல் கூறுகிருர். அவன் அதோடு நின்றுவிட வில்லை. அன்பு மாத்திரம் நமக்கு இருந்தால் போதும் என்றும் பேதுரு கூறவில்லை. அன்பிற்கு கூட புத்திமதிகள் தேவையாய் உள்ளது. பேதுரு தான் கொடுக்கும் வழிமுறைகளில் மிகவும் கவனமாய் இருக்கிருன். அனுதின தொடர்புகளைக் குறித்து பேதுரு மிகவும் கரிசனையாய் இருக்கிருர். நாம் தேவனேடுநல்தொடர்பு கொண்டிருந்தால் மாத்திரம் போதாது, மனிதனேடுய் நல் உறவு உடையவர்களாய் இருக்கவேண்டும் என பேதுரு கூறுகிருர். கிறிஸ்துவாகிய கப்பலின் மேல் அவிசுவாசி இடறிவிழுவான் என்பதை நாம் எதிர்பார்க்க வேண்டிய கருத்துத் தான். ஆனல் கிறிஸ்துவில் கட்டப்பட்டு, அவரின் ஆலய ஆசாரியர்களாய் இருக்கிறோம். நம்முடைய முன்மாதிரியான ஜீவியத்தின் மூலம், மக்களை கிறிஸ்துவிடம் வழி நடத்தவேண்டும். நம்மைக் கண்டு மற்றவர்கள் இடறி விழ இடம் கொடுக்கக் கூடாது.

1 அந்தகாரத்தினின்று அழைக்கப்பட்டோம்:-

1 பேதுரு2:9

(அ) ஆராதிக்கவும், சாட்சியிடவும் அழைக்கப்பட்டோம்:-

1பேதுரு. 2:9-10

பேதுருவின் முதலாம் நிருபத்தின் கருப்பொருளை இவ்வாரப் பாடத்தின் ஆரம்ப வசனங்களில் காண்கிருேம். உன்னதமான மகிமைக்கும், சிலாக்கியத்திற்கும், சபையை, தேவன் கொண்டு வந்து விட்டார். நாம் எல்லோரும் தெரிந்தெடுக்கப்பட்ட தலைமுறையாய் இருக்கிருேம். தாங்கள் தான் கலாச்சாரம் மிகுந்த தலைமுறையினர் என்று ரோமரும் கிரேக்கரும் எண்ணிக் கொண்டார்கள். காட்டுமிராண்டிகளை வேருரு வகுப்பினர் என்றும், யூத மக்களை கடையான (மூன்ருவது குலம்) மக்கள் என்றும் நினைத்து வந்தனர். மறுபிறப்பின் மூலமாக நாம் தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தெரிந்தெடுக்கப்பட்ட சந்ததியாக மாறி விட்டோம்.

நாம் யாவரும் ஆசாரிய கூட்டமாயும் இருக்கின்ருேம். (யாத். 19:6; வெளி. 20:6 ஆகியவற்றைக் கவனித்தால், இஸ்ரவேலர் எப்படி மாற வேண்டும் என தேவன் நினைத்தாரோ, அப்படியாக சபையை மாற்றியுள்ளார் என்று காண்கிருேம்.) நாம் பரிசுத்த நகரத்தாராய் இருக்கிருேம். (அர்ப்பணம் செய்த மக்களாய்) ஒரு விநோதமான மக்களாய் மாற்றப்பட்டிருக்கிருேம். (கர்த்தருடைய சொந்த ஜனமாய் மாற்றப்பட்டிருக்கிருேம். தேவனுடைய சொத்தாய் இருக்கின்ருேம். யாத். 19:5; ஏசா. 43:21). இராஜாவின் ஊழியத்திலே, ஒவ்வொரு விசுவாசியும் ஆசாரியனுய் இருக்கிருன்.

கர்த்தர் நம்மை இவ்விதமான மகிமையின் நிலைக்கு கொண்டு வந்திருக்கிருர்; இதன் மூலம் நாம் அவரை நன்கு அறிவோம். அவரை அறிவதின் மூலம், அவருடைய வல்லமையான கிரியைகளை அறிவிக்கும் கூட்டமாக மாற்றப்பட்டிருக்கிருேம். அவிசுவாசம், பாவம் என்கிற இருளினின்று நம்மை விடுதலையாக்கி, அவரின் இரட்சிப்பு என்கிற ஒளியினிடத்தில் வழிநடத்தி அவரோடு ஐக்கியப்படுத்தியுள்ளார். இதை நாம் அனுபவத்தில் ருசித்திருப்பதால், தேவனின் மகிமையினையும், மகத்துவத்தினையும் அறிவிக்க கடமைப்பட்டவர்களாகிருேம்.

(ஆ) ஆச்சரியமான இரக்கம்:- 1பேதுரு 2:10,

வழுவிப்போன இஸ்ரவேலர் மீட்கப்படுவார்கள் என ஓசியா கூறின வார்த்தையே இங்கு மறுபடியும் கூறப்படுகிறது. (ஓசியா 1:6;2:1 23). ரோமர் 9:23-26 வரையுள்ள வசனங்கள் புறஜாதியாருக்கும், யூதருக்கும் ஒன்று போலவே பொருந்தும் வகையில் கூறப்பட்டுள்ளது. "எல்லார் மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள் அடைத்துப்போட்டார்." (ரோமர் 11:32). யூதரை வேறு வகுப்பாகவும், புறஜாதியாரை இன்னொரு வகுப்பாகவும் இயேசு (தேவன்) எண்ணவில்லை. ஆனுல் இருதிறத்தாரையும் ஒன்ருகவே தேவன் எண்ணுகிருர். இரு வகுப்பாரும் தகுதியில்லாத மக்கள். இந்த இருவகுப்பாரும், தங்கள் கீழ்ப்படியாமை குணத்திஞலே தேவனின் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவான மக்களாய் ஜீவிக்கின்றனர். ஆண்டவர் இந்த இருதிறத்தாரையும், அழிப்பதற்காக இதைச் செய்யாமல்,

இரக்கத்தினை வெளிப்படுத்தவே இவ்வாறு செய்கிறார் யூதகிறிஸ்தவர்களையும், புறஜாதிய கிறிஸ்தவர்களையும் தேவன் ஒரே சரீரமாக, ஒரே இனத்தவராக, ஒரே ஐக்கியத்திற்குள், ஒரே ராஜரீக ஆசாரிய முறைமைக்குள், ஒரே பரிசுத்ததேசத்திற்குள் கொண்டு வர வாஞ்சிக்கின்றார். (எபேசி. *2:11-19*; அப். *15:14*; ரோமர் *10:19-21*; தீத்து *2:14*)

2 நீதிக்காக அழைக்கப்பட்டவர்கள்:-

1 பேதுரு. *2:11-20*

(அ) தேவனுக்கு மகிமை கொண்டு விடுதல்:-

*1*பேதுரு *2:11,12.*

ரோமாபுரியிலே பெயர் போன மதங்களில் பிசாசின் ஆராதனையும், குடிவெறியும், ஒழுக்கக்கேடும், பில்லி சூன்யமும், மந்திரம், தந்திரங்களும் மிகுந்து காணப்பட்டன. கிறிஸ்தவர்கள் இவ்விததீய காரியங்களுக்கு போகாததினால், மக்கள் இவர்களுக்கு விரோதமாக பேசஆரம்பித்தனர். (கிறிஸ்தவர்களை தீமை செய்கிறவர்கள் என்றும், கொலைகாரர்கள் என்றும் குறை கூறி வந்தனர்). கிறிஸ்தவர்களாகிய நீங்கள், புறஜாதிய மக்களிடம் போராடி, உங்கள் நீதியை நிலைநாட்ட வேண்டாம். என கிறிஸ்தவர்களுக்கு பேதுரு, அறிவுரை கூறினான். நாம் பரதேசிகள் என புறஜாதியார் கூறுவதை வணக்கத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள் என பேதுரு, கிறிஸ்தவர்களுக்கு அறிவுரை விடுத்தான். (அந்நிய தேசத்திலே தற்காலிகமாக குடியேறியுள்ள மக்கள் என எபி. *11:13-16* வரையுள்ள வசனங்களில் காண்கிறோம்). நம்முடைய உண்மையான வீடு இவ்வுலகில் இல்லை. நம்மை இவ்வுலக மக்கள், அந்நியர் என்று கூறுவதை நாம் எதிர்பார்த்தே ஜீவிக்க வேண்டும்.

நம் பக்கத்தில் பேசுவதற்கு ஒருசில கருத்துக்கள் உள. நம்முடைய ஆத்துமாவிற்கு விரோதமாய் போர் செய்கிற இச்சைகளினின்று நம்மை நாமே காத்துக் கொள்ள வேண்டும். (யாக். *4:1*).

புற ஜாதியாரின் மத்தியிலே நாம், நம்முடைய ஜீவியத்தை நேர்மையாயும், ஒழுக்கமாயும் நடத்தவேண்டும். (குற்றமில்லாமலும், தேவனுக்கு பிரியமாயும் வாழ்க்கை நடத்தவேண்டும்). நம்முடைய நற்கிரியைகளையும், நல்வாழ்வினையும் காண்கிற மக்கள், தேவன் வரும் நாளில் அவரைத் துதிக்க, மகிமைப்படுத்த ஏதுகரமாய் அமையும்.

நமக்கு எதிராய் எவன் பேசு கிறானோ, அவனையே, தேவன் கிருபையாய் இரட்சிப்பார் எனவும் எர்திபார்க்கலாம். (நமக்கு விரோதமாய் பேசிவரும் மக்களை, தேவன், இன்றும் இரட்சித்து வருகிறார்.)

(ஆ) இலஞ்சம் ஆனால் கீழ்ப்படிய வேண்டும்:-

1பேதுரு.2:13-20.

மனிதனுடைய கட்டளைகள் யாவற்றிற்கும், கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள் என பேதுரு நமக்கு அறிவுரை கூறுகிறான். ராஜா, அல்லது அவருடைய பிரதானி நம்மை தண்டிக்கவும், நியாயம் தீர்க்கவும் அதிகாரம் பெற்றவன். இவனுடைய அதிகாரத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். இராஜாக்கள் துதிக்கவும் கடமைப்பட்டுள்ளார்கள். நாம் கொடுங்கோலாட்சியில் இருந்தாலும் சரி, மக்களாட்சியில் இருந்தாலும் சரி, நம்மை அதிகாரத்திற்கு கீழ்ப்படுத்த வேண்டும். இப்படியாக, நாம் தேவன் சொல்லுகிறபடி செய்யும்போது, அவிசுவாசியாய் இருக்கும் மனிதனின் வாய் அடைத்துப் போய் விடுகிறது.

நம்முடைய மாம்ச இச்சைகளை நிறைவேற்றாது அவைகளை விட்டு நீங்கியிருங்கள் என பேதுரு 11ம் வசனத்தில் கூறியுள்ளார். அதேப்போல் இங்கு நாம் நல்ல பிரஜைகளாய் இருக்கவேண்டும் எனவும் அறிவுரை கூறுகிறார். மாம்ச இச்சையை நிறைவேற்ற வாஞ்சிப்போமானால், மாம்சத்தின் கிரியை வெளிப்பட்டு விடும்.

"விபச்சாரம், வேசித்தனம் அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பகைகள், விரோதங்கள், சண்டைகள், பிரிவினைகள்" ஆகிய இக்குணாதிசியங்கள் மாம்சத்தின் கிரியைகளாக வெளிப்படும். (கலா. 5:20). "நான் மனித ஆளுகையினையும், கிறிஸ்துவின் தெய்வீக தன்மையினையும்" எதிர்த்து நிற்பேன் எனக்கூறுவது நம்முடைய மாம்சீகத் தன்மையைக் காட்டுகிறது.

நாம், நம்முடைய சுயத்திற்காக மற்றவர்களை பலியிடாமல், மாம்சீக சிந்தையை அடக்கும் பொருட்டாக, மற்றவர்களுக்கு நாம் அடிபணிந்து போவது நலமாகும். நான்தான் பெரியவன் எனக் கூறுவது உலக மக்களின் தன்மையாகும். நாம் உண்மையாகவே பரதேசிகள் என்று எண்ணினால், இவ்வுலகில் தற்காலிகமாக ஜீவிக்கும் அந்நியர் என எண்ணினால், உண்மையாகவே நாம் இயேசுவின் சொத்து என எண்ணினால்,

பரலோகிலே நமது குடியி ருப்பு உண்டென்று எண்ணினால், சுய நலமிக்க பண்பிலிருந்து நம்மை விலக்கிக் கொள்ளுவோம்.

கிறிஸ்து நம்மை விடுதலையாக்கியுள்ளார் என்பது உண்மைதான். ஆனால் நாம் கிறிஸ்துவின் வசனத்தில் நிலைத்து நின்றால் தான், இந்த சுயாதீனத்தை தொடர்ந்து சுதந்தரிக்க முடியும். (யோவான் 8:31,32,36) நாம் நம்முடைய சுதந்திரத்தை, தவறான எண்ணங்களுக்கு மூடியாக உபயோகித்துக் கொள்ளக்கூடாது. 'நாங்கள் தேவனுடைய அடிமைகள் என்று கூறுவதினால்', நம்முடைய சுயாதீனத்தை வெளிப்படுத்துகிறோம். மனிதர்களை கனப்படுத்துவதினாலும், சகவிசுவாசிகளை நேசிப்பதின் மூலமாயும், தேவனுக்கு பயப்படுவதின் மூலமாயும், இராஜாவையும், அவனின் ஆளுகையை அங்கீகரிப்பதின் மூலமாயும், நம்முடைய சுயாதீனத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறோம். வேலைக்காரர்களே (அடிமைகளே) அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும் சாந்த குணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக் குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள் என பேதுரு கூறுகிறார்.

நமக்கு எத்தனை கஷ்டங்கள், பாடுகள் வந்தாலும் நமக்கு தேவனைப்பற்றிய உணர்வு வருவதால், மனித ஆளுகையினை பொறுமையாய் சகித்துக் கொள்கிறோம். இது துதிக்கும், ஸ்தோத்திரத்திற்கும், உரிய காரியமாய் உள்ளது. தேவன் அங்கீகரிக்கும் காரியமாயும் உள்ளது.

3. கிறிஸ்துவை பின் பற்ற அழைப்பு:- 1பேது: 2:21-25

(அ) நம்முடைய முன்மாதிரி:- 1பேதுரு 2:21-23

நாம் அந்தகாரத்தினின்று, கிறிஸ்துவின் ஒளிக்குள் அழைக்கப்பட்டுள்ளோம் என்று பாடத்தின் துவக்கத்தில் கூறப்பட்டுள்ளது. நாமும் கிறிஸ்துவைப் போல், நம்முடைய மாம்சத்தின் கிரியைகளை புறம்பே தள்ளி விட்டு, கிறிஸ்து அரசாங்கத்திற்கு கீழ்ப்படிந்தது போல, நாமும் கீழ்ப்படியக் கடவோம். நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின் பற்றுவோம். (இதன் மூலம் நாம் அவருக்கென்று நம் வாழ்வை அர்ப்பணித்துள்ளோம் என்பதை உலகிற்கு வெளிப்படுத்துகிறோம். நம்முடைய இடத்திலே நமக்காக இயேசு பாடுபட்டார். ஆகவே நாமும் மற்றவர்களுக்காக பாடுகளைச் சகிப்போம். இயேசு

பாவம் செய்யாமல் ஜீவித்தது போல நாமும் ஜீவிப்போம். பாவத்திலிருந்து மனம் திரும்புவோம். இயேசு எந்தக் காரியத்தையும் தந்திரமாய்ச் கூறவில்லை. வாஞ்சிக்கவில்லை. தான் எவ்வளவாய் தவறாய் நடத்தப்பட்டாலும், அவர் ஒரு போதும் வாயைத் திறவாமல், தன்னை நீதியுள்ள நியாயாதிபதியின் கையில் ஒப்படைத்து விட்டார். (தேவனின் சரத்தில்).

(ஆ) மாதிரியை விட மேலானவர்:- 1பேது. 2:24,25

இயேசுவை நம்முடைய முன் மாதிரியாக மாத்திரம் கணித்து விடக் கூடாது என வேதாகமம் கூறுகின்றது. கல்வாரி சிலுவையிலே நம்முடைய பாடுகளை, ஏற்று சுமந்தவர் என வேதாகமம் கூறுகின்றது. நாம் பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைக்கும்படி, அவர் தாமே நம் பாடுகளை கல்வாரியில் ஏற்றார். அவருடைய தழும்புகளால் நாம குணமாகிறோம். (பாவத்தின் கொடுமையினின்று விடுவிக்கப்பட்டுள்ளோம். ஏசா. 53:5).

நாம்சுயமாக இயேசுவை பின் பற்ற முடியாது. இயேசுவை முன் மாதிரி, என எண்ணாமல்; நமக்குத் தேவையான ஆத்தும, சரீர சுகமளிப்பவராக எண்ணினால். நாமும் முன் மாதிரியாய் ஜீவிக்கமுடியும். ஏசா 53:6 ல் கூறப்பட்டுள்ள காரியத்தை அனுபவத்தில் ருசித்தால், அது நம்முடையதாக மாறும். இயேசுவை நம்முடைய மேய்ப்பராக ஏற்றுக் கொள்ளுவோம். நமக்குத் தேவையான வழி நடத்துதலும், பராமரிப்பும், ஆவிக்குரிய உணவும் கிடைக்க மேய்ப்பரே வழி வகை செய்வார். பிறகு இயேசு நம்முடைய பிஷப் ஆக மாறி, ஆளுகை செய்து, வழி நடத்தி, காப்பார்;

வாழ்க்கையோடுள்ள தொடர்பு:-

(1) கிறிஸ்தவ சுயாதீனம் என்பதைப் பற்றி பேதுரு கூறும் விளக்கம் என்ன? நாம் அடங்கி ஜீவிக்க வேண்டும் என அவன் கூறவில்லையா? அப்படியானால் அடங்கி ஜீவிப்பது தான் சுயாதீனமா?

கிறிஸ்தவ மதம் சட்டபூர்வமான காரியங்களை உடையது. ஆனால் அது வரம்பினையே அதிகம் வலியுறுத்துகிறது எனக் கூறும் போது சத்தியம் வேறுபடுகின்றது. கிறிஸ்தவ மதத்தில் எல்லாவற்றையும் அனுபவிக்க சுதந்திரம் உண்டு என்று சொல்வதும் தவறு. மேற் கூறிய இரண்டும் சேர்ந்ததே கிறிஸ்தவ மதம் ஆகும். (சட்டம் + சுதந்தி

ரம்). ஒரு மனிதன் கிறிஸ்தவ வாழ்க்கையினை உற்று நோக்கினால் அது குறுகியதும், திட்டவட்டமானதாகவும் தோன்றும். கிறிஸ்தவ ஜீவியம் இவ்வுலகில் நடத்துவது மிக எளிது என அவன் கூறுவான். தேவனை எல்லோரும் நேசித்து, அவன் விரும்புகிற பிரகாரம் செய்யலாம். இது பார்ப்பதற்கு எளிதாகத் தோன்றுகிறது.

கிறிஸ்தவ விசுவாசத்தோடு சுயாதீனம் பின்னிப் பிணையப்பட்டுள்ளது. நாம் உண்மையாகவே தேவனை நேசித்தால், தேவனுக்கு மகிமை கொண்டு வரும் காரியங்களையே நாம் செய்வோம். நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஜீவிக்கவில்லை. அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட சட்ட திட்டங்களை வகுத்து ஜீவிக்கவில்லை.

நம்மைக் கட்டுப் படுத்தின சட்டங்களிலிருந்து நம்மைத் தேவன் விடுவித்தால், நம்மை நாமே முன்மாதிரியாக, நம் வாழ்வை கிறிஸ்துவிடம் சமர்ப்பித்து விடுகிறோம். நம்முடைய சுயாதீனத்தை நாமே கட்டுப்படுத்தி, வரம்பு விதித்துக் கொள்கிறோம். நாம் தேவனிடம் நம் வாழ்வை அர்ப்பணித்துள்ளதாலும், சகோதரர்களைக் குறித்து கவலைப்படுவதாலும், வாழ்வில் வரம்பு விதித்துக் கொள்கிறோம்.

(2) நேர்மையான பேச்சு (வழி) என பேதுரு கூறுவதின் அர்த்தம் என்ன?

சிலர் இப்பகுதியை தவறாக வியாக்கியானிப்பர். நேர்மையான "பேச்சு" என்று நாம் அர்த்தம் கொள்ளாமல், நேர்மையான "வழி" என்றே அர்த்தம் கொள்வது நலம். தான் கிறிஸ்தவனாக மாறியபின், இது போன்ற பகுதிகள், தனக்கு ஆசீர்வாதமாய் தோன்றிற்று என புதிதாக இரட்சிக்கப்பட்ட வேதாகம கல்லூரி மாணவன் கூறினான். விசுவாசிகளிடையே தான் குழப்பம் உண்டாக்கி விடாதபடி, பேச்சில் மிகவும் கவனமாய் இருந்தானும். பேச்சு என்பதைவிட, 'வாழ்வில் வழிமுறை,' 'நடத்தை' என்பது தான் இந்தப்பகுதியின் அர்த்தம் என்று கண்டவுடன், அவன் மிகவும் சோர்வுற்றானும், அதே சமயம், ஒரு கிறிஸ்தவன் நல் வாழ்வு நடத்தும் போது, அவனின் பேச்சும் நல்லவையாகவே இருக்கும் என்று கூறினபோது, மிகவும் சந்தோஷம் அடைந்தானும் பேச்சோடு, பல காரியங்களை இணைத்தே பேதுரு இவ்விடத்தில் கூறியுள்ளான். நாம், நம் வாழ்வினை சரியாக ஆராய்ந்தால், மனிதனுக்

கும், தேவனுக்கும் முன்பாக வாய்போடு, சாட்சியாக வாழ்வோம்.

(3) எல்லா மனிதரையும் கனப்படுத்துவதில்லை ஏற்படுமானமயாது?

எல்லா மனிதரையும் நாம் கனப்படுத்த வேண்டும். ஒரு சில கிறிஸ்தவர்கள் இந்தப் பகுதியில் மிகவும் குறைவுபட்டு காணப்படுகிறார்கள். சாதாரணமாக நாகரீகமுள்ள மக்களை கனப்படுத்துவது எளிது. ஆனால் நாகரீகமற்ற மக்களை நாம் கனப்படுத்துவதில் தவறி விடுகிறோம்.

"தூரத்திலுள்ள நாகரீகமற்ற ஜனங்களை நாம் நேசிப்போம் என்ற அர்த்தமுடைய பெயர்பெற்ற பாடல் ஒன்று உள்ளது. கடல் கடந்த நாடுகளில் ஜீவிக்கும் மனிதர்களை நேசிப்பது என்பது தான் இதன் அர்த்தம். தூரத்தில் இருக்கும்வரை நாகரீகமற்ற ஜனங்களை நேசிப்பது சுலபம். இப்படிப்பட்ட அன்பினை தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பதில்லை. குறிப்பிட்டு அன்பு கூறவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். நாகரீகமற்ற ஜனமாயினும் நாம் அவர்களை நேசித்து, கனப்படுத்த வேண்டும்.

இந்தக் கருத்தைப் பொறுத்தமட்டில் கிறிஸ்தவர்களுக்கு இது கஷ்டமாய் தோன்றும் எல்லா மனிதர்களையும் நாம் கனப்படுத்தவேண்டும் என்றவுடன், நம்முடைய சுயப்பொறுமை அதற்கு இடம் கொடுப்பதில்லை. மதிப்புக்குரியவர்களைக் கனப்படுத்துவது எளிது. மற்ற மனிதர்களைக் கனப்படுத்துவது என்பது அரிதான காரியமாகும். ஆனால் தேவன், நாம் யாவரையும்கனப்படுத்த வேண்டும் என விரும்புகிறார்.

வேறு சில குறைதிசியங்களில், இன்றைய கிறிஸ்தவர்கள் சிறந்தோங்குவார்கள். மகதலேனமரியாளும், செம்படவர்களும் (கலிலேயர்) அநேகரால் தாழ்வாக எண்ணப்பட்டிருப்பர். விசுவாசிகள் கூட்டத்தில் சேர அதிக கஷ்டப்பட்டிருப்பர். சபையில் இப்பிரச்சனை தோன்றுவது புதிதல்ல. யாக்கோபும் இதே காரியத்தைக் குறித்து தன் நாட்களில் கூறுகிறான், (யாக். 2:1-9 ஐப்பார்)

(4) மரத்திலே கிறிஸ்து நம் பாவங்களையெல்லாம் சுமந்து தீர்த்தார் என்று கூறப்பட்டிருப்பதின் அர்த்தம் என்ன?

1பேதுரு 2:24ல் கூறப்பட்டுள்ள இதே கருத்தை புதிய ஏற்பாட்டின் மற்றப் பகுதிகளிலும் நாம் காண

லாம். இதில் மிக முக்கிய மானவை. (2கொரி5:21; எபி.9:28) முழு உலகத்தின் பாவங்களையும், கிறிஸ்து கல்வாரிச்சிலுவையில் சுமந்து தீர்ப்பதால், அவர் பாவியாகிவிட்டார். ஆகவே தேவன் அவரை விட்டு நீங்கின போது சிலுவையில் தனிமையை உணர ஆரம்பித்தார். இயேசு நமக்காக பாவமாக்கப்பட்டார். அல்லது முழு மனுக்குலத்தின் பாவத்தையும், அவர் தம் சரீரத்தின் மேல் ஏற்றுக்கொண்டார். மனிதனை பாவம் தேவனிடமிருந்து பிரித்து விடுமாகையால். இயேசுதாம் தேவனால் கைவிடப்பட்டோம் என உணர்ந்தோர். "கிறிஸ்து நமக்காக பாவமானார்" என்று அவரின் பாவநிவாரணத்தை நாம் வருணிக்கிறோம்.

பாவத்திலே நாம் தொடர்ந்துஜீவித்தால்,இங்கு நாம் கூறும் கருத்திற்கும், நமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. திருடனுக்கு திருடனாக, கொலைகாரனுக்கு, கொலைகாரனாக, பொய்யனுக்கு பொய்யனாக, இயேசு மாறினார் என்று கூறுவது தவறாகும். ஆனால் பிதா. இயேசுவை ஒப்புக்கொடுத்த போது, இவ்விதமாகவே அவரை எண்ணியிருப்பார். இயேசு நம்மை மீட்பதற்காக, இவ்வாறு மாறினார்.

(5) அவிசுவாசிகள் மத்தியில் நான் எவ்வாறு தேவனை துதிக்க முடியும்?.

வார்த்தைகளை விட கிரியைகள் அதிகம் பேசும் என்பதால், அவிசுவாசிகள் மத்தியில் நாம் இருவழிகளில் தேவனை துதிக்க முடியும். முதலாவதாக நாம் செய்வதின் மூலம். இரண்டாவதாக நாம் சொல்லுவதின் மூலம் தேவனைத்துதிக்கலாம். புதிதாக இரட்சிக்கப்பட்டவன் ஒருவன், தான் பாவத்தில் விழுந்து விட்டதால் எனக்காக ஜெபிக்கவும் என சபயாரை வேண்டிக்கொண்டான். விசுவாசியிடம் சாட்சி கூறும் போது கோபப்பட்டதகக் கூறினான். தான் கூறிய யாவையும். தன்னுடைய செய்கையால் கெட்டுப்போனது என கூறினான். அநேகர் சிரித்திருக்கலாம். (அல்லது பெரிதாக வெடிச்சிரிப்பு சிரித்திருக்கலாம்) தங்களும் இவ்விதமான சூழ்நிலைகளைச் சந்தித்திருப்பதால் தான் அவ்வாறு சிரித்தனர் நம்முடைய கிரியையும், சொல்லும் ஒன்றாய் இருக்கத்தக்கதாக கவனமாய் இருப்போம். இவ்விதமாய் சொல்லும், செயலும் ஒன்றுபட்டு இருக்குமானால், அது தேவனுக்கு மகிமையைக் கொண்டுவரும்.

கிறிஸ்தவ ஜீவியம்

வேத பகுதி 1பேதுரு 3:8-18

போதிக்கும் திட்டம்

பழைய ஏற்பாட்டிலே தன்னுடைய மனைவியின் நலனைக்குறித்து கவலைப்பட்ட மனிதனின் கதையைக் கூறி இவ்வாறப் பாடத்தினை நாம் அறிமுகப்படுத்தலாம். 1சாமுவேல் 1ம் அதிகாரத்தில் எல்க்கானா, தன் மனைவியை அதிகம் நேசித்து, கரிசனையாய் இருந்ததைக் காண்கிறோம். தன்னுடைய மனைவியை உண்மையாய் நேசித்து, பாராட்டினவனின் கதையை இங்கு நாம் காண்கிறோம். பழைய ஏற்பாட்டு காலத்திலே உள்ள சட்டத்திற்கு மாறாய் எல்க்கானாவின் தன்மை வேறுபட்டதாய் காணப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டிலே உள்ள வேறு பல சம்பவங்களை நினைவுக்கு கொண்டு வர முடிகிறதா என உங்கள் வகுப்பினரை வினவவும். கீழ்க்காணும் விடைகளை நீங்கள் எதிர்பார்க்கலாம். ஈசாக்கு, ரெபேக்காள்; யாக்கோபு, ராகேல்; போவாஸ், ரூத். மேற்கூறிய நபர்கள் ஒருவருக்கொருவர் அன்பாய் இருந்தார்கள் என்று வேதத்தில் படிக்கிறோம். தன்னுடைய மனைவிமார்களை இவர்கள் நன்முறையில் நடத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய ஏற்பாட்டு போதனையின்படி, மனைவிமார்களை எப்படி நடத்துவது என கூறப்பட்டுள்ளது என உங்கள் மாணவர்களை வினவவும். 1பேதுரு3ல் கூறப்பட்டுள்ள கருத்தை விவாதத்திற்கு கொண்டு வரவும்.

வேத விளக்கம்

1பேதுரு 3:1-22.

பின்னணி:-

காலம். 63

நீங்கள் இவ்வுலகில் பரதேசிகளும், அந்நியர்களுமாயிருக்க அழைக்கப்பட்டுள்ளீர்கள். ஆகவே உங்களை தாழ்மையோடு கூட தேவ நாமத்தின் நிமித்தம், மனித அதிகாரங்களுக்கு உங்களைக் கீழ்ப்படுத்துங்கள் என 1பேதுரு 2:11 லிலே பேதுரு அறிவுரை விடுத்தார். இப்பாடத்திலே, நாம் அனுதின கிறிஸ்தவ ஜீவியம் நடத்த வேண்டும் என நமக்கு அறிவுரை கூறியுள்ளார்.

மனித ஆளுகைக்கு நாம் மனப்பூர்வமாய் நம்மை ஒப்படைக்க வேண்டும் என்றும், கிறிஸ்தவ அடிமைகள் மனப்பூர்வமாய் தங்களுடைய எஜமான்களுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்றும், போன வார பாடம் நமக்கு போதித்தது. தேவனற்ற எதிர்ப்பு சுவிசேஷத்திற்கு வராமல் இருக்கத்தக்கதாக வும் அப்படிப்பட்ட மக்களை கிறிஸ்துவிடம் வழி நடத்தத்தக்கதாக வும், மேற்கூறிய விதமாய் நாம் நடக்க வேண்டியுள்ளது. மனிதனுடைய ஆளுகைக்கு எவ்வித மாற்றமும் செய்யாமல், கிறிஸ்து ஒவ்வொருவடைய வாழ்க்கையிலும்

தங்கவசனம்:- இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள்... ....ஜாக்கிரதையாய் இருங்கள். 2பேதுரு.3:14.

கிரியை செய்ய அனுமதித்தால், அவர் அவனை மாற்ற, அவன் கிறிஸ்துவை மேய்ப்பராகவும், போஷகராகவும் தெரிந்து கொள்வான். இவ்விதமாய் சுவிசேஷம் மனிதனை மாற்றக்கூடும்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் மூன்று முக்கியப் பகுதிகளை இவ்வாரப் பாடம் விளக்குகின்றது. முதலாவதாக, ஒரு கிறிஸ்தவனின் வீட்டு வாழ்க்கை; இரண்டாவதாக, கிறிஸ்தவன் எல்லாத் தொடர்புகளிலும் தாங்கும் சக்தியையுடையவனாய் இருத்தல். மூன்றாவதாக, சித்திரவதைப் படுத்துகிற உலகில் கிறிஸ்தவனின் பொறுமையும், சாட்சியும்.

1 வீட்டில் உள்ள தொடர்புகள்:-

1பேதுரு 3:1-7

(அ) ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் வழிகள்:- 1பேதுரு 3:1-6

மனிதனுடைய ஆளுகைக்கு கீழ்ப்படிய இன்னும் ஓர் சந்தர்ப்பம் உள்ளது. மனைவிமார்கள்; கிறிஸ்துவினிமித்தம், தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். இது கட்டாயத்திற்காக அல்ல, கிறிஸ்துவின் அன்பினால் ஈர்க்கப்படுவதால், கணவன்மார்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் ஆண் என்றும் பெண் என்றும் இல்லை. (கலா. 3:28) மேற்கூறிய கருத்தை உபயோகித்து கணவன் ஆளுகை செய்யவும் கூடாது. மனைவி கீழ்ப்படியாமல் இருக்கவும் கூடாது. கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யும் ஒருபகுதியாக கணவனுக்கு, மனைவி கீழ்ப்படிய வேண்டும்.

கணவன் இரட்சிக்கப்படாதவனாய் இருந்தாலும், மனைவி அவனுக்கு கீழ்ப்படிய வேண்டும். இதினால், மனைவி, கணவனின் இரட்சிப்பில் கவனம் செலுத்த வேண்டாம் என்று போதிக்கப்படவில்லை. கணவனை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தும் அநேக வழி முறைகளை வேதாகமம் நமக்குப் போதிக்கின்றது.

1. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட மனைவி, கணவனுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். அநேக புருஷர்கள் விசுவாசிக்க மாட்டார்கள், ஆகையால், மனைவி முதலாவது வசனத்தை போதிக்க வேண்டும்.

2. சுவிசேஷத்தை கணவன் புறக்கணிக்கும் போது, அவனை பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கையால் ஆதாயப்படுத்த வேண்டும். இரட்சிக்கப்படாத புருஷர்கள், இரட்சிப்பின் வழியை அறிந்தவுடன், தொடர்ந்து அவனுக்கு பிரசங்கம் பண்ணுவது: நன்மை விளைவிக்காது. தீமையையே அதிகம் விளைவிக்கும். விவாதம் பண்ணுதலும், கண்டிப்பு செய்தலும், கணவனின் இருதயத்தை கடினப்படுத்தும். ஆனால் மனைவிமாரின் தேவ பக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கையைக் காணும் கணவன், அதி சீக்கிரம் இரட்சிக்கப்படுவான்.

3. புறஜாதிய (விக்கிர வணக்கமுடைய) பெண்கள் கணவனை வசப்படுத்துகிற மாதிரி, கிறிஸ்தவ பெண்கள், கணவன்மாரை வசப்படுத்த வேண்டிய தேவையில்லை. மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்தவஸ்திரங்களை உடுத்துக்கொண்டு கணவனை வசீகரிப்பதைவிட மேலானதொன்று இருக்கின்றது.

இரட்சிக்கப்படாத கணவன், சுவிசேஷத்திற்கு செவிசாய்க்க வேண்டுமானால், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணத்

ணதையே பெண் முதலாவது வெளிப் படவேண்டும்.

இந்த அலங்கரிப்பை தேவன் மிகவும் விரும்பி, போற்றுகிறார். இந்தக்கருத்தினை விளக்க பழைய ஏற்பாட்டு பெண்களை உதாரணமாக பேதுரு கூறுகின்றான். சாராள், தேவனை விசுவாசித்து, தன்னை அமைதலின் ஆவியினால் அலங்கரித்து, கணவனை மதித்து நடந்தாள் ரெபேக்காளுக்கு இருந்தது போல, சாராளுக்கு அணிகலங்கள் இருந்தாலும்(ஆதி.24:53) அதினை ஒத்துழையாத, பெருமையின் ஆவியினால் கெடுத்துப் போடவில்லை.

(ஆ) ஒருவருக்கொருவர் மதிப்புக் கொடுத்தல்:-

1பேதுரு 3:7

கிறிஸ்துவுக்குள் ஆண் என்றும், பெண் என்றும் இல்லை என்ற கருத்தை, அவிசுவாசியான கணவன் ஏற்றுக்கொள்வான் என பெண் எதிர்பார்க்க முடியாது. ஆனால் கிறிஸ்தவ கணவன்மார்கள் இந்த சத்தியத்தை நினைவில் கொள்ளவேண்டும். கிறிஸ்தவ அறிவின் ஓட்டத்திற்கு தகுந்தவாறு, கணவன்மார், மனைவிகளை நடத்தவேண்டும். புறஜாதிய கணவன்மார் தங்களுடைய மனைவிமார்களை மாடுகளைப்போல, அஃறிணைப்பொருளைப்போல நடத்துவர் ஆனால் கிறிஸ்தவ கணவன்மார் மனைவிமார்களை அன்புடனும்,சாந்தத்துடனும், மிகுந்த யோசனையுடனும், கருத்தோடும், நடத்தவேண்டும். கிறிஸ்துவினிடமிருந்து கற்றுக்கொண்ட பண்பினை அவளுககு முன் காட்டவேண்டும்.

மனைவிமார் பலவீன பாண்டமாகையால், அவர்களை கனத்தோடும், மரியாதையோடும், விவேகத்தோடும் நடத்தவேண்டும்.(இங்கு மனைவிமாரின் சரீரபலவீனத்தைப் பற்றி வேதாகமம் குறிப்பிடவில்லை அந்நாட்களில், பெண்கள் குடும்பத்தில் குறைவான மக்களாய் கருதப்பட்டனர். பொதுமக்களின் கவனத்திற்கு அவளின் வேலைகள் கொண்டுவரப்படாமல். மறைவாக குடும்பத்தில் இருந்து வேலை செய்து வந்தனர்) நம்முடைய சரீரத்தில் கனவீனமாய் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனம் கொடுக்கிறோம் என பவுல் கூறும் போது, பேதுருவின் மேற்கூறிய கருத்தை மனதில் கொண்டே கூறியுள்ளான். (1 கொரி.12:23-25).

கிறிஸ்துவுக்காக நம்முடைய சுயத்தை மற்றவர்களிடம் நாம் சமர்ப்பிக்க வேண்டும் என்பது தான் இந்த அதிகாரத்தின் திறவுகோல் கருத்தாக உள்ளது. ஆனால் கணவன் தன் சுயத்தை விட்டுக் கொடுக்கமாட்டான். அன்பினால் தம்மையே இவ்வுலகிற்கு தந்த கிறிஸ்துவின் ஆவியை, கணவன் வெளிப்படுத்த வேண்டும். யார் எஜமானனாய் இருக்க விரும்புகிறானோ, அவன் எல்லோருக்கும் ஊழியக்காரனாய் இருக்கக்கடவன் என இயேசுவே கூறியுள்ளார் (எபேசி.5:25; மாற்கு 9:34 35; மத்.23:11) கிருபையின் வாழ்க்கைக்கு தன் மனைவி சுதந்தரவாளியாய் இருக்கிறாள் என்பதைக் கண்டவுடன், அவன் தன் னையே தேவனுக்கு அடிமையாய் ஒப்புடைத்து விடுகிறான். ஆவிக்குரிய ரீதியில், பெண்ணும், ஆணும் சமமே, இரட்சிப்பினையும், சுதந்தரத்தையும் (ஆணும், பெண்ணும்) இருபேரும் ஒன்றாகவே பெறுகின்றனர். விசுவாசத்தை நடைமுறையில் பயிற்சிவிக்க, ஆணும், பெண்ணும், ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளவேண்டும். மேலும் தேவன் வைத்துள்ள ஆவிக்குரிய வரங்களையும், ஊழியங்களையும், ஆசீர்வாதங்களையும் அவரிடம் வேண்டிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தன்னுடைய மனைவிக்கு கொடுக்க வேண்டிய கனத்தையும், மதிப்பையும் கொடுக்காத கணவனின் ஜெபம் தடைபடுவதை அவனே காணலாம். தன்னுடைய மனைவியை அராஜக முறையில் நடத்துபவனுடைய ஜெபத்திற்கு தேவன் ஒருபோதும் பதிலளிப்பதில்லை.

2 உலகிலுள்ள தொடர்புகள்

1 பேதுரு 3:8-13.

(அ) உண்மையான சகோதர அன்பு:- 1 பேதுரு 3:8.

1 பேதுரு 2:1லிருந்து, 3:7 வரையுள்ள கருத்தை இவ்வசனம் சுருக்கிக் கூறிவிடுகின்றது. இதில் 5 புத்திமதிகள் கூறப்பட்டுள்ளன.

1 நீங்கள் ஆவியில் ஒருமனப்பட்டவர்களாய் இருங்கள். ஒருமனப்பாட்டை ஆவியானவர் தான் கொண்டு வருகிறார் என்பதை அப்போஸ்தல நடபடிகள் நமக்கு விளக்கிக் கூறுகின்றது. ஒருமனத்தின் மூலம் தான், ஒரே நோக்கும், தேவனைத் தேடி ஜெபித்தலும், சுவிசேஷ ஆசையும் மனிதனுக்குள் ஏற்படுகின்றது. மனவேற்றுமைகளை ஆவியானவர் தான் தடுத்து விடுகின்றார். (அப். 6:1-7; 15:2,25,28.) எல்லோரும் ஒன்றாக சேர்ந்து கிரியை செய்யத்தக்கதாக, ஆவியானவர் விசுவாசிகளின் சொந்த கருத்துக்களையும், சொந்த முறையில் (கிரியை) வேலை செய்வதையும் புறம்பாக்க உதவுகின்றார். கிறிஸ்தவ ஆவியின் இணைப்பினை இழக்காமல் நாம்தேர்தலில் தோல்வியைசந்தோஷமாக ஏற்றுகொள்ளக் கூடும். அல்லது தீர்மானத்தை கைவிடக் கூடும்

(2) நாம் மற்றவர்களுடைய பல வீனங்களைக் குறித்துக் கேலிசெய்யாமல், அவர்களின் பாடுகளைக் குறித்து, நாம் அதிக கவலையுற வேண்டும். பரிதாப உணர்ச்சி கொள்ள வேண்டும்.

(3) நம்முடைய கிரியைகளின் மூலம், நம்முடைய சகோதரர்களோடே அன்பு கூறவேண்டும்.

(4) யாவரோடும், அன்போடும், சாந்தத்துடனும் பழக வேண்டும்.

(5) இவ்வுலக மக்கள் கொள்ளுகின்ற பெருமையின் ஆவியை, நாம் கொள்ளாமல், தாழ்மையின் ஆவியை உடையவர்களாயிருப்போம்.

நம்முடைய சுயத்தை நம்மிடமிருந்து எடுத்துப் போடத்தக்கதாக, எல்லாவற்றையும் ஜீவனுள்ள ஆவியின் முறைமையின் படி செய்யக்கடவோம். நம்முடைய ஜீவியத்திற்கு இராஜாவான கிறிஸ்துவுக்கு, உரிய இடத்தை கொடுக்கக் கடவோம். தேவ நாமத்திற்கு மகிமை கொண்டு வருவோம் அவிசுவாசிகள் மத்தியில் நல்ல சாட்சிகளாய் ஜீவிப்போம்.

(ஆ) உன்னத ஜீவியம்:- 1பேதுரு 3:9-13.

கிறிஸ்தவ தாழ்மையினையும், மன உருக்கத்தையும் அன்றைய உலகம் இழிவாய் எண்ணினது. ஆனால் அதே சமயம் உலகப்பிரகாரமான ஆடம்பர மனிதர்களை உலகம் அதிகம் போற்றியது. தீமையினையும் கொடுமையினையும் கிறிஸ்தவர்கள் மேல் சுமத்துவதின் மூலம், உலகமக்கள் கிறிஸ்தவ ஜீவியத்தை வெறுத்தனர். நம்மை கொடுமைப் படுத்துகிறவர்களை, (வைது) சுடு சொற்களால் தீண்டிவிடுவது சாதாரண மக்களின் வழக்கமாகும். ஆனால் கிறிஸ்தவன் தன்னுடைய அழைப்பையும், கிறிஸ்தவனிடமிருந்து பெறப்போகும் ஆசீர்வாதத்தையும் நினைக்கும் போது, சபிக்கிற மக்களையும் அவன் ஆசீர்வதிப்பான். (மத்.5:44;10:8ஐப்பார்).

இந்த சத்தியத்தை மறுபடியும் வலியுறுத்தத்தக்கதாக, பேதுரு இன்னொரு பகுதியையும் எடுத்துக் காட்டாக கூறுகின்றான், சங்.34: 12-16ஐவாசித்துப்பார். நீங்கள் ஜீவனை நேசித்தால், வாழ்க்கையை ருசிக்க விரும்பினால், தீமைபேசுவதிலிருந்து விலகி விடுங்கள். தவறாய் வழிநடத்தும் காரியங்களிலிருந்து விடுபடுங்கள் நல்லதைச் செய்யுங்கள். சமாதானத்தைத்தேடி, அதைத் தொடருங்கள்.

நீதிமான்கள் மேல் கர்த்தருடைய கண்கள் நோக்கமாய் இருக்கின்றது, அவர்களின் வேண்டுதலுக்கு அவர் செவி சாய்ந்தே இருக்கின்றது. துன்மார்க்கரின் ஜெபத்தையோ தேவன் அருவருக்கிறார். நன்மை செய்கிறவர்களுக்கு தீங்கிழைப்பவன் யார்? தேவனே நம்முடைய ஜீவனாய் இருக்கின்றார். நம்முடைய வாழ்வு தேவனாகிய கிறிஸ்துவில் மறைந்து காணப்படுகின்றது. (கொலோ. 3:3,4; சங்.34:19ஐயும்பார்.

(3) சித்திரவதையை நாம் சந்திக்கும் முறைமை:- 1பேதுரு 3:14-18.

(அ) அதை ஆசீர்வாதமாக கருது:-1பேதுரு3:14

நாம் சித்திரவதையை எதிர் பார்க்கவேண்டும் என்றோ, அல்லது அதை நாடி நாம் போக வேண்டும் என்றோ, பேதுரு இங்கு வலியுறுத்திக் கூறவில்லை. நாம் நீதியோடு கூட ஜெபிக்க வேண்டும். (விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவின் நீதி நமதாகின்றது. இது ஆவியின் கனியால் வெளிப்பட வேண்டும்). நமக்கு சித்திரவதை வருமானால், அதை சந்தோஷத்தோடு வரவேற்க வேண்டும். (மிகுந்த சந்தோஷத்தோடும், தேவ ஆசீர்வாதம் கிட்டும் என்ற எண்ணத்தோடும் சித்திரவதையை சந்திக்க வேண்டும்).

ஆனால் இது எளிதான ஒருகாரியமல்ல என்பதையும் வேதம் போதிக்கின்றது. ஒரு சில விசுவாசிகளை பயமுறுத்துவார்கள் கிறிஸ்தவர்களின் முன்மாதிரி அவிசுவாசிகளின் மனசாட்சியினை உறுத்திக் கொண்டேயிருக்கும். நாமும் அவிசுவாசிகளின் பாவத்திலும், இன்பத்திலும் பங்கு கொள்ள அழைப்பு விடுப்பார். ஆனால் நாம் இதைக் குறித்து கலங்கக்கூடாது. அப்போஸ்தலர்கள் சொன்னது போல, இயேசுவின் நாமத்திற்காய் பாடுபட தகுதி பெற்றோமே என நாமும் கூறி மகிழ்ச்சியடையலாம். (மத். 5:10-12; அப்.5:41).

(ஆ) சித்திரவதையை ஒரு சந்தர்ப்பமாக மாற்றிக் கொள்:- 1பேதுரு.3:15,16.

பாடுகளின் மத்தியில் நாம் சந்தோஷப்படுவது மாத்திரமல்ல, பாடுபடுத்துகிறவர்களின் மேல் தேவ ஆசீர்வாதம் வரவேண்டும் என ஜெபிப்பது மாத்திரமல்ல நமக்குள்ளே உள்ள நம்பிக்கையைக் குறித்து சாட்சியிடவும் தயாராய் இருக்க வேண்டும். நாம் ஏன் விசுவாசிக்கிறோம் என்பதையும், எதைவிசுவாசிக்கிறோம் என்பதையும் மற்றவர்களுக்கு தெளிவாய் கூறத்தயங்கக் கூடாது. பவுல் சனகரீம் சங்கத்திற்கு முன்பாகவும், பெலிக்ஸ் கவர்னருக்கு முன்பாகவும், அகிரிப்பா இராஜாவுக்கு முன்பாகவும், தான் விசுவாசித்தவரைப் பற்றி தைரியமாக சாட்சியிட்டுக் கூறினான். (அப்.23,24,26). நாமும் கூட நியாயாசனத்துக்கு முன்பாக மாத்திரம் அல்ல, நம்முடைய அனுதின வாழ்வில் சந்திக்கும் யாவரிடமும், நாம் எதை

ஏன் விசுவாசிக்கிறேம் என தெளிவாய் கூற தயங்கக் கூடாது.

இப்படிச்செய்ய வேண்டுமானுல் அதற்கு நல்ல ஆயத்தமும், ஆவிக்குரிய அனுபவமும் தேவையாய் உள்ளது. வேதாகம தெளிவு மிகவும் தேவை. இப்படியாக நாம் நன்ருக தயார் செய்து கொண்டவுடன், பெந்தெகொஸ்தே விசுவாசிகளுக்கு கொடுத்த அதே தைரியத்தையும், சுயாதீனத்தையும் கொடுக்க பரிசுத்த ஆவியானவரிடம் நாம் ஜெபிக்கலாம்.

இப்படியாக ஆயத்தம் செய்து பேசுவது, பரிசுத்த ஆவியின் முறைமைக்கு தவறு என்று எண்ணுவது மடமையாகும் (லூக்கா. 12:11). நீங்கள் என்ன பேசவேண்டும் ஆவியானவருக்கு தெரியும். ஆகவே தயார் செய்ய வேண்டாம் என இயேசு கூறவில்லை. தாம் போதிக்கும் மாணவர்களுக்கு இவ்வார்த்தையினைக் கூறினர், (பேசுவது நீங்கள் அல்ல, பரிசுத்த ஆவியானவர் என்று) இயேசுவின் போதனை மூலம், சீஷர்கள் ஆயத்தப்பட்டார்கள். தேவை வரும் போது, சூழ்நிலைக்குத் தக்கதாக பேச பரிசுத்த ஆவியானவர் போதித்து வழி நடத்துவார் (லூக்.12:12). ஆகவே இயேசுவின் போதனை மூலமும், தேவை ஏற்படும் போது ஆவியானவர் அருளும் போதனை மூலமும், சித்திரவதையை, தேவனுக்கு சாட்சிடும் சந்தர்ப்பமாக மாற்றிக் கொள்ளலாம்.

நம்முடைய எதிர்பார்ப்பை மற்றவர்களிடம் கேட்கும் போது, போது கோபத்தோடு கூருமல், சாந்தத்தோடும், தேவ பயத்தோடும் கூறக்கடவோம். பொய்யாய் சொல்லுகிற குற்றச்சாட்டுகளுக்கு நாம் உத்திரவாதிகள் அல்ல என்று கண்டவுடன், அவிசுவாசிகள் வெட்க முறுவர்.

(இ) கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின் பற்றுதல்:-

1 பேதுரு. 3:17,18.

அவிசுவாசிகள் நம்முடைய நம்பிக்கையைக் குறித்து உணராமல் தொடர்ந்து நம்மை சித்திரவதைக்குள்ளாக்கி அவர்களை எதிர்க்காமல், வாளாவிருப்பது நல்லது. இந்தப் போதனையைப் பொறுத்த மட்டில், கிறிஸ்துவின் முன் மாதிரியைப்பின்பற்றுவது நலம். அதிகமாக பாடுபடுவதை விட இயேசு பயங்கர பாடுகளை அடைந்துள்ளார். நம்மைத் தேவனிடம் சேர்க்கத் தக்கதாக, அவர் பாடுகளை தாமாகவே ஏற்ருர்.

வாழ்க்கையோடுள்ள தொடர்பு:-

(1) வசனத்தை அவிசுவாசிகளிடம் தொடர்ந்து, பேசும் போது, ஒரு சில சமயங்களில் அதினல் தீமை விளைந்துள்ளதா?

இதைத்தான் 1 பேதுரு .3:1,ல் பேதுரு கூறியுள்ளார். நாம் செய்வதைக் கொண்டும், சொல்லுவதைக் கொண்டும், தேவ நாமத்தை அவிசுவாசிகள் மத்தியில்) துதிக்கிறேம் என்று போன வார பாடத்தில் படித்தோம். வாழ்க்கையோடுள்ள தொடர்பு பகுதியில்) சுவிசேஷத்தைப் பற்றியோ அல்லது வேதத்தைப் பற்றியோ சில பாவிகளுக்கு கூற வேண்டியதில்லை, அல்லது கிறிஸ்தவ ஜீவியம் என்ருல் என்னவென்றும் கூற வேண்டியதில்லை. ஏற்கனவே இவைகளைப் பற்றி அவர்கள் அதிகம் அறிந்துள்ளார்கள். ஒரு தடவை இரட்சிக்கப்பட்டு, பின் மாறிப்போனவர்களின் விஷயத்தில் இது உண்மை தான். கிறிஸ்தவர்

களைப்போல இவர்களால், அநேக வசனங்களை மேற்கோளாக எடுத்துக் காட்ட முடியும். வசனத்தின் அறிவு இப்படியிருனால், இவர்கள் வழிவிபோக வில்லை. ஆனால் அவர்களின் சித்தத்திலே தான் சிறிது கோளாறு உள்ளது. இப்படிப்பட்டவர்கள் அறியாமை என்ற இருளினால் தடுமாறி ஆவிக்குரிய, ஒழுக்க நெறிக்குரிய காரியங்களினால் இடறிப் போகிறார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிறிஸ்தவன் கஷ்டமான கட்டத்தை அடைந்து விடுகிறான். இப்படிப்பட்ட மக்களோடு கிறிஸ்தவன் பேச்சைக் குறித்து செயல்கள் மூலம் அவனை இரட்சிப்புக்குத் திரும்பவும் கொண்டு வர முடியுமா? பேதுரு சொல்லுகிறான். ஆம் என்று இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்காமல் சாந்தமாய் இரு. தெய்வீக வாழ்வினை அவன் முன் நடத்திக் காட்டுவதுதான் சிறந்த முறைமையாகும். செவி சாய்க்காத பாவிகளிடம் அதிகம் பிரசங்கம் பண்ணினால், அது சுய தோல்வியே ஆகும். ஆகவே அவன் இப்படிப்பட்ட பாவிகளுக்காக அதிகம் ஜெபிப்பது நலம் பரிந்துரை ஜெபம் இன்னும் வல்லமையான ஆயுதமாக உள்ளது.

(2) நல்ல ஜீவியம், நீண்ட ஆயுளைத்தரும் என்பது உண்மைதானா?

ஒழுக்க விஷயத்தில் தேர்ந்தவர்களாய் இருப்போமானால், நாம் நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்போம். செய்தித்தாளின் ஆசிரியனிடம் நீண்ட ஆயுளைப் பற்றி ஒரு கட்டுரை எழுத அழைப்பு கொடுக்கப்பட்டது. அவன் ஒரு பார்க்குக்கு போனான். அங்கே தோற்றத்தில் முதுமையானோராய் தோன்றும் மூன்றுபேரை சந்தித்தான். இந்த மூன்று பேரையும் எழுத்தாசிரியன் கேள்விகேட்க ஆரம்பித்தான், நீங்கள் இவ்வளவு நாட்கள் ஜீவிக்கும் இரகசியம் என்னவென்று வினவினான். முதல்மனிதன் இவ்வாறு கூறினான்:- தான் மரக்கறி உண்பவன் என்றும், இதுநாள் வரை மாமிசம் சாப்பிடவில்லையென்றும், அதினால்தான் அதிக நாட்கள் ஜீவிப்பதாக கூறினான்.'' அவனுக்கு வயது85. இரண்டாவது மனிதன் கூறினான்:- தான் இது வரை எந்த ஒழுக்கக் கேட்டிலும் ஈடுபட்டு, என் சரீரத்தைப்பாழ் படுத்தாதினால், இவ்வளவுநாட்கள் ஜீவிக்கிறேன் என்றார். அவனுடையவயதைக்கேட்டபோது89ஆகியிருந்தது. மூன்றாவதுமனிதன் கூறினான்: தான் எப்போதுமே விலையுயர்ந்த உணவை உண்டு, பயங்கர ஒழுக்க கேடானவாழ்வை நடத்தியவன் எனக்கூறினான் அவனுடைய வயதை வினவிய போது28தான் ஆகியிருந்தது. பாவ ஜீவியவாழ்க்கை சரீரத்தைக்கொடுத்துப்போடும். நீண்ட நாட்கள், நல்லாரோக்கியத்தோடு வாழ வழிவகுப்பது கிறிஸ்தவ ஜீவியம் ஆகும். (1.பேதுரு. 3:10,11,ஐப்பார்)

(3) நீங்கள் தீமை செய்யாமல், நன்மையினையே செய்தாலும்கூட, அநீதிமான்கள் தீங்கு இழைப்பார்களா?

எது நடக்கும்என வேதாகமத்தில் கூறப்பட்டதோ, அதனையே அநேகர் சட்டமாய் எடுத்துக் கொள்வர். 1பேதுரு. 3:13, நன்மை செய்கிறவன் ஒருநாளும் தீங்கடைவதில்லை என்றகருத்து கூறப்பட்டுள்ளது. இக்கருத்து சரியாகவும் இருக்கலாம், சரியில்லாமலும் இருக்கலாம். இதையொரு சட்டமாக நினைத்து பேதுரு கூறவில்லை. பாவமில்லாத தெய்வக்குமாரனுக்கு, பாவிகள் இழைத்த கொடுமைகளை

நேரிடையாகக்கண்டவன் பேதுரு வாகும். பாவ இருதயமுள்ள மனிதன் எவைகளையெல்லாம் செய்வான் என்பது பேதுருவுக்குத் தெரியும்.

பாவமான மனிதர்கள் எந்தக் காரியத்தையெல்லாம் செய்தனர் என்பதை ஆதிசபைநன்குஅறியும். யோவானின் சகோதரனாகிய யாக்கோபுக்கு என்ன நேரிட்டது என்பதுவும் பேதுருவுக்கு தெரியும். யாக்கோபு தான் ஆதி சபையின் முதல் இரத்த சாட்சியாய் மரித்தான். ஸ்தேவானுக்கு என்ன நேரிட்டது என்பதுவும் பேதுருவுக்கு தெரியும். தான் எழுதுகிற காரியம் அகில உலகிலும் நிகழவேண்டியகாரியம் எனபேதுருஎண்ணவில்லை. பேதுரு எழுதுகிற காரியம் ஒன்றிரண்டு விஷயங்களில் (காரியங்களில்) உண்மைதான்.

இந்தக்கருத்திலே அநேக புதிய ஏற்பாட்டு வியாக்கியானிகள் தவறிப் போய்விடுகிறார்கள். எல்லோரும் நல்மக்கள் என்றும், நன்மை செய்கிறவர்களுக்கு அவர்கள் ஒரு போதும் தீங்கிழைக்கமாட்டார்கள் என்றும் கூறிவிடுவர். மனிதனின் இருதயம் எவ்வளவு பொல்லாங்கானது என்பதை மக்கள் அறியமாட்டார்கள்.

நவீனமனிதனின் யுகத்தில், தேவ பிள்ளைகள், கேலி செய்கிற தேவனற்ற மக்களால் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்பதை சரித்திரம் சாட்சி பகருகின்றது. தேவ பக்தியை கேலி செய்யும் தன்மை உலகெங்கும் பரவியுள்ளது. பரவி வருகின்றது. அமெரிக்காவிலும் இந்தப்பண்பாடு காணப்படுகின்றது. ஒருசில பாவிகள் தேவ மனிதர்களை வெறுப்போடு நடத்துவர். தாங்கள் தண்டிக்கப்படாமல்இருப்போம் என தோன்றினால், தேவனுடைய பிள்ளைகளையும், அவிசுவாசிகள் கொலை செய்து விடுவர்.

(4) நீதியினிமித்தம் நாம் எவ்வாறு பாடுபடுவோம்?

நம்முடைய பாடுகளைக் குறித்து சில கேள்விகளைக்கேட்பது நலமாகும். காரியங்களை இருக்கிற வண்ணமாகக் காண அநேக நேரங்களில் தவறி விடுகிறோம். நமக்கு பிரச்சனை வந்தவுடன் சூழ்நிலையினையோ, அல்லதுசாத்தானையோ, அல்லது பிசாசுகளையோ, அல்லது மற்ற மனிதர்களையோகுறைகூறத் தொடங்கி விடுகிறோம். நம்முடைய பழியை மற்றவர்கள் மேல் சுமத்துவதின்மூலம், நாம் நம்மை தப்புவித்துக்கொள்கிறோம்.

நாம் கிறிஸ்தவர்களாய் இருந்தாலும் கூட, நமக்கு மாம்சீக குணங்கள் இருக்கின்றனஎன்பதை மறந்துவிடக்கூடாது. ''என்னுடைய ஆவிக்குரிய மனிதனைமாம்சீக சிந்தைகள் மேற்கொள்ள அனுமதித்து விடுகிறேனா?'' என அநேக நேரங்களில் கேள்விகேட்டுக்கொள்ளுகிறோம். நம்முடைய பலவீனம், மற்றவர்களோடு சண்டையிட வழி ஏற்படுத்தி விடுகின்றது. நாம் கிறிஸ்தவர்களாய் இருப்பதால், ஜனங்கள் என்னை இவ்வாறு நடத்துகின்றனர் என்று கூறி தப்பிக் கொள்கிறோம். பாவிகள் நம்மேல் கூறும் குற்றச்சாட்டுக்கள் உண்மையாய்இருப்பினும், பாவிகள் நமக்குச்செய்யும் தீங்குக்காக சாத்தானை குறை கூறுகிறோம். நம்முடைய நிலையைக் காப்பதற்காக, நம் குற்றத்தை மற்றவர்கள்மேல் சுமத்தி விடுகிறோம்.

நீதியின் நிமித்தம் பாடுபடும் சந்தர்ப்பங்கள் அநேகம் நம் வாழ்வில் வருவதுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில், நாம்சந்தோஷமாய், இருந்து, களிகூரக்கடவோம். நம்மில் எவ்வித பாவமும்இல்லாமல், கிறிஸ்துவின் நிமித்தம் பாடுபட்டால், அது நீதியின் நிமித்தம் பாடுபடுவதாகும்.

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் பெருக உண்டாவதாக, ஆமென்.

இம்மாதம் ஏழாம் தேதி THE HINDU என்ற ஆங்கில தின சரிப் பத்திரிக்கையில் ஜைனமத சாதுக்கள் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுங்குப் பிரமாணங்களைப் பற்றியதோர் குறிப்பிருந்தது. அதின் சுருக்கத்தை கீழே தருகின்றேன்.

1) ஜைன சாதுக்களும், சந்நியாசினிகளும் எந்தவிதமான வாகனங்களிலும், பிரயாணம் செய்யாமல், தலையைமூடிக் கொள்ளாமல் வெறுங்காலாலேயே செல்லவேண்டிய இடங்களுக்கு நடந்து செல்லவேண்டும்.

2) மழைக்காலத்தின் காரணத்தை முன்னிட்டல்லாமல் எந்த ஒரு இடத்திலும் அவர்கள் நீண்ட நாட்கள் தங்கவே கூடாது.

3) தங்கள் ரோமத்தை சவரகன் கத்தியாலும் கத்திரியாலும் வெட்டி அகற்றுமல் கரத்தாலேயே தான் பிடுங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

4) அவர்கள் தங்கள் உணவைத் தாங்களே சமைத்துக்கொள்ளாமலும், மற்றவர்களை வைத்து சமைக்காமலும், சாதாரண மக்கள் தங்களுக்கென்று சமைத்துள்ள உணவைத்தங்கள் பாத்திரங்களுடன் அவர்கள் வீடுகளுக்குச்சென்று வாங்கிச் சாப்பிடல்வேண்டும்.

5) இரவில் அவர்கள் ஒருபோதும் சாப்பிடவும், தண்ணீர் அருந்தவும் கூடாது பகற்காலங்களிலும் கூட அவர்களின் ஆகாரங்கள் அளவோடிருத்தல் வேண்டும் அடிக்கடி உண்ணு நோன்பு நோற்கவேண்டும்.

6) ஜைன சாதுக்கள் மிகவும் எளிமையான வாழ்க்கை நடத்தல் வேண்டும் பகவான் மகாவீரரின் சுவிசேஷத்தைப் படிப்பதிலும் அதைப்பரப்புவதிலும் அவர்கள் தங்களை அர்ப்பணித்து விட வேண்டும்.

7) அவர்கள் திருமணம் செய்தல் கூடாது. மனதிலும், வார்த்தையிலும், செயலிலும் பாலுணர்வுகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். எந்த ஒரு சந்தர்ப்பச் சூழ்நிலையிலும் ஒரு ஜைனசாது ஒரு ஸ்திரீயையாகிலும் அவளின் வஸ்திரத்தையாகிலும் தொடவே கூடாது பெண்கள் வாசம்பண்ணும் வீட்டில் அவர்கள் ஒருக்காலும் தங்கியிருக்கக் கூடாது. இரவு காலங்களில் ஜைன சாதுக்கள் தங்கியிருக்கும் இடங்களுக்குப் பக்கத்தில் எந்த ஒரு பெண்ணையும்வர அனுமதிக்கக் கூடாது.

மனிதன் தன் தலைமுடியையும், தாடையின் ரோமங்களையும் பிடுங்கித் தன்னைக் கொடிய வேதனைக்குட்படுத்த வேண்டுமென்பதுவும், மற்றவர்கள் தங்களுக்கென்று ஆக்கிவைத்த உணவை அவர்களிடம் சென்று இரந்துண்டு வாழவேண்டுமென்பதுவும், பெண்களைத் தீண்டாத இழிகுலத்தவராகக் கருதி விலகிவாழ வேண்டுமென்பதுவும் ஆண்டவர் நம்மில் எதிர்நோக்கும் காரியமல்ல. அவர் நம்மில் ஒன்றே ஒன்றை மாத்திரம்தான் ஆவலுடன் எதிர்நோக்கி நம்மண்டை வந்து காத்து நிற்கின்றார். அவருக்கு வேண்டியதெல்லாம் நம்முடைய இருதயம் மட்டுமே அந்த இருதயத்தில் அவர் சதாகாலமும் வாசம்பண்ண வேண்டுமென்பதே அவரின் கட்டுக்கடங்காத ஒரே ஆவல். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்......" (வெளி. 3:20) என்கின்றார் மற்றொரு இடத்தில் இதனை அவர் நம்மிடம் வாய்திறந்தே கேட்டுவிட்டார். "என் மகனே உன் இருதயத்தை எனக்குத்தா; உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக" (நீதி. 23:26)

எந்த ஒரு மதத்திலும், மார்க்கத்திலும் பக்தியின் பாதைக்கு மனிதன் செலுத்தவேண்டிய விலைக்கிரயம் மிகக்கடுமையானதாகவே உள்ளது இவ்விதமான ஒழுக்கக்கட்டுப்பாட்டு நெறிகளை மனிதன் கவனமாகத் தற்காத்து அவன் பரிசுத்தமாக ஜீவிக்க முடியுமா என்பதே கேள்வி.

"மனுஷனானவன் பரிசுத்தமாயிருக்கிறதற்கும், ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் நீதிமானாயிருக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?" (யோபு 15:14) என்றார் யோபு பக்தன்.

ஜைனமத ஒழுங்கு நெறிகளில் கடைசியாகக் காணப்படும் மாமிச இச்சைக்குரிய பாவங்களே மனிதனை வாட்டி வதைக்கும் கொடிய பாவமாக உள்ளது. எந்த ஒரு மனிதனையும் வீழ்த்தச் சத்துரு தைரியமாகப் பயன்படுத்தும் ஆயுதம் இந்தச் சிற்றின்ப இச்சையேயாகும். தங்கள் வாழ்நாள் முழுமையிலும் தேவனுக்குப் பிரியமான பரிசுத்த ஜீவியம் செய்து அநேகரை நீதிக்குட்படுத்திய பெரிய தேவபக்தர்களைக் கூடச் சத்துரு கடைசியாக நொடிப்பொழுதில் தன்னுடைய இந்த ஆயுதத்தால்தான் வெகு இலகுவில் மடங்கடித்து வீழ்த்தியிருக்கின்றான்.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் குறிப்பிடும் தமது சரீரத்திலுள்ள முள் கூட மாமிச இச்சைக்குரிய கடும் வேட்கையாகவிருக்கலாம் என்று சில வேத பண்டிதர்கள் கருதுவதாக Dr. JACK HYLES என்ற சுவிசேஷப்பிரசங்கியார் கூறுகின்றார். ஆனால் இதை நாம் ஒத்துக்கொள்ள மாட்டோம். மண்ணாசை, பொன்னாசை மற்றும் அனைத்து ஆசைகளையும் மனிதன் எப்படியாவது உதறித்தள்ளி விட்டாலும் சிற்றின்பத்தாகத்திற்கு அவன் தப்பிப்போவது மகா கடினமானதாகவே உள்ளது.

நல்ல தேவஊழியம் செய்வோர் கூட இந்தக்கொடிய பாவத்திற்கு இரகசியமாக அடிமைப்பட்டு அல்லலுறுகின்றனர். அவர்களின் வாழ்க்கையில் இந்தப் பாவத்திலிருந்து வெற்றியே இல்லை. கொஞ்சநாட்கள் மாத்திரமே இவர்கள் வெற்றியுள்ள ஜீவியம் செய்கின்றனர். பின்னர் திரும்பவுமாக இந்தப் பாவச்சேற்றில் விழுகின்றனர்.

இந்தப்பாவம் எந்த ஒரு மனிதனின் கண்ணையும் குருடாக்கக் கூடிய வலிமை வாய்ந்தது. தான் பெற்ற பிள்ளையை மகள் என்று காணக்கூடாமல் மனைவி என்று நோக்கவும், சொந்த மகனின் மனைவியை மருமகள் என்று எண்ணி நடத்தவிடாமலும், உடன் பிறந்தவளை சகோதரி என்று நினைக்கவொட்டாமலும் இந்தச் சிற்றின்பத் தீப்பசி மனிதனின் புத்தியை நிலை குலையப்பண்ணி அவனின் பிரகாசமான மனக்கண்களைக் குருடாக்கிச் சோதோமின் மக்களைப் போல வாசலைத்தேடித் தடவித்திரியப்பண்ணி விடுகின்றது. இது மெய்தான் என்பதனைச் சமீபத்தில் என்னண்டை வந்ததொரு கடிதம் எடுத்துக் கூறுகின்றது. மட்டற்ற மனதின் துயரத்தோடு அந்த சகோதரியுடைய சோகக் கடிதத்தின் சிலவரிகளை எழுதுகின்றேன். அன்புகூர்ந்து அந்த ஆத்துமாவுக்காக பாரத்தோடு ஜெபித்துக் கொள்ளுங்கள்.

“நான் தற்கொலை செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்கும்போது தான் உங்களுடைய போனவருட ஜூன் மாத தேவ எக்காள இதழ் எனக்குக் கிடைத்தது. அதில் தற்கொலை செய்யப் போகிறேன் என்று ஒரு சகோதரி எழுதியிருந்த கடிதத்திற்கு நீங்கள் பதில் எழுதியிருந்தீர்கள். அது எனக்கு அதிக பிரயோஜனமாகவிருந்தது. எனக்காக அதிகமாக ஜெபம் பண்ணுங்கள். யோசேப்பு எவ்விதமாகச் சோதிக்கப்பட்டாரோ அவ்விதமாகவே நானும் சோதிக்கப்படுகின்றேன். என்னைப் பெற்ற என் தகப்பனாரே என்னை விரும்புகின்றார். ஆனால் நான் வீட்டைவிட்டு ஓடிவிடுவேன். ஆனால் சில சமயம் இரவில் இப்படிச் சொல்லுவார். அந்தச் சமயங்களில் நான் என்ன ஐயா செய்வது? இம்மட்டாக என் கற்பைக் காத்த கர்த்தர் தொடர்ந்து காத்துக்கொள்ள எனக்காக அதிக பாரத்துடன் ஜெபியுங்கள்”

மனிதனை மிருகமாக்கி அவனை நாயினும் கடையனாக்குவது இந்தப்பாவம் தான். கர்த்தரின் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருக்கும் இக்கடைசி நாட்களில் பிசாசு அநேக தேவமக்களை இந்தப்பயங்கரக் கண்ணிக்குள்தான் சிக்க வைத்துக் கொண்டிருக்கின்றான். இது சம்பந்தமாக என்னண்டை வரும் கடிதங்கள் அநேகமாகும். ஓரிரு வாரத்திற்கு முன்னர் வந்ததொரு கடிதத்தின் சிலவரிகள்:-

"ஐயா, நான் ஒரு கிறிஸ்தவள். என் மனம் போன போக்கில் நடந்தேன். என் சரீரத்தை மாம்சீகத்திற்கு ஈடுபடுத்தி அதில் சந்தோஷமடைந்து வந்தேன். அதுதான் எனது பொழுதுபோக்கு. எனக்கு வயது ஆக, ஆக திருமணம் செய்ய ஆசை வந்தது. எனக்கு விருப்பமான ஒருவரைத்தான் திருமணம் செய்ய வேண்டுமென்று மூன்று வாலிபருடன் பழகினேன். ஆனால் அவர்களோ என்னை ஏமாற்றிக் கைவிட்டு விட்டார்கள். நான் அதிகமாக அழுதேன். எனக்காக ஒரு மனுஷனும் இல்லையா என்று அடிக்கடி அழுவேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இப்போது வேலைபார்க்கும் பள்ளிக்கு வந்தேன். நான் முன்பு செய்த பாவத்தில் இங்கு வந்து விழுந்துவிட்டேன். அந்தப் பாவத்திலிருந்து எனக்கு விடுதலை இல்லை......" என்கின்றார்கள்.

வாலிப வயதினர் மட்டுமின்றி வயதானவர்களும், குடும்பஸ்தர்களும்கூட இந்தப் பாவத்தைப் புரிகின்றனர். இவ்விதமான பாவத்தைச் செய்வோர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டார்கள் என்று தேவவசனம் திட்டவட்டமாகக் கூறுகின்றது "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும் ...... தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை". (1 கொரி. 6:9,10)

மாமிச இச்சைக்குரிய இப்பயங்கர பாவங்களிலிருந்து நமக்கு விடுதலை இல்லையா? சதா சிற்றின்ப நினைவுகளால் சூழப்பட்டு அந்தகாரமடையும் நமது ஆத்துமாவுக்கு ஒரு மீட்பு இல்லையா? அசுத்தத்தையும் அருவருப்பையும் நோக்க ஆவலாய்த் துடிதுடிக்கும் நமது கண்கள் சுத்தாங்கம் அடையாதா?

இவ்விதமான பாவங்களை நாம் செய்கிறோமென்றால் அதின் ஒரே காரணம் நாம் ஆண்டவரில் நிலைத்திருக்கவில்லை என்பதேயாகும். "அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக்காணவுமில்லை, அவரை அறியவுமில்லை" (1 யோவான் 3:6) என்று தேவவசனம் அருமையாகக் கூறுகின்றது. ஆண்டவரில் நிலைத்திருக்கும் தேவப்பிள்ளைகள் ஒருபோதும் பாவஞ்செய்ய மாட்டார்கள். அனைத்தும் இதில் அடங்கிப்போய் விட்டது.

மாமிச இச்சைக்குரிய பாவத்திலிருந்து விடுதலைபெற விரும்பும் அன்பார்ந்த தேவப்பிள்ளையே, ஒழுங்கான ஜெபவாழ்க்கை, உபவாச வாழ்க்கை மூலமாக மாத்திரம்தான் நீ இந்தப் பாவத்திலிருந்து விடுதலை பெறமுடியும் என்பதை மறந்துவிடாதே. ஆண்டவருடன் சதா ஜெபத்தின்மூலம் நிலைத்திராத காரணத்தாலேயே நீ இந்தப் பாவத்திற்கு இந்நாள் வரை அடிமைப்பட்டுப் போனாய். தினமும்

சோம்பற்படாமல் அதிகாலையில் எழுந்து குறைந்தபட்சம் ஒருமணி நேரமாவது ஜெபிக்கத் தவருதே. 5 நிமிடநேர ஜெபம் 10 நிமிட நேர ஜெபம் எல்லாம் கடுஞ்சமரில் பயன்படாது. ஜெபிக்கும்போது உனது அவயவங்களை விசேஷமாகக் கண்களையும், கரங்களையும், இருதயத்தையும் தேவசமூகத்தில் ஒப்புவித்து ஜெபி. ஞானப்பாட்டிலுள்ள "என்தன் ஜீவன் இயேசுவே, சொந்தமாக ஆளுமே" என்ற பாடலைக் கருத்தோடும் தாழ்மையோடும்பாடி உன் சரீர அவயவங்களைக் கர்த்தருக்குக் கண்ணீருடன் ஒப்புக்கொடு காலை ஜெபத்துடன் காரியம் முற்றுப்பெற்றுவிடவில்லை. மத்தியானமும், மீதியான பகற்காலத்தில் சத்துருவுடன் நடக்கும் போருக்குத் தேவையான சத்துவத்தைத் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள அவசியம் ஜெபித்தல் வேண்டும். அப்படியே இரவின் அந்தகாரத்தின் போருக்கான உன்னதத்தின் பெலனை சாயங்கால ஜெபத்தின்மூலம் அடைதல் வேண்டும்.

மாமிச இச்சையை எளிதில் தூண்டக்கூடிய சித்திரங்களைப் பார்த்தல் கூடாது. உடனே கண்களைத் திருப்பிக் கொள்ளவேண்டும். அவ்விதமாகவே ஆபாசமான உடை அணிந்திருப்போரைக் கண்ணேறிட்டும் பார்த்தல் கூடாது. இது விஷயத்தில் மிகவும் விழிப்போடிருத்தல் வேண்டும். பார்த்தலில் என்ன பாவம் இருக்கின்றது என்றெண்ணி ஒருபார்வை பார்த்தாலே சத்துரு மீதியுள்ள மற்ற காரியங்களைச்செய்து உன்னைக் கட்டாயம் பாவத்தில் வீழ்த்திவிடுவான். மோட்ச பிரயாணத்தை ஆக்கியோனுகிய ஜான் பன்னியன் என்ற பக்தன் எழுதிய மற்ரெரு புத்தகமான "திருப்போர்" (HOLY WAR) என்ற புத்தகத்தை வாசித்தால் இதையேதான் நாம் காணலாம். பாவத்திற்குச் சிறிது இடம் கொடுத்தால் இறுதியாக நாம் பாவத்தால் பூரணமாக மேற்கொள்ளப்பட்டு நிர்ப்பந்தர்களாவோம். ஒட்டகத்தின் முகத்திற்கு மாத்திரம் தனது கூடாரத்தில் இடமளித்த அராபியனின் நிலையில் நம்காரியம் முடிவுபெறும்.

கிறிஸ்தவ வாழ்க்கையானது சந்தேகத்திற்கிடமின்றி ஒரு கடுமையான யுத்தம்தான், இதனை பவுல் அப்போஸ்தலன் எபேசியர் 6:12 ல் திட்டமாகத் தெளிவுபடுத்தி விட்டார். இந்தப் போரானது ஒரு கிறிஸ்தவனின் ஜீவிதஓட்ட முடிவுவரைத் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும். இதில் முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்பட்டு, ஜெயங்கொள்ளுகிறவனே ஜீவகிரீடம் சூட்டப்பெறுவான்.

"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள் அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" (நீதி 4:23) என்ருர் சாலொமோன்ராஜா மெய்யான வார்த்தைகள். சத்துரு விசேஷமாகச் செயல்படக்கூடிய இடம் நம்முடைய இருதயம்தான். மாமிச இச்சைக்குரிய பாவ எண்ணங்களை அவன் இருதயத்தினுள் அலையலை

யாக அனுப்பிக் கொண்டே இருப்பான். அவ்வித எண்ண அலைகளை நம்மால் தடுத்து நிறுத்த முடியாது. தலைக்குமேல் பறந்து செல்லும் பறவையை நாம் தடுக்கவியலாதே! ஆனால் அது நம் தலையில் கூடுகட்டுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். அதைப் போன்றே இச்சை நிறைந்த பாவ எண்ணங்கள் நம் மனதில் தங்கி கர்ப்பந்தரித்துப் பாவத்தைப் பிறப்பிக்க விட்டுவிடக் கூடாது. (யாக்கோபு 1:15) உடனே அவ்வித எண்ணங்களை மனதிலிருந்து அகற்றி அருமை நேசரின் பரிசுத்தம், மனத்தாழ்மை, அவரின் எல்லையற்ற தேவ அன்பு போன்றவற்றை மனதில் கொண்டுவந்து தியானிக்கலாம். இல்லையேல், உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையேதான் சிந்திக்கவேண்டும் (பிலி 4:8) மாம்ச இச்சைக்குரிய எண்ணங்களைக் கிளரக்கூடிய இடங்களுக்குச் செல்லுவதை ஒழித்து அவ்வித சம்பாஷணைகளுக்கும் விலகியிருத்தல் வேண்டும். எப்பொழுதும் “கர்த்தருக்குப் பரிசுத்தம்” என்பதே நம் வாழ்வின் நிலைக்கால் சட்டமாயிருத்தல் வேண்டும்.

ஆண்டவரோடு சதா உறவாடி அவருடைய ஐக்கியத்தில் நிலைகொண்டு வாழும் தேவமக்களின் முன்பு மாம்ச இச்சைக்குரிய பாவங்கள் கூர் ஒடிந்து தலை நசுங்கிக் கிடக்கும். அவற்றால் அவர்கள் கொஞ்சம் கூட சலனமடைய மாட்டார்கள். அவர்கள் பெற்ற பரிசுத்த அக்கினி அபிஷேகம் அவற்றை சுட்டெரிக்கும். அல்லேலூயா.

நம்முடைய சரீரம் கர்த்தருக்குரியது. கர்த்தரும் சரீரத்திற்குரியவர் (1 கொரி. 6:13). ஆகவே தேவனுக்குரியவைகளாகிய நம்முடைய சரீரத்தினாலும், ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துவோம். (1 கொரி. 6:20)

கிருபை உங்களோடிருப்பதாக, ஆமென்.

தேவ எக்காளம்

ஆன்ம ஈடேற்றத்திற்கெனப் பிரசுரமாகும் ஓர் ஆவிக்குரிய மாதாந்திர வெளியீடு. இது எந்த ஒரு சபைப் பிரிவையும் சார்ந்த ஒரு பத்திரிக்கையல்ல. ஆண்டுச் சந்தா ரூ. 7/- மட்டுமே.

அனுப்பவேண்டிய முகவரி:-

DEVA EKKALAM,
Kotagiri P. O. - 643 217,
Nilgiris, S. India

விலைக்கிரயம் என்ன?

எந்த ஒரு வாழ்க்கையிலும், அது வியாபாரமோ, கல்வியோ, விளையாட்டோ அது எதுவாயினும் சரியே நாம் அதற்கான விலைக்கிரயத்தைக் கணக்கிடல் வேண்டும் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்கள் தாங்கள் கலந்துகொள்ளும் முக்கியமான விளையாட்டுப் போட்டிகளுக்காக ஒரு நாளில் 8-லிருந்து 10 மணி நேரம் வரை கூடப் பயிற்சித்துக்கொள்ளுவதாக நான் சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஆம், அவர்கள் விலைக்கிரயத்தைக் கணக்கிடவேண்டும்.

கிறிஸ்துவை உனது கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளுவாயானால் நீயும்கூட அதற்கான விலைக்கிரயம் செலுத்தியாகவேண்டும். அதின் கருத்து யாதெனில், உனது குடும்பம் உனக்கெதிராகத் திரும்பலாம். உனது நண்பர்களில் அநேகரின் நட்பை நீ இழந்துபோக நேரிடலாம். நீ செய்துகொண்டிருக்கும் காரியங்களில் அநேகம் ஒழுக்க ரீதியிலும், மனிதப் பண்பாட்டின் படியும் தவறாக இருக்குமாயின் அவற்றை நீ விட்டுவிட வேண்டியதாகும். உனது வாழ்க்கையின் முழு அமைப்பும் அப்படியே மாற்றம்பெறும். ஆம், அதுதான் மனந்திரும்புதலாகும்.

“......சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்க வந்தேன்........” என்று இயேசு சொன்னார். மனித இருதயத்தினுள் கிறிஸ்து இரட்சகர் வரும்போது அதற்குள் ஐக்கியத்தையும், சமாதானத்தையும் கொண்டு வருகின்றார். ஆனால், அதே சமயம் அவரது வருகை, பிரிவினையையும் கூடக் கொண்டுவரும். ஒரு குடும்பத்தில் சிலர் இயேசுவை விசுவாசிப்பார்கள். ஆனால், மற்றவர்களோ கர்த்தரைப் புறக்கணிப்பார்கள். “எப்படியெனில், இது முதல் ஒரே வீட்டில் ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள், இரண்டு பேருக்கு விரோதமாய் மூன்றுபேரும், மூன்றுபேருக்கு விரோதமாய் இரண்டுபேரும் பிரிந்திருப்பார்கள் தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருப்பார்கள்” (லூக். 12:52,53) என்று ஆண்டவர் கூறினார். அதற்கப்பால் பரிசுத்த வேதாகமம் இவ்விதமாகக் கூறுகின்றது: “யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்”. (14:26,27) நீ கிறிஸ்து பெருமானைப் பின்பற்றிச் செல்லத் தீர்மானிப்பாயானால், மற்றபடிச் சொல்லப்

போனால் அதற்காக நீ ஏதோ ஒரு விலைக்கிரயத்தைச் செலுத்தப் போகின்றாய் என்பது பொருளாகும்.

கலியாணம் செய்துகொள்ளுவதற்கு முன்னர் நம்மில் எத்தனை பேர் அதற்கான விலைக்கிரயத்தைக் கணக்கிடுகின்றோம். விலைக் கிரயம் சரியாகக் கணக்கிடப்படாத காரணத்தினால் அல்லவா அநேக மணவாழ்க்கைகள் உடைந்து நொறுங்கி மண்மேடாய்க் கிடக்கின்றன. நாம் நிதானமாய் உட்கார்ந்து அந்த விலைக்கிர யத்தைக் கணக்கிடுவது கிடையாது. ஒன்றொரு நாள் நான் ஒரு பெண்ணைக் குறித்ததான சரிதத்தை வாசித்தேன். அழகான முக அமைப்பையும் நேர்த்தியான உடற்கட்டையும் கண்டு கவர்ச்சி யுற்று அவள் ஒரு வாலிபனை மணம்புரிந்தாள். அவனது மனநிலை, ஆவிக்குரிய ஜீவியநிலை, வாழ்க்கையின் ஒழுக்கநிலை எதனையும் அவள் கருத்தினில் கொள்ளவேஇல்லை. நடந்தது என்ன? அந்தோ பரிதாபம்! மணம்புரிந்து ஆறுமாத காலத்திற்குப்பின்னர் இருவரும் விவாகரத்து செய்துகொள்ளும் நியாய ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தனர்.

இயேசுவைப் பின்பற்றிவா

இயேசுவை நீ பின்பற்றிச் செல்லத் தீர்மானிப்பாயானால் அதற்கான விலைக்கிரயம் உனக்குண்டு. ஆனால், ஆண்டவரை இதயத்தில் ஏற்றுக்கொண்டு, அவரைப் பின்பற்றிச் செல்லாவிடி னும் நீ செலுத்தவேண்டிய விலைக்கிரயம் கூட உண்டு என்பதனை நீ மறந்துவிடக்கூடாது. கிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லாவிடில் செலுத்தப்படவேண்டிய விலைக்கிரயம் என்ன?

முதலாவது உனது மனம், இருதயத்தின் சமாதானத்தை நீ இழந்துபோவாய். தேவனுடன் உனக்குச் சமாதானம் இருக்காது. தேவனோடு நீ நல்மனம் பொருந்தியிருக்கமாட்டாய். தன்னுடன் நல்மனம் பொருந்திக் கொள்ளும்படியாக ஆண்டவர் உனக்கு விடுத்த பொன்னான தேவ சமாதானத்தின் தருணங்களை நீ புறக் கணித்திருப்பாய்.

"துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்" (ஏசா. 57:21) தேவனுடைய சித்தத்துக்கும், கிறிஸ்துவின் சாயலுக்கும் ஒப்பான நிலையில் காணப்படாதோர் யாராயினும் சரியே அவர்கள் எல்லாரும் தேவனின் சமூகத்தில் துன்மார்க்கராகவே எண்ணப்படுகின்றனர்.

உலகப்பிரகாரமாகக் களிப்பும், வேடிக்கையும், மனமகிழ்வின் ஆரவாரங்களும், நல்ல தருணங்களும் உனக்கிருந்தபோதினும் உன்னுடைய இருதயத்தின் அடித்தளத்தில் தேவ சமாதானமின்றி நீ இருப்பாய். தேவனோடு உனக்குச் சமாதானமே கிடையாது. வாழ்க்கையைத் தாக்கி மோதும் கோரப் புயல்களின் மத்தியில்

உனக்குச் சமாதானத்தைத் தரக்கூடியவர் கர்த்தராகிய இயேசு ஒருவரே. "......உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவா. 16:33) என்று இயேசு கூறினார்.

வாழ்க்கைப் புயல்களைக் கிறிஸ்து அகற்றிவிட மாட்டார். ஆனால், அவற்றின் மத்தியில் தமது சமாதானத்தை நமக்குத் தந்தருள்வார். இயேசுவண்டை நீ வராத பட்சத்தில் அந்தச் சமாதானம் உனக்குக் கிடைப்பதில்லை. உன் வாழ்க்கை நெடுக நீ சென்றுபார். புயல்களும், கொடுஞ் சுழல்காற்றுகளும் உன்னை மோதி அல்லல்படுத்துகையில் ஒரு விசுவாசியுடைய இதயத்தின் ஆழத்தில் தங்கியிருக்கும் ஆழ்ந்த ஒப்பற்ற தேவ சமாதானம் உனக்கிருக்காது.

கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்:

கிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லாவிடில் இரண்டாவது நீ உனது சந்தோஷத்தை இழந்துபோவாய். இன்று மனுமக்களின் ஜீவியங்களில் சந்தோஷம் என்பது தட்டுப்பாடானதோர் பொருளாகவேயிருக்கின்றது. "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோ. 16:24) என்று இயேசு சொன்னார். "......சொல்லிமுடியாததும், மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து" (1 பேது. 1:8) அவ்விதமான களிகூருதலின் சந்தோஷத்தை இயேசு ஒருவரே நமக்கு அருளுகின்றார். இயேசுவண்டை வராவிடில் அந்த சந்தோஷத்தை நீ இழந்து நிற்பாய்.

அநேகக் கிறிஸ்தவர்கள் தங்களையே நிர்ப்பந்தர்களும், பரிதாபகரர்களுமாய்ச் செய்து கொள்ளத்தக்க விதத்திலேயே கிறிஸ்தவ மார்க்கத்தை உடையவர்களாயிருக்கின்றனர். வெறுமனே தான் ஒரு கிறிஸ்தவனாயிருக்க வேண்டும் என்று தன்னளவில் வெறும் மாம்ச பெலத்தைக் கொண்டு முயற்சிப்பவனைப்போல நிர்ப்பந்தமான மனிதனை நான் எங்கும் காணவியலாது. கிறிஸ்து இரட்சகரண்டை வழிநடத்தப்பட மிகவும் கஷ்டமான ஒரு கூட்டம் மக்கள் உண்டு என்றால் அவர்கள் கிறிஸ்தவர்கள்தான். கிறிஸ்தவம் என்றால் என்ன என்பதனை அறிந்த அவர்கள், கிறிஸ்தவப் பின்னணியத்தில் வளர்க்கப்பட்டு, ஆலய ஆராதனைகளுக்கு ஒழுங்காகச் சென்றவர்கள்தான். ஆயினும் மெய்யான சந்தோஷத்தையும், கிறிஸ்துவின் மெய்ச் சமாதானத்தையும் அவர்கள் அறியார்கள். இவர்கள் நிர்ப்பாக்கியமுள்ள மக்கள்,

உனது வாழ்வைக்குறித்த தேவ நோக்கம்:

கிறிஸ்துவை பின்பற்றி செல்லாவிடில் மூன்றாவது நீ இழந்து போகக்கூடியது கிறிஸ்தவ நம்பிக்கையாகும். ஆண்டுதோறும் 70,000 முதல் 80,000 வரை இளைஞர்கள் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஏன் இந்தத் தற்கொலைப் பிரயத்தனங்கள்? பரிதாபம்! அம்மக்களுக்கு நல்நம்பிக்கை கிடையாது. தேவன் மனுக்குலத்திற்கு வாக்குத்தத்தம் பண்ணியுள்ள நித்திய ஜீவனைக் குறித்த மகிமையின் நம்பிக்கை அவர்களுக்கில்லை.

கிறிஸ்துவண்டை நீ வராவிடில் நீ இழந்துபோகக்கூடியது வேறு என்ன தெரியுமா? நீ இவ்வுலகில் உயிர் வாழ்வதின் நோக்கத்தையும், அர்த்தத்தையும் அறிந்துகொள்ளமாட்டாய். நீ அதனை இழந்தேபோவாய்.

உனது வாழ்க்கையில் மேலானதோர் நோக்கம் உனக்குண்டா? அந்த நோக்கம் தேவனை மையமாகக் கொண்டுள்ள நோக்கமா? உன்னுடைய வாழ்க்கையைக் குறித்து தேவன் ஓர் திட்டத்தைக் கொண்டிருக்கின்றார். தேவனின் அந்தப் பரலோகத் திட்டத்திற்கு இசைந்து நீ ஜீவிக்கின்றாயா?

என் பரம நம்பிக்கை இயேசு ஒருவரே

கிறிஸ்து இரட்சகரை நீ புறக்கணித்துத் தள்ளுவாயானால் நித்திய ஜீவ பரம வாழ்வை நீ இழந்துபோவாய். நித்திய ஜீவனில் அடங்கியுள்ள உன்னத பாக்கியங்கள் யாவற்றையும் குறித்த விவரணங்களைப்பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது அவைஅனைத்தும் மறை பொருட்களேதான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை உனது சொந்த இரட்சகராக நீ ஏற்றுக்கொள்ளும்போது நித்திய ஜீவனுக்கு நீ சுதந்திரவாளியாகி விடுகின்றாய் என்பதை நான் திட்டமாக அறிவேன். நீ மரிக்கும் நாளிலல்ல, இப்பொழுதே நித்திய ஜீவனைச் சுதந்தரித்து விடுகின்றாய்.

இயேசுவை உன் சொந்த இரட்சகராக நீ ஏற்றுக்கொள்ளும்போது உன் வாழ்க்கையில் ஓர் அற்புதம் நிகழ்கின்றது. அதென்னவெனில், கிறிஸ்துவானவர் உன் உள்ளத்தில் வந்து தங்கி உன்னோடு ஜீவிக்கத் தொடங்கிவிடுகின்றார். அப்பொழுது நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டு கிறிஸ்துவுடன் சதாகாலமும் வாழ்கின்றோம். இதைத்தான் தேவன் நமக்குப் பரம ஈவாக அளிக்கின்றார். இதன் காரணமாக மரணத்தை நீ அப்பால் தள்ளிவிட முடியாது. மரணம் நம்மெல்லாரையும் அடுத்து நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது. "அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபி. 9:27) என்று வேதாகமம் கூறுகின்றது. மோட்சம் என்று ஒன்றுள்ளது.

அதேபோன்று நரகம் என்றும் ஒன்றுள்ளது என்று வேதபுத்தகம் கூறுகின்றது. மோட்சம் எப்படி நித்தியகாலமிருக்குமோ அப்படியே நரகமும் நித்தியகாலமிருக்கும் என்று அது மேலும் கூறுகின்றது. தெரிந்து கொள்ளுதல் உன்னைச் சார்ந்ததாகும். எதைத் தெரிந்து கொள்ளுவாய்? கிறிஸ்து இரட்சகர் அளிக்கும் நித்திய ஜீவனை இங்கேயே இப்பொழுதே நீ பெற்றுக்கொள்ளக்கூடும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நீ சொந்த இரட்சகராக அறிவாயா? உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன என்ற நிச்சயம் உனக்குண்டா? மோட்சத்திற்குச் சென்றுகொண்டிருக்கின்றேன் என்ற உறுதியான மகிமையின் நம்பிக்கையை உடையவனாயிருக்கின்றாயா? இல்லையெனில், உனது பாவங்களுக்காகப் பட்சதாபப்பட்டு ஆண்டவரிடம் மன்னிப்புக்காக மன்றாடு. மனந்திரும்புதல் என்பது உனது வாழ்க்கை மாற்றம் அடைதலாகும். இந்த மாறுதலான பரிசுத்தவாழ்க்கையை உனக்களிக்கக்கூடியவர் கர்த்தராகிய இயேசு ஒருவரே.

என்னுடைய இரட்சிப்புக்காகவும், நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுவதற்காகவும் நான் கிறிஸ்தவ மதத்தை நம்பியிருக்கவில்லை. நான் நம்பியிருக்கும் எனது ஒரே பரலோக நம்பிக்கை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவென்ற தனி நபராவார்.

வாசிப்போனே, நீயுங்கூட அந்த கிறிஸ்து இரட்சகரிடம் நம்பிக்கை கொள்ளும்படியாக உன்னை அன்புடன் வருந்திக் கேட்கின்றேன்.

(பண்டிதர் பில்லிகிரஹாம்)

(அனுமதியுடன் மொழிபெயர்க்கப்பட்டச் செய்தி)

என் முழங்கைப் பக்கம் காணப்பட்ட தேவதூதன்

ஆகஸ்ட் மாதம் 11-ம் தேதி புதன்கிழமை காலை 6 30 மணி. என் உள்ளத்தில் ஒரு பாடலுடன் படுக்கையிலிருந்து எழுந்திருந்தேன். “தீவினை செய்யாதே மா சோதனையில்” என்ற பாடலின் பல்லவிதான் உண்மையில் என் உள்ளத்தில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது. படுக்கையிலிருந்து நான் எழும்புகையில் ஜெபத்திற்கும் வேத வசன தியானத்திற்கும் உகந்ததோர் அற்புத ஜெப வேளை எனக்குக் கிட்டியதை எண்ணி என் உள்ளம் மகிழ்ச்சியுற்றது. இந்தச் சமயம்தான் நான் எனது முழங்கைப்பக்கமாக ஒரு தேவதூதனைக் கண்டேன்.

வாழ்க்கையில் இதற்கு முன்னர் தேவதூதனைக் கண்டிராத நான் அதிசயத்தால் ஸ்தம்பித்து நின்றேன். அவனுடைய அழகை

நான் உங்களுக்கு வர்ணிக்க இயலாத நிலையிலிருந்தாலும் அவன் மிக்க கவர்ச்சிக்கரமான அழகுடையோனாகவும் அவனது குரல் உள்ளத்தைத் தொடுவதாயுமிருந்தது. அவன் எனது காதிற்தன் "நீ ஜெபம்பண்ணு. எந்த நிலையிலும் நீ கட்டாயம் ஜெபவேளையைக் கொண்டிருக்கவேண்டும். சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும். தூக்கம் வழிந்தோடும் உன் முகத்தைக் கொஞ்சம் குளிர்ந்ததண்ணீரால் கழுவிக்கொண்டு அப்படியே பல்லையும் விளக்கிவிட்டு ஜெபவேளைக்கு நீ சொல்லுவாயானால் உன் தியான நேரம் ஆசீர்வாதமாயிருக்குமல்லவா?" என்று அவன் என்னிடம் பேசினான். அவனுடைய ஆலோசனை எனக்கு நலமாகக் கண்டமையால் துரிதமாகக் குளியலறைக்குச்சென்று என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டேன். "இப்பொழுது நான் நல்ல தெம்புடனிருக்கின்றேன். ஆத்திரமும், அவசரமும் நிறைந்த வேலைகளுள்ள நாளுக்குள் செல்லுமுன் நல்லதொரு ஜெபவேளைதான் முதலில் எனக்குத் தேவை" என்று நான் எனக்குள்ளே கூறிக்கொண்டே தேவனோடு சற்று நேரத்தைச் செலவிடும் பொருட்டாக மீண்டும் படுக்கை அறைக்குச் செல்லுவதற்காகத் துரிதப்பட்டேன்.

நான் முழங்காற்படியிடுவதற்கு முன்னர் அந்த தேவதூதன் மிகவும் அருமையாக "உனது காலை தியானத்தைத் தொடங்கு முன்னர் நீ உனது வஸ்திரங்களை மாற்றிக்கொண்டு ஜெபத்தில் தரித்திருப்பது உனக்கு ஞானமாகத் தோன்றவில்லையா? எதிர்பாராதவிதமாக யாராவது உனது படுக்கை அறைக்குள் நுழைந்துவிட்டால் சரியில்லையே" என்று அவன் எனக்கு ஆலோசனை கூறினான்.

"மிகவும் நல்லதொரு ஆலோசனை" என்று நான் எனக்குள் எண்ணிக்கொண்டு எனது வஸ்திரங்களை மாற்ற பக்கத்து அறைக்குச் சென்றேன். அங்கே எங்களுடனிருந்த கிறிஸ்துவுக்குள்ளான சகோதரி தனது படுக்கையண்டை முழங்காலூன்றி வேதம்வாசித்து ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். நான் கேட்கும் தேவதூதனின் குரல் அவர்களுக்கும் கேட்கவில்லையா? என்று நான் எனக்குள்ளே வியப்புடன் எண்ணிக்கொண்டேன்.

நன்முறையில் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு மேஜையிலிருந்த எனது வேதாகமத்தை நான் எடுக்கச் சென்றபோது டெலிபோன் ஒலித்தது. டெலிபோனை எடுக்கலாமா என்று நான் எனக்குள் ஆலோசித்துக்கொண்டிருந்த வேளையில் தானே அம்மா என்னைக் கூப்பிட்டு உனது சிநேகிதி உன்னை போனில் அழைக்கின்றாள் என்று கூறினார்கள். திரும்பவுமாகத் தேவதூதனின் மிருதுவான குரல் என் காதிற்குள் தொனித்தது "உன் சிநேகிதியிடம் முதலில் பேசிவிடு. எதிலும் கடூரமாயிருக்கக் கூடாது. போனில் பேசின பின்னர் நீ ஜெபிக்கலாம். சில சமயம் அது ஒரு முக்கியமான செய்தியாயிருக்கலாம்" என்றான்.

நான் எதிர்பார்த்ததற்கும் அதிகமானநேரம் போனில் எங்கள் சம்பாஷணை நீடித்துவிட்டது. உண்மையில் அது ஒரு முக்கியமற்ற தொரு பேச்சாகத் தானிருந்தது. எனினும் ஆண்டவரோடு செல விட இன்னும் கொஞ்சம் நிமிடங்கள் எனக்கு முன்னர் இருப்பதை எண்ணி நான் மகிழ்ந்தேன்.

நான் படுக்கை அறைக்குத் திரும்பிவந்த போது முதலில் குறிப்பிட்ட சகோதரி தனது அமைதிவேளை ஜெபத்திற்குப் பின்னர் சமயலறைக்குக் காலை உணவை ஆயத்தம்செய்யச் சென்றுவிட் டார்கள்.

படுக்கை அறையில் தேவதூதன் நின்றுகொண்டிருந்தான். காலையில் ஆறரைமணிக்கு நான் முதலில் அவனைப்பார்த்தபோது அவனுக்கிருந்த கவர்ச்சியும், அழகும் இப்பொழுது இன்னும் அதி கரித்துப் பூரணப் பொலிவுடன் அவன் காட்சி அளித்துக்கொண்டி ருந்தான். எனக்கும் படுக்கைக்கும் இடைப்பட்ட வழியில் என்னை அவன் வழிமறித்துக் கொண்டு நிற்பவனைப் போல நின்றுகொண்டு இனிமையான புன்முறுவலுடன் என்னைப்பார்த்து "ஒரு கோப்பைத் தேயிலைப் பானம் பருகி, ஏதாவது கொஞ்சம் சாப்பிட்டுக்கொண்டால் உன்மனம் புத்துணர்ச்சிபெற்று ஜெபிக்க உதவுமல்லவா?" என்று கூறினன். இதற்குள்ளாக சமயலறையில் பொத்துரிக் கொண்டி ருக்கும் முட்டையின் வாசனை என்னண்டை வரவே நான் உடனே சமையல் அறைக்குத் துரிதமாகச் சென்றேன்.

ஒரே ஒரு கோப்பைத் தேநீரும், ஒரு முட்டையும், சப்பாத்தி யும், போதுமென்று நான் கூறினேன். நீங்கள் கொடுத்தால் அப் படியே நான் என் வாயில் ஊற்றிவிட்டு ஓடுகின்றேன். கல்லூரிக் குச் செல்லுவதற்கு முன்னர் நான் கட்டாயம் நல்லதொரு ஜெப வேளையையும் வேதவாசிப்பையும் கொண்டிருத்தல்வேண்டும் என்று அந்த சகோதரியிடம் கூறினேன்.

ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர் நான் எனது படுக்கையறைக் குத் திரும்பிச் செல்லுகையில் அன்றைய தினம் கல்லூரியில் எனக் கிருக்கக் கூடிய உளநூல் பரீட்சைக்கான குறிப்புகளைப் படிக்க வேண்டிய தீராத அவசியத்தை உணர்ந்தேன். அது என்மனதைப் பாரப்படுத்திற்று. இறுதியாக நான் ஜெபிக்கும்படியாக முழங்கா லூன்றியபோது கல்லூரிக்குச் செல்ல இன்னும் ஐந்துநிமிட நேரங் கள் மாத்திரமே உள்ளன என்பதை நான் அறிந்தேன். துரிதம் துரிதமாக நான் ஜெபித்துக்கொண்டிருக்கையில் "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்ற தேவனுடைய வார்த்தை என் நினை வுக்கு வந்தது. அது எனக்கு மிகுந்த ஆறுதலாகவிருந்தது. பஸ் நிற்கும் இடத்திற்கு நடந்து செல்லுகையிலும், பஸ்ஸில் பிரயாணம் செய்கையிலும், வகுப்பில் பாடம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்

நேரங்களிலும்கூட நான் ஜெபித்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் என் உள்ளத்திற்குச் சமாதானத்தைக் கொண்டு வந்தது. நாளின் ஆத்திரமான மணி நேரங்களிலும் ஆண்டவரோடு நான் ஏன் உறவு கொள்ளக்கூடாது? இவ்விதமான தேவபழக்கத்தைக் கொண்டிருக்கும் மக்களைக் குறித்து நான் கேள்விப்பட்டிருக்கின்றேனே, நானும் அதைப் பழகிக்கொள்ளுவேன் என்று தீர்மானித்துக்கொண்டேன்.

அன்று கல்லூரியில் என்னுடைய நாள் வழக்கம்போல வரக்கூடிய எலும்புருக்கிக் காய்ச்சலைப் போலவே அமைந்திருந்தது கல்லூரியில் நடைபெற்ற விரிவுரைகளில் குறிப்புகளை எடுத்ததும், பரீட்சை எழுதியதும், பரிசோதனைக் கூடத்தில் இரண்டு மணி நேரத்தைச் செலவிட்டதுமாக முற்பகற் காலம் முடிவுற்றது.

கல்லூரிக்கு நான் செல்லும் வழியிலும், வகுப்பு நேரங்களிலும் ஜெபிக்க வேண்டுமென்ற எனது நோக்கம் சித்தியாமல் சிதறடிக்கப்பட்டுப் போனதை அந்த நாளின் பிற்பகலின் பிந்தியமணி நேரத்தில் நான் துக்கத்தோடே உணரத்தொடங்கினேன்.

அங்கே ஒளியின் பிரகாசமான வஸ்திரம் தரித்து எனது முழங்கைப்பக்கம் நின்று கொண்டிருக்கும் தேவதூதனைக் கண்டேன். "அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே" (2கொரி.11:14) எனக்குப் பக்கத்திலிருப்போர் ஏன் அவனைக் கண்டுகொள்ள முடிவதில்லை, என்பதனை என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை. "நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு..." மத் (6:6) என்று அவன் என்னிடம் கூறினான். "சரிதான்" என்று நான் அவனுக்குப் பதிலளித்தேன். "எந்த விதத்திலும் நான் அந்தக் காரியத்தைச் செய்தே தீருவேன்" என்று நிச்சயித்துக் கொண்டேன்.

நான் கல்லூரியிலிருந்து வீடு திரும்பி வந்ததும் "காலையில் உன் சிநேகிதியுடன் நடந்த சம்பாஷணையின் காரியம் என்ன" வென்று அம்மா என்னிடம் கேட்டார்கள். "அசாதாரணமாக அது ஒன்றும் புதிதல்ல, என்னுடைய வகுப்பு சக பெண்களில் ஒருத்தி பேசினாள். தன்னுடைய வீட்டுப் பிரச்சினைகளையும், படிப்பின் கஷ்டத்தையும், முறிந்துபோன அவளுடைய திருமண நிச்சயார்த்தத்தையும் குறித்துப்பகிர்ந்து கொண்டாள்" என்று நான் அம்மாவிடம் கூறினேன்.

"கர்த்தராகிய இயேசுவைக்குறித்து நீ அவளுக்கு சாட்சி கூறினாயா?" என்ற கேள்வி அம்மாவிடமிருந்து அடுத்து வந்தது. "இல்லை" என்று நான் பதிலளித்தேன். "எங்கள் சம்பாஷணையின் ஆரம்பக் கட்டத்தில் அதைக்குறித்த நினைவு எனக்கு வந்தது.

ஆனால் கடைசியாக நான் அதை மறந்தே போய்விட்டேன்" என்று கூறினேன்.

அந்த நாளில் படுக்கைக்குச் செல்லுவதற்கு முன்பாகவாவது இரவு 9 மணிக்கு ஆண்டவருடன் நன்கு உறவாடி மகிழவேண்டுமென்று நான் முடிவெடுத்தேன். ஆனால் அந்தோ பரிதாபம்! சரியாக 8.30மணி கடந்து சற்று நேரத்தில் எனது சிநேகிதிகள் இருவர் எனது அறைக்குள் நுழைந்தனர். நான் சற்றும் நினையாத பிரகாரமாக எங்கள் சம்பாஷணை முற்றுப் பெறும்போது இரவு 10.30 மணி ஆகியிருந்தது. இனி ஜெபிப்பது எங்ஙனம்? நான் அமைதியாகப் படுக்கைக்குச் சென்று போர்வையை மூடிப்படுத்துக் கொண்ட போதினும் எனது கவலையீனத்தால் எனது கரத்தைவிட்டு நழுவிச் சென்ற ஆசீர்வாதமான ஜெபநேரத்தையும், பரிசுத்த கர்த்தரின் ஐக்கியத்தையும் நினைவு கூர்ந்து துக்கித்துக் கொண்டே படுத்திருந்தேன். என் முழங்கைப் பக்கம் காணப்பட்ட ஒளியின் தூதனை பிசாசையும் அடுக்கடுக்காகத் தேவனுடைய வசனங்களை அவன் எனக்கு நினைப்பூட்டிய விதத்தையும் குறித்து நான் மிகவும் அதிசயித்தேன். காலையில் மனதின் துக்கத்துடன் எனக்கு டெலிபோன் பண்ணிய என் சிநேகிதிக்கு அருமை இரட்சகரின் ஆறுதல் நிறைந்த வார்த்தைகளைப் பகிர்ந்துகொள்ள முடியாமற் போனமைக்காக என் உள்ளம் அப்பொழுது பாரமடைந்தது. தேவன் எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தந்தபோது நான் ஏன் அதனை பயன்படுத்தி அவளுடைய ஆத்துமாவின் நிலைகுறித்துப் பேசாமல்விட்டுவிட்டேன் என்ற கவலையும் என்னை வாட்டினது.

என் முழங்கைப்பக்கம் காணப்பட்ட தேவதூதன் "சகோதரரை வஞ்சிப்போன்" என்பதை இப்பொழுது நான் நன்கு அறிந்து கொண்டேன். ஜெபம் என்பது மிகக் கடினமான பயிற்சிகள், ஒழுங்குக்கட்டுப்பாடுகளின் மூலமாகப் பாதுகாத்து வளர்க்கப்படவேண்டிய தானதொரு தேவ ஏது என்பதனையும், ஜெபம் என்ற தசை நார்களை எவ்விதத்திலும் வலுப்படுத்தியே தீரவேண்டும் என்பதையும் நான் திட்டம் பண்ணிக்கொண்டேன். இனிமேல் ஜெபம், வேதவாசிப்பு, தியானத்திற்கு முன்னர் காலை ஆகாரம் புசிப்பதில்லை என்பதைத் திட்டம் தெளிவாக முடிவு செய்து கொண்டேன்.

Gourtesy: "TRUTH" Bombay.

(மொழி பெயர்ப்பு)

——

தேவனின் மகிமையின் சுவிசேஷத்திற்குத் தன் வாசல்களை அடைத்துக்கொண்ட நாட்டில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்.



கர்த்தருடைய பரிசுத்தமுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

“ ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிட மாட்டார். அவர் சஞ்சலப்படுத்தினாலும் தமது மிகுந்த கிருபையின்படி இரங்குவார் ”
(புலம்பல் 3:31,32)

ஆற்றுப் பரப்பில் மிகுந்த மனவியாகுலத்துடன் நின்றுகொண்டிருந்த என்னை ஆண்டவர் கண்ணோக்கினார். பொழுது அஸ்தமித்துப்போன இம்மாலை வேளை யாராகிலும் மாந்தர் இவ்வழியாக வர மாட்டார்களா என்று அங்குமிங்கும் நான் துயரத்துடன் பார்த்துக் கொண்டு நிற்கையில் இரண்டு ஷெர்பா இனத்தைச் சேர்ந்த மனிதர்கள் அங்கு வந்தனர். அவர்களிடம் பாதையைக் கேட்டபோது அவர்கள் தங்களைப் பின்தொடர்ந்து வரும்படியாகக் கூறினர். அதின்படி அவர்கள் பின்னே நடந்து சென்றேன். காட்டாறு ஓரிடத்தில் ஒரு பெரும்பாறையைச் சுற்றி வளைத்துப் பேரிரைச்சல் போட்டு நுரை தள்ளிப் பொங்குமாக் கடல்போலக் கொந்தளித்துப் பொங்கிச் சென்றுகொண்டிருந்தது. ஷெர்பாக்கள் இருவரும் அந்தப்பாறை மீதேறி வளர்ந்து சென்றனர். நானும் ஆண்டவரை மனதில் தியானம் பண்ணிக்கொண்டு ஜெபத்தோடும் ஸ்தோத்திரத்தோடும் பளுவான மூட்டை முடிச்சுகளைப் பாறையில் வைத்து, வைத்து சர்வ ஜாக்கிரதையாகக் கடந்து சென்றேன். சற்று கால் வழுக்கினால் அத்துடன் காரியம் முடிவுபெறும். பொங்கிப் பிரவாகிக்கும் சுழல் தண்ணீர் நம்மை அப்படியே நீருக்குள் இழுத்துக் கொண்டுபோய் விடும். மரணத்திற்கு எனக்குச் சற்றும் அச்சமில்லாவிடினும் வந்த தேவ நோக்கம் முற்றுப்பெற வேண்டுமே என்ற கவலைதான் என்னை வாட்டியது. எப்படியோ மாதேசரின் எல்லை

யற்ற தேவ அன்பு என்னைக் காத்துக் கரம்பிடித்து அழைத்துச் சென்றது. தேவனின் ஒத்தாசையின்றி இவ்வித வழிகளையெல்லாம் என்னால் ஒருக்காலும் கடந்திருக்கவே இயலாது.

மரண நிழலின் பள்ளத்தாக்கைக் கடந்து ஷெர்ப்பாக்களுடன் நடந்து சென்றுகொண்டிருந்தேன். கொஞ்சதூரம் செல்லவே பத்து வீடுகளுக்கும் குறைவானதோர் சிறிய குக்கிராமத்தை வந்தடைந்தோம். நாற்புறமும் உயர்ந்த மலைகள் சூழ்ந்த அழகுச் சூழலில் அக்கிராமம் தனிமையில் அமைந்து கிடந்தது. ஆண்டவரின் அதிசயமான படைப்பின் மாட்சியை என் உள்ளத்தில் எண்ணி, எண்ணி அவரை ஸ்தோத்திரித்துக் கொண்டிருந்தேன். ஷெர்பாக்கள் இருவரும் என்னைப்பார்த்து "பொழுது போயிற்று. நாங்கள் இந்த வீட்டில் தங்கப்போகின்றோம். உன்னால் தனிமையில் குஸ்மா செல்லக்கூடாது. அதற்கு இன்னும் நெடுந்தூரம் செல்லவேண்டும். விரும்பினால் இந்தவீட்டில் எங்களுடன் இராத்தங்கிக்கொள்" என்று கூறினார்கள். வேறு வழியில்லை. கர்த்தருக்கு என்னை முற்றும் ஒப்படைத்துவிட்டு அந்த இராக்காலத்தில் அந்தச் சிறிய வீட்டில் படுத்துக்கொள்ள முடிவு செய்தேன். ஈரமான எனது வஸ்திரங்களைக் கழற்றிவிட்டு மாற்று வஸ்திரமணிந்து தண்ணீரில்போட்டுவிட்டக் கைப்பிரதி மூட்டையின் நிலவரம் என்னவாயிற்று என் பதைப் பயத்தோடும், நடுக்கத்தோடும் திறந்தபோது தாட்களும், புத்தகங்களும் தண்ணீரின் வாசனையே படாமலிருந்ததைப் பார்த்தபோது என் உள்ளம் கர்த்தருக்குள் மகிழ்ந்தது.

கைப்பிரதிகளை வைத்துக்கொள்ளத் துணிப்பை வாங்காமல் பிளாஸ்டிக் பை வாங்கிக்கொள்ளக் காத்மாண்டு நகரில் வைத்து ஆவியானவர் என்னிடம் கூறிய அன்பின் ஆலோசனையை அப்பொழுது தான் மனதார நினைவுகூர்ந்து அவரை அகங்குளிர ஸ்தோத்திரித்தேன். கைப்பிரதிகளில் சிலவற்றை எடுத்து அக்கிராமத்திலுள்ளோருக்கு ஜெபத்துடன் விநியோகித்தேன். மட்டற்ற சந்தோஷத்துடன் அவற்றைப் பெற்றுப்படித்தனர். அந்தக் கிராமத்தின் பெயர் மலங்தி என்பதாகும்.

சின்னஞ்சிறிய வீடு, ஒரு மண் எண்ணெய் விளக்கு கரிய புகையைக் கக்கிக்கொண்டு எரிந்து கொண்டிருக்கின்றது. வீட்டிலே புருஷன், இரண்டு மனைவிகள், பிள்ளைகள் இருவர், ஷெர்பாக்கள் இருவர் என்னையும் சேர்த்து எட்டுபேர் படுத்திருந்தோம். அவர்கள் நல்லவர்களோ கெட்டவர்களோ நாமறியோம். ஆண்டவரின் காயப்பட்டகரங்களில் என்னை அர்ப்பணித்தேன். புசிப்பதற்கு அந்த இரவில் அந்த அன்புள்ள வீட்டினர் சூடாக எனக்கு உணவும் அளித்தனர். பின்னர் நான் துயில்கொள்ள ஒரு நாணற்புல் பாயை வீட்டின் ஒரு மூலையில் போட்டுக்கொடுத்தனர். அவர்கள் கண் ... முன்னரே நெடு முழங்காலில் நின்று நான் ஜெபித்தேன்.

அதை அவர்கள் கவனித்தனர். நேப்பாள மொழியில் ஏதோ பேசிக் கொண்டனர். நான் படுத்ததன் பின்னர் அவர்கள் அனைவரும் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். பகலெல்லாம் காடு மலைகள் ஏறி கடும் இன்னல்களுக்குள்ளாகியிருந்த என் சரீரம் என்னை அறியாமலே ஓய்வு கொள்ளத் தொடங்கிற்று.

காலா காலங்களாக நான் கட்டிக் காத்து மன்னாதி மன்னனாக ஏகாதிபத்திய செங்கோலோச்சி வரும் எனது பூமிக்குள்ளேயே துணிகரமாக நுழைந்து என்னுடைய அன்புக்குரிய பிரஜைகளை இயேசுவின் அடிமைகளாக்கும் பொருட்டு வீட்டையும், நாட்டையும் துறந்து இம்மட்டும் வர உனக்குத் துணிவும் பிறந்ததா? உன்னை நான் ஆறுதலாக இளைப்பாற விடுவேன் என்று நினைத்தாயோ? என்று சொன்னது போல சத்துரு என்னைக்கடிக்க வீட்டிலுள்ள தெள்ளுப்பூச்சிகளுக்கு ஏவிவிட்டிருந்தான். கடுமையான பூச்சிக் கடிகளின் காரணமாக நள்ளிரவில் நான் கண்விழித்துவிட்டேன். என்னால் தூங்கவே முடியவில்லை. என்னைச் சுற்றி அனைவரும் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தனர். சாத்தானின் பாவ அடிமைத்தனத்தில் சிக்குண்டு தவிக்கும் நேப்பாள மக்களைக் கர்த்தர் விடுதலையாக்கவும், என்னை அற்புதமாகக் கொண்டு வந்த பரலோக நோக்கத்தை நேப்பாளத்தில் நிறைவேற்றவும் அந்த நள்ளிரவு நான் அழ ஆரம்பித்தேன். என் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து தரையில் விழுந்தது கர்த்தருக்கே மகிமை உண்டாகட்டும். அந்த அற்புத கிருபையைக் கொடுத்த நேசரை ஸ்தோத்திரிக்கின்றேன். அந்தக் குடிசையில் நான் வடித்த கண்ணீர் வீண் போகாமல் நேப்பாள நாட்டில் என்னால் விதைக்கப்பட்ட ஜீவ விதைகளுக்குக் காலா காலங்களாக உயிரோட்டம் கொடுத்துக் கொண்டிருக்கும் என்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை.

அடுத்த நாள் அதிகாலையிலேயே எனது சுவிசேஷ பயணம் ஆரம்பமானது. எனக்கு உணவும், உறைவிடமும் அளித்த அந்த அன்புள்ள ஏழைமக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துப் புறப்பட்டேன். முந்தின நாளைப் போன்றே மலைகள்ஏறி, கற்பாறைகள், சேற்றுப்பாதைகள், நீரோடைகள் வழியாகக் கடுமையான கஷ்டங்களினூடே சில சிறிய கிராமங்களைக் கடந்து சென்றேன். சுமார் 9 மணிக்கு மழைபெய்யத் தொடங்கவே விரைந்து சென்று மியங்தி என்றதொரு கிராமத்தைச் சென்றடைந்து ஒரு வீட்டுத் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தேன். மழை மிகவும் பலமாக பெய்து கொண்டிருந்தமையால் நீண்டநேரம் அங்கு தாமதிக்க வேண்டியதானது. தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு நேப்பாள மொழிப் பிரதிகளை அங்கிருந்தோருக்கு ஜெபத்துடன் கொடுத்தேன். அதில் சில வாலிப தம்பிமார் இருந்தனர். அவர்கள் அவற்றை மட்டற்ற ஆர்வத்துடன் மிகவும் சாவதானமாகப்படித்தனர் கிறிஸ்து பெரு

மான் ஒருவரே ஜீவனுள்ள மெய்தேவன் என்றும், அவரையல்லாமல் இவ்வுலகில் வேறு தேவன் கிடையாது என்றும் நான் கூறினேன். அவர்களில் ஒருவன் கடவுள் இருக்கும் இடம் எது? என்று என்னை வினவினன். உனது இருதயமே அவர் வாசம்பண்ணும் இடம் என்று நான் கூறியபோது அவன் திகைத்துப் போனன். நேப்பாள மொழிபேசும் மக்களானமையால் அதிகமாக அவர்களிடம் சம்பாஷிக்கக் கூடாமற் போயிற்று. கர்த்தர் தம்முடைய ஜீவனுள்ள வசனத்தின் மூலமாக அம்மக்களிடம் தொடர்ந்து கிரியை நடப்பிக்கும்படியாக அவருடைய அன்பின் கரத்தில் அவர்களை ஒப்புவித்து, மழைசற்று நின்றிருந்தபடியால் குஸ்மா என்ற இடத்தை நோக்கிச் சென்றேன்.

அந்த மலைநாட்டின் அமைப்புகள், பாதைகள் எப்படி, எப்படி என்பதை என்னால் எழுதி உங்களைப் புரிய வைக்க இயலாது. கிராமத்தைக் கடந்தேன். மழை தூற்றத் தொடங்கினது. பிளாஸ்டிக் படுதாவினால் தலையில் உள்ள கைப்பிரதி மூட்டையைச்சுற்றிப் பொதிந்து என் சிரசையும் மூடிக்கொண்டு மழையில் நனைந்து கொண்டே சென்றேன். என் வாழ்க்கையில் இதுவரை பார்த்திராத வழுக்குப்பாதையை அன்று நான் கண்டேன். ஒரு மாபெரும் உருண்டை வடிவமான கோளத்தில் நான் நடந்து செல்லுவதைப் போன்றிருந்தது. சற்று ஏமாந்நாலும் வழுக்கி விழுந்து உருண்டு கொண்டே அடித்தளம் சென்று விடுவோம். ஒவ்வொரு அடியடியாக மட்டற்ற கவனத்துடன் என் பாதங்களை நான் தூக்கி வைத்துச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக நீண்ட நேரம்பிடித்தது. இறுதியாகச் செங்குத்தாகக் கீழிறங்கி அங்கு செல்லும் ஆற்றின் தொங்குபாலத்தின் வழியாக அக்கரை தாண்டி காற்று மழையுடன் போராடிக் கொண்டிருந்தேன். காற்றின் வேகமும் மழையும் சேர்ந்து கொண்டபடியால் நான் சொல்லொண்ணு துயர் உற்றேன். கண்கலங்கி நின்றேன். நான் செல்ல வேண்டிய குஸ்மா கிராமம் மிகவும் செங்குத்தான மலை உச்சியிலிருந்தது. அன்பின் நேசர் தாமே என்னை ஆற்றித்தேற்றி நண்பகல் நேரம் குஸ்மா என்ற நேப்பாளத்தின் பேருருக்குக் கொண்டுவந்து சேர்த்தார். மழை தொடர்ந்து பெய்து கொண்டுதானிருந்தது. கிராமத்தின் ஆரம்பத்தில் நேப்பாள நாட்டின் முடிமன்னரின் உருவச்சிலை இருந்தது. நேப்பாளத்தின் கிராம மக்கள் அரசரைத் தெய்வமாகக் கருதுகின்றனர்.

கடும் பசியுடனிருந்த நான் இவ்வூரில் சுத்தமான ஆகாரம் எங்கு கிடைக்கும் என்று ஒரு மனிதனிடம் கேட்டேன். அந்த மனிதன் "நேப்பாள வங்கிக்கு அருகில் ஒரு சாப்பாட்டுக்கடை உள்ளது. ஆகாரம் சுத்தமாகவும், சுவையாகவுமிருக்கும்" என்று கூறினன். மக்களிடம் கேட்டுக், கேட்டு இறுதியாக அதை வந்தடைந்தேன். உண்மையில் அது கடையல்ல, வீடுதான். அங்கு

என்னை வழிநடத்திக்கொண்டு சென்றது கர்த்தர் ஒருவர் மாத்திரமே என்பதை நான் தெளிவுறக் கண்டுணர்ந்தேன். அந்த மனிதனிடம் நல்ல சுத்தமான சாப்பாட்டுக் கடையைக்கேட்டு விசாரிக்க என் வாயின் வார்த்தைகளைப் போட்டவரும் கர்த்தர்தான் என்பதனையும் நான் அறிந்து கொண்டேன். அந்த வீட்டில் நான் சென்று சாப்பாடு கேட்டேன். அங்கிருந்த ஸ்திரீ சற்று அமருங்கள், ஆகாரம் தருகிறேன் என்றுகூறி தான் சென்றபின்னரே சோற்றைத் துரிதமாகப் பொங்கி, பருப்புக் குழம்பையும், வெண்டைக்காய்க் கூட்டையும் தயாரித்து எனக்கு முன்னர் கொதிக்கக்கொதிக்கக் கொண்டு வந்து வைத்தாள்.

"பூமியிலே நீ பரதேசி, பரதேசிக்குச் சுவையான உணவும் வேண்டுமோ? மிகவும் சுவையான உணவு உனக்கு முன்பாக உள்ளது. சுவைத்துச் சாப்பிடு" என்று எனக்குள்ளாகச் சொல்லும் வார்த்தைகளைக் கவனித்தேன்.

ஆக மோசமான சுவையற்ற சாப்பாடு அதுதான். வெண்டைக்காய் கூட்டு வழுவழுப்பாக வாய்க்கும், தட்டுக்குமாக நூல்போல் பசை வடிந்து கொண்டிருந்தது. அதிகமான பசியின் காரணமாக எப்படியோ கண்களை மூடி ஆகாரத்தை உட்கொண்டேன். இறுதியில் ரூ6/- சாப்பாட்டுக்கு வாங்கினார்கள்.

ஆனால் மிகுந்த ஆனந்த சந்தோஷத்திற்குரிய காரியம் என்னவெனில் அந்த வீட்டின் தலைவனுக்குத் தேவனுடைய சுவிசேஷத்தை அளித்தது தான். அந்த ஒரு ஆத்துமாவுக்காகவே ஆண்டவர் என்னை இந்தியாவிலிருந்து நேப்பாளத்துக்கு அழைத்துக் கொண்டு சென்றிருந்தார் என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அல்லேலூயா.

நடுத்தர வயதுடைய அந்த மனிதன் மரணத்தின் விளிம்பிலிருந்தான். கட்டில் கிடையாகக் கிடந்த அவனின் இறுதி மூச்சுகள் உள்ளும் புறமும் சென்று கொண்டிருந்தன. அவனுடைய மனைவி ஆழ்ந்த துயரத்துடன் அவனருகில் அமர்ந்திருந்தாள். அவன் பருகிக் கொண்டிருக்கும் சிறிதும் பெரிதுமான அநேக மருந்துப்பாட்டல்கள் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தன. மிகவும் மெலிந்து எலும்புக்கூடாக அவன் தென்பட்டாலும் அவன் கண்கள் இன்னும் தெம்புடனேயே என்னை நோக்கிப்பார்த்தன. நான் எங்கிருந்து வருகின்றேன், எங்கே செல்லுகின்றேன் என்பது போன்ற விபரங்களை அவன் என்னிடம் கேட்டறிந்தான். நான் என் கைவசம் வைத்திருந்த நேப்பாள மொழி புதியஏற்பாடு ஒன்றையும், மற்றும் பயனுள்ள அநேக கைப்பிரதிகளையும் அவனுக்களித்து ஜீவிக்கிற மெய் தெய்வமாகிய கிறிஸ்து பெருமானைப் பற்றியும், அவரில் நம்பிக்கை வைத்தால் வியாதி நீங்கி ஜீவன் தப்பலாம் என்றும் கூறினேன். எனது வார்த்தைகளை மட்டற்ற ஆவலுடன் செவிமடுத்துக்

கேட்டு நான் கொடுத்தவற்றைத் தன் மார்புமேல் வைத்து அணைத்துப்பிடித்துக் கொண்டு, அவை ஒவ்வொன்றையும் ஆழ்ந்து படிக்கத் தொடங்கினன். கர்த்தர் தம்முடைய வசனத்தின் மூலமாக அந்த ஆத்துமாவுடன் நிச்சயமாகப் பேசி சிலுவைக் கள்ளனுக்கு இரங்கிய வண்ணம் ஜீவன் பிரிந்து செல்லும் கடைசிநேரம் அந்த மனிதனுக்கு இரங்கி இரட்சித்திருப்பார் என்று நான் கர்த்தருக்குள் பூரணமாக விசுவாசிக்கின்றேன். இரண்டு நாட்கள் கழித்து நான் திரும்பி வருகையில் அந்த மனிதன் மரித்துப்போனதை அறிந்தேன். எந்த ஒரு பாவியும் கெட்டுப்போக விரும்பாத அருமை நேசர் தம்முடைய விலேயேறப்பெற்ற இரத்தம்சிந்திய இந்த ஆத்துமாவைக் கைவிட்டு விடுவாரோ? பரிசுத்தரின் மேலானதொரு நோக்கம் இங்கு நிறைவேறியதை நான் ஆவிக்குள் உணர்ந்தேன்.

தேவனின் திட்டமான ஏவுதலின்படி நான் எனது போகும் வழிப்பயணத்தில் இந்த ஒரு ஊழியத்தை மட்டும் குஸ்மாவில் செய்துவிட்டு அன்றே பாக்லுங் என்ற இடத்தை நோக்கித் தனியனுய்ப் புறப்பட்டேன். நாள் முழுவதும் ஒரே மழைதான். குஸ்மாவைத் தாண்டிக் காட்டுப் பாதை மார்க்கமாகச் சற்றுதூரம் சென்று செங்குத்தான சரிவில் இறங்கி ஒரு பள்ளத்தாக்கை வந்தடைந்தேன். ஒரு வார காலத்திற்கு முன்னர் அங்கு ஏற்பட்ட திடீர் வெள்ளம் காரணமாகச் சிலர் உயிர் இழந்ததையும், வெள்ளம் செய்திருந்த அலங்கோல அழிவுகளையும், புரட்டித் தள்ளப்பட்ட வீடுகளையும், அழிந்துபோன பசுமை வயல்களையும் நான் கண்டேன். அந்த அழிவுகளுக்கு ஊடாக மழையில் நனைந்து கொண்டே பிரயாணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தேன்.

சில மைல்கள் பிரயாணத்திற்குப் பின்னர் மனுஷ அரவமில்லாத கருங்கானகத்தின் வழியாக என் பாதை சென்றது. அந்தக் கானகத்தில் நான் செங்குத்தாக ஏறி கானகத்தின் உச்சியை அடைந்தேன். அங்குள்ளதோர் கற்திட்டில் ஒரு அரச மரத்தின் கீழ் மூவர் அமர்ந்திருந்தனர். அவர்களின் உருவங்கள் கொள்ளையர்களின் உருவங்களைப்போலிருந்தன. மட்டற்ற களைப்புடனிருந்த நான் அவ்விடத்தில் இளைப்பாற உட்கார்ந்தேன். அவர்களில் ஒருவன் என்னைப் பார்த்து "நீ தனிமையாகத்தான் வருகின்ருயோ?" என்று என்னைக் கேட்டான். நான் "ஆம்" என்று பதிலளிக்கவும் நேப்பாளி மொழியில் தன் சகாக்களுடன் ஏதோ பகிர்ந்து கொண்டான். அதற்குள்ளாக ஆவியானவர் "மகனே உன் ஜீவன் தப்ப ஓடு. இனி இங்கு தாமதியாதே" என்று என் உள்ளத்தில் உரைத்தும் வார்த்தைகளுக்குக் கீழப்படிந்து உடனே எழுந்து துரிதமாக ஓடி சமதரைக்கு மூச்சுவாங்க, வாங்க வந்து சேர்ந்துவிட்டேன். என்னுடைய பையையும், பணத்தையும் பறிமுதல் செய்து கொண்டு அங்கிருந்த கெடு பாதாளத்தில் ஓடும் பெரிய நதியில் தள்

[illegible]

[illegible] பற்றிக் குறிப்பிடுவேன்.

கால் வலிக்க பகல் முழுவதும் நடந்து, நடந்து சூரியன் அஸ்தமிக்கும் நேரம் பாக்குமலைத் தனிவழி நெருங்கிக் கொண்டிருந்தேன். வானளாவிய மலைகளிலிருந்து ஆங்காங்கு விழும் நீர்வீழ்ச்சிகளும், மனிதனை பிரமிக்க வைக்கும் இயற்கை அமைப்புகளும் என்னை மெய்மறக்கப்பண்ணி தெய்வ அன்பில் என்னை லயிக்கப் பண்ணின. நதியொன்றின் தொங்கு பாலத்தைத் தாண்டி பாக்குமலை நோக்கிச் சென்றேன். நடுவானில் தொங்கும் பாபிலோன் தொங்குதோட்டத்தைப்போல அது அமைந்து கிடந்தது. அதனை எப்படி எட்டிப் பிடிப்பது? செங்குத்தாக வானத்திற்கு நேராக ஏறுவது எப்படி? என் கால்கள் தன்னையறியாமல் நடுங்கத் தொடங்கின. கால்கள் மாத்திரம்தான் என்னுடையதே தவிர நடந்தது நானல்ல, நேசகர்த்தர்தான் என்னை பாக்குமலைக்குத் தூக்கிக் கொண்டு சென்றிருந்தார். அல்லேலூயா.

எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி

“என்னைக்குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன்; என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்பட்டேன்; என்னுடைய நாமம் விளங்காதிருந்த ஜாதியை நோக்கி; இதோ, இங்கே இருக்கிறேன் என்றேன்”. (ஏசாயா 65:1)

[வாழ்க்கையில் திருமணம் செய்யவேண்டிய வயதை நாம் எட்டியதும் திருமணம் செய்யப் பெரிதும் ஆவல் கொள்ளுகின்றோம். அது தவறல்ல. அது மனித இயல்பு. ஆனால், வேகவைக்கும் (1 கொரி. 7:9) அந்த இளமையை அன்பின் ஆண்டவருக்கென்று முழுமையாக அர்ப்பணித்துவிட்டு அவருக்குத் தொண்டு செய்வதற்

கென்று தங்களைத் தியாகித்துத் தங்களைக் கற்போடும், பரிசுத்தத்தோடும் இறுதிவரைக் காத்துக்கொள்ளுதல் என்பது அத்தனை எளிதல்ல. அப்படிக் காத்துக்கொள்ளும் தேவமக்களின் சிறப்பான சுதந்தரம் பரலோகில் இருப்பதற்காக ஆண்டவரை நான் ஸ்தோத்திரிக்கின்றேன். அப்படித் தங்களை தங்கள் அருமை நேசருக்காகத் தியாகபலியாக ஒப்புவித்தோர் இவ்வுலகில் ஏராளமான பேர் உண்டு. அவர்களில் ஒருவரைப்பற்றிய சாட்சி இது.

நேப்பாளத்திலுள்ள பொக்காரோவில் கடைவீதி வழியாக வளைந்து, வளைந்து சென்று கசாப்புக்கடைக்காரர்களின் தெருவைக் கடந்து மிகவும் குறுகலானதோர் நாற்றமெடுக்கும் சாக்கடைச்சந்து வழியாக ஒரு சின்னஞ்சிறு காம்பவுண்டுக்குள் நான்வந்து சேருகின்றேன். முகப்பில் மரச்சிலுவையுடன் கூடிய ஒரு சிறியதொரு கட்டிடம் உள்ளது. ஆம், இதுதான் பொக்காரோவிலுள்ள கிறிஸ்தவர்களின் மிகச்சிறிய தேவாலயம். தேவாலயத்தின் பின்னணியத்தில் வெகு தொலைவில் உலகப் பிரசித்திப்பெற்ற அன்னபூரணு, தவளகிரி போன்ற வெண்பனிச்சிகரங்கள் காலைச் சூரியனின் ஒளி பட்டு மின்னிப் பிரகாசித்துத் தங்கள் சிருஷ்டிகரைத் துதித்து நிற்கின்றன. சிறிய தேவாலயத்தையொட்டி ஒரு சின்னவீடு. சௌந்தரிய தோற்றமும், சிரித்தமுகத்துடன் ஒரு தேவப்பிள்ளை அந்த வீட்டினுள்ளிருந்து வெளியே வருகின்றார். அவர்தான் ஹரிபகதூர் தாப்பா. நேப்பாள அரசகுடும்பப் பரம்பரையில் பிறந்த அவரைக் கர்த்தர் சந்தித்ததே ஒரு அற்புத நிகழ்ச்சியாகும். அவரைப்பார்த்தால் குடும்பஸ்தன்போலத் தெரிகின்றது. ஆனால், கர்த்தருக்கென்றும், அவருடைய நாமப் பிரஸ்தாபத்திற்கென்றும் தன் வாழ்நாளை அர்ப்பணித்துள்ள தாப்பா அவர்கள் திருமணம் செய்துகொள்ளாதவர். அவருடைய தியாக வாழ்க்கை மிகச்சிறப்பானது. அவர் இந்துவாயிருந்தபோது பூஜித்த பிந்திவாசினி தேவதையின் கோவிலை எனக்குக் காட்டினார். பிசாசின் விக்கிரகங்களைப் பார்க்க வேண்டுமானால் நேப்பாளத்தில்தான் நாம் பார்க்க வேண்டும். தாப்பாவுடைய அனுபவ சாட்சியை நாம் கேட்போமா?]

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கே மகிமை உண்டாவதாக.

1938-ம் ஆண்டு நேப்பாள அரச குடும்பப் பரம்பரையில் நேப்பாளத்திலுள்ள பொக்காரோவில் நான் பிறந்தேன். எங்கள் குடும்பம் மிகவும் வைராக்கியமான இந்துக் குடும்பமாகும். எங்கள் குல தெய்வத்தின் பெயர் பிந்திவாசினி தேவதை. பிந்திவாசினிக்குப் பொக்காரோவில் ஒரு பெரிய கோவில் உண்டு. நான் தினமும்

அதிகாலையில் ஸ்நானம் செய்து இந்த விக்கிரகக் கோவிலுக்கு வந்து இரண்டு அல்லது மூன்றுமணி நேரம் நிஷ்டையிலும், தியானத்திலுமிருப்பேன்.

எத்தனைதான் நிஷ்டைகளிலும், தியானங்களிலுமிருந்தாலும் என் இருதயம் வெறுமையாகவே இருந்தது. என் உள்ளத்தில் மெய் சமாதானமில்லாமற்போகவே ஒரு பெரிய வெற்றிடம் அங்கே காணப்பட்டது. நான் செய்துவந்த இந்துமத வழிபாடுகளும், நோன்புகளும் பிற அனைத்தும் அர்த்தமற்ற வீண் வேலைகளாக எனக்குத் தெரிந்தது.

இவ்விதமாக என் இருதயத்தில் தேவ சமாதானமின்றி அநேக ஆண்டு காலம் பாவத்தில் நான் ஜீவித்து வந்தேன். நான் 18 வயது வாலிபனாகவிருந்த சமயம் திடீரென என் சரீர முழுமையும் ஒருவித சரும வியாதி கண்டு வீக்கம் உண்டாயிற்று. உடனே என்னை பொக்காரோவிலுள்ள மிஷன் ஆஸ்பத்திரியான SHINING HOSPITAL-லில் சேர்த்தார்கள். அந்த ஆஸ்பத்திரியில் நான் 6 மாத காலம் சிகிட்சை பெற்றேன். நாளுக்கு நாள் என் வியாதி முற்றிற்று. எனக்கு மிகவும் சிறந்த சிகிட்சை அளித்த கிறிஸ்தவ டாக்டர் ஓ. ஹெலன் என்ற அம்மையார் இறுதியாக என்னைப் பார்த்து "நீ இனி கொஞ்ச நாட்கள் கூட உயிர்வாழ முடியாது" என்று கூறிவிட்டார்கள். இந்த வார்த்தைகளை வாலிபனான என்னால் தாங்கிக்கொள்ளவே இயலவில்லை. மரணம் என்னை விரைந்து கவ்விச் சென்றுவிடுமே என்ற கவலை என்னை வாட்டிப் பிழிந்தது.

இவ்விதமான எனது ஆருத்துயர நாட்களில் அந்த அம்மையார் எனக்கு அளித்த "மனுஷனின் இருதயம்" (THE HEART OF MAN) என்ற நேப்பாளி மொழியில் எழுதப்பட்ட சிறியதோர் புத்தகத்தைப் படித்ததின் பயனாக நான் என்னைக் கர்த்தராகிய இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்துப் பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், நிறைவான தேவ சமாதானத்தையும் என் உள்ளத்தில் பெற்றேன். இதைத் தொடர்ந்து என் மரணத்திற்கேதுவான கொடிய சரும வியாதி படிப்படியாக நீங்கி நான் பூரண சுகம் பெற்று ஆண்டவரை ஸ்தோத்திரித்து அவருக்கு சாட்சிகூறத் தொடங்கினேன்.

அந்தச் சமயம் பொக்காரோவிலுள்ள எனது முந்தைய குல தெய்வமான பிந்திவாசினி தேவதை கோவிலில் பெரிய தசரா உற்சவம் நடந்து கொண்டிருந்தது. அந்த உற்சவத்துக்கு வந்திருந்த அநேக நூற்றுக்கணக்கான மக்கள் கரங்களில் என்னை ஆண்டவருக்குள் வழிநடத்திய "மனுஷனின் இருதயம்" என்ற புத்தகங்களை நான் விநியோகம் செய்தேன்.

1958-ம் ஆண்டு நான் ஒரு மாட்சிமையான சொப்பனம் கண்டேன். அதில் இரண்டு சிறுமிகள் என்னண்டைவந்து சீனதேசத்தி

லிருந்து ஒரு ராஜா வந்திருக்கிறார் என்றும் அவர் என்னைத் தேடுகிறார் என்றும் கூறவே நான் அவரைக் காணச்சென்றேன். அவர் பிரகாசமான வெண்மைச் சொரூபியாக சிரசிலிருந்து பாதம் வரை வெண்ணாங்கி தரித்து அரையில் வார்க்கச்சை கட்டி, அரசனுக்குரிய மார்பதக்கங்களையும் அணிந்திருந்தார். அவரின் சிரசின்முடி வெண்பஞ்சுபோலிருந்தது. அவர் ஒரு வெள்ளைக் கோவேறு கழுதையில் வந்திருந்தார். அவர்தான் இயேசு இரட்சகர் என்று நான் அடையாளம் கண்டு கொண்டேன். அவர் என்னை நோக்கி ஹரிபகதூர் தாப்பா எங்கே என்று கேட்டார்? உடனே என்னை அழைக்கவந்த சிறுமிகள் இருவரும் என்னை அடையாளம் காட்டினார்கள். அப்பொழுது அவர் தமது கரங்களில் ஒன்றை எனது தலையில் வைத்து என்னை ஆசீர்வதித்தார். அவருடைய மற்றொரு கரம் இப்பொழுதிருக்கும் எங்களுடைய சிறிய தேவாலயத்தை நோக்கிச் சுட்டிக் காண்பிப்பதாகத் தெரிந்தது. இந்தச் சொப்பனத்திலிருந்து என்னுடைய சரீரத்திலும், ஆத்துமாவிலும் ஒரு பெரிய அற்புத கிரியை தொடர்ந்தது.

இதன் பின்னர் நான் இயேசுவே உலகில் ஜீவனுள்ள மெய் தேவன் என்று மக்களுக்குக் கூறினேன். இதன் காரணமாக 12 மக்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவர்களானார்கள். இந்தச் செய்தியறிந்ததும் உடனே அரசாங்கம் என்னை நியாயாஸ்தலத்திற்கு இழுத்தது. கோர்ட்டில் நீதிபதிக்கும் எனக்கும் நடந்த தர்க்கம் இப்படி இருந்தது.

நீதிபதி:- கிறிஸ்தவமதம் மேல்நாட்டு மார்க்கம் என்பதுவும் அது ஒரு அரசியல் நோக்குடைய அரசியல்மார்க்கம் என்பதுவும் உனக்குத்தெரியாதா? நீ நேப்பாளிகளுக்குக் கிறிஸ்தவத்தைப் பிரசங்கித்துப், பிரசங்கித்து எல்லாரும் கிறிஸ்தவர்களாகிவிட்டால் ஒரு நாள் நம்நாட்டு மன்னரின் ஆட்சி தூக்கி எறியப்படுமல்லவா?

தாப்பா:- அதைப்பற்றியெல்லாம் எனக்கொன்றும் தெரியாது. "நானே வழி" என்று இயேசுகிறிஸ்து கூறியிருக்கின்றார். அவரையன்றி உலகினருக்கு வேறு வழி இல்லையாதலால் நான் அவரைப் பிரசங்கிக்கின்றேன்.

நீதிபதி:- அந்தப் புத்தியற்ற மதியீனமான வார்த்தைகளை இங்கு பேசாதே. கிறிஸ்தவ மார்க்கத்தின் மேலுள்ளதான உனது நம்பிக்கையை நீ உதறித்தள்ளிவிட்டு மீண்டும் இந்துமார்க்கத்திற்குத் திரும்பி வந்தால் உனக்குக் கார், பங்களா, நிலங்கள் எல்லாம் மானியமாகக் கொடுக்கப்படும். உனது தீர்மானத்தை நீ மாற்றாத பட்சத்தில் 6 ஆண்டு காலம் சிறைத்தண்டனை அளிக்கப்படும் என்று கூறினார்.

தாப்பா:- ஆறு ஆண்டுகாலச் சிறைத்தண்டனையை அனுபவிக்க நான் ஆயத்தமாயிருக்கின்றேனே தவிர ஜீவனுள்ள கிறிஸ்து

யையும் அவருடைய பரிசுத்த மார்க்கத்தையும் நான் விட்டு விடப் போவதில்லை.

அரசாங்கத்தின் தீர்ப்பின்படி எனக்கு ஆறு ஆண்டுகள் சிறைவாசம் விதிக்கப்பட்டது. நான் சிறைசென்ற 9 நாட்கள் மிகவும் ஈரமான வெறுந்தரையிலே படுக்கவும், அமரவும் சிறை அதிகாரிகள் வகை செய்தனர். அந்த ஒன்பது நாட்களும் நான் கடுங்குளிர் காரணமாகச் சொல்லொண்ணாதுயர் அடைந்தேன். ஆயினும் ஜீவனுள்ள தேவன் என் அருகில் இருந்தமையால் அந்த ஒன்பது நாட்களும் தேவப்பிரசன்னத்தின் பூரண ஒளியில் நான் ஜீவித்தேன். அந்த நாட்களில் நான் ஆண்டவருக்குள் அனுபவித்த சந்தோஷம் அளவிட முடியாததாகும்.

சிறையில் அடையுண்டுகிடந்த நான் அங்கு சும்மாயிருக்கவில்லை. என்னுடன் சிறையிலிருந்த எனது சகநேப்பாளிகளுக்கு இயேசு ஒருவர்தான் பாவிகளை ஈடேற்றவந்த ஜீவனுள்ள மெய் தேவன் என்று எடுத்துக்கூறிச் சத்தியத்தைப் பிரசங்கித்தேன். இதன் காரணமாகச் சிறையில் 40 பேர் ஆண்டவரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்று மனந்திரும்பினர். இதைக் கேள்வியுற்ற நேப்பாள அரசாங்கம் உடனே என்னைச் சிறையிலிருந்து வெளியே தள்ளினது, 9 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவித்துவிட்டு 1973 ம் ஆண்டில் நான் சிறையிலிருந்து வெளிவந்தேன்.

வெளிவந்த நான் கிறிஸ்து பெருமானைக் குறித்துச் சாட்சி கூறி இதுவரை 550 மக்களுக்கு என் சொந்தக் கரங்களாலேயே ஞானஸ்நானம் கொடுத்திருக்கின்றேன். கர்த்தருக்கே அனைத்து மகிமையும் உண்டாவதாக. எனது சொந்த ஊரான பொக்காரோவிலேயே ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நாங்கள் ஒரு மிகச் சிறிய தேவாலயம் கட்டி மிகவும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஜீவனுள்ள தேவனை ஆராதித்து வருகின்றோம். விசுவாசிகளாகிய நாங்கள் ஆண்டவருக்கு பொக்காரோவில் எந்தவிடத்திலாவது சுவிசேஷ ஊழியம் செய்துவிட்டால் போதும், உடனே இங்குள்ள பள்ளிப் பிள்ளைகளும், கல்லூரி மாணவர்களும் எங்கள் சிறிய தேவாலயத்திற்கு வந்து அதனைக் கல்லெறிந்து நொறுக்க ஆரம்பித்துவிடுவார்கள். இப்படி அநேகமுறை கல்லெறிந்திருக்கின்றனர்.

என் வாழ்க்கையில் நான் மறக்க முடியாததோர் சம்பவம் என்னவெனில் 1979-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2-ம் நாள் நேப்பாளத்தின் தற்போதைய மன்னர் பிரேந்திரா அவர்களை நேரிடையாகச் சந்தித்துப் பேசியதுதான். அந்த ஆண்டு எங்கள் ஊருக்கு விஜயம் செய்திருந்த அவர் எனது பணிவான வேண்டுகோளின்படி 10 நிமிடம் 13 வினாடிகள் நான் அவருடன் பேச என்னை அனுமதித்தார். நான் ஒரு நேப்பாள நாட்டுப் பிரஜையானதோர் கிறிஸ்

தவ சுவிசேஷ ஊழியன் என்று என்னை நான் மன்னருக்கு அறிமுகம் செய்து கொண்டேன். நான் எவ்வாறு கிறிஸ்தவனாக நேரிட்டது என்பதனை மன்னர் என்னிடம் மிக ஆவலுடன் கேட்டார். 18 ஆண்டு காலங்களுக்கு முன்னர் நான் உயிர் பிழைப்பேன் என்ற சிறிதுதானும் நம்பிக்கையின்றி மரணத்துடன் போராடியதையும் அந்த இறுதி நேரத்தில் கிறிஸ்து பெருமான் ஒருவரே எனக்கு இரங்கி என் ஜீவனைக் காத்ததையும் அவர் என்னுடன் பேசி என்னை இரட்சித்ததையும் நான் அவருக்கு விபரமாகக் கூறியபோது அவர் ஆச்சரியமுற்றார். இறுதியில் மன்னர் என்னிடம் எனது விருப்பம் என்னவென்று வினவினார். "நேப்பாள கிறிஸ்தவ மக்கள் பூரண சுதந்திரத்தோடும், சுயாதீனத்தோடும் கிறிஸ்து இரட்சகரைத் தொழுது சேவிக்கவும், அவரில் பூரண நம்பிக்கை வைத்து வாழவும் அனுமதியளிக்க வேண்டும்" என்ற எனது மிகவும் பணிவன்பான வேண்டுகோளை மன்னர் கவனமாகச் செவிகொடுத்துக் கேட்டுத் தனது அந்தரங்கக் காரியதரிசியிடம் அதனை உடனே எழுதிக் கொள்ளும்படியாகவும் சொன்னார். ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக.

நேப்பாளம் சிறியநாடாக விருந்தபோதினும் இங்கு சுவிசேஷ வேலை செய்வது மிக மிகக் கடினமாகும். காரணம் என்னவெனில், நேப்பாளம் பனி மலைகளாலும், உயர்ந்த இமாலய மலைகளாலும், காடுகளாலும், நதிகளாலும் சூழப்பட்டதோர் நாடு. தனி ஒரு கிராமத்திற்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுவதாயினும் போக்கு வரத்து வசதியற்றதன் காரணமாக ஒருமாத காலம் கூட நாம் கால் நடையாக நடக்கவேண்டும். வானளாவிய மலை முகடுகளில் அங்கொன்றும், இங்கொன்றுமாகவே கிராமங்கள் பரவிக்கிடப்பது மட்டுமல்ல, வித்தியாசமான மொழிகள் பேசும் இனத்தவர் கூட இங்கு உள்ளனர். இம்மக்கள் மத்தியில் தேவ ஊழியம் செய்வது என்பது அத்தனை எளிதானதோர் காரியமன்று. நேப்பாள அரசாங்கமும் கிறிஸ்தவ மார்க்கப்பிரச்சார நடபடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து அவற்றை ஒடுக்கி வருகின்றது. இதுவரை நான் 12 தடவைகள் போலீசாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கின்றேன்.

அறியாமையும், அந்தகாரமும் நிறைந்த எங்களது நேப்பாள நாட்டைக்குறித்த பெரிய இதயபாரம் என்னை அழுத்துகின்றது. நேப்பாளத்தின் பெரும்பகுதி மக்களுக்கு இன்றுவரை சுவிஷேசம் போய் எட்டவில்லை. கல்லையும், மண்ணையும், மிருகங்களையும், பற்பல வஸ்துக்களையும் மாந்தர் அறியாமையால் வழிபடுகின்றனர். அவர்களின் ஞானக்கண்கள் திறக்கப்பட, ஜீவனுள்ள தேவனாகிய இயேசுகிறிஸ்துவை அவர்கள் தரிசிக்க, கிறிஸ்தவர்கள்பாலுள்ள அரசாங்கத்தின் வெறுப்பும் பகைமை உணர்வும், கடூரமும் நீங்க

ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நீங்கள் ஒவ்வொருவரும் எங்கள் நேப்பாள தேசத்திற்காக அன்புடன் ஜெபித்துக் கொள்ளுங்கள். அல்லேலூயா. (ஹரிபகதூர் தாப்பா)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அநேக நட்சத்திரங்களின் தூரம் அளவிடப்பட்டுவிட்டது இந்த உயரங்கள் நம்முடைய சூரிய மண்டலத்தின் விட்டத்தைவிட நூறு ஆயிரம் மடங்குகள் தொலைவானது என்பது தெரிகின்றது. நட்சத்திரங்களின் பிரமிக்கத்தக்க உயரத்திற்கு மற்றொரு தேவ வசன ஆதாரம் ஏசாயா 14:13ல் காணக்கிடக்கின்றது. இங்கு சாத்தான் "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன் ......" என்று கூறுகின்றான். இதிலிருந்து நட்சத்திரங்கள் மகாஉயரத்திலுள்ளன என்பது தெரியவருகின்றது. சில நட்சத்திரங்கள் 60 குவின்ட்டிக்லியன் ஒளி ஆண்டுகளுக்கு (LIGHT YEARS) அப்பால்கூட உள்ளன. ஒரு ஒளி ஆண்டு என்பது ஒளியானது ஒரு ஆண்டு காலமுழுவதிலும் பிரயாணம் செய்யும் தூரம். ஒளி ஒரு நொடிக்கு 186,000 மைல்கள் வேகத்தில் பிரயாணம்செய்யும் என்பதை நாம் அறிவோம். அநேக நட்சத்திரங்களின் ஒளி சிருஷ்டிப்பின் காலந்தொட்டு இன்றுவரை பூமியை நோக்கிப் பயணப்பட்டு வந்து கொண்டிருப்பதாகவும் இன்னும் அவை பூமியைவந்து எட்டவில்லை என்றும் தெரிகின்றது.

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் "......நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்ததாயிருக்கிறது" (1கொரி. 15:41) என்று கூறுகின்றார்கள். இது வான சாஸ்திரிகளால் உண்மை என்று ரூபகாரப்படுத்தப்பட்டுவிட்டது. நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் வித்தியாசமான பல்வேறு விந்தை நிறங்களில் மட்டுமின்றி அவற்றின் அளவும் பரிமாணங்களிலும்; அழுத்த நிலைகளிலும், சீதோஷ்ண நிலைகளிலும், ஒளியை வெளியே உந்தித்தள்ளும் நிலைகளிலும் வித்தியாசமானவையே என்பது தெரிந்துவிட்டது.

ஆ, நம் தேவன் எத்தனை பெரியவர்! எத்தனை ஞானமுள்ள தேவன்! மனிதராகிய நாம் நமது அற்ப, மண்ணுக்குரிய அறிவாற்றலால் அவருடைய மாட்சிமையையும், மகிமையையும், அவரது ஞானத்தின் திரண்ட ஐசுவரியத்தையும் அளவிட முயலுகின்றோம். இது எல்லையற்று பரந்து வியாபித்துக் கிடக்கும் மாபெரும் சமுத்திரத்தையே நண்டு வாசம்செய்யும் சிறிய பொந்தில் அடக்கி மறைத்துவிட முயற்சிப்பதைப் போன்ற வேடிக்கை கதையாகும்.

அந்த மாபெரும் தேவன், தம்மைத் தங்கள் சொந்தமாக ஏற்றுத் தம்மை முழுமனதார நேசிக்கும் தமது அன்புள்ள மக்களுக்

காகப் பரலோகில் ஆயத்தம்பண்ணி வைத்துள்ள மோட்சானந்த பாக்கியங்களைக் கற்பனை செய்துபார்க்கவே இயலாது. (1கொரி 2:9) அந்த நித்தியஜீவனைப் பெறுவோர் எத்தனை பாக்கியசாலிகள்!

ஒருநாள் அருமை ஆண்டவர் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்பொழுது மிகவும் திரண்ட ஐசுவரியமுடைய வாலிபனொருவன் பட்டும், பீதாம்பரமும் உடுத்தவனாய் அவர் பின்னர் ஓடோடி வந்து தனது அந்தஸ்தையும், செல்வத்தையும், கண்ணியத்தையும் ஒருபுறம் ஒதுக்கித் தள்ளி வைத்துவிட்டுப் புழுதி நிறைந்த அந்த பலஸ்தீன நாட்டுத்தெரு வீதியிலே மிகுந்த மனத்தாழ்மையுடன் ஆண்டவருக்கு முன்பாக முழங்காற்படியிட்டு "நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்னசெய்ய வேண்டும்?" என்ற மகா மேன்மை நிறைந்த வினாவை எழுப்பினான். நித்திய ஜீவன் என்றால் என்ன? யுகாயுகங்களுக்கான அதின் முடிவற்ற நித்திய பாக்கியங்களின் சிலாக்கியம் யாது? அதைப் பெற்றுக்கொள்ள வேண்டியதின் தீராத அவசியம் யாது என்பதையெல்லாம் நன்கு அறிந்துணர்ந்திருந்த அவன் இறுதியில் அதைப் பெற்றுக் கொள்ளாது வெறுமையாய், மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டதாக நாம் காண்கின்றோம். (மாற். 10:17-22)

நன்மை செய்கிறவராகவே சுற்றித்திரிந்தவரும், தம்மிடம் வரும் எவரையும் புறக்கணித்துத் தள்ளாதவருமான அன்பின் கர்த்தரண்டைவந்து மகா மனக்கிலேசத்துடனும், ஈடுசெய்ய முடியாத பெரும் நஷ்டத்துடனும் திரும்பிச்சென்ற இந்தவாலிபனைக் குறித்து நமக்கு மட்டற்ற வியப்புண்டாகிறது. அவரண்டை வந்த யாவரும், அவரது வஸ்திரங்களைத் தொட்டோரும்கூட ஆனந்தக் களிப்புடன் நடனமாடித் திரும்பிச் சென்றிருக்கையில் இவனது காரியம் இப்படி முடிவுபெற்றது நமக்கு ஆச்சரியத்தையும் திகைப்பையும் உண்டாக்குகின்றது.

அரிதானதைக் கேட்ட அந்த வாலிபன் செலுத்தவேண்டிய விலைக்கிரயமும் அரிதானதாகவே இருந்தது. வாசிப்போனே, மெய்க்கிறிஸ்தவ வாழ்க்கைக்கு, தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கும் பரிசுத்த வாழ்க்கைச்கு நீ செலுத்தவேண்டிய விலைக்கிரயமும் பெரியது என்பதை மறந்துவிடாதே. ஆனால் அதின் முடிவோ நித்திய ஜீவன்.

அழிந்து மறைந்து போகும் உலகத்தின் குப்பைகளாகிய பாவ இன்ப சுகங்களும், பொன்னும், பொருட்களும், சமுதாய மதிப்பும், அந்தஸ்தும் பிறவும் மாசற்றதும், வாடாததும், பேரின்பம் நிறைந்ததுமான நித்திய ஜீவனை நீ அடைய வொட்டாமல் தடைசெய்து விடாதபடி நீ அதனை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை முடிக்கக் கர்த்தர் உதவிசெய்வாராக. ஆமென்.

DEVA EKKALAM Regn. N. M 8850

FORM IV

1. Place of Publication	:	Kotagiri.
2. Periodicity of its Publication	:	Monthly.
3. Printer's Name	:	Prof. D. S. SPURGEON
Nationality	:	Indian.
Address	:	Thoothan Press, Newport Street Nagercoil - 629001.
4 Editor & Publisher	:	N. SAMUEL.
Nationality	:	Indian.
Address	:	Kotagiri - 643217.

I, N. SAMUEL, here by declare that the particulars given above are true to the best of my knowledge and belief

Sd/- N SAMUEL,
Editor & Publisher

Dated 25-3-'82

Edited and Published by N. Samuel, Kotagiri-643217. Nilgiris.
Printed at the Thoothan Press, Newport Street, Nagercoil